# ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்

1900 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரை

அ. முகம்மது சமீம் B.A.(HON)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்

## இலங்கை முஸ்லிம்களைப் பற்றிய ஓர் ஆய்வு

## இருபதாம் நூற்றாண்டு ஆரம்பமுதல் - 1945ம் ஆண்டு வரை

முகம்மது சமீம் – B.A. (Hons.)
Dip. in Ed. , TEFL (London)
முன்னை நாள் இலங்கைக்
கல்விப் பணிப்பாளர்

றிசானா பப்ளிஷர்ஸ்
முதலாம் மாடி
அப்துல்லாஹ் ஷொப்பிங் சென்டர்
20/14, சிமெண்ட்ஸ் ரோடு
கொழும்பு - 10

1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : நவம்பர் 1998

©

விலை ரூபா : 100/-

TITLE : ORU SIRUPANMAI SAMUGATHIN PIRACHANAIKAL
Problems of a Minority Community

SUBJECT : SOCIAL HISTORY

AUTHOR : MOHAMED SAMEEM

SIZE OF BOOK : 12.5 X 18 cm

No. of pages : 350

Type : 11.6 cream wove

Binding : Art Board

Price : 100/-

Sales in India : **KUMARAN PUBLISHERS**
79, Ist Street, Kumaran Colony,
Vadapalani, Chennai - 600 026

Printer :


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என் ஆத்ம குரு

ஷேகு நாயகம் தங்கல் வாப்பாவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் இதர நூல்கள்

1. இஸ்லாமிய கலாச்சாரம்
2. இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள்
3. Problems of a Minority Community
4. Marriage Customs of the Muslims of Srilanka
5. ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள் இலங்கை முஸ்லிம்களைப் பற்றிய ஓர் ஆய்வு – பண்டைய காலம் தொடக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதி வரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

முகவுரை

1. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் சிறுபான்மை இனங்களின் நிலை 9
2. இலங்கை மலாயர்கள் - ஒரு வரலாற்றுக் குறிப்பு 17
3. இலங்கை மேமன்களும் போராக்களும் 26
4. துருக்கித் தொப்பி விவகாரமும், முஸ்லிம்களுக்கெதிராக சிங்களவரின் மத்தியில் எழுந்த இன உணர்வும் 32
5. சிங்கள இனத்தின் பூர்வீகமும், சிங்கள இன உணர்வின் தோற்றமும் 38
6. சிங்கள - பௌத்த உணர்வினால் ஏற்பட்ட பாதிப்புகள் 44
7. 1915 ஆம் ஆண்டு கலகத்தின் மூல காரணங்கள் 51
8. 1915 ஆம் ஆண்டு சிங்கள - முஸ்லிம் இனக் கலவரம் 57
9. 1915 ஆம் ஆண்டு சிங்கள - முஸ்லிம் இனக்கலவரத்தில் நடந்த சம்பவங்கள் 64
10. 1915 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இருந்த அரசியல் சமூக சூழ்நிலை 81
11. இந்திய சுதந்திர இயக்கத்தினால் இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் 86
12. இஸ்லாமிய ஷரியா சட்டமுறை பாதுகாக்கப்பட்ட வரலாறு 91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ‘முகம்மதிய சட்டக்கோவை’ தோன்றிய வரலாறு 97

14. ‘முகம்மதிய சட்டம்’, இலங்கையில்
அமுலாக்கப்பட்ட வரலாறு 104

15. இலங்கையில் முஸ்லிம் விவாகம், .
விவாக - ரத்துச் சட்டம் தோன்றிய வரலாறு 112

16. முஸ்லிம் விவாகம், விவாக - ரத்துச்
சட்டத்திலுள்ள உட்பிரிவுகள் 117

17. முஸ்லிம் விவாகம் - விவாகரத்துச் சட்டம்
அமுலாக்கப்படல் 1 23

18. முஸ்லிம் மரபுரிமைச் சட்டமும் வக்புச் சட்டமும் 131

19. 1920-30 ஆண்டுகளில் ஏற்பட்ட சட்டசபை
மாற்றங்கள் 136

20. இலங்கை அரசியலில் குடும்பங்களின்
ஆதிக்கம் 142

21. டொனமூர் கமிஷனர்களின் வருகையும்,
இலங்கை சமூகங்களிடையே ஏற்பட்ட
சலசலப்பும் 148

22. டொனமூர் அரசியல் திட்டத்தினால்
முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு 154

23. டொனமூர் கமிஷனர்கள் இலங்கை வந்த
சமயம் இலங்கையில் இருந்த பொருளாதார
சமூக அமைப்பு 160

24. யாழ்ப்பாணத் தமிழர் சமூகத்தின்
அடிப்படைத் தன்மை 166

25. அரசியலில் ‘சிங்கள - பௌத்த’
உணர்வின் தோற்றம் 173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. டொனமூர் அரசியலில் தோன்றிய சிங்கள இனவாதம் 179

27. இந்தியத் தமிழர்கள் இலங்கை அரசியலில் ஒதுக்கப்பட்ட வரலாறு 185

28. முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பாதுகாக்க முஸ்லிம் தலைவர்கள் எடுத்த முயற்சி 191

29. 'சிங்களம் மட்டும்' மசோதாவினால் ஏற்பட்ட பாதிப்புகள் 198

30. கல்வியிலும் அரசாங்க வேலையிலும் சிங்கள - பௌத்த ஆதிக்கம் வளர்தல் 209

31. இனவாதத்தை தூண்டிவிட்ட சிங்கள - பௌத்த எழுத்தாளர்கள் 217

32. கல்வியில் முஸ்லிம்களின் பின்தங்கிய நிலை 224

33. கல்வியில் இருந்த வர்க்க வேறுபாடு 230

34. இலவசக் கல்வித் திட்டத்தினால் பெரும் பயனடைந்த உயர் வர்க்கத்தினர் 237

35. இலங்கை அரசியல் வானில் மார்க்சீயக் கட்சிகளின் தோற்றம் 247

36. இலங்கையின் சுதந்திரத்திற்கு முஸ்லிம் தலைவர்கள் ஆற்றிய பணி 254

37. யாழ்ப்பாணத்து இளைஞர் காங்கிரஸின் தவறான போக்கினால் தமிழர்களுக்கு ஏற்பட்ட விளைவுகள் 260

38. தமிழ், முஸ்லிம் சமூகங்களில் தோன்றிய இன உணர்ச்சி 268

39. சிங்களவருக்கும், தமிழர்களுக்குமிடையே முரண்பாடு வளர்தல் 277

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. தனிச்சிங்கள மந்திரி சபையும், குடும்ப ஆதிக்கமும் 282

41. இலங்கை முஸ்லிம்களிடையே தோன்றிய அரசியல் இயக்கங்கள் 288

42. இந்தியத் தொழிலாளர்களிடையே ஏற்பட்ட அரசியல் வளர்ச்சி 296

43. டொமினியன் அந்தஸ்துக்கான அமைச்சரவையின் கோரிக்கையும், பிரித்தானிய அரசாங்கத்தின் திட்டமும் 304

44. ஜி.ஜி. பொன்னம்பலத்தின் 50க்கு 50 கோரிக்கையும் முஸ்லிம்களின் நிலையும் 312

45. பொன்னம்பலத்தின் 'தமிழ் இனவாத போக்குக்கு எதிராகத் தோன்றிய பண்டார நாயக்காவின் 'சிங்கள மகாசபாவும்', அதன் சிங்கள இனவாதப் போக்கும் 320

BIBLIOGRAPHY 329


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

நூலாசிரியர் திரு. சமீம் அவர்கள் தன்னை ஒரு மகத்தான பணியில் அர்ப்பணித்துக் கொண்டுள்ளார். ஒரு சிறுபான்மை சமூகப் பிரச்சினைகள் என்ற சாதாரண தலைப்பில், ஒரு பரந்த வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பற்பல பிரச்சினைகளை ஆராய முனைந்துள்ளார். முதலாவது, வரலாறு எழுதுவதில் உள்ள சிக்கல்களையும், பலவீனங்களையும் ஆபத்துக்களையும் மிகத் துல்லியமாக சுட்டிக் காட்டியுள்ளார். அவற்றிலிருந்து தானே தப்பமுடியுமா என்று பிரமித்திருக்கிறார். இருப்பினும் மிகுந்த துணிவுடனும், பரந்த ஆய்வுக் கண்ணோட்டத்துடனும் தனது சமுதாயத்தின் வரலாற்றையும், பிரச்சினைகளையும், உணர்வு பூர்வமாக வடிவமைத்துள்ளார்.

இரண்டாவதாக, ஒரு காலனித்துவ ஆட்சியில் சிறுபான்மையினருக்கு ஏற்படுகின்ற இன்னல்களையும், நெருக்கடிகளையும், இலங்கை முஸ்லிம் சமுதாயத்தை மையமாக வைத்து அரசியல் ஆய்வு நடத்தியிருக்கிறார். மூன்றாவதாக, பொருளாதாரப் போட்டிகளும், பொறாமைகளும் எவ்வாறு அரசியல் முகமூடி அணிந்து இனவெறியையும், மதவெறியையும் கட்டவிழ்த்து விடுகின்றன என்று கோடிட்டுக் காட்டியுள்ளார். மேலும் கலாச்சாரம், கல்வி, வழிபாட்டு முறைகள், திருமணச் சட்டங்கள் என்ற அடிப்படையில் ஒரு பல்லின சமுதாயத்தில் தனித்துவம் பேணுவதில் உள்ள இடையூறுகள், இடைஞ்சல்களை ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்தியுள்ளார்.

அரசியல் தலைவர்கள் எவ்வாறு இன உறவுகளைப் பாதித்துள்ளார்கள். ஒரு நாட்டின் வரலாற்றுப் போக்கையே நிர்ணயித்துள்ளார்கள் என்பதையும் உதாரணங்களோடு நிறுவியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல எழுத்தாளர்களும், இலக்கிய வாதிகளும், மதத்தலைவர்களும் எவ்வாறு மக்களின் உணர்வுகளைத் தாம் விரும்பிய வழியில் தட்டி எழுப்பி சமுதாய அலங்கோலங்களை ஏற்படுத்துகின்றனர் என்பதை இலங்கையின் தற்கால வரலாற்று நிகழ்வுகளை ஆதாரமாக வைத்து, நிலை நாட்டியுள்ளார்.

தலைமைகளை விமர்சிக்கத் துணிந்த நூலாசிரியர், குறிப்பாக முஸ்லிம் தலைவர்களையும், அவர்களது சாதனைகளையும் தோல்விகளையும், குறைபாடுகளையும், பாரபட்சமின்றி பகுப்பாய்வு செய்துள்ளார். முஸ்லிம் தலைவர்களை மதிப்பீடு செய்யும் பொழுது, அவர்களுக்குள்ளே நிலவிய ஏற்றத்தாழ்வுகளையும், வேறுபாடுகளையும் அவர்களது சுய நல ஆர்வத்தையும் தயவு தாட்சண்யமின்றி கண்டித்திருக்கிறார். இன்று கூட நல்லதொரு தலைமையில்லையே என்ற ஆதங்கம் அவரிடம் காணப்படுகிறது.

சிறுபான்மையினங்களுக்கிடையே குறிப்பாக தமிழர், முஸ்லிம்களுக்கிடையே – ஒருமை உணர்வு இல்லாமையினால் எவ்வாறு இரு சமுதாயத்தினரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார். ஆதிக்க உணர்வு ஆணவப்போக்கு என்பனவெல்லாம் பெரும்பான்மையோருக்கு உரியதுமட்டுமல்ல, சிறுபான்மையினருக்கும் உரியது என்று தெளிவாகக் கூறியுள்ளார். இவ்வாறு சிறுபான்மை மக்களே பிளவுபட்டும், பகைமை பாராட்டியும், நிற்கின்ற பொழுது ஆட்சியாளர்களும், பெரும்பான்மையினரும் சிறுபான்மை மக்களை பகடைக்காய்களாக்கி அரசியல் சதுரங்கம் ஆடுவது எவ்வளவு எளிது என்பதை உணரவைக்கிறார்.

இந்நூலை முஸ்லிம் மக்களின் வரலாற்றைக் கூறுவது என்றும், இலங்கையின் இனவாத அரசியலை விமர்சிப்பது என்றும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கை அரசியலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டிப்படைத்த தலைவர்கள், சிந்தனையாளர்கள், இயக்கங்கள், கோரிக்கைகள், கலவரங்கள், போராட்டங்கள், அனைத்தையும் கூரிய நோக்கிற்கு உட்படுத்துவது என்றும் ஐயமின்றிக்கூறலாம்.

1915ம் ஆண்டு வெடித்த சிங்கள- முஸ்லிம் கலவரம் இவ்விரண்டாம் பகுதியின் அடி நாதமாக விளங்குகிறது. வரலாற்று முக்கியத்துவமிக்க இச்சம்பவம் மிக ஆழமாகவும் ஆணித்தரமாகவும் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. இன்றைய இளைஞர் சமுதாயத்திற்கு இந்த ஆய்வு மிகவும் பயன்தரக்கூடிய ஒன்றாகும்.

இலங்கைப் பொருளாதாரத்தில், தோட்டப் பயிர் செய்கையினால் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்கள் எவ்வாறு அரசியல் – சமூக உறவுகளைப் பாதித்தன என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

டொனமூர் அரசியல் சீர்திருத்தம்தான் அதன் பின்னர் ஏற்பட்ட அத்தனை அரசியல் சீரழிவுக்கும், இனவெறிக்கும், இன்றைய பேரினவாத அரசியலுக்கும் வழிவகுத்தது என்ற வரலாற்றுப் பழியை டொனமூர் அரசியல் சீர்திருத்தக் குழுவின் தலைமையில் சுமத்தி இருப்பது மீளாய்வு செய்யப்பட வேண்டிய கருத்து என்று கூறலாம். இலங்கைக்கு சர்வ சன வாக்குரிமை வழங்கி, செல்வச் சீமான்களின் குடும்ப விளையாட்டாக இருந்த அரசியலை, சாமானிய மக்களின் சக்தியாக மாற்றிய ஒரு சீர்திருத்தத்தை, நாம் எளிதாக அலட்சியப்படுத்தி விட முடியாது.

ஜனநாயக ஆட்சி முறையை ஐரோப்பிய சம்பிரதாயங்களோடு இணைத்து, அந்நிய ஆட்சியாளர்களின் சிபாரிசுகளோடு நாம் செயற்படுத்தும் பொழுது, பல அவலங்கள், அவலட்சணங்கள், அபசுரங்கள் தோன்றி அடிப்படை இலட்சியத்தையே முற்றிலும் திரிபுபடுத்தும் அரசியல் துவேஷங்கள் ஆவேசங்கள் தலையெடுத்து விடுகின்றன. விதை ஒன்று போட சுரை ஒன்று முளைத்தது போல இந்தப் போக்கினை ஆசிய நாடுகள் அனைத்திலும் பார்க்கிறோம். ஆகவே தான் புதுப்புது அரசியல் அமைப்புகளும், அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசோதனைகளும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. நமது பாரம்பரிய ராஜவிசுவாசப் பண்போடு இன்றைய பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையில் ஏராளமான முரண்பாடுகளை உட்புகுத்தியுள்ளன. இந்த நிலையிலிருந்து நாம் விடுபடுவதற்கு முன்னரே சர்வதேச நிகழ்ச்சிகளும் உலகச் சந்தை விவகாரங்களும், நாம் ஓர் தேசிய இனத்தை வடிவமைக்கும் முயற்சிகளுக்கு குந்தகமாக அமைந்து விடுகின்றன.

நூலாசிரியர் ஓர் தேசிய நாளிதழில் எழுதிய கட்டுரைகளே இங்கு நூலாக தொகுக்கப்பட்டுள்ளது. ஒரு கட்டுரையின் பரிமாணமும், தாக்கமும், ஒரு நூலின் பரிமாணமும், தாக்கமும், வேறுபட்டவையாகும். கட்டுரைகளை நூலாக்குவதில் இந்தக் குறைபாடு இருக்கவே செய்யும். இந்தக் குறையை நீக்கினால் இந்த நூலின் தரம் மேலும் பொலிவுறும்.

இந்நூல் முற்றுப்பெறவில்லை. மேலும் தொடரவிருக்கிறது. அரசியல் அமைப்பைப் பற்றி ஆராயவிருக்கிறது. சமகால வரலாற்றை, பாதிக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஒருவர் மீளாய்வு செய்வது, சிந்தனை பூர்வமாக சிக்கலான பணி என்றாலும், அது ஒரு அவசியமான பணி. குறிப்பாக வளரும் சமுதாயத்திற்கு வழிகாட்டும் பணி. பத்திரிகைகளில் வரும் அன்றாடச் செய்திகளை வைத்தே அரசியல் கோட்பாடுகளை எடை போடாமல், ஓர் ஆழ்ந்த, அகன்ற வரலாற்றுக் கண்ணோட்டத்தில், எதிர்காலம் பற்றிய இலட்சிய நோக்குடன் அரசியலைக் கணிப்பதும், வகுப்பதும் தவிர்க்கமுடியாத ஒரு சிந்தனைச் செயற்பாடாகும். அந்தப் பயனுள்ள பணியை நூலாசிரியர் செய்திருக்கிறார். அடுத்து வரும் பகுதிகளை நாம் ஆர்வமுடன் எதிர்நோக்குவோம்.

கோவை. இரா. சிவலிங்கம்.
5.3.98.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் சிறுபான்மை இனங்களின் நிலை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சிங்கள மக்களிடையே சாதிப் பிரிவினை அவர்களுடைய வளர்ச்சியைத் தடைசெய்தது. சாதியில் தரம் குறைந்த 'கராவ' சாதியைச் சேர்ந்தவர்கள். உயர் சாதியைச் சேர்ந்த 'கொவிகம' சாதியின் அரசியல் போக்கை கண்டித்தனர். 'கொவிகம' சாதியைச் சேர்ந்தவர்கள். 'கராவ' சாதியினரின் வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொண்டது மட்டுமல்லாமல், ஆங்கில ஏகாதிபத்திய அரசாங்கத்துடன் ஒத்துழைத்தனர். சிங்கள மக்களின் பண்டைய வரலாற்றையும், பாரம்பரிய மரபையும் சீர் தூக்கி, பௌத்த மதத்தின் சிறப்பையும் அம் மதத்தினரின் உரிமையையும் நிலைநாட்டி, ஆங்கில அரசாங்கத்திற்கு எதிராகவும், உயர் சாதியினரை அந்நிய ஆட்சியின் அடிவருடிகள் என்றும் பிரசாரம் செய்தனர் 'கராவ' சாதியைச் சேர்ந்த எழுத்தாளர்கள்.

இந்தச் சமயத்தில், தமிழ் மக்களின் வளர்ச்சியை நாம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் காண்கிறோம். இவர்கள் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கியது மட்டுமல்லாமல், படித்த சிங்கள மக்களுக்கும் தலைமை தாங்கினர். தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்க, தரத்தில் சிறந்தவொரு தலைமைத்துவம் தோன்றியது. 1835ஆம் ஆண்டில் குமாரசாமிப் பிள்ளை, சட்டசபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். அவருடைய மகன் முத்துக்குமாரசாமி 1861ஆம் ஆண்டிலிருந்து 1879ம் ஆண்டுவரை சட்டசபை உறுப்பினராகக் கடமையாற்றினார். இவருடைய மகன்தான் உலகப் புகழ்பெற்ற ஆனந்தக்குமாரசாமி. முத்துக்குமாரசாமிக்குப் பின் அவருடைய மைத்துனரான,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பலம் இராமநாதன், பி. குமாரசாமி, பொன்னம்பலம் அருணாசலம் ஆகியவர்கள், 1939ஆம் ஆண்டு வரை தமிழ் மக்களின் தலைவர்களாக விளங்கினர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே தமிழ் மக்களின் எதிர் காலத்தை நிர்ணயித்தனர்.

தமிழ் மக்களுடைய தலைமைத்துவத்திற்கு ஒப்பாக சிங்கள மக்களிடையே தலைமைத்துவம் அமையவில்லை. தமிழ் மக்களுடைய வளர்ச்சிக்கு இன்னொரு காரணமும் இருந்தது. இலங்கையின் ஏனைய பாகங்களை போல் யாழ்ப்பாண குடா நாட்டில் பெருந்தோட்ட பயிர் செய்கைக்கு வாய்ப்பிருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் மக்கள் கிறிஸ்துவ மிஷனரிமார்கள் ஸ்தாபித்த கல்வி நிலையங்களைப் பயன்படுத்தி, ஆங்கில கல்வியைப் பெற்று அரசாங்கத்தில் உயர் பதவிகளைப்பெற்றனர். அதோடு, மலேசியா, சிங்கப்பூர், கிழக்காபிரிக்கா போன்ற நாடுகளுக்கு வேலை வாய்ப்பிற்காகச் சென்று, நல்ல உத்தியோகங்களை வகித்துத் தங்கள் பொருளாதார நிலையை உயர்த்தினர். மேலும், உயர் கல்வி கற்பதற்காக இந்தியாவுக்குச் சென்ற தமிழ் இளைஞர்கள் அப்பொழுது இந்தியாவில் காந்தியின் தலைமையில் மும்முரமாக இயங்கிக் கொண்டிருந்த இந்திய சுதந்திர போராட்டத்தின் பாதிப்பினால், ஒரே அரசியல் அறிவு பெற்ற இளைஞர் சமுதாயமாக மாறிக்கொண்டிருந்தனர். சிங்கள மக்கள் மத்தியில் இருந்த சாதிப் பிரிவினை அவர்களது வளர்ச்சியைத் தடுத்ததைப்போல தமிழ் மக்களிடையே இருந்த சாதிப்பிரிவினை அவர்களுடைய வளர்ச்சியைத் தடை செய்யவில்லை. உயர் சாதியென்று தம்மை கூறிக்கொண்ட 'வெள்ளாள' சாதியைச் சேர்ந்தவர்கள், சைவ சமய சித்தாந்தங்களைத் தமக்குச் சாதகமாகப் பாவித்து, ஏனைய சாதிகளை விட எண்ணிக்கையில் கூடியிருந்த காரணத்தினாலும் கல்வியறிவிலும் சிறந்திருந்த காரணத்தினாலும், சமூகத்தில் தமது உயர் அந்தஸ்தை நிலை நாட்டியதோடு, ஏனைய சாதிகளின் வளர்ச்சியைத் தடை செய்தனர். ஆகவே, இவ் உயர் சாதியினர் தமிழ் சமுகத்திலே வைத்திருந்த ஆதிக்கத்தைக் கீழ் சாதியினரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க்க முடியவில்லை. சிங்கள சமூகத்தில் சிங்கள பௌத்தர்களுக்கும், சிங்கள கிறிஸ்தவர்களுக்குமிடையே இருந்த எதிர்ப்பும் போட்டியும் தமிழ் சமூகத்தில் தமிழ் இந்துக்களுக்கும் தமிழ் கிறிஸ்துவர்களுக்கும், இடையே இருக்கவில்லை. மேலே குறிப்பிட்ட இக்காரணங்களினால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலும், ஏனைய சமூகங்களை விட தமிழ் சமூகம் முன்னேறிக் கொண்டு வந்தது.

சிங்கள, தமிழ் சமூகங்கள் பொருளாதாரத்திலும், கல்வியிலும் வளர்ச்சியடைந்து வந்த இக்கால கட்டத்தில், முஸ்லிம் சமூகம், கல்வி வளர்ச்சியில் எவ்வித அக்கரையும் காட்டாமல், பழைய முறைப்படியே தமது வியாபாரத்தைச் செய்து கொண்டு, எவ்வித சலனமற்ற ஒரு சமுதாயமாக முடங்கிக் கிடந்தது, 1915ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிங்கள-முஸ்லிம் கலகம் முஸ்லிம் சமூகத்தைப் பெரிதும் பாதித்தது. சட்டசபையில் தமக்குப் போதிய பிரதிநிதித்துவம் இல்லாத குறையையும் உணர்ந்தார்கள்.

இக்கலகத்தினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகம், ஏனைய சமூகங்களின் பொருளாதார, கல்வி வளர்ச்சியோடு தம்மை ஒப்பிடத் தொடங்கியது. பிற்போக்கான நிலையில் இருந்த முஸ்லிம் சமூகம் தனது அரசியல் அந்தஸ்தை உயர்த்துவதில் அக்கரை காட்டியது. சட்டசபையில் முஸ்லிம்கள் தமக்கிருந்த பிரதிநிதித்துவம் போதாதென்று, குறைந்தது மூன்று பிரதிநிதிகளாவது வேண்டுமென்று அரசாங்கத்திடம் முறையிட்டனர். இலங்கையில் காலனித்துவ ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு ஜனநாயக முறை ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்று சிங்கள-தமிழ் சமூகங்கள் போராடிய வேளையில், முஸ்லிம் சமூகம், தனது நிலையைப் பாதுகாப்பதிலும், உரிமைகளைப் பெறுவதிலுமே அக்கரை காட்டியது. சிங்கள தமிழ் மக்களிடையே பரவி வந்த தேசிய உயர்வை சந்தேகக் கண் கொண்டு பார்த்தனர் முஸ்லிம் தலைவர்கள். கவர்னர் மேனிங், கவர்னர் கிளிப்பர்ட் இதைத் தமக்குச் சாதகமாகப் பாவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மக்களின் தேசிய இயக்கத்தின் வளர்ச்சியைத் தடைப்படுத்துவதற்கு, சிறுபான்மை இன மக்களுக்குப் பல சலுகைகளை வழங்கியது அரசாங்கம். மூன்று முஸ்லிம் பிரதிநிதிகளைக் கவர்னர் மேனிங், சட்டசபைக்கு நியமித்தார்.

அரசியலில் அக்கறை செலுத்தாதிருந்த முஸ்லிம் சமூகத்தினர் 1915ஆம் ஆண்டுக்குப் பிறகு, அரசியல் அந்தஸ்தைப் பெறுவதில் மும்முரமாயிருந்தனர். முஸ்லிம் இளைஞர் சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. 1900ஆம் ஆண்டில் 'சோனகர் சங்கமும் 1903ஆம் ஆண்டில் இலங்கை முஸ்லிம் சங்கமும், ஸ்தாபிக்கப்பட்டதென்றாலும், அவை பெரும்பாலும், முஸ்லிம்களுடைய கல்வியை வளர்ப்பதிலும், முஸ்லிம் கலாசாரத்தைப் பேணுவதிலுமே கண்ணும் கருத்துமாயிருந்தன. ஆனால் 1915ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் முஸ்லிம் அரசியல் இயக்கங்களைக் காண்கிறோம். 1922ஆம் ஆண்டில் "இலங்கை சோனகர் சங்கம்" ராசிக் பரீத் அவர்களுடைய தலைமையில் நிறுவப்பட்டது. இலங்கை பூராவும், 200 கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து 'முஸ்லிம் இளைஞர் லீக்' 1924ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இது 'அகில இலங்கை முஸ்லிம் லீக்' என்று பின்னால் வளர்ந்தது.

இச்சங்கம் இலங்கைச் சட்டசபையில் முஸ்லிம்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும் என்றும் முஸ்லிம்களுடைய சமூக, பொருளாதார, பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றும் முஸ்லிம்களின் கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், இலங்கையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு சுதந்திர அரசாங்கம் அமைக்கப்படவேண்டும் என்றும் தனது முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டிருந்தது. எல்லா சமூகங்களிடையேயும் பரஸ்பர ஒற்றுமையும் நல்லுணர்வும் இருத்தல் அவசியம் என்று தன்னுடைய நோக்கங்களில் ஒன்றாக முஸ்லிம் லீக் கொண்டிருந்ததற்குக் காரணம், 1915ஆம் ஆண்டில் நிகழ்ந்த கலகத்தினால் ஏற்பட்ட வடு நீங்க வேண்டும் என்ற நல்லெண்ணமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை முஸ்லிம்கள் தம்முடைய நிலையை மற்றைய சமூகங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கத் தொடங்கினர். அன்றைய முஸ்லிம் தலைவர்களில் ஒருவராக வளர்ந்து வந்த ரீ. பி. ஜாயா அவர்கள், 1913ஆம் ஆண்டில் இலங்கை முஸ்லிம் சங்கத்தில் ஆற்றிய சொற்பொழிவில் பின் வருமாறு கூறினார்.

"நாங்கள் என்ன சாதித்திருக்கிறோம்? அவர்கள் (மற்றைய சமூகத்தினர்) சிறந்த வழக்கறிஞர்களையும், டாக்டர்களையும், நகரசபை அங்கத்தவர்களையும் உருவாக்கியிருக்கிறார்கள். முஸ்லிம்கள் எதைச் சாதித்திருக்கிறார்கள்? எங்கள் மத்தியில் அரசாங்கத்தில் உயர் பதவி வகுக்கும் யாராவது இருக்கிறார்களா? எங்களிடையே கல்விகற்ற அறிஞர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? எத்தனை நகரசபை உறுப்பினர்களையும், சட்டசபை உறுப்பினர்களையும் எம் சமூகம் உருவாக்கியிருக்கிறது? எங்களுடையது என்று கூறிக்கொள்வதற்கு எமக்கு எத்தனை பாடசாலைகள் இருக்கின்றன? இத்தனை கேள்விகளுக்கும் எமக்கிருக்கும் ஒரே பதில் "இல்லையென்பதே". முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியிலும் சமூக முன்னேற்றத்திலும் அக்கரை காட்டிய இத்தலைவர்களுக்கு 1915ஆம் ஆண்டுக் கலகம் ஒரு பேரிடியாக விழுந்தது. முஸ்லிம்கள் இலங்கையின் அரசியல் வளர்ச்சியில் ஈடுபாடு கொள்ளவில்லை. சிங்கள-தமிழ் மக்கள் அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சமயத்தில் முஸ்லிம்கள் விலகியே இருந்தனர்.

1917-19ஆம் ஆண்டுகளில் இலங்கை தேசிய காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டபோது கூட முஸ்லிம்கள் இதில் கலந்து கொள்ளவில்லை. இலங்கையில் மக்களாட்சி நிறுவப்பட வேண்டும் என்ற ஏனைய சமூகத்தவரின் போராட்டத்தை சந்தேகத்துடனும், பயத்துடனும் பார்த்தனர். இக்காலகட்டத்தில் தமிழருடைய அரசியல் அந்தஸ்து மிகவும் உயர்ந்த நிலையிலிருந்தது. 1911ஆம் ஆண்டில் படித்த இலங்கையர் வாக்காளர் பிரதிநிதியாக பொன்னம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதன் தேர்வு செய்யப்பட்டார். திரும்பவும், 1917ஆம் ஆண்டு தம்மோடு போட்டியிட்ட ஒரு சிங்களத் தலைவரைக் தோற்கடித்து சட்டசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து 1919ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இலங்கை தேசிய காங்கிரசின் தலைவராக பொன்னம்பலம் இராமநாதனின் சகோதரர் பொன்னம் அருணாசலம் தெரிவு செய்யப்பட்டார். தமிழர்களின் இத்தலைமைத்துவத்தை சிங்களவர் ஏற்றுக்கொண்டனர். சிறுபான்மை சமூகத்தவர்களான தமிழர் சமூகம் பெரும்பான்மை சமூகமான சிங்களவரோடு சம அந்தஸ்தைப் பெற்று தமிழர்களும், சிங்களவரும் இரு பெரும்பான்மை இனங்களாகக் கணிக்கப்பட்டன. ஏனைய சமூகங்கள் சிறுபான்மை இனங்களாகவே கணிக்கப்பட்டன. இதில் முஸ்லிம்களும் அடங்குவர்.

சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே இருந்த இந்த செயற்கை சம அந்தஸ்து நிலை அதிக காலம் நீடிக்கவில்லை. ஜனநாயக அரசியல் முறையில் எண்ணிக்கைக்குத்தான் அதிக முக்கியத்துவம் இருக்கிறது. எண்ணிக்கையின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்தபோது இருபெரும் சமூகங்கள் என்ற கருத்தின் செயற்கைத் தன்மையின் உண்மை நிலை அம்பலமாகியது. இலங்கை தேசிய காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு வருடத்திலேயே இப்பிரச்சினை தலைதூக்கியது. அரசியல் சீர்திருத்தத்தில் பிரதிநிதித்துவம் எப்படி அமைய வேண்டும் என்ற பிரச்சினையே இப்பிரிவினைக்குக் காரணமாயிருந்தது. முஸ்லிம்களும் தமக்கு அதிக பிரதிநிதித்துவம் வேண்டும் என்று அரசாங்கத்திடம் விண்ணப்பித்தனர். 1915ஆம் ஆண்டில் நிகழ்ந்த கலகம், முஸ்லிம்கள் தாம் பிரதிநிதிகளில்லாத ஓர் அரசியல் அனாதைச் சமூகம் என்பதை உணர்ந்தனர்.

இலங்கை தேசிய காங்கிரஸ் சில முக்கிய கோரிக்கைகளை ஆங்கில அரசாங்கத்தின் முன் வைத்தது. இதில் முக்கியமான கோரிக்கையாவது, இலங்கை சட்டசபை 50 அங்கத்தவர்களைக் கொண்டதாயிருக்க வேண்டும் என்றும், அதில் 40 உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்காளர்களினால் தெரிவு செய்யப்படல் வேண்டும் என்றும் எஞ்சிய 10 உறுப்பினர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகஸ்தர்களும், சிறுபான்மை சமூகங்களைக் கொண்டவர்களாயும் இருக்க வேண்டும் என்பதே. சிறுபான்மை இனத்தவர்கள் இதில் பொதிந்துள்ள சூட்சுமத்தை உணர்ந்தார்கள். சட்டசபையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாதலால், சிறுபான்மை இனத்தவர்கள் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

1920ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சட்டசபை சீர்திருத்தத்தில், 37 உறுப்பினர் இருந்தார்கள். இதில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் 14 பேரும், அரசாங்க உத்தியோகஸ்தர் அல்லாத உறுப்பினர் 23 என்றிருந்த போதிலும் உண்மையில் அரசாங்கத்திற்குச் சார்பாயிருந்தவர்கள் 24 ஆகவும். அரசாங்கத்தைச் சேராதவர்கள் 13 பேராகவும் இருந்தார்கள். இச்சட்டசபை சீர்த்திருத்தத்தை இலங்கை தேசிய காங்கிரஸ் எதிர்த்தது. "சமூகங்களிடையே பிரிவினையை கொண்டு வருவது மட்டுமல்லாமல், மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் அமைப்பு பிற்போடப்பட்டுள்ளது" என்று காங்கிரஸ் இச்சீர்திருத்தத்தைக் கண்டித்தது. இலங்கை தேசிய காங்கிரசிலிருந்து தமிழர்கள் விலகிக் கொண்டார்கள். தமிழர்கள், 'மூன்று சிங்களவருக்கு இரண்டு தமிழர்கள் இருக்க வேண்டுமெ'ன்று தமது கோரிக்கையை முன்வைத்தனர். அவர்கள் விலகுவதற்கு ஒரு முக்கிய காரணம் அரசாங்க உத்தியோகத்தில் தமக்கு சமபங்கு கிடைக்காமல்போய் விடுமென்பதே. ஆகவே தமிழ்த்தலைவர்கள் ஏனைய சிறுபான்மை சமூகங்களின் உதவியை நாடினர். சேர் பொன்னம்பலம் இராமநாதன் தேசிய காங்கிரசை விட்டும் விலகினார். தமிழ்த் தலைமைத்துவத்தின் கீழ் முஸ்லிம்களும், சிறுபான்மை இனத்தவர்களும் அதிக பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கோரினர். எனவே 1924ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட புதிய சட்டசபையில் 3 முஸ்லிம் உறுப்பினர்கள் இடம்பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்னர் மேனிங் கொண்டு வந்த சட்டசபை சீர்த்திருத்தத்தில் அரசாங்க சார்பற்ற உறுப்பினர்கள் 37 ஆக உயர்ந்தது. 11 உறுப்பினர்கள் இன அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். மூன்று முஸ்லிம் உறுப்பினர்களாக, என். எச். எம். மார்க்கான் மார்க்கர், என். எச். எம். அப்துல்காதர், றி. பி. ஜாயா ஆகியவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இலங்கைதேசிய காங்கிரசின் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவரான றி.பி. ஜாயா முஸ்லிம்களின் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் சமூகத்தின் ஓர் அங்கமாக மலாயா இனத்தவர்கள் இருந்தார்கள் என்றாலும் சில முஸ்லிம்கள் இதற்கு ஆட்சேபனை செய்தார்கள். எனவே இலங்கை முஸ்லிம் சமூகத்தின் முக்கிய அங்கங்களாக இருக்கும் மலாயா, போரா, மேமன் ஆகிய இனங்களின் வரலாற்றை மேலோட்டமாக ஆராய வேண்டியது அவசியமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மலாயர்கள் - ஒரு வரலாற்றுக் குறிப்பு

இலங்கை முஸ்லிம்கள் என்று நாம் கூறும்போது, இஸ்லாமிய சமயத்தைப் பின்பற்றும் பல இனமக்களைக் குறிக்கின்றோம். இஸ்லாத்தை தழுவிய ஒருவன் புதிய பண்பாட்டை, ஒரு புதிய கலாசாரத்தைப் பின்பற்றுகிறான். இஸ்லாம் ஒரு வாழ்க்கை முறை. இஸ்லாத்தின் அடிப்படையில்தான் ஒரு முஸ்லிம் சமூகம் இயங்குகிறது. ஒருவனுடைய அன்றாட வாழ்க்கையை இஸ்லாம் நிர்ணயிக்கிறது. ஆகவே முஸ்லிம்கள் என்று கூறும்போது ஒரு குறிப்பிட்ட பண்பாட்டைக் கடைப்பிடிக்கும் ஒரு சமூகத்தைத்தான் நாம் குறிப்பிடுகிறோம். சில சமயங்களில் இவர்கள் மொழியால் வேறுபடலாம். பல இனங்களைச் சேர்ந்தவர்களாயிருக்கலாம். ஆனால் அவர்களெல்லோரும் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற கணிப்பில்தான் நாம் இலங்கை முஸ்லிம்களை ஆராய்கிறோம்.

இலங்கை முஸ்லிம் சமூகத்தில் மலாயா இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகிறார்கள். இலங்கை மலாயர்களின் வரலாற்றை நாம் இரண்டு நூற்றாண்டு எல்லைக்குள்தான் அடக்கலாம். இலங்கை முஸ்லிம் சமூகத்தின் ஓர் அங்கம் என்று நாம் மலாயர்களைக் கணித்தாலும். அவர்கள் தமது இனத்தின் தனித்துவத்தை இன்று வரைக்கும் காப்பாற்றியே வந்திருக்கிறார்கள். மலாயா இனத்தைச் சேர்ந்தவர்கள் அநேகமாக எல்லோருமே முஸ்லிம்கள். இவர்கள் முஸ்லிம் சமூகத்தில் 5% சத விகிதமாக இருக்கிறார்கள். இலங்கை சோனகர்களோடு நெருங்கிப் பழகிய காரணத்தினால் அவர்களுடைய பழக்க வழக்கங்களின் செல்வாக்கு மலாயா மக்களிடம் காணக்கூடியதாக இருக்கிறது. அதே வேளையில் இஸ்லாமிய நடைமுறைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் கடைப்பிடித்துத் தமது தனித் தன்மையைக் காப்பாற்றத் தவறியதில்லை. ஒரு சிறுபான்மை சமூகத்திலும் சிறுபான்மை சமூகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் இம்மலாயா சமூகத்தினர் இந்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியில் தமது பங்கை ஆற்றியே வந்துள்ளனர்.

'மலாயா' என்று பொதுவாகக் குறிப்பிடப்படும் இவர்கள் இந்தோனேஷியாவின் முக்கிய தீவான ஜாவாதீவிலிருந்து வந்தவர்களே. இவர்கள் பெரும்பாலும் ஜாவர்கள் என்றே அழைக்கப்பட்டு வந்தார்கள். ஆங்கில உத்தியோகஸ்தர்கள்தான் இவர்களுக்கு மலாயர்கள் என்ற பெயரைச் சூட்டினார்கள். மலேசியாவிலும், இந்தோனேஷியாவிலும் பேசப்பட்டு வந்த மலாயா மொழியை இவர்கள் தமது தாய்மொழியாகப் பேசி வந்த காரணத்தினால் இவர்களுக்கும் இப்பெயரையே ஆங்கிலேயர் வைத்திருக்கலாம். மலாயர்கள் என்ற பெயர் பொதுவாக மலேசியா, இந்தோனேஷியதீவுகளான ஜாவா, சுமத்ரா, சிலபீஸ் போன்ற தென்கிழக்காசிய தீவுகளிலிருந்து வந்த மக்களைக் குறிப்பிடுவதற்கு இன்று பாவிக்கப்பட்டு வருகிறது. உருவ அமைப்பில் மங்கோலிய இனத்தைச் சேர்ந்த மலாயர்கள் இலங்கையின் ஏனைய சமூகத்தவர்களினது தோற்றத்திலிருந்து வேறுபட்டே காணப்படுகிறார்கள். இலங்கை முஸ்லிம்களுடன் திருமண சம்பந்தம் வைத்த காரணத்தினாலோ என்னவோ மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் வாழும் மக்களைவிட கறுப்பு நிறமுடையவர்களாகவே இலங்கை மலாயர்கள் காணப்படுகிறார்கள். தென்கிழக்காசிய மக்களின் பழக்க வழக்கங்களினின்று வேறுபட்ட பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்கும் இவர்களிடம், ஏனைய முஸ்லிம் சமூகத்தவரின் செல்வாக்கை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. ஆகவே, மலாயர்கள் என்று நாம் கூறும்போது ஒரு குறிப்பிட்ட சமூகத்தவரையே குறிக்கிறோம். 'பாசா மலாயு' என்ற மொழியைப் பேசும் மலாயர்கள் தமது இனத்தின் தனித்துவத்தைக் காப்பாற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மொழி பெரிதும் உதவியிருக்கலாம் என நாம் கருத இடமிருக்கிறது. டச்சுக் கம்பெனியினரால் தென் ஆபிரிக்காவில் குடியேற்றப்பட்ட மலாயர்கள் தமது மொழியாகிய மலாய மொழியைக் கைவிட்ட காரணத்தினால், அவர்களால் தமது தனித்துவத்தைக் காப்பாற்ற முடியவில்லை. தென்னாபிரிக்காவில் குடியேறிய மலாயர்கள், அங்கே குடியேறிய ஏனைய முஸ்லிம்களைப் போல், தென்னாபிரிக்க டச்சுக்காரரின் மொழியாகிய ஆபிரிக்கன் மொழியை ஏற்றுக்கொண்டதும், இவர்கள் தமது தனித்துவத்தை இழப்பதற்கு ஒரு காரணமாயிருக்கலாம்.

டச்சுக்காரரின் ஆட்சிக்குப் பிறகுதான் மலாயர்கள் இலங்கையில் குடியேறினார்கள் என்ற பொதுவான கருத்து இன்றும் நிலவி வருகிறது. என்றாலும் மலாயா மக்களுக்கும் இலங்கை மக்களுக்குமிடையே இருக்கும் தொடர்பு ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்பிருந்தே வந்திருக்கிறது என்று நாம் கூறுவதற்குக்குச் சான்றுகள் இருக்கின்றன. மேற்கு நாடுகளுக்கும், கிழக்கு நாடுகளுக்குமிடையே இருந்த வர்த்தகத் தொடர்பில் இலங்கை ஒரு கேந்திர ஸ்தானமாக இருந்து வந்திருக்கிறது. கிழக்காபிரிக்க நாடுகளுடன் முக்கியமாக மடகாஸ்கர் நாட்டுடன் வர்த்தகத் தொடர்பு வைத்திருந்த இந்தோனேசிய வர்த்தகர்கள் தமது போக்குவரத்துப் பாதையில் இருந்த இலங்கைக்கு அடிக்கடி வந்திருக்கலாம். இலங்கையின் கரையோரங்களில் உள்ள சில இடப்பெயர்களின் வரலாற்றை நாம் உற்று நோக்கும்போது இவ்வுண்மை புலனாகிறது. 'ஹம்பாந்தொட்ட' என்று பெயர் பெற்ற தென்னிலங்கை நகரம். மலாயர்கள் 'சம்பான்' என்று தாம் அழைத்த தோணியிலிருந்து வந்திறங்கிய காரணத்தினால் இப்பெயர் இருக்கலாம். 'ச' என்ற எழுத்துக்குப் பதிலாக 'ஹ' என்ற எழுத்தைத் தென்னிலங்கை மக்கள் உபயோகிப்பதுண்டு. ஆகவே சம்பானில் அடிக்கடி மலாயர்கள் வந்திறங்கிய காரணத்தினால் இவ்விடத்திற்கு 'சம்பான் தொட்ட' என்ற பெயர் வந்திருக்கலாம். சம்பான் தொட்ட- என்ற பெயர் ஹம்பான் தொட்ட-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மருவியிருக்காலம். இலங்கையில் மலாயர்களை குறிக்கும் வேறு சில இடப் பெயர்களான ஜா-எல (ஜாவர்களின் வாய்க்கால்) ஜாக்கொட்டுவ (ஜாவர்களின் கோட்டை) சாவகச்சேரி (ஜாவர்களின் சேரி) என்பவை சமீப வரலாற்றையே குறிக்கின்றன.

மலாயர்கள் இலங்கைக்குப் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வந்தவர்கள் என்பதற்கு வரலாற்று சான்றுகள் இருக்கின்றன. பதின்மூன்றாம் நூற்றாண்டில் இலங்கையில் ஆட்சி புரிந்த இரண்டாம் பராக்கிரம பாகு அரசனுடைய காலத்தில் மலாய நாட்டிலிருந்து சந்திர பானு என்ற பௌத்த அரசன் இலங்கையின் மேல் படையெடுத்தான் என்று சூலவம்சம் கூறுகிறது. ''இரண்டாம் பராக்கிரம பாகுவின் பதினோராவது ஆண்டின் ஆட்சி காலத்தில் ஜாவக - என்ற நாட்டை சேர்ந்த சந்திரபானு என்ற அரசன், தான் பௌத்த மதத்தை பின்பற்றுபவன் என்று கூறிக்கொண்டு இந்நாட்டின் மேல் படையெடுத்தான். அவனுடைய படையின் கொடிய வீரர்கள் இந்நாட்டு மக்களைக்கொன்று பெரும் சேதம் விளைவித்தார்கள்'' என்று சூலவம்சம் கூறுகிறது. இவ்வரசன் தனது முதலாவது படையெடுப்பு வெற்றி பெறாததினால் இரண்டாம் முறையும் படையெடுத்து போர்க் களத்தில் உயிரிழந்தான்.

இவ்விரு படையெடுப்புக்கள் நடந்த காலத்திற்றான் சந்திரபானு யாழ்ப்பாணத்தைத் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்திருக்கலாம். பதின்மூன்றாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவை ஆட்சி செய்த ஜதாவர்மன் வீர பாண்டியனுடைய கல்வெட்டு சாஸனங்களில், குறிப்பிடப்பட்ட இலங்கையை ஆட்சி செய்த ஜாவக நாட்டை சேர்ந்த அரசன், இச்சந்திரபானுவாக இருக்கலாம். வீர பாண்டியனின் பதினோராவது ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்ட 'குடுமியமலை பிரசாத்தி' என்ற சாசனத்தில், ''பாண்டிய ஆட்சிக்குச் சில காலம் அடங்காமலிருந்த சாவகன் மைந்தன் வீரபாண்டியனுக்குத் திறைசெலுத்த ஒப்புக்கொண்ட பிறகு அவனுடைய தந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி செய்த இலங்கை அரச பீடத்தில் திரும்பவும் அவன் அமர்த்தப்பட்டான்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சந்திரபானுவின் இலங்கைப் படையெடுப்பு மத்தியகால வரலாற்றில் ஏற்பட்ட ஒரு தனிச் சம்பவமாக இருக்க முடியாது என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் பரணவித்தான கருதுகிறார். இலங்கைக்கும் மலேசியாவுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு இருந்ததற்கு இச்சம்பவம் ஓர் அத்தாட்சியாக இருக்கலாம். ஐரோப்பியர்களின் வருகைக்கு முன் மலாயர்கள் இலங்கையில் குடியேறினார்கள் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை. அப்படி இருந்தாலும் அவர்கள் இங்குள்ள மக்களுடன் இரண்டறக் கலந்திருக்கலாம். எனவே இன்றைய மலாயா சமூகத்தினரின் மூதாதையர் பெரும்பாலும் டச்சுக்கம்பெனியின் காலத்தில் இலங்கைக்கு வந்தவர்களே என்ற முடிவுக்கு நாம் வரலாம். போர்த்துக்கீசரினால் அடிமைகளாக சில மலாயர்கள் கொண்டு வரப்பட்டு 'அடிமைகள் தீவு'. (ஸ்லேவ் ஐலண்ட்) என்று இன்று கூறப்பட்டு வரும் இடத்தில் குடியமர்த்தப்பட்டார்கள் என்ற சிலரின் கருத்து ஆதாரமற்றது.

மலாயர் சமூகத்தினரின் இலங்கைக் குடியேற்றத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று டச்சுக்கம் பெனியினரால் அரசியற் கைதிகளாக நாடு கடத்தப்பட்டு இந்நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட அரச குடும்பங்களையும், பிரபுக்கள் குடும்பங்களையும் கொண்டது. மற்றையது டச்சுக்கம்பெனியில் சேவை செய்வதற்காக கொண்டு வரப்பட்டவர்கள். இந்தோனேசியாவில் தமது ஆட்சியை நிலைநாட்டுவதற்குத் தொடர்ந்த யுத்தங்களில் தோல்வியுற்ற அரசர்களையும், பிரபுக்களையும் அவர்களது குடும்பங்களையும் நாடு கடத்துவது டச்சுக்கம்பெனியின் ஒரு முக்கிய கொள்கையாக இருந்தது. அவர்களது ஆட்சியின் கீழ் இருந்த இலங்கைக் கரையோரப் பிரதேசம், இந்தோனேசியத் தீவுகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகாமையில் இருந்தகாரணத்தினால் நாடுகடத்தப்பட்டவர்கள் இங்கே கொண்டு வரப்பட்டார்கள். டச்சுக்காரர்களின் ஆட்சியில் இருந்த தென்னாபிரிக்கா, மிகவும் தொலை தூரத்தில் இருந்தபடியால் இலங்கையையே இவர்கள் விரும்பினார்கள்.

டச்சுக்கம்பெனியின் குறிப்பேடுக்களின்படி முதன் முதலாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட அரசியற்கைதிகள் மொளுக்காஸ்தீவையும், சுந்தா தீவுகளையும் சேர்ந்த அரச குடும்பங்களாகும். பதினேழாம் நூற்றாண்டில் ஜாவாதீவில் நடைபெற்ற யுத்தங்களில் ஈடுபட்ட காரணத்தினால் சில அரசகுமாரர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்கள். ஜாவா வரலாற்றில் 'சூனன் மாஸ்' என்று பெயர் பெற்ற மூன்றாவது அமங்குராத் என்ற அரசனும் அவனுடைய குடும்பத்தாரும் 1708ஆம் ஆண்டில் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டார்கள். 1722, 1723ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு அகதிகளாகக் கொண்டுவரப்பட்டவர்கள், மாதரம் என்ற பிரதேசத்தின் அரசன் சுசுனன் என்பவனுக்கு எதிராகக் கலகம் விளைவித்த அரசகுமாரர்களாகும். 1728ஆம் ஆண்டில் பக்குபுவன அரசனின் சகோதரர் ஆரிய மங்குனேகாராவும், பிறகு பிரதம அமைச்சர் தனுராஜாவும் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டார்கள். இதேபோன்று பல அரசர்களும், அரசகுமாரர்களும், அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் இந்நாட்டுக்கு அரசியற் கைதிகளாகக் கொண்டு வரப்பட்டார்கள். பதினெட்டாம் நூற்றாண்டில் ஏறத்தாள இருநூறு அரச குடும்பங்கள் இலங்கையில் இருந்ததாக நாம் அறிகிறோம். டச்சுக் கம்பெனியின் ஆட்சிக்குக் கீழிருந்த கொழும்பு, காலி, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலேயே இவர்கள் அமர்த்தப்பட்டார்கள்.

கொழும்பில் இவர்கள் வாழ்ந்த இடமாகிய ஹல்ஸ்டோப், 'கம்புங் பங்கோரான்' என்று பெயர் பெற்றது. பாதுகாப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணங்களுக்காக இவ்வரச குடும்பங்கள் பெரும்பாலும், டச்சுக் கோட்டைகளுக்குள்ளேயே வைக்கப்பட்டனர். நாடுகடத்தப்பட்ட சூனன் மாஸ் என்ற அரசரின் பாதுகாப்புக்கு 28 படைவீரர்கள் அமர்த்தப்பட்டார்கள். இவர்கள் கோட்டைக்கு வெளியே செல்லும்போது, படைவீரர்களின் பாதுகாப்புடன்தான் செல்ல வேண்டும் என்று விதிக்கப்பட்டது. இவர்கள் தங்களிடையே எவ்விதத் தொடர்பும் வைத்திருக்கக்கூடாது என்ற கட்டளையையும் கம்பெனியர் விதித்திருந்தனர். நாளடைவில் இவ்விதி தளர்த்தப்பட்டது. இவர்களிடையே திருமணங்களும் நடைபெற்றன. மக்கா சர் என்ற தீவின் கோவா பிரதேசத்தின் அரசனாக இருந்த பத்தாரா கோவா அமாஸ் மதீனா என்பவருக்கும், உயர் வகுப்பைச் சேர்ந்த மலாயா பெண் ஹபீபாவுக்கும் திருமணம் நடந்தது. சில அரசியற் கைதிகள் டச்சுக்கம்பெனியின் படையில் தளபதிகளாகவும் கடமையாற்றினர். சில அரச குடும்பத்தினர் தம்மைத் தம் தாய்நாட்டுக்குத் திருப்பி அனுப்பும்படி எவ்வளவோ மன்றாட்டத்துடன் டச்சுக்கம்பெனியாருக்கு முறையிட்டும் அவர்கள் இவ்வரச குடும்பத்தின் முறையீட்டுக்குச் செவிசாய்க்கவில்லை.

சில அரசகுடும்பத்தினர் இலங்கை முஸ்லிம்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த காரணத்தினால் இஸ்லாமிய அறிவில் பாண்டித்தியம் பெற்றனர். ஆதிபத்தி நட்டகுசுமா என்பவர் தன் நாட்டுக்குத் திரும்பிய பிறகு ஜொக்யக்கார்த்தாவின் நீதிச்சபையின் சமய உத்தியோகத் தவர்களின் தலைவராக நியமிக்கப்பட்டார். வீரகுசுமா என்பவர் தன் நாட்டுக்குத் திரும்பிய பிறகு ஜொக்யக்கார்தாவின் அரசனுக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

அரசு குடும்பங்கள் அல்லாத உத்தியோகத்தர்களும், சமூகத்தலைவர்களும் மற்றும் சாதாரண மக்களும் நாடு கடத்தப்பட்டார்கள். இவர்களில் சிலர் குற்றவாளிகளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு கடத்தப்பட்டார்கள். இந்நாட்டுக்கு அரசியற் கைதிகளாகக் கொண்டுவரப்பட்டவர்களில் அநேகம் பேர் டச்சுக்கம்பெனியின் படைகளில் சேர்ந்து உயர்ந்த பதவிகளை அடைந்தார்கள்.

மலாயர்கள் இருந்த படைப்பிரிவு, டச்சுக்கம்பெனியின் ஒரு முக்கிய படைப்பிரிவாகக் கணிக்கப்பட்டது. போர்த்துக்கீசரின் ஆட்சியில் இருந்த கொழும்புக் கோட்டையின் முற்றுகையில் மலாய வீரர் படைப்பிரிவு முக்கிய இடத்தை வகித்தது. டச்சுக்காரர் யாழ்ப்பாணம், மன்னார் போன்ற இடங்களைக் கைப்பற்றுவதற்கும் இம்மலாயா வீரர்கள் பெரிதும் உதவினர்.

ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றிய பிறகு மலாயர்களைத் தமது படைகளில் சேர்ப்பதற்கு அக்கறை காட்டினார்கள். ஆங்கிலேயர், இவர்களுக்கு மலாயர்கள் என்ற பொதுப் பெயரைக் கொடுப்பதற்குக் காரணம், இவர்கள் தென்கிழக்காசிய நாடுகளான அம்பியன், பாலின், பண்டான் போன்ற இடங்கிளிலிருந்து வந்த காரணத்தினாலும் மலாய மொழியைப் பேசுபவர்களாக இருந்ததுமே.

இம்மலாயா இனத்தவர் நாளடைவில் இலங்கை முஸ்லிம்களுடன் அன்னியோன்னியமாகப் பழகத் தொடங்கினார்கள். இஸ்லாம் இவ்விரு சமூகத்தவர்களினதும் பொது மதமாக இருந்த காரணத்தினால் முஸ்லிம் சமூகத்தினரோடு ஒன்றரக்கலந்தார்கள். ஆகவே மலாயர்கள் இனத்தில் வேறுபட்டாலும், இலங்கை முஸ்லிம் சமுதாயத்தின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகிறார்கள். முஸ்லிம் சமூகம் என்ன உரிமைகளையும் சலுகைகளையும் அரசாங்கத்திடமிருந்து பெற முயல்கிறதோ அதைப் பகிர்ந்து கொள்ளும் உரிமை மலாயா இனத்தவர்களுக்கு உண்டு. இலங்கையின் இஸ்லாமிய வளர்ச்சிக்குத் தமது பங்கை ஆற்றினார்கள் என்பதற்கு வேக்கந்த மஸ்ஜிதும், புதிய சோனகத்தெருவின் பள்ளிவாசலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாவாவீதியிலுள்ள மஸ்ஜிதுல் ஜாமியாவம் சான்றாக அமையும். எனவே மலாயா இனத்தைச் சேர்ந்தவர்களான றி.பி. ஜாயாவையும், நீதிபதி அக்பாரையும் முஸ்லிம்தலைவர்களாக இலங்கை முஸ்லிம்கள் ஏற்றுக் கொண்டதில் வியப்பில்லை. இன்றும் ஆமித் போன்ற மலாயா இனத்தின் தலைவர்கள் முஸ்லிம்களின் தலைவர்களில் ஒருவராக இருந்து செயலாற்றுவதை நாம் காண்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மேமன்களும் போராக்களும்

இலங்கையில் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றும் எல்லோரையும் குறிப்பதற்கு நாம் "முஸ்லிம்கள்" என்ற பொதுப் பெயரை உபயோகித்தாலும், இச்சமூகத்தில் பல இனப்பிரிவுகளைக் காணலாம். முன்னைய அத்தியாயத்தில் மலாயா இனத்தைச் சேர்ந்தவர்களின் வரலாற்றை ஆராய்ந்தோம். இவ்வத்தியாயத்தில் வடஇந்தியாவிலிருந்து வியாபாரம் காரணமாக இங்கே குடியேறிய மற்றுமொரு இனத்தைச் சேர்ந்தவர்களாகிய மேமன், கோஜா, போரா ஆகியவர்களைப் பற்றி ஆராய்வோம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியகாலப் பகுதியில் இந்திய சமுத்திரத்தின் எல்லையிலுள்ள நாடுகள் எல்லாவற்றிலும் ஆங்கிலேயர் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டினார்கள். ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்த நாடுகளில் எவ்விதத்தடையுமின்றி மக்கள் போக்குவரத்துச் செய்தார்கள். ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குச் செல்வதற்கு எவ்வித அனுமதிப்பத்திரமும் தேவைப்படவில்லை. வாணிபம் காரணமாகவோ, வேலை வாய்ப்புக் காரணமாகவோ ஆங்கில ஆட்சியின் கீழிருந்த நாடுகளின் பிரஜைகள் செல்வதற்கும் அந்நாடுகளில் குடியேறுவதற்கும் எவ்விதத்தடையுமிருக்கவில்லை. இந்திய உபகண்டத்திலிருந்து குறிப்பாகத் தென்னிந்தியாவிலிருந்து வறுமையில் வாடிய குடும்பங்கள் கூலிவேலைக்காக இடம் பெயர்ந்தார்கள். இவர்கள் பெரும்பாலும், தென்னாபிரிக்கா, கிழக்காபிரிக்கா, பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் பெருந்தோட்டங்களில் கூலிவேலை செய்வதற்காக அந்நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு வகையினர் வியாபாரத்திற்காக வட இந்தியாவிலிருந்து சென்றார்கள். அப்படிச் சென்றவர்களில் ஒரு வகுப்பார்தான் மேமன்கள். மேமன் என்ற பதம் அறபு மொழியின் "மூமீன்" என்ற வார்த்தையிலிருந்து வந்திருக்கலாம். இந்தியாவின் வடமேற்குப் பகுதியான சிந்துப் பிரதேசத்திலுள்ள லுஹானா என்ற இடத்தில் வாழ்ந்த மக்கள் இஸ்லாத்தைத் தழுவியபோது அவர்கள் சைய்யத் அப்துல் காதர் ஜெய்லானி அவர்களிடம் முஸ்லிமாக மாறிவிட்ட தாம் எப்படி அழைக்கப்பட வேண்டும் என்று கேட்டதற்கு "நீங்கள் இப்பொழுது மூமீன்கள் ஆகிவிட்டீர்கள்" என்று அவர்கள் கூறியதாக, கர்னபரம்பரையான கதையொன்று இம்மக்களிடையே இருந்து வருகிறது. இவர்கள் பிறகு குதியானா ஜூனாகாத் சமஸ்தானத்தில் குடியேறினார்கள். இம்மேமன்கள் தமது பிறப்பிடத்தை வைத்து குச்சி மேமன்கள் என்றும் ஹலெய்ஸ் மேமன்கள் என்றும் வழங்கப்பட்டார்கள். இவர்களிடையே இனவேறுபாடோ, மதவேறுபாடோ இல்லை. இவர்கள் தமது பிறந்த இடத்திலிருந்து வேறொரு இடத்திற்குக் குடியேறினாலும் தம் தனித்துவத்தைக் காப்பாற்றியே வந்திருக்கிறார்கள். மேமன்கள் ஹனபி மதஹபைப் பின்பற்றும் சுன்னத் ஜமா அத்தைச் சேர்ந்தவர்கள். 'மன்னா சாத்' என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட அப்துல் றஹ்மான் என்ற மேமன்தான் இலங்கைக்கு வந்த முதல் மேமன். 1870ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த இவர் தன்னுடைய புடவை வியாபாரத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தார். இவருக்குப் பிறகு வந்த மேமன்கள் கொழும்பு புறக்கோட்டையிலும், கண்டியிலும் தமது புடவை வியாபாரத்தை ஸ்தாபித்தார்கள். இலங்கையின் அரசியல் சமூக வாழ்க்கையில் இவர்கள் நேரடியாக ஈடுபடவில்லையென்றாலும், பொது ஸ்தாபனங்களுக்கு நன்கொடை வழங்கத்தவறியதில்லை. இலங்கையின் சாரணர் இயக்கத் தலைமைக் காரியாலயம் மேமன் சமூகத்தினரால் கட்டப்பட்டதே. 3,000 மேமன்கள் இன்று கொழும்பில் வாழ்கிறார்கள். மேமன் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். மற்ற சமூகங்களைப் போல் கல்வி கற்று டாக்டர்களாகவும் சட்டத் தரணிகளாகவும், கணக்காளர்களாகவும் இன்று கடைமயாற்றுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இருக்கும் போரர் சமூகத்தினர் இஸ்லாத்தின் 'ஷீயா' பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பொதுவாக தாவூதி போறாக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். தாவூதி போராக்களுடைய பிறப்பிடம் குஜராத் பிரதேசமாக இருந்தாலும் இந்தியாவில் இராஜஸ்தான், மத்திய பிரதேசம், மஹாராஷ்டிரம் போன்ற இடங்களிலும், பாக்கிஸ்தான், சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளிலும் வாழ்கிறார்கள். தாவூதி போராக்கள் அல்லாஹ்விலும், அவனுடைய திருத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களிலும் நம்பிக்கைக்கொண்டிருக்கிறார்கள். திருக்குர் ஆன், நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வினால் அருளப்பட்டது என்றும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் நபிபெருமானுடைய மைத்துனன் அலி (ரலி) அவர்களை நபி (ஸல்) அவர்களோடு ஒத்த ஸ்தானத்தில் வைக்கிறார்கள். முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாரிசு அலி (ரலி) என்று நம்புகிறார்கள். இவர்கள் இத்னா அஷ்ஆரியர்கள், என்றும் இஸ்மாயிலியாக்கள் என்றும் பிரிந்தார்கள். இத்னா அஷ் ஆரியர்கள் 12 இமாம்களிலும் இஸ்மாயிலியாக்கள் 21 இமாம்களிலும் நம்பிக்கை வைத்ததினால் இப்படிப் பிரிந்தார்கள். ஐந்தாவது இமாமான ஜாபர் – அஸ் - சாதிக் என்பவருக்கு இரண்டு ஆண் குழந்தைகள். மூத்த மகன் இஸ்மாயில் தந்தைக்கு முன்னதாகவே இறந்ததனால் இமாமாகத் தகுதியுடைய இளைய மகன் மூசா-அல்-காசிமே என்று ஒரு கூட்டத்தாரும், இஸ்மாயிலே இமாமாகத் தகுதியுடையவர் என்று மற்றைய கூட்டத்தாரும் கூறினார்கள். இலங்கை போராக்கள் இஸ்மாயிலியா பிரிவை சேர்ந்தவர்கள். பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த 18ஆவது இமாம் முஸ்தன்சீர்க்குப் பிறகு யார் இமாமாக வேண்டுமென்ற தகராரில் இஸ்மாயிலியாக்கள் இரண்டு, பிரிவாகப் பிரிந்தார்கள். மூத்த மகன் நிசாரைப் பின் பற்றியவர்கள் நிசாரியர்கள் என்றும், இளைய மகன் முஸ்தல்லி என்பவரைப் பின்பற்றியவர்கள் முஸ்தல்லியர்கள் என்றும் பிரிந்தார்கள். பெரும்பாலான போராக்கள் முஸ்தல்லியாக்கள். கோஜாக்கள், நிசாரியர்கள் பிரிவைச் சேர்ந்தவர்கள். பன்னிரெண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டில் இருபத்தி ஒராவது இமாமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இமாம் தையிப் மறைந்து விட்டார். இவருக்குப் பிறகு இமாம்கள் மறைந்தே இருக்கிறார்கள்என்றும் அவர்கள் வெளிப்படையாகத் தம்மை இனங்காட்ட மாட்டார்கள் என்றும் என்றைக்காவது ஒரு நாள் இமாம் வெளிப்படுவார் என்றும் இவர்கள் நம்புகிறார்கள்.

இமாம் தையிபுக்குப் பிறகு இமாம்கள் தோன்றாத காரணத்தினால் இமாமுக்கு அடுத்தபடியாக அந்தஸ்தில் இருந்த 'ஹூஜ்ஜத்' என்ற பதவியை வகித்தவர் சமய பிரசாரகர் ஒருவரை நியமித்தார். 'டாய்' என்ற இச்சமயப் பிரசாரகர் தன்னுடைய வாரிசை நியமித்து வந்தார். எமென் தேசத்திலிருந்து இந்தியாவுக்கு வந்த 24ஆவது தாயுல் முத்லக் யூசுப் நஜீமுத்தீனுக்குப் பிறகு டாய்கள் இந்தியாவிலேயே நிலைத்து விட்டார்கள். 16ஆம் நூற்றாண்டில் ஷேய்க் தாவுத்பின் குத்துப்ஷாவும், ஷேய்க் சுலைமானும் இப்பதவிக்கு உரித்தானவர்கள் என்று போட்டியிட்டார்கள். ஷேய்க் தாவூதைப் பின்பற்றியவர்கள் தாவூதி போராக்கள் என்று பெயர்பெற்றார்கள். 52ஆவது தாயுல் முத்லக் சையிதினா முஹம்மத் புர்ஹானுத்தீன் இன்று தாவூதி போராக்களின் தலைவராக இருக்கிறார். ஒவ்வொரு தாவூதி போராவும் பதினைந்தாவது வயதை அடைந்தவுடன் 'மிசக்' என்ற சத்திய பிரமாணம் செய்ய வேண்டும். அதாவது தம்முடைய தலைவர் தாயுல்முத்லக்கின் கட்டளைகளுக்கு அடங்கி நடக்க வேண்டுமென்பதே. போராக்கள் தொழுவதற்குக் தனியாக பள்ளிவாசல்களை அமைத்துக் கொள்வார்கள். போராக்கள் தம்முடைய சமய, சமூக, அரசியல் வாழ்க்கையை மட்டுமல்ல அன்றாட வாழ்க்கையையும் குடும்ப நிகழ்ச்சிகளையும் கூட 'ரசா' என்ற ஒரு கட்டுப்பாட்டுக்கமையவே அமைத்துக் கொள்கிறார்கள்.

போராக்கள் தம்முடைய தனித்துவத்தைக் காப்பாற்றி வந்தாலும் முஸ்லிம் சமூகத்தின் ஓர் அங்கமாகவே தம்மை கணிப்பிட்டுக் கொள்கிறார்கள். முஸ்லிம் சமூகத்தின் சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார நலன்களுக்குத் தம்மாலான பொருளுதவியைச் செய்து வருகிறார்கள். கொழும்பு சாகிராக் கல்லூரியின் வளர்ச்சிக்குக் கரீம்ஜீ, ஜபர்ஜீ போன்ற போராக்கள் நன்கொடைகள் வழங்கினார்கள். ஏனைய சமயத்தவர்களின் சமய இயக்கங்களுக்கும், வாசிகசாலைகளுக்கும் வைத்திய நிலையங்களுக்கும் ஏராளமாகப் பொருளுதவியைச் செய்திருக்கிறார்கள. இலங்கைப் பிரஜைகளாக இருக்கும் போராக்கள் அரசியலிலும் ஈடுபட்டுப் பதவிகளையும் வகிக்கிறார்கள்.

கோஜாக்கள் என்ற பிரிவினர் போராக்களைப் போலவே தம்முடைய தனித்துவத்தைக் காப்பாற்றி வருகிறார்கள். இஸ்மாயிலி நிசாரியர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் கோஜாக்கள், பேராக்களைப் போல ஷீயா மதப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இமாம் ஜவுபர் சாதிக்கின் இரு புதல்வர்களில் இளையமகன் முஸ்தல்லி தான் இமாம் பதவிக்குத் தகுதியுடையவர் என்று போராக்களும். மூத்த மகன் நிசார் இளவயதிலேயே இறந்தாலும் , அவரும் அவருடைய வாரிசுகளும் தான் இமாம்களாக இருக்கத் தகுதியுடையவர்கள் என்று கோஜாக்களும் நம்புவதால் ஏற்பட்ட பிரிவுதான் இவர்கள் இன்று இருபிரிவுகளாக இருப்பதற்குக் காரணம். அலி (ரலி) அவர்களின் நேரடி வம்சத்தில் தோன்றிய காசிம் அகா கான் இவர்களுடைய 49ஆவது இமாமாக இன்று இருந்து வருகிறார். போராக்கள் இஸ்லாமிய ஷரியத் சட்டதிட்டங்களை மிகவும் நுணுக்கமாகக் கடைப்பிடித்தாலும், கோஜாக்கள் இதில் கவனக் குறைவாகவே இருக்கிறார்கள். கோஜாக்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தாலும், இவர்களுடைய செல்வாக்கு அதிகமாகவே இருக்கிறது. சத்தூர், ரெய்மூ, மேரு குடும்பங்களின் பொருளாதார அரசியற் செல்வாக்கைப் பற்றி நாம் கூறத் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப் பல இனப்பிரிவுகளைச் சேர்ந்ததுதான் இன்றைய இலங்கை முஸ்லிம் சமூகம், இலங்கை முஸ்லிம்களைத் தமிழர்கள் என்றும் தமிழ் பேசும் முஸ்லிம்கள் என்றும் கூறி அவர்களுடைய தனித் தன்மையை அழித்து அவர்களுடைய உரிமைகளை மறுப்பதற்குச் சிலர் எடுக்கும் முயற்சிகளை முறியடிக்க முஸ்லிம் தலைவர்கள் முன் வர வேண்டும். முஸ்லிம்களுக்கென்றே ஒரு தனி வரலாறு, தனிப்பாரம்பரியம், தனிக்கலாசாரம் ஒரு தனி மதம் என்ற உண்மையை இந்நாட்டிலும், ஏனைய சமூகத்தினர் மத்தியிலும் உணர்த்துவது எமது கடமையாகும். பல இனப்பிரிவுகளாக இருந்தாலும் முஸ்லிம்கள் ஒரு சமூகமாக இயங்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கித்தொப்பி விவகாரமும், முஸ்லிம்களுக் கெதிராக சிங்களவரின் மத்தியில் எழுந்த இன உணர்வும்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே முஸ்லிம் சமூகம் இரு பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது. ஒன்று 1905ஆம் ஆண்டில் ஏற்பட்ட துருக்கித் தொப்பி விவகாரம்; இரண்டாவது 1915ஆம் ஆண்டில் நிகழ்ந்த சிங்கள முஸ்லிம் கலகம். துருக்கித்தொப்பி விவகாரம் ஒரு சாதாரண சம்பவமாகவே தொடங்கியது. இலங்கை முஸ்லிம்களின் முதலாவது பட்டதாரியும், வழக்கறிஞருமான எம். சி. அப்துல் காதர், ஒக்டோபர் 1907ஆம் ஆண்டில் வழக்கறிஞராகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவருடைய உடை, மேல் நாட்டவர்களைப் போல் கால்சட்டையும், கோட்டும் கொண்டதாகவும், முஸ்லிம்கள் வழக்கமாக அணியும் துருக்கித் தொப்பியும் அணிந்திருந்தார். நீதிஸ்தலத்திற்கு வரும் முஸ்லிம் ஜூரர்களும், கட்சிக்காரர்களும், சாட்சிகளும் பெரும்பாலும் துருக்கித்தொப்பி அணிந்தே வருவது வழக்கமாயிருந்தது. பிரதம நீதியரசர் சர் சார்லஸ் லயார்ட் நீண்ட லீவிற்குப் பிறகு மே மாதம் 1905ஆம் ஆண்டில் இலங்கை திரும்பினார். கடந்த ஏழுமாதங்களாகவே தொப்பியை அணிந்தே நீதிமன்றத்தில் வழக்காடிக்கொண்டிருந்த அப்துல்காதர் வழக்கம்போல் நீதிமன்றத்திற்குச் சென்றதும், ஆணவம்படைத்த ஆங்கிலேய நீதியரசர் அப்துல்காதருக்கு அவருடைய தொப்பியைக் கழற்றும்படிப் பணித்தார். இந்த அநீதியான கட்டளைக்குப் பணிய மறுத்த அப்துல்காதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தன்னுடைய சமூகத்திற்கு ஏற்பட்ட அவமானம் என்று கூறி நீதிமன்றத்திலிருந்து வெளியேறினார். ஏனைய முஸ்லிம் தலைவர்களும் இது அப்துல்காதருக்குத் தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட அவமானமல்ல என்றும் முஸ்லிம் சமூதாயத்திற்கே ஏற்பட்ட நிந்தனையென்றும் கருதினார்கள்.

சில முஸ்லிம் தலைவர்கள் நீதியரசரைச் சந்தித்து மேல்நாட்டவர்களைப் போலல்லாமல், முஸ்லிம்கள் பிறரை மரியாதை செய்வதற்குத் தொப்பி அணிவது வழக்கமென்றும் எல்லாம் வல்ல இறைவனைத் தொழும்போது, பள்ளி வாசலுக்குச் செல்லும் போது தொப்பி அணிந்து செல்வதுதான் வழக்கம் என்று முறையீடு செய்தும் அவ்வாங்கில நீதியரசர் தன்னுடைய தீர்ப்பை மாற்றவில்லை. மாறாக உயர்நீதிமன்றப் பிரகடனமாக 'அப்துல்காதர் தொப்பியை அணிந்து நீதிமன்றத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது' என்று ஒரு பிரகடனத்தைப் பிறப்பித்தார்.

முஸ்லிம் தலைவர்கள் கூடி ஒரு பொதுக் கூட்டத்தில் இந்த அநீதியான கட்டளையை வாபஸ் செய்யுமாறு இங்கிலாந்தின் அரசருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்ப வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இங்கிலாந்தின் உயர்நீதி மன்றத்தில் துருக்கித் தொப்பியுடன் வழக்காடும் மௌலவி ரபீயுத்தீன் அஹமத் என்பவரைப் பிரதம பேச்சாளராக அழைப்பதென்று தீர்மானமாயிற்று. இலங்கை பூராவும் முப்பது கூட்டங்கள் நடைபெற்றன. தொண்ணூற்றியொன்பது பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மருதானைப் பள்ளிவாசலின் மைதானத்தில் ஒரு மாபெரும் கூட்டம் நடந்தது. அன்றைய டைம்ஸ் பத்திரிகை இக்கூட்டதைப் பற்றி எழுதும்போது 'கொழும்பில் மாபெருங்கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் இதுபோன்ற ஒரு பிரம்மாண்டமான கூட்டம் இதுவரையில் நடைபெறவில்லை' என்று எழுதியது. உயர்நீதி மன்றத்தின் இவ்வுத்தரவை அரசர் வாபஸ் செய்யவேண்டுமென்ற பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்திலிருந்து பதில் வருவதற்கு முன்னரேயே இலங்கை உயர் நீதிமன்றம் நீதியரசரின் உத்தரவை வாபஸ் செய்தது. துருக்கித் தொப்பி அணிவதற்கு இடமளிக்கப்பட்டது. முஸ்லிம்கள் ஒற்றுமையுடன் இயங்கிய காரணத்தினால் ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் விட்டுக் கொடுத்தனர்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள மக்களுடன் சமாதானத்தோடு வாழ்ந்த முஸ்லிம்களுக்கு 1915ஆம் ஆண்டில் நிகழ்ந்த சிங்கள-முஸ்லிம் கலகம் ஒரு சோதனையை உண்டு பண்ணியது. இலங்கையின் 'ஆதரவற்ற ஒரு சிறுபான்மை சமூகம்' என்ற உண்மை நிலைமை இக்கலகம் முஸ்லிம்களுக்கு உணர்த்தியது. பெரும்பான்மை சமூகத்தின் ஒரு நாசகாரக்கும்பலின் அடாவடித்தனத்துக்குத் தாம் எந்நேரமும் பலியாகலாம் என்ற உண்மையை முஸ்லிம்கள் இக்கலகத்தின் மூலம் உணர்ந்தார்கள். சிங்களவருடன் இவ்வளவு அந்நியோன்னியமாகப் பழகிய முஸ்லிம்களுக்கெதிராக ஏன் சிங்களவர் போர்க்கொடி உயர்த்தினார்கள் என்பதை நாம் ஆராய்ந்தால் தான் நாம் உண்மையை அறியலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையினால் மலை நாட்டில் வேலை வாய்ப்புப் பெருகியதோடு, வியாபாரமும் விஸ்தீரணமடைந்தது. கண்டிப் பிரதேசத்திலுள்ள சிங்கள மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த காரணத்தினால் இப்பொருளாதார வளர்ச்சியில் பங்கு கொள்ளவில்லை. இவர்கள் பெரும்பாலும் கொவிகம சாதியைச் சேர்ந்தவர்கள். மேல் நாட்டு படையெடுப்புக்களால் அதிகம் பாதிக்கப்படாதவர்கள். ஆனால் கரையோர சிங்களவர் அப்படியல்ல. பல சாதிகளைச் சேர்ந்தவர்கள் இச்சாதிகளுக்குச் சொந்தமான சில பழக்கவழக்கங்களைக் கொண்டவர்கள். நானூற்றிஐம்பது வருடங்களாக மேல் நாட்டவரின் ஆதிக்கத்தின் கீழ் அல்லற்பட்டவர்கள். போர்த்துக்கீசர் போன்ற கொடுங்கோலாட்சிக்காரர்களினால் வீடு வாசல்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்தவர்கள், இவர்களதும் ஒல்லாந்தர்களதும் மதம் மாற்றும் கொள்கைக்கு அடிபணியாதவர்கள். அந்நிய நாட்டாரிடம் ஒரு வெறுப்புணர்ச்சி கொண்டிருந்தார்கள். கிறிஸ்தவ சமயம் பரப்பரப்படுவதை எதிர்த்தார்கள். தம்முடைய சமயமும், பண்பாடும் அழிந்து விடுமே என்ற சந்தேகத்துடன் ஆட்சியாளரை அவதானித்தனர். பௌத்த மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்கள். பௌத்த சமயம் திரும்பவும் தழைத்தோங்க வேண்டுமென்ற வைராக்கியம் படைத்திருந்தனர். 1815ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தை அடிபணிய வைத்த கண்டி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின் நூறு வருடங்கள் முடிந்து விட்டன.

கறுவாத்தோட்டங்களிலுள்ள வருமானம் குறைந்து விட்ட காரணத்தினால் கரையோர சிங்களவர் மலைநாட்டில் ஏற்பட்டு வரும் பொருளாதார வளர்ச்சியில் பங்கு கொள்ள மலைநாட்டுப் பகுதிகளில் குடியேறத் தொடங்கினர். பெருந்தோட்டப் பிரதேசங்களுக்குப் பாதைகள் அமைப்பதிலும், ரயில்வே விஸ்தரிப்பிலும் அரசாங்கத்தின் முதலீட்டில் தாமும் கண்ட்ராட்டுகளை எடுத்து பணக்காரர்களாக வர எண்ணி இப்பொருளாதார வளர்ச்சியில் முழு மூச்சாக ஈடுபட்டனர். தென்னிந்தியாவிலிருந்து வந்த கூலியாட்களைப் பற்றிப் பெரிதும் கவலைப்படவில்லை. இத்தோட்டங்கள் வளர்ச்சி பெறுவதற்கு இத்தொழிலாளர்கள் அவசியம் என்பதை உணர்ந்தார்கள். ஆனால் இத்தொழிலாளர்களுடன் தென்னிந்தியாவிலிருந்து இன்னொரு வகுப்பாரும் இலங்கைக்கு வந்தார்கள். வர்த்தகத்தில் ஈடுபாடு கொண்ட தென்னிந்திய முஸ்லிம்கள், காயல் பட்டணம், அதிராம பட்டணம், கீழக்கரை போன்ற இடங்களிலிருந்து இலங்கையில் வியாபாரஞ் செய்வதற்காக இலங்கைக்கு வந்தார்கள். இவர்களில் பெரும்பாலோர் மலை நாட்டில் கடைகளை வைத்து வியாபாரஞ் செய்ய முற்பட்டார்கள். இவர்களில் பலர் கொழும்பு நகரத்தில் பெரும் வர்த்தக நிலையங்களை ஸ்தாபித்து இந்தியாவிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்து மொத்த வியாபாரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டனர். ஒரே ஊரிலிருந்து இவர்களோடு இலங்கைக்கு வந்த சில்லறை வியாபாரிகளுக்குக் கடனுக்குப் பொருள் கொடுத்துதவினார்கள். தென்னிந்திய முஸ்லிம்களுடன் வியாபாரத்தில் போட்டி போட முடியாதிருந்த கரையோரப் பகுதிகளிலிருந்து வந்த சிங்கள வியாபாரிகள் ஆத்திரமடைந் திருந்தனர். தொன்று தொட்டு இலங்கையில் வாழ்ந்து வந்த இலங்கை முஸ்லிம்களுடன் தென்னிந்திய முஸ்லிம்கள் நெருங்கிப் பழகவில்லை. தங்கள் தொழுகைக்காக தைக்காக்களைக் கட்டி இலங்கை முஸ்லிம்களிடமிருந்து ஒதுங்கியே வாழ்ந்தனர். அவர்களுடைய எண்ணமெல்லாம் வியாபாரத்திலேயே நிலைத்து நின்றது. இலங்கை முஸ்லிம்கள் இவர்களை 'சம்மாங்காரர்' என்றே அழைத்தனர்.

'சம்மாங்காரர்' வியாபாரத்தில் மட்டும் ஈடுபடவில்லை வட்டிக்குப்பணம் கொடுத்தும், நகைகளை ஈடுபிடித்தும், சிங்கள மக்களின் ஏழ்மையை உபயோகித்தும் ஒரு சுரண்டல் வகுப்பாக சிங்கள மக்கள் முன் காட்சியளித்தனர். சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலிருந்த இந்த வியாபாரப் போட்டியை பிரிட்டிஷ் அரசாங்கம் உன்னிப்பாக அவதானித்து வந்தது. இந்தியாவில் சுதந்திரப் போராட்டத்தில் எப்படி இந்திய முஸ்லிம்கள் பெரும்பான்மையினத்தோடு சேர்ந்து போராடினார்களோ அதேபோல இலங்கையிலும் சிங்களவருடைய சுதந்திர இயக்கத்தில் முஸ்லிம்களும் சிங்களவரோடு தோளோடு தோள் நின்று உழைத்தனர். ஆனால் 1915ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலகம் இந்நிலையை மாற்றியது. இச்சம்பவத்திற்குப் பிறகு முஸ்லிம்கள் பெரும்பான்மை இனமான சிங்களவருடைய போக்கை சந்தேகக் கண் கொண்டே பார்த்தனர்.

சம்மாங்காரருடைய செய்கையினால் ஆத்திரமடைந்த கரையோர சிங்களவர் இவர்களுக்கெதிராக கலகம் ஒன்றை ஆரம்பிப்பதற்குத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் பூர்வீகக் குடிகளான இலங்கை முஸ்லிம்களையும் தென்னிந்தியாவிலிருந்து வந்த சம்மாங்காரரையும் வேறுபடுத்திப் பார்க்கவில்லை. தம்முடைய பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாயிருந்த முஸ்லிம் வியாபாரிகளை ஒழித்துக்கட்ட ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் முக்கிய சக்தியாக இருந்த இக்கரையோர சிங்களவர், சிங்கள பௌத்த மக்களின் மத உணர்ச்சியைத் தூண்டி விட்டனர். வியாபாரப் போட்டி ஒரு மதப் போராட்டமாக மாறியது. அதே நேரத்தில் தென்னிந்தியாவிலிருந்து வந்த சம்மாங்கார முஸ்லிம்களும், இலங்கை முஸ்லிம்களை விட தம்முடைய உரிமைகளைப் பாதுகாப்பதில் வீராப்புடன் இருந்தனர்.

பௌத்த மக்களின் பௌத்த சமய எழுச்சியும் மிகவும் மும்முரமாகியது. இதோடு சிங்கள மக்களின் தேசிய உணர்வையும் இவ்வியாபாரிகள் தூண்டிவிட்டனர். சிங்கள மக்கள் தம்முடைய சுதந்திரத்தை இழந்து நூறாவது வருடம். தமது வியாபார வளர்ச்சியையே நோக்கமாகக் கொண்ட சிங்கள வியாபாரிகள் ஒரு பொது எதிரியைத் தேடிக் கொண்டிருந்தனர். சம்மாங்கார முஸ்லிம்களின் மதக்கோட்பாடுகளும், வீராப்பும், பெரும்பான்மை இனத்தின் மத வாதிகளுக்கு ஓர் அழகான எதிரியை உருவாக்கிக் காட்டியது. இவர்களுக்கு வேண்டிய சந்தர்ப்பத்தையும் இச்சம்மாங்கார முஸ்லிம்களே அமைத்துக் கொடுத்தனர். கம்பளை பெரஹரா பள்ளிவாசலின் முன் போகக்கூடாது என்று தடுத்த முஸ்லிம்களின் செயலை பௌத்த சமயத்துக்கு எதிராக எழுப்பப்பட்ட ஒரு சதி என்று கூறி முஸ்லிம்களைத் தாக்குவதற்கு சிங்கள மக்களைத் தூண்டிவிட்டனர் இந்நாசகாரக்கும்பல். சிங்கள மக்களைக் குறைகூற முடியாது. அவர்களது சமய தேசிய உணர்ச்சியைத் தூண்டிவிட்டு வேடிக்கைப் பார்த்தனர் இவ்வியாபார வகுப்பினர். இதனால் ஏற்பட்ட விளைவுகளை அடுத்த அத்தியாயத்தில் ஆராய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள இனத்தின் பூர்வீகமும் சிங்கள இன உணர்வின் தோற்றமும்

"வரலாறு என்பது இன்றைய சம்பவங்களோடு வரலாற்றுச் சம்பவங்களைத் தொடர்பு படுத்தி எழுதுவதே" என்று ஒரு மேல் நாட்டு வரலாற்றாசிரியன் கூறுகிறான். ஒரு வரலாற்றாசிரியனுடைய கண்ணோட்டம் அவன் வாழும் சமூகத்தின் நிகழ்ச்சிகளினால் பாதிக்கப்படுகிறது. இந்தப் பின்னணியிலிருந்தே அவன் வரலாற்றை அணுகுகின்றான். ஆகவே "வரலாற்றைப் பற்றி அறிவதற்கு முன்னே, வரலாற்றாசிரியனைப்பற்றி அறிய வேண்டியது அவசியம்" என்று ஹெலட் கார் என்ற வரலாற்றாசிரியன் கூறுகிறான். இலங்கையின் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கோவை செய்தவர்கள் பௌத்த பிக்குகளே. இவர்கள் பௌத்த சமயத்தின் தத்துவங்களையும் அவை எவ்வாறு நடைமுறையில் செயல்பட்டன என்பதை மனதில் வைத்தே வரலாற்று நிகழ்ச்சிகளைக் கோவை செய்தார்கள். பௌத்த சமயத்தோடு தொடர்புள்ள சம்பவங்களையே குறிப்பிட்டார்கள். ஏனையவை அவர்களுக்கு முக்கியமாகத் தென்படவில்லை. இலங்கை வரலாற்றை ஆராய்ந்த வில்ஹெல்ம் கைகர் "இலங்கை வரலாற்று மூல நூல்களில் சொல்லப்பட்டவைகளைவிட சொல்லப்படாதவைகளின் மர்மம் தான் அதிகம்" என்று கூறுகிறார்.

இலங்கையின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் செனரத் பரணவித்தாரண தன்னுடைய 'இலங்கையின் கல் வெட்டுச் சாசனங்கள்' (முதலாம் பாகம்) என்ற நூலில் "இலங்கையின் புராதன வரலாற்றை அறிவதற்கு எமக்குக் கிடைத்திருப்பது 'பிராமி' சாசனங்களே. இதுவே மிகவும் பழமையானது. இச்சாசனங்களில் தனிப்பட்ட நபர்கள் நமது மூதாதையரைக் குறிப்பிடும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதவழிபாட்டை வைத்தோ அல்லது தொழிலை வைத்தோ குறிப்பிட்டார்கள். பிராமணர்கள் தமது சாதியைக் குறிப்பிட்டார்கள். இச்சாசனங்களில் "தமேதா" என்ற ஒரு வகுப்பு குறிப்பிடப்படுகிறது. இது திராவிடர்களைக் (தமிழர்கள்) குறிப்பிடுவதாக இருக்கலாம். ஆனால் 'சிம்ஹல' என்ற பதம் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை.

பண்டைய சமூகங்கள் பெரும்பாலும் குளக்கரைகளிலேயே வாழ்ந்தன. வேடுவத்தொழிலிருந்து விடுபட்டு மந்தை மேய்க்கும் தொழிலுக்கும், பின்னர் கமத்தொழிலுக்கும் மாறிய பண்டைய மக்கள் நிலத்தைப் பொதுச் சொத்தாகவே பாவித்தனர். கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டுவரையிலுள்ள காலப்பகுதியில் நிலம் தனியுடைமைச் சொத்தாக மாறியது. இப்படி மாறிய சமூகங்கள் தம்முடைய இனத்தைக்குறிப்பிடும் போது தாம் வாழ்ந்த இடத்தை வைத்தே குறிப்பிட்டார்கள். நாளடைவில் அரசாங்கம் தோன்றியபோது அவ்வரசை வைத்தே தம்மைக் குறிப்பிட்டார்கள். அநுராதபுரி அரசு தோற்றத்தின் பிறகு இவ்வரசை வைத்தே தம்மை இனங்கண்டார்கள்.

இலங்கையின் மிகவும் பழமை வாய்ந்த புராதன நூலான 'தீபவம்ச' நான்காம் நூற்றாண்டுக்கும் ஐந்தாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது. இந்நூலில் கூட 'சிங்ஹல' என்ற பதம் ஒரே ஒரு முறைதான் கூறப்பட்டுள்ளது. இந்நாடு சிங்ஹல நாடு என்றே மட்டும் கூறப்பட்டுள்ளது. ஐந்தாம் நூற்றாண்டில் புத்தகோஷ என்ற பிக்குவினால் எழுதப் பட்ட 'சமந்தபாசாதிக்க' என்ற நூலில் பௌத்த மதக்கட்டுப்பாடுகளைக் குறிக்கும் பகுதியில் சிங்ஹல நாடு என்று இலங்கை குறிப்பிடப்பட்டுள்ளது. ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கைக்கு விஜயம் செய்த சீன யாத்திரிகரான பாஹியன் என்பவரும் இந்நாட்டை சிங்கள நாடு என்றே குறிப்பிடுகிறார். "எட்டாம் நூற்றாண்டில் தான் சிங்ஹல என்ற வார்த்தை ஒரு சமூகத்திற்குக்குறிப்பிடப்பட்டது" என்று பரணவித்தாரன கருதுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் நூற்றாண்டில் மகாவம்ச என்ற செய்திக் குறிப்பு நூலை எழுதிய மகாநாம என்ற பிக்கு சிங்ஹல என்ற பதம் எப்படித் தோன்றியது என்பதற்கு ஒரு புனை கதையை உருவாக்குகிறார். ஒரு சிங்கத்தின் புதல்வனாகத் தோன்றிய சிங்ஹபாகு தன் தந்தையான சிங்கத்தைக் கொன்று லாலா என்ற நாட்டில் அரசனாக முடிசூட்டிப் பிறகு தன் மைந்தன் விஜயனின் போக்கை விரும்பாமல் அவனை நாடுகடத்தி அவன் இலங்கைத் தீவை வந்தடைந்து இங்கிருந்த ராக்ஷசி பெண், குவேனியை மணந்து பிறகு ஏனைய ராக்ஷசர்களைக் கொன்று இலங்கையின் அரசனானான் என்ற ஒரு கதையைப் புனைகிறார்.

சிங்கள இனம் இப்படித்தான் தோன்றியது என்ற கருத்தையும் முன்வைக்கிறார். தீபவம்சையில் இக்கதை வேறு விதமாக புனையப்பட்டிருக்கிறது. இங்கே விஜயன் இயக்கர்களைக்கொன்றான் என்ற குறிப்பு இல்லை. இந்நூலில் இலங்கை புத்தருடன் தொடர்பு படுத்திக்கூறப்பட்டுள்ளது. இயக்கர்களைக்கொன்றது புத்தர் என்று கூறப்பட்டுள்ளது. 'தியவதன' என்ற நூலிலும் ஹியுன்சாங் என்ற சீன யாத்திரிகனின் குறிப்பிலும், சிம்ஹல என்பவன் சிம்ஹ என்று பெயர் பெற்ற ஜம்புத்வீப என்ற நாட்டின் பெரும் வணிகன் என்றும் அவன் ஐந்நூறு வியாபாரிகளுடன் வியாபாரத்திற்கு இந்நாட்டிற்கு வந்தபோது அவர்களை விரட்டிய இயக்கர்களிடமிருந்து ஒரு பறக்கும் குதிரையில் தப்பியோடி தன் நாட்டின் அரசனான பிறகு ஒரு படையுடன் வந்து இங்கிருந்த இயக்கர்களைக்கொன்று இங்கே ஒரு அரசை நிலை நாட்டினான் என்று இன்னொரு கதையைக் கூறுகிறது. இப்படி சரித்திர ஆதாரமற்ற கர்னபரம்பரையான கதைகளை வைத்து நாம் வரலாற்றை எழுத முடியாது. வரலாற்றாசிரியரான பார்னாட், "இலங்கையில் ஆரம்ப காலத்தில் குடியேறியவர்கள் வங்காளம் ஒரிஸ்ஸா போன்ற வடகிழக்கு இந்தியப்பிரதேசங்களிலிருந்து வந்தவர்கள்" என்றும் "பின்னர் வந்தவர்கள் மேற்கு இந்தியப் பிரதேசத்திலிருந்து ஆரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார்கள்'' என்றும் கருதுகிறார். பஷாம் என்ற வரலாற்றாசிரியர் விஜயனைப் பற்றிய கட்டுக்கதையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இலங்கையில் வந்து குடியேறியவர்கள் கிழக்கு இந்தியப் பிரதேசமான கலிங்க நாட்டிலிருந்து வந்திருக்கலாம் என்று கூறுகிறார். உண்மையில் இலங்கைக்கு, தென்னிந்தியாவிலிருந்து வந்த 'புலிந்த' என்ற மக்களிடமிருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே இலங்கையின் அரசவம்சத்தினர் இப்படி ஒரு புனை கதையைக் கட்டியிருக்கலாம். தென்னிந்திய அரசவம்சத்தினர்களான சோழர்கள் புலியையும், பாண்டியர்கள் மீனையும், ஆரம்பகால பல்லவர்கள், சிங்கத்தையும் தமது கொடிகளில் இலச்சினையாக வைத்திருந்ததைப் போல சிங்கள அரசர்களும் சிங்கத்தைத் தமது இலச்சினையாக வைத்திருக்கலாம். விஜயனுடைய கதையிலிருந்து நாம் பெறப்படும் உண்மை என்னவென்றால் சிங்கள இனம் ஆரிய இனம் என்றும் உயர்ந்த சாதியென்றும் கூறுவதற்கு தோற்றுவிக்கப்பட்ட ஒரு தத்துவம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் காலனித்துவ ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக சிங்கள உணர்வைத் தோற்றுவித்த அன்றைய எழுத்தாளர்கள் ஜெர்மன் தத்துவஞானியும் எழுத்தாளருமான ஹெகல் போன்றவர்களின் ஆரிய இன உணர்வுக் கருத்துக்களைப் பின்பற்றி சிங்கள இனம் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற சிங்கள இன உணர்வைப் பரப்பினார்கள். இத்தத்துவம் பற்றி வரலாற்றாசிரியர்கள் மத்தியில் பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இவ்வின உணர்வு சிங்கள மக்கள் மத்தியில் பரவியது. இக்கருத்து இந்நாட்டில்தொன்று தொட்டு வாழ்ந்து வந்த தமிழர்களிடமிருந்து சிங்களவர்களை வேறுபடுத்தி காட்டுவதற்கு உதவியது. 1897ஆம் ஆண்டில் 'புத்திஸ்ட்' என்ற பத்திரிக்கையில் 'ஆரிய சிங்களவர்கள்' என்ற கட்டுரை வெளியாகியது. இதைத் தொடர்ந்து 1910ஆம் ஆண்டில் ரத்னவீர என்ற ஆசிரியர் 'ஆரியன்' என்ற நூலை வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1926ஆம் ஆண்டில் இலங்கை வரலாற்றை எழுதிய கொட்ரிங்டன் என்பவரும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டார். பொன்னம்பலம் அருணாசலம் போன்றவர்கள் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்வின உணர்வை சிங்கள மக்கள் மத்தியில் பரப்புவதற்கு வரலாற்றிலிருந்து எல்லாளன் – காமினி யுத்தத்தைப் பெரிதுபடுத்திக் காட்டினார்கள். தமிழர்களுக்கு எதிராக பரப்பப்பட்ட இக்கருத்து சிங்கள உணர்வைத் தூண்டிவிட்டது. சிங்கள இன உணர்வு என்ற கருத்து சிங்கள பௌத்த இன உணர்வாக உருவெடுத்தது. 1906ஆம் ஆண்டில் அநகாரிக தர்மபாலா இக்கருத்தை முதன் முதலாக 'சிங்கள-பௌத்த' என்ற பத்திரிகையில் கையாண்டார். இவர் கூறியதாவது 'அறிவில் குறைந்த அனாதியான சிங்கள மக்களுக்கு ஒரு தலைமைத்துவம் தேவை. அவர்கள் தம்முடைய உரிமைகளைப் பெறுவதற்கும் தமது இனத்தைப் பாதுகாப்பதற்கும் போராட வேண்டும்' என்பதே. இச்சிங்கள பௌத்த உணர்வு கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் பரிணமித்தது.

சிங்கள மக்களின் இன-மத உணர்வைத் தூண்டுவதற்கு வேறுசில கருத்துக்களையும் சிங்கள எழுத்தாளர்கள் மக்களிடையே பரப்பினார்கள். இலங்கை 'தம்மதீப' என்றும் 'புத்தபெருமானே ஆரிய சிங்கள மக்களுக்கு இலங்கையைப் பரிபாலிக்கும் பொறுப்பைக் கொடுத்தார்' என்றும் இவர்கள் கூறினார்கள். பௌத்தர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்குமிடையில் விவாதங்கள் நடைபெற்றன. 'பானதுரை விவாதம்' மிகவும் பிரசித்திபெற்றது. கிறிஸ்தவ சமயத்தை விட பௌத்தமதம் உண்மையானது, என்ற கருத்து இவ்விவாதத்திற்குப் பிறகு சிங்கள–பௌத்த மக்கள் மத்தியில் பரவியது. பியதாச சிறிசேன போன்ற எழுத்தாளர்கள் கிறிஸ்தவ சமயத்தை மிகவும் ஏளனமான முறையில் எழுதினார்கள். கிறிஸ்தவ சமயத்திற்கு எதிராகத்தோன்றிய இக்கருத்து ஆங்கில-கிறிஸ்தவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சிக்கு எதிரான இயக்கமாக உருவெடுத்தது. இப்பௌத்த இயக்கத்திற்குப் பல பௌத்த சிங்களவர்கள் பண உதவி செய்தார்கள். பெருந்தோட்ட உரிமையாளர்களும் மதுபான விற்பனையாளர்களும், வர்த்தகர்களும் பணம் கொடுத்து தவினார்கள். தோமஸ் அமரசூரிய, ஜெரோமயாஸ் டயஸ் போன்றவர்கள் தமது மதுபான விற்பனையினால் பெற்ற பணத்தின் மூலம் பௌத்த மத பாடசாலைகளுக்கு உதவினார்கள். இந்த மத உணர்வு சூழ்நிலையில்தான் பௌத்த-கிறிஸ்தவ கலகம் 1883ஆம் ஆண்டில் கொட்ட ஹெனாவில் நடந்தது.

கிறிஸ்தவ ஆலயத்திற்கு அருகிலுள்ள பௌத்த விகாரையில், மிகெத்துவத்த குணானந்ததேரோ, ஈஸ்தர் பண்டிகையின் காலத்தில், பௌத்த விகாரையிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் பௌத்த நிகழ்ச்சிகளை நடத்தி கிறிஸ்தவ மக்களின் மத உணர்ச்சியைத் தூண்டிவிட்ட காரணத்தினால் இக்கலகம் ஏற்பட்டது.

இப்பௌத்த மத இயக்கத்திற்கு அநகாரிக தர்மபாலாவும், வி.பி. சிங்ஹ ஹரிஸ்சந்திரவும் தலைமை தாங்கினார்கள். 1903ஆம் ஆண்டில் அனுராதபுரியில் பொசொன் விழாவின் போது கிறிஸ்தவர்களுக்கு எதிராக பௌத்தர்களின் கலகத்திற்குத் தலைமை தாங்கிய ஹரிச்சந்திராவை அரசாங்கம் கைது செய்தது.

கிறிஸ்தவர்களுக்கு எதிராகத் தோன்றிய இப்பௌத்தமத இயக்கம், இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக வளர்ந்தது. இவ்வியக்கத்தின் பின்னணியில்தான் 1915ஆம் ஆண்டில் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்ந்த கலகத்தை நாம் ஆராய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள-பௌத்த உணர்வினால் ஏற்பட்ட பாதிப்புகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலகட்டத்தில் சிங்கள-பௌத்த எழுத்தாளர்களும், மத்தியதரவர்க்கத்தைச் சேர்ந்த அறிஞர்களும், சிங்கள-பௌத்த தேசிய உணர்வுக்கான ஆதாரங்களைப் பண்டைய நூல்களிலிருந்து தேட முயன்றனர். பெரும்பான்மையான சிங்களவர்களுக்குத் தேசிய உணர்வை விட இனவாத உணர்வும், மத உணர்வும் முக்கியமாகத்தென்பட்டன. எனவே நிலச்சுவாந்தர்களுக்கிடையே ஏற்பட்ட சாதாரண யுத்தங்களைக்கூட இனவாத–மதக் கண்ணோட்டத்திலேயே பார்க்க முனைந்தனர். ஆரியர்-திராவிடர் முரண்பாடு என்ற கருத்தை வரலாற்றில் புகுத்தினர். துட்டகாமினிக்கும் எல்லாளனுக்குமிடையில் நிகழ்ந்த யுத்தத்தை பெரிதாக்கி சிங்களவருக்கும் தமிழருக்குமிடையே நடந்த யுத்தமாக திரித்துக்கூறினார்கள்.

நான்காம் நூற்றாண்டில் தீபவம்ச என்ற நூலை எழுதிய ஆசிரியர் இந்த யுத்தத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. க்ஷத்திரிய வம்சத்தைச் சேர்ந்த எல்லாளன் தன் எதிரிகளை வென்று இலங்கை அரசைக் கைப்பற்றினான் என்றே இந்நூல் கூறுகிறது. தீபவம்ச ஆசிரியருடைய நோக்கம், பௌத்த மதம் இலங்கையில் எப்படி ஸ்தாபிக்கப்பட்டது என்று கூறுவதே. எல்லாளனுக்கு முன்னிருந்த அரசர்களான சேன, குத்திக என்ற அரசர்களைத் தமிழர்கள் என்று கூறிய தீபவம்சம் எல்லாளனை அப்படிக்கூறவில்லை. எல்லாளனுடைய படையில் சிங்கள வீரர்கள் கடமையாற்றினார்கள். எல்லாளனுடைய தளபதிகளில் ஒருவர் மித்த என்பவர் ஒரு சிங்களவர். எல்லாளனும் துட்ட காமினியும் அதிகாரத்திற்காகப் போரிட்ட இரண்டு நிலச்சுவாந்தார்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கவன்னதிஸ்ஸ என்ற உறுகுணைப்பிரதேசத்து அரசனின் மகன் காமினி, முப்பத்திரெண்டு சிற்றரசர்களை வென்று உறுகுணைக்கு அரசனானான் என்று மட்டுமே தீபவம்சம் கூறுகிறது. ஆனால் மகாவம்சம் இவர்களைத் தமிழர்கள் என்று கூறுகிறது. எல்லாளன் பௌத்தமத்திற்கு ஆதரவளித்தான் என்றும் தீபவம்சம் கூறுகிறது.

உண்மை இப்படி இருக்க சிங்கள இன உணர்வு எப்படி எப்பொழுது தோன்றியது? தீபவம்சம் தோன்றி இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகுதான் மகாவம்சம் தோன்றியது. மகாவிகாரைபிக்கு மகாநாமவினால் எழுதப்பட்ட மகாவம்சம் ஆறாம் நூற்றாண்டு என்று சில வரலாற்றாசியர்களும் எட்டாம் நூற்றாண்டு என்று வேறு சில வரலாற்றாசிரியர்களும் கூறுகிறார்கள். இக்காலப்பகுதியில் தென்னிந்திய படையெடுப்புக் களினால் சிங்கள மக்கள் மிகவும் அல்லற்பட்டார்கள். இச்சூழ்நிலையினால் பாதிக்கப்பட்ட மகாநாம, சிங்கள இனத்திற்கு ஒரு கதாநாயகனை வரலாற்றில் தேடினார். துட்டகாமினி அவருக்கு ஒரு மகாபுருஷனாகத் தென்பட்டார். துட்டகாமினி தன்னுடைய முற்பிறவியில் ஒரு சாமனேரவாகப் பிறந்து தான் இறக்கும் தருவாயில் காகவன்னதிஸ்ஸவின் அரசியான விகாரமகாதேவிக்கு மகனாகப் பிறப்பேன் என்று காமினி கூறியதாக ஆசிரியர் துட்டகாமினியை அறிமுகப் படுத்துகிறர். பௌத்த–சிங்கள இனத்தைக் காப்பாற்ற ஒரு தலைவனை உருவாக்கி விட்டார் ஆசிரியர். சிங்களவரும், தமிழரும் சமாதானமாக வாழ்ந்த ஒரு காலகட்டத்தில், எல்லாளனுக்கும் துட்ட காமினிக்குமிடையில் நடந்த யுத்தத்தை மகாநாம ஒரு தர்ம யுத்தமாக மாற்றுகிறார். காமினியின் படையுடன் தூபாராம விஹாரையைச் சேர்ந்த நூறு பௌத்த பிக்குகள் சென்றார்கள் என்று மகாவம்சம் கூறுகிறது. யுத்தத்தையே வெறுக்கும் பௌத்த மதத்தைச் சேர்ந்த பிக்குகள் யுத்தத்திலேயே நேரடியாக ஈடுபட்டார்கள் என்ற மகாநாமாவின் கூற்று உண்மைக்குப் புறம்பானது. இலங்கை அரசைக் கைப்பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு இந்நாட்டை காமினி ஒரு 'தம்மதீபமாக' மாற்றினான் என்று மகாவம்ச ஆசிரியர் கூறும் போது காமினியை பௌத்த மதத்தின் தலை சிறந்த புதல்வனாக இங்கே காட்டுகிறார். "எதிரிகளைக்கொன்றதற்காகக் காமினி வருந்தியபோது, சில பிக்குகள், துஷ்டர்களைக் கொல்வது பாபமல்ல என்று அவனைத் தேற்றினார்கள்" என்று மகாவம்சம் கூறுகிறது. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய 'துபவம்சம்' என்ற நூல் இன்னும் ஒருபடி மேலே சென்று எதிர்காலத்தில் தோன்ற இருக்கும் மைத்ரேய புத்தரின் பிரதான சிஷ்யர்களில் ஒருவனாக காமினி பிறப்பான் என்று கூறுகிறது.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் 'பூஜாவலி' என்ற நூலை எழுதிய மயூரபாத தேரோ, கலிங்க மன்னனின் படையெடுப்பினால் இலங்கை மக்கள் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் இந்நூலை எழுதினார். இவர் தீபவம்சம், மகாவம்சம் ஆகிய நூல்களில் எல்லாளனைப் பற்றிக்கூறப்பட்ட நல்லவைகளை மறைத்து பௌத்த மதத்தை அழிப்பதற்கு முயற்சித்தான் என்று கூறுகிறார். பௌத்த மதத்திற்குப் பாதுகாப்பளித்த எல்லாள அரசனை ஓர் அதர்ம அரசன் என்று கூறுவதன் மூலம் சிங்கள-பௌத்த இனத்துவேஷத்தை தமது நூலில் புகுத்தினார். இலங்கை என்ற இந்தத்தீவு புத்தருக்கு மாத்திரம்தான் உரிமையுடையது. இதில் புத்தருடைய போதனைகளை ஏற்காதவர்கள் நிரந்தரமாக இந்நாட்டில் இருக்க முடியாது. இயக்கர்களைப்போல இவர்கள் அழிக்கப்படுவார்கள் என்று கூறுகிறார். பௌத்தமதத்தைச் சேராத வேறு யாரும் இந்நாட்டை அதிக காலம் ஆளமுடியாது. பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம்தான் இந்நாட்டை ஆளும் உரிமையுள்ளவர்கள் என்று அவர் எழுதினார். இந்நூல்களை எழுதிய ஆசிரியர்களின் எண்ணத்தைப் பார்த்தால், 'தமிழர்கள் சிங்களவரின் பரம விரோதிகள்' என்ற கருத்து வெளிப்படுகிறது. வரலாற்று நூல்களிலும் இக்கருத்து திணிக்கப்பட்டது. சிங்கள தமிழ் மக்களுடைய கருத்துக்களும் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூற்றாண்டு வரலாற்றாசிரியர்களான கொட்ரிங்றன், மெண்டிஸ், பரணவித்தாரன போன்றவர்கள் இம்மூல நூல்களை மிகவும் அவதானமாக நோக்கினாலும் இந்நூல்களின் ஆசிரியர்கள் திணித்த சிங்கள-பௌத்த உணர்வு என்னும் தத்துவத்தை கூறவேண்டும். காமினி-எல்லாள யுத்தம், சிங்கள, தமிழர்களிடையே ஏற்பட்ட யுத்தம் என்பதை ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் பாடசாலை நூல்களிலும் இக்கருத்து புகுத்தப்பட்டது. பாடசாலை நூல்களை எழுதிய டேவிட் ஹ சே, சிறிசேன, எஸ்.எப்.டி. சில்வா போன்றவர்களும், சிங்களவரும், தமிழரும் பரம எதிரிகள் என்ற கருத்தைத் தம் நூல்களில் உட்புகுத்தினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலும் சிங்கள உணர்வின் பிதாமகனான அநகாரிக தர்மபாலா "சிங்கள மக்களே எழுங்கள்" என்ற கோஷத்தை கிளப்பினார்.

அநகாரிக தர்மபாலா சிங்களவர் மத்தியில் சிங்கள பௌத்த உணர்வைத் தூண்டியது மட்டுமல்லாமல் பிறசமயத்தவர்களையும் சாடினார். அவர் 'அந்நிய நாட்டு வர்த்தகர்கள்', 'பூமியின் புத்திரர்கள்' என்ற பதங்களைப் பாவிக்கத் தொடங்கினார். சிங்கள வர்த்தகர்களைவிட அந்நியநாட்டு வர்த்தகர்கள்தான் கொழும்பில் அதிகம் என்று கூறி சிங்கள மக்களின் இன உணர்வைத் தூண்டி விட்டார். 1880ஆம் ஆண்டு பர்குசன் டிரெக்டரியின்படி கொழும்புப் புறக்கோட்டை வர்த்தகர்களில் 86 செட்டியார்களும், 64 முஸ்லிம்களும். ஒரு சில சிங்களவர்களுமே இருந்தார்கள். 1890ஆம் ஆண்டுக்குப் பிறகு வட இந்தியாவிலிருந்து வந்த போராக்களும், கோஜாக்களும், மேமன்களும், இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தையும் புறக்கோட்டை வர்த்தகத்தையும் ஆக்ரமித்துக் கொண்டார்கள். இவர்கள் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்களாதலால் முஸ்லிம்கள், சிங்கள இனவாத சக்திகளின் தாக்குதலுக்கு இலக்கானார்கள். முதலாவது உலக மகாயுத்தத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக பொருட்களின் விலை வாசிகள் அதிகரித்ததினால் இச்சக்திகளுக்கு, 'வெறும் வாய்சப்புபவனுக்கு அவல் கிடைத்ததைப் போல்' இவர்களுடைய தாக்குதல்களும் உக்கிரமடைந்தது.

சிங்கள பத்திரிகை எழுத்தாளர்களும், கதாசிரியர்களும், நாடகாசிரியர்களும், 'சிங்கள இனத்தவர்கள் வரலாற்றில் அந்நிய படையெடுப்புக்களுக்கு எதிராகப் போராடி எப்படி வெற்றி பெற்றார்கள்' என்பதை மிகைபடுத்திக் கூறினார்கள்.

1906ஆம் ஆண்டில் அநகாரிக தர்மபால பின்வருமாறு எழுதினார்.

"அந்நியர்கள் இந்நாட்டின் மூலதனத்தை சுரண்டி தம் நாட்டிற்கு எடுத்துச் செல்கிறார்கள். இந்நாட்டின் நிலத்தின் புத்திரர்கள் எங்கே செல்வார்கள்? பிற நாட்டிலிருந்து வந்த அந்நியர்களுக்குச் செல்வதற்குப் பல இடங்கள் உண்டு. ஆனால் சிங்கள மக்கள் இந்நாட்டைத் தவிர வேறு எங்கே செல்ல முடியும்? பூமியின் புதல்வர்கள், அல்லற்படும்போது, அந்நியர்கள் இந்நாட்டின் வளத்தைச் சுரண்டி இன்பமுறுவது எவ்வகையில் நியாயமானது? ஏழைச்சிங்கள மக்களின் பாரம்பரிய நாட்டின் சொத்தை இவ்வந்நியர்கள் அபகரிக்கிறார்கள்" என்று எழுதினார்.

அநகாரிக தர்மபாலாவின் தாக்குதல்கள் முஸ்லிம் சமூகத்தவரையே நோக்கிப்பாய்ந்தன. மீண்டும் 1915ஆம் ஆண்டில் அவர் எழுதிய கட்டுரைகள் முஸ்லிம்களை நேரடியாகவே தாக்கின. "முகம்மதியர்கள் அந்நிய இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஷைலொக்கைப் போன்ற யூதர்களின் முறைகளைக் கையாண்டு செல்வந்தர்கள் ஆனார்கள். (ஷைலொக் என்பவன் ஷேக்ஸ்பியரின் 'வெனிஸ் நாட்டு வர்த்தகன்' என்ற நாடகத்தில் வரும் குரோத-நயவஞ்சகம் படைத்த ஒரு கதாபாத்திரம்) 2358 வருடங்களாக இரத்த ஆறு ஓடி அந்நியர்களின் ஆட்சியிலிருந்து மீட்டெடுத்த இந்நாட்டின் புதல்வர்களான சிங்களவரை பிரித்தானியர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கிரிகள் என்றழைக்கிறார்கள். ஆனால் தென்னிந்திய முஸ்லிம்களான அந்நியர்கள், சிங்கள கிராம மக்களின் ஏழ்மையையும் அவர்களுக்கு வர்த்தகத்தில் அனுபவமில்லாததையும் பயன்படுத்தி தம் வாழ்வை வளம் படுத்திக்கொள்ளும் அதே வேளையில் இந்நாட்டின் புத்திரர்கள் வறுமையில் வாடுகிறார்கள்" என்று எழுதினார்.

ஏனைய எழுத்தாளர்களும் இவ்வினவாத கருத்தை வலியுறுத்தினார்கள். 'சிங்களச் சாதி' என்ற பத்திரிகையில் நாவலாசிரியர் பியதாச சிறிசேன, "சம்மான்கார முஸ்லிமுடனோ. கொச்சின் தேசத்தவருடனோ, வேறு எந்த அந்நியருடனோ சிங்களவர் எவ்வித வர்த்தகத் தொடர்பும் வைத்திருக்கக் கூடாது" என்று எழுதினார். 'லக்மின' என்ற சிங்கள நாளிதழின் ஆசிரியர் சம்மான்கார முஸ்லிம்களைப் பற்றி எழுதும்போது "இச் சபிக்கப்பட்ட இனத்தை இந்நாட்டை விட்டே விரட்டுவதற்கு ஒரு திட்டம் வகுக்கப்படவேண்டும்" என்றும் 'தினமின' என்ற பத்திரிகையின் ஆசிரியர், "எங்களின் பரம விரோதிகளான முஸ்லிம்கள்" என்றும் எழுதினார்கள்.

இவ்வினவாத ஆசிரியர்களின் கருத்துக்களினால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களின் இன உணர்ச்சியின் பகைப்புலனில் தான் 1915ஆம் சிங்கள-முஸ்லிம் கலகம் ஏற்பட்டது. நாட்டின் பலபாகங்களுக்கும் பரவிய இக்கலகம் மத அடிப்படையில் தோன்றியது என்று மேலோட்டமாகத் தென்பட்டாலும், உண்மையில் இதன் அடித்தளத்தில், அரசியல், பொருளாதார வேறுபாடுகளே இக் கலகத்திற்குக் காரணம் என்பதை நாம் உணரலாம்.

1915ஆம் ஆண்டில் ஏற்பட்ட இக்கலகத்தில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். ஆங்கில அரசாங்கத்தின் அவசரகால சட்டத்தின் கீழ் மது ஒழிப்பு இயக்கத்தின் சிங்கள மத்தியதரவர்க்கத்தின் தலைவர்களும், புறக்கோட்டை சிங்கள வியாபாரிகளின் குடும்பத்தைச் சார்ந்தவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைபிடிக்கப்பட்டார்கள். புறக்கோட்டை பெரும் வியாபாரியான பேத்ரிஸின் மகன் டி.ஈ. பேத்ரிஸ் என்பவர் புறக்கோட்டை முஸ்லிம் வர்த்தகர்களுக்கெதிராக சனங்களைத் தூண்டிவிட்டார் என்ற குற்றச் சாட்டின் பேரில் ஆங்கில அரசாங்கத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டார். டொன் கரோலிஸின் மகனான எட்மன்ட் ஹேவாவித்தாரன, ஆயுட்காலத்தண்டனைப் பெற்று சிறைச்சாலையிலேயே உயிரிழந்தார். பேத்ரிஸின் மைத்துனனான என்.எஸ். பர்ணன்டோ, ஆயுட் கால சிறைத்தண்டனை அனுபவித்தார்.

இக்கலகம் நடந்து ஒருமாத காலத்திற்குப் பிறகு அநகாரிக தர்மபாலா பின்வருமாறு எழுதினார். "பிரித்தானியர்களுக்கு ஜெர்மானியர்கள் எப்படி எதிரியோ சிங்களவருக்கு முகம்மதியர்கள் எதிரி. இவர்கள் மதம், மொழி, இனம் ஆகியவைகளினால் சிங்களவரிலும் வேறுபட்டவர்கள். அந்நிய நாட்டவர்கள். பௌத்த மதம் இல்லையென்றால் சிங்களவருக்குச் சாவே மேலானது. பிரித்தானிய அரசாங்கம் சிங்களவரைச் சுடலாம், தூக்கிவிடலாம், அங்கஹீனப் படுத்தலாம், சிறைப் பிடிக்கலாம் ........... ஆனால் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் மத்தியில் என்றைக்கும் இரத்த வெறுப்பு இருந்து கொண்டுதானிருக்கும். சமாதானத்தை விரும்பும் சிங்கள அப்பாவி மக்கள் இவ்வந்நியர்களின் ஏளனத்தைப் பொறுக்கமாட்டார்கள். முஸ்லிம்களுக்கெதிராக இந்நாடே கொதித்தெழுந்தது. சிங்கள மக்கள் கொதித்தெழுவதற்குக் காரணம் மதமும் பொருளாதாரமுமே."

முஸ்லிம்களுக்கெதிரான இனத்துவேஷத்தைக் கிளப்பி விட்டார் அநகாரிக தர்மபாலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1915 ஆம் ஆண்டு கலகத்தின் மூல காரணங்கள்

இலங்கை வரலாற்றில் சமீப காலத்தில் பெரும்பான்மை சமூகத்தினர் சிறுபான்மை சமூகங்களுக்கெதிராக நடத்திய அடாவடித்தனங்களை உற்று நோக்கும் போது, இந்த சமூக வெடிப்புகளுக்கு மூல காரணங்கள் இருக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகின்றது. 1883ஆம் ஆண்டில் கத்தோலிக்கர்களும், பௌத்தர்களும் கொழும்பு நகர வீதிகளில் பகிரங்கமாக சண்டை செய்த சம்பவமும், 1915ஆம் ஆண்டில் சிங்களவர்கள் முஸ்லிம்களைக் கொன்று குவித்ததையும், 1983ஆம் ஆண்டில் தமிழர்களைச் சிங்களவர் விரட்டி விரட்டி அடித்த சம்பவத்தையும் அவதானிக்கும் போது வெளிப்பார்வைக்கு சமாதானமும் சௌஜன்யமும், சமூகங்களிடையே நிலவுகிறதென்று தென்பட்டாலும், அடித்தளத்தில் ஒரு விஷப் பூண்டு இருக்கத்தான் செய்கிறது. 'வரலாற்றில் வர்க்க மோதல்களைத்தான் நாம் காண்கிறோம்' என்று கார்ல் மார்க்ஸ் கூறியிருந்தாலும் இலங்கையைப் பொறுத்தவரையில் நாம் இனவாத மோதல்களைத்தான் அதிகமாகக் காண்கிறோம். இதற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன?

இலங்கையில் சமூகங்களிடையே மத, மொழி இன வேறுபாடுகளையே அடித்தளத்தில் காண்கிறோம். இலங்கைச் சமூகங்களைத் தசவிகிதத்தில் பார்ப்போமானால் சிங்கள இனத்தவர்கள் நூற்றுக்கு 74% விகிதமும், சிங்கள இனத்தைச் சேராத சிறுபான்மையினர் 26% மாகவும், சமய அடிப்படையில் பார்க்கும்போது பௌத்தர்கள் 67% மாகவும் பௌத்த மதத்தைச் சேராத பிற மதங்களைச் சார்ந்த ஏனைய சிறுபான்மையினர் 33% மாகவும் இருப்பதை நாம் காண்கிறோம். கடந்த நூறு வருடகால வரலாற்றில் சிங்கள-பௌத்த இனத்தைச் சேராத சிறுபான்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகங்களின் மேல் பேரினவாதிகள் தோற்றுவித்த கலகங்களைத் தான் வரலாற்றுச் சம்பவங்களாகக் காண்கிறோம்.

### *சிங்கள-பௌத்த உணர்வு*

பெரும்பான்மை சமூகத்தில் தோன்றிய எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும் புத்திஜீவிகளும் இவ்வினவாத கருத்துக்களை மக்களிடம் பரப்பிய வரலாற்றைப்பார்ப்போம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய தேசிய உணர்வும், தேசிய இயக்கமும், பெரும்பாலும் மதச்சார்புடையதாகவே அமைந்தது. பௌத்த மதக் கோட்பாடுகளும், பௌத்த பண்பாடும் அந்நிய ஆதிக்கத்தில் அழிந்து விடுமோ என்ற பயமும் பீதியும் சிங்கள-பௌத்த மக்களிடையே எழுந்தது. பௌத்த மதம் திரும்பவும் தழைத்தோங்க வேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில் அரசியல் தொனியும் இருப்பதைக் காணலாம். அந்நிய ஆட்சிக்கெதிராக எழுந்த கோஷத்தில் பண்டைய வரலாற்றின் பெருமையும் கடந்தகால மக்களின் பண்பாட்டின் தன்மையும் எடுத்தாளப்பட்டதை நாம் அவதானிக்க முடிகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும், சிங்கள மக்களிடையே தோன்றிய 'மது ஒழிப்பு இயக்கம்' முதலில் மதச் சார்புடைய இயக்கமாகவும், பிறகு தேசிய இயக்கமாகவும் உருவெடுப்பதைக் காணலாம். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கூட ஆங்கில ஆட்சி இலங்கையில் நிரந்தரமாக நிலைத்து நிற்கும் என்ற உணர்வு இலங்கை மக்களின் பெரும்பாலோரிடம் இருந்தது. ஆனால் ஐம்பது வருடங்களில் இவ்வாட்சி இலங்கை மண்ணிலிருந்து மறைந்து விடும் என்று கற்பனையில் கூட. யாரும் நினைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய ஆசிய நாடுகளைப்போல் இலங்கையிலும் தேசிய இயக்கம் ஆரம்பத்தில் சமய மறுமலர்ச்சி இயக்கமாகவே தோன்றியது. மேல் நாட்டு மிஷனரிமாரின் மதம் மாற்றும் கொள்கையை எதிர்த்தே இவ்வியக்கம் வளர்ந்தது. இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சி இயக்கம், தேசிய இயக்கத்தின் முன்னோடியாகவே அமைந்தது. அந்நிய நாட்டு மக்களுக்கு எதிராகவும், அவர்களுடைய செல்வாக்கிலிருந்து பௌத்த சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இவ்வியக்கம் ஆரம்பகாலத்தில் இயங்கியது.

கிறிஸ்தவ சிறுபான்மை சமூகத்தினர் அரசாங்கத்தில் உயர் பதவிகளை வகித்தும், அரசாங்கத்திலிருந்து எல்லா சலுகைகளைப் பெற்றும், அந்நியநாட்டுக் கலாசாரத்தைப் பின்பற்றியும், பெரும்பான்மை இனமாகிய பௌத்த சமூகத்தினின்றும் வேறுபட்டே வாழ்ந்தனர். கல்வி வளர்ச்சியினாலும், பொருளாதார வளர்ச்சியினாலும், உயர் நிலையை அடைந்து கொண்டிருந்த பௌத்த மத்தியதர வர்க்கத்தினர், கிறிஸ்தவ சிறுபான்மையினத்தவரின் இவ்வகங்காரப்போக்கினை வெறுத்தனர். இக் கிறிஸ்தவ சிறுபான்மையினத்தவரில், தமிழ் மக்களும் அடங்கியிருந்ததனால் இவ்வியக்கம் இன ரீதியாக அல்லாமல் மதரீதியாக உருவெடுத்தது. எனவே பௌத்த எழுத்தாளர்களுடைய படைப்புக்கள் பெரும்பாலும் அந்நிய மதங்களைக் சாடியே படைக்கப்பட்டன. இதனால் இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டார்கள்.

வரலாற்றிலிருந்து மேற்கோள்களைக் காட்டி சிங்கள உணர்வு என்ற இன உணர்வை வளர்த்தார்கள் இவ்வெழுத்தாளர்கள். சிங்கள உணர்வுதான் தேசிய உணர்வு என்ற கருத்தையும் மக்கள் முன் வைத்தார்கள். இனவெறியால் உந்தப்பட்ட இவ்வெழுத்தாளர்கள் தம்முடைய கருத்துக்களுக்கு வரலாற்றிலிருந்து ஆதாரம் காட்ட முனைந்தார்கள். பௌத்த பிக்குகளால் எழுத்தப்பட்ட இலங்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய குறிப்பேடுகளான 'தீபவம்சம்', மகாவம்சம், சூலவம்சம் போன்ற நூல்களின் உதவியை நாடினார்கள். சிங்கள மொழியின் புராதனத் தன்மையையும், அம்மொழியைப் பேசும் மக்களின் பூர்வீக வரலாற்றையும் ஆராய்வதன் மூலம் இவ்வினக் கொள்கையின் உண்மையை நிலைநாட்டுவதற்குப் பெரிதும் பாடுபட்டார்கள். சிங்களவர் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் 'ஆரிய இனம்' ஆளும் இனம் என்றும் மேல்நாட்டு ஆசிரியர்களுடைய நூல்களிலிருந்து மேற்கொள் காட்டினார்கள் இப்புதிய தத்துவவாதிகள். அநகாரிக தர்மபாலாவின் கூற்று "செமித்திக் இனத்தவர்களின் காட்டுமிராண்டிக் கருத்துக்களினால் பாதிக்கப்படாத சிங்கள இனத்தவர், ஆரிய இனத்தவரின் வழித்தோன்றல்கள்" போன்ற கருத்துக்களின் தாத்பரியத்தை உணர வேண்டுமானால் இலங்கை வரலாற்றில் இவ்வுணர்வு எப்படி? ஏன் தோன்றியது? என்பதை இன்னும் ஆழமாக ஆராயப்படல் வேண்டும். செமித்திக் இனம் என்று அவர் கூறுவது அரபியர்களின் சந்ததியினரான, இலங்கை முஸ்லிம்களையே குறிக்கும். இச்சிங்கள-பௌத்த இன உணர்வுக் கொள்கைக்கு ஆதாரமாக வரலாற்றுச் சம்பவங்களையும், நிகழ்ச்சிகளையும் மேற்கோள் காட்டும் இவர்களுடைய கருத்துக்களில் எவ்வளவு உண்மையிருக்கிறது என்பதை ஆராய வேண்டியது எமது கடமை மட்டுமல்ல இன்றைய காலகட்டத்திற்கு அவசியமானதும் கூட. ஏனென்றால் திரும்பவும் இவ்வினவெறிக்கருத்து மிகவும் பயங்கரமான முறையில் தலைதூக்க முயல்கிறது என்பதே. முஸ்லிம்கள் 'குர்பான்' செய்யும் முறையை மிருகங்களை வதைக்கும் இருதயமற்ற போக்கு என்றும் பள்ளிவாசல்களில் காலையில் பாங்கு சொல்வது இந்நாட்டின் வாரிசான பௌத்த மதத்தினரின் தூக்கத்தைக் கெடுக்கும் ஓர் அன்னிய மதத்தினரின் அநாகரிக வழக்கம் என்றும், சிங்கள மக்களின் "இன-மத" வெறியைத் தூண்டுவிக்கும், இந்நாசக்காரக்கும்பலின் பொய்யுரையை அம்பலமாக்குவதின் மூலம்தான் சிறுபான்மைச் சமூகத்தினராகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் திரும்பவும் இந்நாட்டில் இனக்கலவரம் நடப்பதைத் தடுக்கலாம். அரசாங்கத்தில் உயர் பதவிகளில் இருக்கும் தமிழர்களுக்கு எதிராகத்துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதிலும் மலைநாட்டுத் தமிழர்களின் தலைவர்களின் கருத்துக்களை கண்டித்தும் சிங்கள மக்களின் இன உணர்வைத் தூண்டிவிடும் இவ்வெத்தர்களின் கெடுமதியான போக்கைக் கண்டிப்பதுடன், அவர்களுடைய சுய உருவத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதன் மூலம் இலங்கையின் அழிவைத் தடுக்கலாம். கண்டியில் முஸ்லிம் பாடசாலை நிறுவுவதற்கு எதிர்ப்பு இயக்கமும் இவ்வின வெறியின் அறிகுறியாகும். மனித சமுதாயத்தை இன ரீதியாக வகுக்க முயல்வது வரலாற்றாசிரியர்களின் கைவந்த கலை. இவ்வாராச்சியில் ஈடுபடும் வரலாற்றாசிரியர்கள் மிகவும் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் செயல்பட வேண்டும். சமூக உணர்வு பெரும்பாலும் வரலாற்றினாலேயே நிர்ணயிக்கப் படுகின்றது. சமூக உணர்வு என்று கூறிக்கொண்டு ஒரு குறிப்பிட்ட இனத்தின் உணர்வை தமது சொந்தத் தேவைகளுக்காக வரலாற்றுச் சம்பவங்களைத் திரித்துக் கூறி மாற்றியமைக்க முயல்வது மன்னிக்க முடியாது நயவஞ்சகச் செயலாகும்.

சிங்கள உணர்வு அல்லது சிங்கள தத்துவம் என்பது இன மொழி, மதம் ஆகியவைகளுடன் பின்னிப்பிணைந்து இன்றைய சிங்கள மத்தியதரவர்க்கத்தின் பண்பாடாகப் பரிணமிக்கிறது. சிங்கள எழுத்தாளர்களின் படைப்புக்களிலும், புத்திஜீவிகளின் கருத்துக்களிலும் இவ்வுணர்வு பிரதிபலிப்பதை நாம் காணலாம். கடந்த நூறு வருடங்களாக வளர்ந்த இப்புதிய உணர்வு இந்நாட்டின் பண்டைய வரலாற்றையே மாற்றியமைத்து இப்புதிய கண்ணோட்டத்துடன் வரலாற்றுச் சம்பவங்களை மக்களுக்கும், குறிப்பாக சிங்கள இளம் சமுதாயத்தினருக்கும் திரித்துக்கூறுகிறது. சிங்கள எழுத்தாளர்களும் , சிங்கள வரலாற்றாசிரியர்களும் இச் 'சிங்கள உணர்வு' என்ற தத்துவத்திற்கு வரலாற்றில் ஆதாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேட முனைந்து இதையே உண்மையாக்கி இது பண்டுதொட்டு வந்த ஒரு தத்துவம் என்று நிரூபிக்க முயலுகின்றனர்.

'இன உணர்வு' என்ற இத்தத்துவம் மேற்கு நாடுகளில்கூட பதினாறாம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் இப்பதப்பிரயோகத்தை நாம் காண்கிறோம். மனித சமுதாயத்தை இனவாரியாகப் பிரிக்க முயன்ற மனித இயல் ஆராய்ச்சியாளர்கள் மிக சமீப காலத்திற்றான் மனிதனுடைய உடலமைப்பையும், உறுப்புகளையும் வைத்து இனத்தைப் பிரிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். எனவே மொழியை மையமாக வைத்து மனித சமுதாயத்தை இனரீதியாகப்பிரிக்க முயலும்போது வரலாற்றுப்படுகுழியில் நாம் விழ நேரிடலாம். தமிழர்களையும், சிங்களவர்களையும் பொறுத்தவரையில் இவ்வின உணர்வு என்பது சமீபத்தில் தோன்றிய ஒரு கருத்தாகும். ஆகவே பண்டைய வரலாற்றிலிருந்து நாம் ஆதாரம் தேடவேண்டிய அவசியமில்லை. விஜயன் என்ற கற்பனைக் கதாபாத்திரம் தனது ஆரியவம்ச விருத்திக்காக ஆரிய இனத்தைச் சேர்ந்த ஓர் அரசிளங் குமரியைத் தேடினான் என்று செனவிரத்ன ஆசிரியரும் கலாநிதி மென்டிஸ், பார்னட் போன்ற வரலாற்றாசிரியர்கள் பண்டைய இலங்கையைப் பற்றி எழுதும்போது 'சிங்கள இனம்' என்று கூறுவதும் இப்புதிய தத்துவத்தை வைத்தே எழுதுகிறார்கள் என்பது வரலாற்றைப் படிக்கும்போது தெளிவாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1915ஆம் ஆண்டு சிங்கள-முஸ்லிம் இனக்கலவரம்

1915ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிங்கள-முஸ்லிம் கலகத்திற்குட் பிறகு முஸ்லிம்கள் பெரும்பான்மை சமூகமான சிங்கள மக்களைச் சந்தேகக் கண்கொண்டே பார்த்தனர். இவ்விரு சமூகங்களுக்குமிடையே முன்பு இருந்த சமாதானமும், சௌஜன்யமும், இக்கலத்திற்குப் பிறகு குறைந்தது. சிறுபான்மை முஸ்லிம்கள் தாம் எந்நேரத்திலும் பேரினவாதிகளால் தாக்கப்படலாம் என்ற பயத்தில் வாழ்ந்தனர். சிங்கள மக்கள் முஸ்லிம்களை வெறுப்பதற்கு வேறு காரணங்களும் இருந்தன. ஆங்கில ஏகாதிபத்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இவ்வெறுப்புக்கு தூபம் போடுவதாக அமைந்தது.

1915 கலகத்தை ஆங்கில அரசாங்கம் முதலில் ஓர் இனக்கலவரமாகவே கணித்தது. இக்கலகம் நாடு பூராவும் பரவிய பிறகு இது சிங்களத் தலைவர்களால் ஆங்கில அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு செய்யப்பட்ட ஒரு சூழ்ச்சி என்ற உணர்வில் அரசாங்கத்தினர் அவசரகால சட்டத்தைப் பிரகடனப் படுத்தி சிங்கள மக்களை மிகவும் கொடுமையான முறையில் நடத்தியதோடு சிங்களத் தலைவர்களையும் சிறையிலடைத்தனர். இவர்களுடைய இவ்வெண்ணத்திற்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லாதிருந்த போதிலும் ஆங்கில அதிகாரிகள் இக்கலகத்திற்கு பின்னால் ஓர் அரசியல் சதியே இருக்கிறது என்ற எண்ணத்தில் செயல்பட்டார்கள். இனத்துவேஷத்தை தூண்டிவிட்ட சிங்கள பத்திரிகையாளர்களுக்கு எதிராக விசாரணை நடத்தினர். 'சிங்கள ஜாதிய' என்ற பத்திரிகையும் தர்மபாலாவின் 'சிங்கள புத்திய' என்ற பத்திரிகையும் தடைவிதிக்கு உள்ளாக்கப்பட்டன. மது ஒழிப்பு இயக்கம் ஆங்கில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்திற்கு எதிராக தோற்றுவிக்கப்பட்ட ஓர் இயக்கம் என்று கூறி இவ்வியக்கத்தின் முக்கிய தலைவர்களைச் சிறைபிடித்தது. உண்மையில் இத்தலைவர்கள் முஸ்லிம்களுடைய சொத்துக்களைப் பாதுகாப்பதிலும், காடையர்களிடமிருந்து முஸ்லிம்களைக் காப்பாற்றுவதிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

பிற்காலத்தில் இலங்கையின் தேசியத் தலைவர்களாக வளர்ந்த எப். ஆர்., டி. எஸ். சேனநாயக்க சகோதரர்கள், டி. சி., டி. பி. ஜயத்திலக்க சகோதரர்கள், பட்டுவந்துடாவ, ஹேவாவித்தாரன சகோதரர்களே சிறைப்பிடிக்கப்பட்ட சிங்களத் தலைவர்கள். ஹேவாவித்தாரன சகோதரர்கள் பௌத்தமதப்போதகரான அநகாரிக தர்மபாலாவின் சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. புறக்கோட்டை வர்த்தகரான டொன் கரோலிஸ் என்பவர் அநகாரிக தர்மபாலாவின் தந்தை என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய உண்மை. புறக்கோட்டையில் வியாபாரஞ் செய்த இரு சிங்களவர்களில் இவரும் ஒருவர். தர்மபாலாவின் சீற்றத்திற்கு இவை ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இலங்கை இளைஞர் மன்றம் (யங் லங்காலீக்) என்ற இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான ஏ. இ. குணசிங்ஹாவும் சிறையிலடைக்கப்பட்டார். எந்தவொரு சிங்களவரும் ஆங்கில காலனித்துவ ஆட்சிக்கு எதிராக என்ன நடவடிக்கைகளிலும் ஈடுபட்டாலும் அதை ஒரு சதியாகவே ஆங்கிலேயர் எண்ணினர். 1915ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் முதலாவது உலக மகாயுத்தம் மிகவும் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஜெர்மனியர்களின் தாக்குதல்களுக்கு பிரான்சும், இங்கிலாந்தும் ஈடுகொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த காலம். ஆப்பிரிக்காவிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும், தெற்காசியாவிலும் தம்முடைய ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கு ஜெர்மனி முயன்று கொண்டிருந்தது. ஜெர்மனியின் யுத்தக் கப்பல்கள் இந்திய சமுத்திரத்திலும், பசுபிக் சமுத்திரத்திலும் போர்ப்பறை சாற்றிக்கொண்டிருந்தன. 1905ஆம் ஆண்டில் ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றான ரஷ்யா கீழைத்தேய நாடான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பானினால் தோற்கடிக்கப்பட்டது. 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்ற கூற்றுக்கிணங்க ஆங்கிலேயர் எந்த புதருக்குக் கீழ் என்ன பாம்பு ஒளிந்திருக்கிறதோ என்ற பயப்பிராந்தியில் தங்களுக்குகெதிராக யாராவது வாயசைத்தால் கூட இதை தமக்கெதிராக தமது ஆட்சியைக்கவிழ்ப்பதற்காக செய்யப்படும் சூழ்ச்சி என்றே கருதினர்.

இந்தியாவில் கோகலேயும், பிறகு திலகரும் தலைமை தாங்கிவந்த இந்திய சுதந்திர இயக்கம், தென்னாபிரிக்காவிலிருந்து காந்தியின் வருகையால் மக்கள் இயக்கமாக உருவெடுத்தது. நாடு பூராவும் இவ்வியக்கம் பரவியது. பெரும்பான்மை சமூகமான ஹிந்துக்களோடு சிறுபான்மை சமூகமான முஸ்லிம்களும் சேர்ந்து கொண்டதனால் தம்முடைய இந்திய சாம்ராஜ்யத்தின் அஸ்தமன காலம் வந்து விட்டது என்று ஆங்கிலேயர் தொடைநடுங்கிக் கொண்டிருந்த காலம். பிரித்தாளும் சூழ்ச்சியை ஆங்கிலேய அரசாங்கம் முதலில் இலங்கையில் கடைப்பிடித்தது. பெரும்பான்மை மக்களாகிய சிங்களவரிடமிருந்து சிறுபான்மை இனங்களாகிய இலங்கைத் தமிழரையும் முஸ்லிம்களையும் பிரிப்பதற்குச் சூழ்ச்சி செய்ததே ஆங்கில அரசாங்கம்தான். சிங்கள மக்களின் மேல் ஆங்கிலேயரின் அத்துமீறிய போக்கினால் சிங்கள மக்களிடையே ஆங்கில அரசாங்கத்திற்கெதிராக ஒரு வெறுப்பணர்ச்சி வளரத் தொடங்கியது. சிங்கள மக்களின் தலைவர்கள் தமக்கேற்பட்ட அநீதியை விசாரிக்குமாறு இங்கிலாந்தின் அரசாங்கத்திற்கு எத்தனையோ முறையீடுகளைச் செய்தும் செவிடன் காதில் சங்கூதியதைப்போல் இலங்கையில் ஆங்கிலேயரின் அடக்குமுறை ஆட்சி தலைவிரித்தாடிய இக்கால கட்டத்தில் சிங்கள மக்களின் அவல நிலையையும் சிங்களத் தலைவர்களின் சிறைவாசத்தின் அநீதியையும் ஆங்கில அரசாங்கத்திற்கு அடித்துக் கூறுவதற்கு ஒரு தலைவர் தோன்றினார். அவர்தான் சர்.பொன்னம்பலம் இராமநாதன். ஆங்கில அரசாங்கத்திற்கு எதிராக நாவசைக்கவே மக்கள் பயந்திருந்த இக்காலத்தில் பொன்னம்பலம் இராமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைச் சட்டசபையில் ஆங்கில அரசாங்கத்தின் முறைகேடான ஆட்சியைக் கண்டித்தும், கலகத்தைக் காரணமாக வைத்து சிங்கள மக்களை அடக்கியதை எதிர்த்தும் 'இது ஆங்கில அரசாங்கத்திற்கு எதிராகத்திட்டமிடப்பட்ட சதி' என்ற ஆங்கிலேயரின் பொய்ப் பிரசாரத்தின் வண்டவாளத்தை அம்பலப்படுத்தியும் சட்டசபையில் இவர் வாதாடினார். இலங்கைச் சட்டசபையில் சிங்கள மக்களுக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட இருசட்டங்களையும் எதிர்த்தார்.

அரசாங்க அதிகாரிகளும், படைத்தளபதிகளும் நீதி மன்றத்திற்கு அப்பாற்பட்டவர்கள். ஆகவே, இலங்கைச் சட்டத்தையும், எவ்வெவ்விடங்களில் கலகங்கள் நடைபெற்றனவோ அவ்வவ்விடங்களில் உள்ள சிங்களவர்கள், சேதப்பட்ட பொருட்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்ற சட்டத்தையும் எதிர்த்தார். சிங்கள மக்களுக்கு இழைக்கப்பட்ட இவ்வநீதியைப் விசாரிப்பதற்கு ஒரு விசாரணைக்குழு நியமிக்கப்படல் வேண்டும் என்றும் ஆங்கில அரசாங்க அதிகாரிகளின் அத்துமீறிய போக்கை விசாரிப்பதற்கும் இவ்விசாரணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்றும் சட்டசபையில் பொன்னம்பலம் இராமநாதன் இரண்டு வருடங்களாக வாதாடினார். சிங்கள மக்களின் தலைவர்களான இ. டப்ளிவ். பெரேராவும், டி. பி. ஜயலதிலக்காவும் இங்கிலாந்து சென்று நான்கு வருடங்களாக தமது முறையீட்டுக்குச் செவிசாய்க்குமாறு இங்கிலாந்தின் அரசாங்கத்திடம் மன்றாடினார்கள்.

சிங்கள அரசியல் தலைவர்களும், தமிழ்த் தலைவர்களும் சகோதரர்களைப்போல் ஆங்கில அரசாங்கத்திற்கெதிராகச் செயல்பட்டார்கள். 1915ஆம் ஆண்டில் நடந்த கலகத்திற்குப்பிறகு முஸ்லிம்கள் சிங்கள மக்களில் வைத்த நம்பிக்கையை இழந்தனர். எனவே அவர்கள் தம்முடைய உயிரையும் சொத்தையும் காப்பாற்றிய ஆங்கில அரசாங்கத்துடன் ஒத்துழைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய முஸ்லிம்கள் காந்தியுடனும், இந்திய காங்கிரஸுடனும் ஆங்கில அரசாங்கத்திற்கெதிராக செயல்பட்ட அதே வேளையில் இலங்கை முஸ்லிம்கள் ஆங்கில அரசாங்கத்துடன் ஒத்துழைத்ததற்குக் காரணம் இக்கலகமே. இந்திய முஸ்லிம்களின் கிலாபத் இயக்கம் இலங்கை முஸ்லிம்களை ஓரளவு பாதித்தது என்றாலும், செய்நன்றி மறவாத முஸ்லிம்கள் ஆங்கில அரசாங்கத்திற்கு எதிராகச் செயல்பட முற்படவில்லை.

அடுத்த சில ஆண்டுகளில், ஆங்கில அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டிய நிர்ப்பந்தம் மற்றைய சிறுபான்மை சமூகங்களுக்கும் ஏற்பட்டது. சிங்கள இனத்தவர்களின் பேரினவாதப்போக்கு சிறுபான்மை சமூகங்களிடையே ஒருவித ஒற்றுமையை ஏற்படுத்தியது. தமிழ்த்தலைவர்களுடைய தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டு ஆங்கில அரசாங்கத்துடன் ஒத்துழைக்கத் தொடங்கினர். அரசியல் சீர்திருத்தங்களை கொண்டுவர ஆங்கில அரசாங்கம் முற்பட்டபோது தம்முடைய சமூகத்தைப் பாதுகாப்பதற்கும் தமது உரிமைகளைப் பெறுவதற்கும் முஸ்லிம் தலைவர்கள் ஆங்கிலேயருடைய நல்லெண்ணத்தைப் பெற்று அதன்மூலம் தமது கோரிக்கைகளைப் பெறலாம் என்ற எண்ணத்தில் செயல்பட்டார்கள். 'சிங்களவர் மட்டும் இயக்கம்' பாரொன் ஜயத்திலக்காவின் தலைமையில் இயங்கியபோது சிறுபான்மை இனத்தவர்களான தமிழரும், முஸ்லிம்களும் பெரும்பான்மை இனமான சிங்களவரின் ஒருமுகப் போக்கைக் கண்டு அச்சம் கொண்டனர். இந்நாட்டில் ஜனநாயக ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டு பிரதிநிதித்துவ முறையைக் கொண்டுவர வேண்டும் என்று சிங்களத்தலைவர்கள் ஆங்கில அரசாங்கத்திடம் முறையீடு செய்ததை சிறுபான்மை இனத்தவர் தம்முடைய அரசியல் அந்தஸ்துக்குப் பங்கம் விளையுமோ என்ற பயத்தில் ஆங்கில அரசாங்கத்தின் நன்மதிப்பைப் பெறமுயன்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1915ஆம் ஆண்டுக்கு முன் பெரும்பான்மை சமூகத்தவருக்கும் சிறுபான்மை சமூகத்தவருக்குமிடையே இருந்த ஒற்றுமை எப்படி மாறி சிறுபான்மை இனத்தவர்கள் பயப்படும் ஒரு நிலை ஏற்பட்டது என்பதை ஆராய்தல் அவசியமாகிறது.

மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த ஓர் அறிஞர் குழு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே அரசியலில் தலைதூக்கத் தொடங்கியது. அரசியல் விவகாரங்களில் தமக்கும் பங்கு வேண்டும் என்ற முறையீட்டை இவர்கள் அரசாங்கத்தின் முன் வைத்தனர்.

இப்புதிய வர்க்கம், சாதி, சமயம், பாரம்பரிய உரிமை, என்ற பழைய கோட்பாடுகளினின்றும் விடுபட்டு கல்வி, அறிவு, பணம் என்பவைகளின் அடிப்படையிலே வளர்ந்தது. அரசாங்க உத்தியோகங்களைப் பெறுவதற்கு பாரம்பரிய பிறப்புரிமை கைவிடப்பட்டது. ஆங்கிலக்கல்வி மூலமும் பெருந்தோட்டப் பயிர் செய்கையினாலும் செல்வந்தர்களாகிய இச்சிறு வர்க்கத்தினர் முதலாளித்துவ வர்க்கமாக மாறிக்கொண்டு வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வர்க்க முரண்பாடு தோன்றுவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்கு இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட கூலியாட்கள், தொழிலாளர் வர்க்கத்தின் முதுகெலும்பாக வளர்ந்தனர். முதலாளித்துவ சமுதாயம் தம்முடைய நிலையைப் பாதுகாப்பதற்காக சாதி, சமயம், மொழி இவைகளைக் கடந்து செயற்கையான ஓர் ஒற்றுமையைப் ஏற்படுத்திக் கொண்டனர். பிரித்தானிய சாம்ராஜ்யம் முதலாளித்துவ அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட காரணத்தினால் இலங்கையில் வளர்ந்து வந்த இச்சிறு முதலாளித்துவ இனத்திற்கு ஆதரவு நல்கி வந்தது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இவ்வர்க்கத்தின் எண்ணிக்கை வளர்ந்தது. ஆங்கிலக் கல்வி மூலம் அந்தஸ்தைப்பெற்று மேல்நாட்டு வாழ்க்கை முறையைப் பின்பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வர்க்கம் இந்நாட்டின் பொது மக்களின்றும் தம்மை வேறுபடுத்தி தம்முள் செயற்கையான ஓர் ஒற்றுமையை ஏற்படுத்திக் கொண்டனர். மத்திய தர அறிஞர் கூட்டத்தினரும் இம்முதலாளி வர்க்கத்தின் ஓர் அங்கமாக இருந்தனர். இவ்வர்க்கத்தில் கரையோர சிங்களவர்களும், அரசாங்கத்தில் உத்தியோகம் வகித்த தமிழர்களும், பணம் படைத்த ஏனைய சிறுபான்மை இனத்தவருமே முக்கிய அங்கங்களாக இருந்தனர். மலைநாட்டுச் சிங்களவர் பெரும்பாலும் தம்முடைய பண்டைய பெருமையைப் பேசிக் கொண்டு பழைய முறையிலேயே வாழ்ந்து வந்தனர்.

இப்புதிய முதலாளி வர்க்கத்தின் ஒற்றுமையைக் குலைப்பதற்கு சாதி, சமயம் என்ற சக்திகள் தோன்றின. பண்டைய காலந்தொட்டே உயர்வர்க்கத்தினராகக்கணிக்கப்பட்ட கொவிகம சாதியைவிட, சமூக தரம் குறைந்த சாதிகளான கராவ, சலாகம, துராவ ஆகிய சாதிகளைச் சேர்ந்தவர்களே, இப்புதிய வர்க்கத்தின் முக்கியஸ்தர்களாக வந்தனர். கராவ சாதியைச் சேர்ந்தவர்களே அதிகமாக இருந்ததனால் கொவிகம சாதிக்கும், கராவ சாதிக்குமிடையில் எதிர்ப்பு வளரத்தொடங்கியது. கராவ, சலாகம சாதியைச் சேர்ந்தவர்களின் செல்வாக்கு வளர்ந்ததைக் கண்ட கொவிகம சாதியைச் சேர்ந்தவர்கள் ஆங்கில அரசாங்கத்தின் ஆதரவைப் பெறுவதற்கு அரசாங்கத்தோடு ஒத்துழைத்தார்கள். கீழ் வகுப்பைச் சேர்ந்தவர்கள் தம்முடைய செல்வாக்கைப் பரப்புவதற்கு சிங்கள உணர்வையும், மத உணர்வையும் பாமர மக்களிடையே தூண்டிவிட்டனர். கொவிகம உயர் வர்க்கத்திற்கெதிராகவும் ஆங்கில அரசாங்கத்திற்கு எதிராகவும் ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் நாளடைவில் சிறுபான்மை இனங்களைத் தாக்கும் ஓர் இயக்கமாக உருவெடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1915ஆம் ஆண்டு சிங்கள-முஸ்லிம் இனக் கலவரத்தில் நடந்த சம்பவங்கள்

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் 1915ஆம் ஆண்டு ஒரு திருப்புமுனையாக அமைகிறது. 1895ஆம் ஆண்டு சிங்கள-முஸ்லிம் கலவரம் முஸ்லிம்களைச் சிந்திக்க வைத்தது. தம் சமூகத்தைப் பற்றிய உணர்வு முஸ்லிம்களிடையே பரவியது. இலங்கையின் பல பாகங்களிலும் பிரிந்து வாழ்ந்த முஸ்லிம்கள், தாமுண்டு தம் வேலையுண்டு என்றிருந்த காலம்போய், ஒரு முஸ்லிமுக்குக் கேடு வந்தால் அது எல்லோரையும் பாதிக்கும் என்ற உண்மையை 1915ஆம் ஆண்டு கலவரம் உணர்த்தியது. தென்னிந்திய முஸ்லிம் வர்த்தகர்களுக்கும் கரையோர சிங்கள மக்களுக்குமிடையே இருந்த வியாபாரப் போட்டியின் காரணமாகத் தோன்றிய இக்கலவரம் எல்லா முஸ்லிம்களையும் பாதித்தது. இது காலவரையும் சிங்கள மக்களுடன் சமாதானத்துடனும், சௌஜன்யத்துடனும் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் சிங்கள இனவெறியர்களின் தாக்குதல்களுக்குப் பலியானார்கள். இவ்வெறியர்கள் முஸ்லிம்களுடைய உடைமைகளையும், சொத்துகளையும் சேதப்படுத்தியதுமல்லாமல், முஸ்லிம்களை ஈவிரக்கிமின்றிக்கொன்றார்கள். முஸ்லிம்களுக்கு நேர்ந்த இவ்வநீதியைப் பற்றிப் பேசுவதற்கு யாரும் முன்வரவில்லை. 'இக்கலவரத்திற்கு மூல காரணம் முஸ்லிம்களே' என்று சர். பொன்னம்பலம் இராமநாதன் சட்டசபையில் பகிரங்கமாகக் கூறினார். கம்பளையில் பௌத்த மதத்தினர் தம்முடைய கோயில் பெரஹராவை முஸ்லிம்களுடைய பள்ளிவாசல் இருக்கும் தெருவில் கொண்டு போகக்கூடாது என்று முஸ்லிம்கள் எதிர்த்ததே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கலவரத்திற்குக் காரணம் என்று அவர் சட்டசபையில் கூறினார். தென்னிந்திய முஸ்லிம் வர்த்தகர்களை 'ஹம்பயா' என்று கூறிய இராமநாதன், ''சிங்கள மக்களுக்கு எதிரான இவ் ஹம்பயாக்களின் பலாத்காரப் போக்கும், இவர்களின் சகிப்பில்லாத்தன்மையுமே இக்கலவரத்திற்கு முக்கிய காரணம்'' என்று உண்மையை மறைத்து திரித்து எழுதினார். தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே இருந்த சிநேக உறவுகள் இதனால் பாதிக்கப்பட்டது. பெரும்பான்மை சமூகமான சிங்கள மக்களுடன் இருந்த நல்லெண்ண உறவும் பாதிக்கப்பட்ட இக்காலகட்டத்தில் முஸ்லிம்கள் அரசியல் அனாதைகளாக ஆக்கப்பட்டனர். 1914ஆம் ஆண்டில் ஏற்பட்ட முதலாம் உலக மகாயுத்தத்தில் துருக்கி சாம்ராஜ்யம் இங்கிலாந்திற்கு எதிராக ஜெர்மனி பக்கம் இருந்ததால், ஆங்கிலேய ஏகாதிபத்திய அரசாங்கம் முஸ்லிம்களைச் சந்தேகக் கண்கொண்டே பார்த்தது. ஆகவே இலங்கை முஸ்லிம்களுக்கு எப்பக்கத்திலிருந்தும் விமோசனம் இருக்கவில்லை. உண்மையில் இங்கிலாந்தின் கிழக்குப் படைப்பிரிவின் தலைமையகமாகிய சிங்கப்பூரிலிருந்து இங்கிலாந்தின் வெளிவிவகார அமைச்சருக்கு அனுப்பப்பட்ட அறிக்கை 'இது ஜெர்மனியின் ஓர் சதி' என்று கூறியது. இலங்கைத் தேசாதிபதிதான் இக்கருத்து பிழையானதென்றும், இது சிங்கள-முஸ்லிம் இனப்பிரச்சினையின் விளைவே என்றும் இங்கிலாந்திற்கு அறிவித்தார்.

இக்கலவரத்திற்கு அடிப்படைக் காரணம் இனவாதமாக இருந்தாலும் உடனடிக்காரணங்களையும் நாம் அறிந்திருத்தல் வேண்டும். கம்பளையில் அம்பகமுவ வீதியில் வாழ்ந்த முஸ்லிம்கள் ஒரு பள்ளிவாசலைக்கட்டினார்கள். வல்ஹங்கொடை தேவாலயத் தர்மகர்த்தா இதே வழியாகத்தான் அவ்விகாரையின் பெரஹரா செல்லவேண்டும் என்று அடம்பிடித்தார். முஸ்லிம்கள் இதற்கு மறுப்புத் தெரிவித்து பலமுறை அரசாங்க அதிபருக்கு மனுச்செய்தும் கூட இவர் தம்முடைய பாரம்பரிய உரிமையென்று கூறி தர்மகர்த்தா இணங்க மறுத்தார். பிரித்தானிய அரசாங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த மக்களின் மதச்சுதந்திரத்தில் தலையிடுவது 1815ஆம் ஆண்டின் கண்டி ஒப்பந்தத்திற்கு முரணானது என்றும் கூறினார். பல வருடங்களின் முறையீட்டுக்குப்பிறகு கம்பளை பொலிசார் பெரகரா வேறு வழியாகச் செல்ல வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். தேவாலயத்தைப் பராமரித்த பஸ்நாயக்க நிலமே இதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய வேண்டுகோளுக்கிணங்கிய அரசாங்க அதிபர் பெரகரா இவ்வழியாகச் செல்ல ஒரு நிபந்தனையின் பேரில் அனுமதி வழங்கினார். பெரகரா பள்ளிவாசலை நெருங்கியதும் தமது இசைக்கருவிகளால் ஓசை எழுப்பக்கூடாதென்று நிபந்தனை விதித்தார். இதை எதிர்த்த பஸ்நாயக்க நிலமே அரசாங்கத்திற்கு எதிராக வழக்குதாக்கல் செய்தார். கண்டி மாவட்ட நீதிபதி போல் ஈ. பீரிஸ் நிலமேக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கினார். இது சிங்கள-பௌத்தர்களின் பாரம்பரிய உரிமையென்றும் தனது தீர்ப்பில் கூறினார். இத்தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. உயர்நீதி மன்றம், 'கண்டி ஒப்பந்தத்தின் உட்பிரிவு வாசகங்கள், உள்ளூர் பொலிசாரினது அவசர காலச் சட்டங்களினால் தள்ளுபடியாகின்றன' என்று கூறி மாவட்ட நீதிபதியின் தீர்ப்பைத் தள்ளுபடி செய்தது.

பேரினமான சிங்கள-பௌத்தர்கள், இது தம் சமூகத்திற்கு ஏற்பட்ட பெரும் தோல்வி என்று கூறி பிரித்தானிய அரசாங்கத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக செயல்படத் தொடங்கினர். இத்தீர்ப்பை வழங்கிய நீதியரசர்களில் ஒருவரான டீ சம்பாயோ "தான் ஒரு சிங்களவன் என்ற முறையில் மாவட்ட நீதிபதியின் தீர்ப்பு, அவமானத்தால் தன்னை தலைகுனிய வைக்கிறது" என்றும் கூறினார். உயர்நீதிமன்றத்தின் இத்தீர்ப்புக்கெதிராக கம்பளை பௌத்தர்கள் லண்டன் அதி உயர்நீதிமன்றத்துக்குக் தாக்கல் செய்தார்கள். கம்பளையைச் சேர்ந்த இருதரத்தாரும், குறிப்பிட்ட சில நேரங்களில் தான் பெரகரா இவ்வழியாகச் செல்லவேண்டும் என்ற உடன்பாட்டுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணங்கினார்கள். பிரித்தானிய அரசாங்கமும், நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதே தமது குறிக்கோள் என்று அறிவித்து இவ்விவகாரத்தில் தாம்தலையிட்டு அமைதியைக் குலைக்க விரும்பவில்லை என்ற கருத்தைத் தெரிவித்ததும், இவ்வழக்கு வாபஸ் செய்யப்பட்டது. நிலைமை சீரடைந்து வரும்போது சிங்கள-பௌத்த இனவாதிகள் கண்டி, குருநாகலை, பதுளை போன்ற இடங்களில் இப்பிரச்சினையைத் திரும்பவும் எழுப்பினார்கள். சில இனவெறியர்கள் கண்டிப் பெரகரா வரும் வழியில் இருக்கும் முஸ்லிம்களின் கடைகளுக்குச் செல்லும் இடத்தை வழிமறித்தார்கள். முன்பெல்லாம் முஸ்லிம்களின் கடைகள் முன்னால் பெரகராவை நிறுத்தி அன்னதானம் வழங்குவார்கள். இப்படி அந்நியோன்னியமாக இருந்த இரு சமூகத்தவரிடையே குரோதத்தை ஏற்படுத்தினார்கள் இவ்வினவெறியர்கள் இவ்வினவாதிகள் சிங்கள-பௌத்தர்களை அவமதிக்கும் முஸ்லிம்களின் அட்டகாசச் செயல்கள் என்ற தலைப்பில் 'சிங்கள-ஜாதிய', 'தினமின' போன்ற பத்திரிகைகளில் கட்டுரைகள் வரைந்ததோடு 1815ஆம் ஆண்டின் கண்டி ஒப்பந்தத்தையும் பிரசுரித்தார்கள். இப்படி சிங்கள மக்களின் மத உணர்வை இவர்கள் தூண்டி விட்டார்கள்.

முஸ்லிம்களுடைய சொத்துக்களையும், உடைமைகளையும், கடைகளிலுள்ள பொருட்களையும் சூறையாடுவதற்குத் தருணம் பார்த்திருந்த காடையர்களுக்கு முஸ்லிம்களே சந்தர்ப்பம் அளித்தார்கள். 1915ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி வெசக் தினமன்று கண்டி தலதாமாளிகாவையிலிருந்து புறப்பட்ட பெரகரா முஸ்லிம்களின் பள்ளி வாசலிருக்கும் காசல் ஹில் வீதியில் திரும்பியபோது போலிஸ் இன்ஸ்பெக்டர் பள்ளி வாசலின் முன் நின்றிருந்த முஸ்லிம்களைக்கண்டு பெரகரா வேறு வீதியில் போகும்படி பணித்தார். பெரகரா குறுக்குத் தெருவிற்குத் திரும்பியபோது பள்ளிவாசலின் முன் நின்று கொண்டிருந்த முஸ்லிம்கள் சிங்கள-பௌத்தர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவமதிக்கும் முறையில் ஏளனம் செய்து கைகொட்டிச் சிரித்தார்கள்.

முஸ்லிம்களின் இந்த அடாத செயல் சிங்களவரை ஆத்திரமூட்டச் செய்தது. உடனே பெரகரா பள்ளிவாசல் இருக்கும் தெருவிற்குள் திரும்பியது. பெரகராயின் பின்னால் வந்த இன்னொரு பெரகராவும் அதனுடன் சேர்ந்தது. உடனே பள்ளிவாசலின் மாடியிலிருந்தும், அக்கம்பக்கத்திலிருந்த முஸ்லிம்களின் கடைகளிலிருந்தும், கற்களும், போத்தல்களும் பெரகராவில் சென்ற சிங்கள மக்களின் மேல் விழுந்தன. இதனால் ஆத்திரமடைந்த பெரகராவில் சென்ற சிங்கள மக்கள் பக்கத்திலிருந்த முஸ்லிம் கடைகளையும், பள்ளிவாசலையும் தாக்கினார்கள். இச்சம்பவம் பற்றிய செய்தி நாடு பூராவும் பரவியது. பிழையான வதந்திகள் பரப்பப்பட்டன. ஒரு சில முஸ்லிம் அறிவிலிகளின் செய்கையினால் இலங்கையின் சிங்களப் பகுதிகளில் வாழும் எல்லா முஸ்லிம்களும் பெரும் பாதிப்புக்குள்ளானார்கள். சிறுபான்மை இனமாகிய நாம் பெரும்பான்மை இனத்தவரையும், அவர்களுடைய மதத்தையும் மிகவும் கண்ணியமான முறையில் நடத்தப் பழக வேண்டும்.

இக்கலவரம் நாடு பூராவும் பரவியது. கண்டி மாளிகாவவைத் தாக்க கொழும்பிலிருந்து முஸ்லிம்கள் வருகிறார்கள் என்ற பிழையான வதந்தி பரப்பப்பட்டது. கொழும்பிலிருந்து வந்த ரயில்வே கடுகன்னாவவில் நிறுத்தப்பட்டு அதிலிருந்த சில முஸ்லீம் பிரயாணிகள் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். கண்டியிலுள்ள முஸ்லீம் கடைகள் தாக்கப்பட்டன. அவர்களுடைய பொருட்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கடுகன்னாவை, மாத்தளை, கம்பொலை போன்ற இடங்களிலுள்ள பௌத்த கோவில்கள் முஸ்லிம்களால் தாக்கப்படுகின்றன என்ற பொய் வதந்தி பரப்பப்பட்டது. பொல்கஹவிலும், அலவ்வையிலும் முஸ்லிம் கடைகள் தாக்கப்பட்டன. பாணதுறையிலிருந்து களுத்துறை வரையிலுமுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. கொழும்பிலுள்ள முஸ்லிம்கள்தான் பெரும் பாதிப்புக்குள்ளானார்கள். "கராவ சாதியைச் சேர்ந்தவர்கள் முஸ்லிம்களை மீன் வெட்டுவதைப் போல் வெட்டினார்கள்" என்று தேசாதிபதி இங்கிலாந்திற்கு அனுப்பிய தனது அறிக்கையில் கூறினார். படை ஆட்சிச்சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டது. நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்குச் சாதாரண சட்டங்களும், சிவில் நீதி மன்றங்களும் பயனற்றதாகையினால் படை ஆட்சிச் சட்டத்தின் மூலம் குற்றவாளிக்களுக்கெதிராக உடனடியான தீர்ப்பு வழங்கப்பட்டது. சிங்களத்தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டார்கள். முஸ்லிம்களுக்கேற்பட்ட பொருட் சேதம் 55 இலட்சமாக கணக்கிடப்பட்டது. முஸ்லீம்களின் பொருட்சேதத்திற்கு ஈடாக 9 இலட்சமே கொடுக்கப்பட்டது. இக்கலவரத்திற்கு மூலகாரணம் முஸ்லிம்களே என்று சட்டசபையில் வாதிட்ட பொன்னம்பலம் இராமநாதன் சிங்கள மக்களின் பெருமதிப்பைப் பெற்றார்.

1915ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி திரும்பவும் நடைபெறாது என்று கூறுவதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? போலிப்பிரச்சாரங்களும், பொய் வதந்திகளும், துண்டுப் பிரசுரங்களும், முஸ்லிம்களை ஒரு மதவெறி பிடித்த கூட்டம் என்று காட்டியதுமல்லாமல் அவர்கள் வேற்று நாட்டவர்கள். நாட்டிலிருந்து விரட்டியக்கப்படவேண்டியவர்கள் என்றெல்லாம் கூறப்பட்டது. இக்கலகத்தைப் பற்றி விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழு, "கம்பளையில் கஹட்டப்பிட்டி பள்ளி வாசலின் முன்னால் சென்ற பௌத்த பெரஹராவைத் தடுக்க முயன்ற முஸ்லிம்களின் செய்கைதான் இக்கலகம் தொடங்குவதற்குக் காரணம்" என்று தனது அறிக்கையில் கூறியது. கம்பளையில் நடந்த இக்கலவரம் ஏன் நாடு பூராவும் பரவியது? வடக்கு, கிழக்கு மாகாணங்களைத்தவிர இலங்கையில் மற்றெல்லாப் பாகங்களிலும் வாழ்ந்த முஸ்லிம்கள் ஏன் தாக்கப்பட்டார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களின் மேல் சிங்கள மக்களுக்கு உள்ளூர வெறுப்பு இருக்கிறதா? "முஸ்லிம்கள் சிங்கள பௌத்தர்களைக் கொல்கிறார்கள். பௌத்த ஆலயங்களை உடைக்கிறார்கள்" என்ற பொய் வதந்தி சில விஷமிகளால் நாடு பூராவும் பரப்பப்பட்டது. "கம்பளை, மாத்தளை, கடுகன்னாவ போன்ற இடங்களில், சிங்களவர்கள், முஸ்லிம்களால் தாக்கப்படுகிறார்கள்" என்ற வதந்தி பரப்பப்பட்டது. றம்புக்கன, வெயங்கொடை, கெலனிய, அம்பலாங்கொடை, காலி, மாத்தறை, நீர்கொழும்பு, கொச்சிக்கடை, நாத்தாண்டிய, மினுவங்கொடை, குருநாகலை, குளியாப்பிட்டிய போன்ற இடங்களில் வசித்த முஸ்லிம்கள் தாக்கப்பட்டார்கள். பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டன. கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. கெட்டம்பை பள்ளிவாசல் உடைக்கப்பட்டது. "கிங்ஸ்வூட் பாடசாலைக்கருகில் ஒரு சிங்கள வாலிபன், முஸ்லிம் ஒருவனால் கொல்லப்பட்டான்" என்ற வதந்தி பரவியதன் காரணமாக கண்டியிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகள் எல்லாம் தீக்கிரையாக்கப்பட்டன. கிறிஸ்தவர்கள் அதிகமாக வாழும் நீர்கொழும்பு, கொச்சிக்கடை, நாத்தாண்டிய போன்ற இடங்களில் முஸ்லிம்களைத் தாக்குவதில் கத்தோலிக்கர்களும் சேர்ந்து கொண்டார்கள். காடையர்களின் அட்டகாசம் கொழும்பில்தான் அதிகமாக இருந்தது. புதியசோனகத்தெரு, சிறிப்பினா ஒழுங்கை, ஆட்டுப்பட்டித்தெரு, அளுத்கடை போன்ற இடங்களில் வாழ்ந்த முஸ்லிம் பெண்கள் தங்கள் குழந்தைகளுடன் டாம்வீதியிலுள்ள போலிஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்தார்கள். தஞ்சம் புகுந்த இவ்வனாதைகள் சித்திரவதைக்குள்ளானார்கள்.

டாக்டர் கலீல் தன்னுடைய 'நினைவுகள்' என்ற நூலில் முகத்துவாரத்தில் நடந்த சம்பவங்களைக் கூறும் பொழுது, "முகத்துவார ஜூம்மா பள்ளிவாசலில் கூடிய முஸ்லிம்கள் இராமநாதன் கூறியது போல வீட்டிற்குள் அடைப்பட்டு இருக்காமல் தம்மைத்தாக்க வரும் கூட்டத்தைத் தம்மிடமிருக்கும் எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதத்தாலும் தம்மைக்காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் அப்படிக் காப்பாற்றுவதில் அவர்கள் சஹீதானால் முஸ்லிம் பெண்கள் காடையர்களுக்குப்பலியாகாமல் கிணற்றில் குதிக்க வேண்டும் என்றும் முடிவெடுத்தார்கள். கிராண்பாஸில் சிங்கள ஆண்கள் கொல்லப்பட்டு மரங்களில் தலைகீழாகத் தொங்க விடப்படுகிறார்கள் என்றும், சிங்களப் பெண்கள் கற்பழிக்கப் படுகிறார்கள் என்றும் பொய் வதந்திகளை பரப்பிய ஒருவனை மறித்து "இது பொய்ப்பிரசாரம் என்று அவனைக் கூறவைத்தார்". டாக்டர் கலீலின் தகப்பனார், குஞ்சிமரிக்கார் என்பவர். இப்பொய் வதந்தியினால் ஆவேசமடைந்த சிங்கள கத்தோலிக்க மீனவர்கள், முகத்துவார கிறிஸ்தவ கோயிலின் முன்னால் கூடி முஸ்லிம்களைத் தாக்குவதற்குக் கூட்டமாய் வந்தார்கள். அவ்விடத்தில் காவலில் நின்ற ஒரு பஞ்சாபி படைவீரர் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்.

முஸ்லிம்களுக்கு இவ்வளவு பொருட்சேதமும், உயிர்சேதமும் நடந்தும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இவ்வநியாயத்தை சட்டசபையில் எடுத்துக்கூற யாருமே முன்வரவில்லை. மாறாக அன்றைய சட்டசபையில் அங்கத்தவர்களாக இருந்த சர். பொன்னம்பலம் இராமநாதனும், பாலசிங்கவும் 'முஸ்லிம்கள்தான் இக்கலகத்திற்குக் காரணம்' என்று முஸ்லிம்களைக்குற்றஞ் சாட்டினார்கள். இவர்களுடைய வாதங்களின் முன்னால் முஸ்லிம் அங்கத்தவரான அப்துல் ரஹ்மானால் ஈடு கொடுக்க முடியவில்லை. முஸ்லிம்களுக்கு நஷ்ட ஈடுவழங்கப்பட வேண்டும், கலகம் நடந்த இடங்களில் தண்டனை வரி விதிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் கொண்டு வர இருந்த சட்டங்களை பொன்னம்பலம் இராமநாதன் மிகக் கடுமையாக எதிர்த்தார். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசாங்கம் சிங்கள மக்களையும், சிங்களத் தலைவர்களையும் மிகவும் கொடூரமாக இம்சைப்படுத்தியது என்றும், யுத்தகாலச்சட்டத்தின் பிரகாரம், விசாரணையின்றி சிங்களத் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள் என்றும் அரசாங்கத்தின் மேல் இராமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழி சுமத்தினர். இலங்கைப் போலிசினால் கலகத்தை நிறுத்த முடியாதென்றறிந்த அரசாங்கம் பஞ்சாபிலிருந்து படை வீரர்களைக் கொண்டு வந்தது வாஸ்தவம்தான். வேறுவழியில்லாமல் அரசாங்கம் இந்த நடவடிக்கையை அப்பொழுது எடுத்திராவிட்டால் இலங்கை முஸ்லிம் சமூகம் நிர்மூலமாக்கப்பட்டிருக்கும். போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தோபிக்கின் உண்மைச் சம்பவங்களைப் பற்றிக் கொடுத்த அறிக்கையைச் சட்டசபையில் தேசாதிபதி சார்மஸ் வாசித்ததற்காக தோபிக்கினை உடனடியாக வேலையை விட்டு நீக்கும்படி இராமநாதன் சட்டசபையில் வாதாடினார்.

போலிஸ் அத்தியட்சகரின் அறிக்கை பிழையானதென்று அதற்கு எதிராக ஒரு மாபெரும் கூட்டம் கொழும்பில் கூட்டப்பட்டது. இக்கூட்டத்தில் ஒரு விசாரணைக்குழு நியமிக்கப்படல் வேண்டும் என்றும் அக்குழு சிங்கள மக்களுக்கு நடந்த அநியாயத்தை விசாரிக்க வேண்டும் என்றும், சிங்கள மக்கள் விசாரணையின்றி சுட்டுக்கொல்லப்பட்டதையும், பகிரங்கமாக சாட்டையடி கொடுக்கப்பட்டதையும், சிங்களத்தலைவர்கள் விசாரணையின்றி மறியலில் வைக்கப்பட்டதையும், பஞ்சாபி முகம்மதிய படைவீரர்கள் தகாதமுறையில் சிங்கள மக்களை வதைத்ததையும் விசாரிக்க வேண்டும் என்றும் பிரேரணைகள் எடுக்கப்பட்டன. இக்காலத்திற்குப் பிறகு சிங்கள மக்களிடையேயும் முஸ்லிம்களிடையேயும் இருந்த நல்லுறவு முறிந்தது. இவ்விரு சமூகங்களிடையேயும் ஒரு கசப்புணர்வுதான் வளர்ந்தது.

இலங்கையில் முஸ்லிம் சமூகமே அழிக்கப்படும் நிலை தோன்றுவதற்குக் காரணம் முஸ்லிம் சமூகத்திலுள்ள சில மதவெறிபிடித்தவர்களும், அவர்களுக்கு உடந்தையாக இருந்த சில காடையர்களும்தான் என்றால் அது மிகையாகாது. கம்பளையில் சில குறிப்பிட்ட நேரங்களில் பெரகரா பள்ளிவாசலின் முன்னால் செல்லக்கூடாது என்று சிங்களவரும், முஸ்லிம்களும் ஏற்றுக்கொண்ட பின்னரும், சில முஸ்லிம் தறுதலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தர்களின் சமய உணர்வைப் பாதிக்கும் அளவிற்கு நடந்தார்கள் என்றால் அது மன்னிக்க முடியாத குற்றமாகும். இஸ்லாத்தைக் காப்பாற்றப்போகிறோம் என்று விதண்டாவாதம் பேசிக் கொண்டு இஸ்லாமே இந்நாட்டில் மறையும் அளவிற்கு இவர்கள் நடந்து கொண்டார்கள் என்றால் இவர்களுடைய தலைவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? வாழையடி வாழையாக சிங்கள பௌத்த மக்களும் முஸ்லிம்களும் சமாதானத்துடனும், நட்புணர்வுடனும் பழகிய நிலை போய், இவ்விரு சமூகங்களிடையேயும் வெறுப்புணர்ச்சி வளர்வதற்குக் காரணமானவர்கள் சிங்களவர்கள் மத்தியில் மாத்திரமல்ல முஸ்லிம்களிடையேயும் இருந்திருக்கிறார்கள்.

"முஸ்லிம்களைத் தாக்குவதில் மும்முரமாயிருந்தவர்கள் உயர்சாதியைச் சேர்ந்த கொய்கம சாதியினர் அல்ல, கீழ்மட்ட சாதியினரான கராவ சாதியினரே" என்று தேசாதிபதி லண்டனுக்கு அனுப்பிய தன்னுடைய அறிக்கையில் கூறியிருக்கிறார். இவர்களுடன் சிங்கள சமூகத்தின் 'கீழ் சாதியான' றொடியா சாதியினரும் சேர்ந்து கொண்டார்கள். மேற்குக்கரையோரப் பகுதிகளில் கலகத்திற்க்குத் தலைமை தாங்கியவர்கள் இக்கராவ சாதியினரே. பொலிஸ் அத்தியட்சகர் தோபிக்கினின் அறிக்கையின்படி இதற்கு மூலகாரணம், சிங்கள-பௌத்த சங்கமும், மது ஒழிப்பு சங்கமுமே. 'முஸ்லிம்களுக்கெதிராக சிங்கள மக்களிடையே வெறுப்புணர்வு வளர்வதற்குக் காரணம் இச்சங்கங்களின் பிரச்சாரமே' என்று சுட்டிக்காட்டினார்.

மாத்தறை மாவட்டத்தில் வெலிகமை, அக்குரஸ்ஸ போன்ற இடங்களில் முஸ்லிம்களுக்கெதிராக நடந்த சம்பவங்களுக்குக் காரணம், இம் மது ஒழிப்புச் சங்கங்களே என்று பொலிஸ் அறிக்கை கூறுகிறது. மதுபாவித்தலை இஸ்லாமே மிகவும் வன்மையாகக் கண்டிக்கும்போது, பௌத்தர்களின் மது ஒழிப்புச் சங்கத்தின் பிரச்சாரத்திற்கும், முஸ்லிம்களுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓநாயும், ஆட்டுக்குட்டியும் கதைபோலிருக்கிறதல்லவா? முஸ்லிம் கடைகளை சிங்கள மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்று இச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சிங்கள பத்திரிகையான 'சரசவி சந்தரேச' என்ற பத்திரிகையில் எழுதினார்கள். முஸ்லிம்கள் அந்நிய நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் மத்தியகிழக்கு நாடுகளான துருக்கி, எகிப்து போன்ற நாடுகளுக்குத் தான் விஸ்வாசமானவர்கள் என்றும், அவர்களின் வருகையினால் சிங்கள-பௌத்த கலாச்சாரம் பாதிக்கப்பட்டிருக்கிறதென்றும், சிங்கள-பௌத்த மதச்சங்கங்களின் தலைவர்களும், மது ஒழிப்புச் சங்கங்களின் தலைவர்களும் பிரச்சாரம் செய்தார்கள். பிரித்தானிய ஏகாதிபத்திய அரசாங்கத்திற்கும், கிறிஸ்துவ மிஷனரிமார்களின் நடவடிக்கைகளுக்கும் எதிராக ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கங்கள் ஏன் முஸ்லிம்களைத் தாக்க வேண்டும் என்பதுதான் புரியவில்லை. புறக்கோட்டை வியாபாரம் தென்னிந்திய முஸ்லிம்களின் கையிலிருந்ததனால் சிங்கள வியாபாரிகளுக்கு இங்கே வியாபாரஞ் செய்ய முடியவில்லை என்பது ஒரு காரணமாயிருக்கலாம். இதனாற்றான் முஸ்லிம்களின் கடைகள் உடைக்குமாறு சிங்களத் தொழிலாளர்கள் தூண்டிவிடப்பட்டிருக்கலாம். முதலாம் உலக மகாயுத்தத்தின் காரணமாக விலைவாசிகள் உயர்ந்ததற்கு முஸ்லிம் வியாபாரிகள்தான் காரணம் என்று பொய்ப்பிரச்சாரத்தை சிங்கள மக்கள் மத்தியில் பரவ விட்டதற்கு முஸ்லிம்கள் பலியானார்கள். தென்னிந்திய முஸ்லிம் வியாபாரிகளுக்கும் சிங்கள-பௌத்த வியாபாரிகளுக்கு மிடையிலிருந்த வியாபாரப்போட்டி ஒரு காரணமாக இருந்தாலும், இது மட்டும்தான் காரணம் என்று கூறமுடியாது. கொழும்பில் முஸ்லிம்கள் காணிகள் வாங்க முடியாதென்ற ஒல்லாந்தரின் சட்டம் பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் வாபஸ் செய்யப்பட்டபின் முஸ்லிம் தனவந்தவர்கள் கொழும்பிலும், கொழும்பு அருகாமையிலுமுள்ள காணிகளை வாங்கியதும், சிங்கள மத்தியதர வகுப்பாரிடையே பொறாமையைத் தூண்டியிருக்கலாம். எனவே முஸ்லிம்களுக்கெதிராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்புணர்ச்சியை சிங்கள பாமரமக்களிடையே தூண்டி விடுவதற்கு இவ்வியாபாரிகளே காரணம் என்றால் அது மிகையாகாது. எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதைப்போல இலங்கை முஸ்லிம்கள், 'மதம்மாற்றப்பட்ட தென்னிந்திய தமிழர்களே' என்ற பொன்னம்பலம் இராமநாதனின் பிரச்சாரமும் காரணமாயிருக்கலாம். பௌத்தமத மறுமலர்ச்சியோடு தேசிய உணர்வும் சேர்ந்து கொண்டதனால், அந்நியர்கள் வெறுக்கப்பட்டார்கள். முஸ்லிம்களும் அந்நியர்கள் என்று கணிக்கப்பட்டு இவ்வெறுப்புணர்வுக்குப் பலியானார்கள். 1915ஆம் ஆண்டு கலகத்திற்கு இவையே முக்கிய காரணங்கள்.

1915ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலகத்திற்குப் பிறகும், 'மழை ஒழிந்தாலும் தூற்றல் நிற்கவில்லை' என்பதற்கொப்பாக 'முஸ்லிம்கள் வேற்று நாட்டவர், அவர்கள் இந்நாட்டை விட்டே விரட்டியக்கப்பட வேண்டும்' என்ற சிங்கள இனவாதிகளின் பிரச்சாரம் ஓயவில்லை. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதைப் போல சர். பொன்னம்பலம் இராமநாதன் 'றோயல் ஏசியட்டிக் சொஸைட்டி' என்ற சரித்திர ஆராய்ச்சிக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவில் "இலங்கை முஸ்லிம்கள் தென்னிந்தியாவில், இந்து மதத்திலிருந்து இஸ்லாம் மதத்திற்கு மதம்மாற்றப்பட்ட இழிசனர் சாதியைச் சேர்ந்த தமிழர்களின் சந்ததியினர்" என்ற கருத்தை அறிஞர்கள் மத்தியில் முன்வைத்தார். இப்படிப்பட்ட ஒரு பிழையான கருத்தை இவர் பரப்புவதற்கு முஸ்லிம்கள் மேல் எத்தகைய குரோத எண்ணம் இவரிடம் இருந்திருக்க வேண்டும். சிறுபான்மை சமூகங்களான தமிழரும், முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து தமது உரிமைகளைப் பெறுவதா அல்லது ஒரு சமூகத்தின் சவத்தின் மேல் நின்று மற்ற சமூகத்தினர் தமது கோரிக்கைகளைப் பெறுவதா? மரத்திலிருந்து விழுந்தவனை மாடு குத்துவதைப்போல, சிங்கள இன வாதிகளின் இன வெறியினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் தமிழர்களின் நயவஞ்சகச் செயல்களாலும் பாதிக்கப்பட்டார்கள். முஸ்லிம் சமூகத்தில் ஒரு பயந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநிலை ஏற்பட்டது. இந்த நிலையில்தான் முஸ்லிம் இளைஞர்கள் முஸ்லிம் வாலிபச் சங்கங்கள் என்றும் முஸ்லிம் லீக் என்றும் பல சங்கங்களை நிறுவினார்கள்.

முஸ்லிம்கள் ஒரு பலமுள்ள அரசியற் சமூகமாக இயங்க முடியாமைக்குப் பல காரணங்கள் இருந்தன. இலங்கையின் முழுச்சனத்தொகையில் ஒரு சிறு தொகையினராக (6.5%) இருந்தது ஒரு காரணமாகும். மற்றும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வசியாமல், கிழக்கு மாகாணத்தைத் தவிர இலங்கையில் பலபாகங்களிலும் சிறுச்சிறு தொகையினராக வசித்தல் இன்னொரு காரணமாகும். வியாபாரத்தை மட்டுமே நம்பி கல்வியைப் புறக்கணித்ததும் ஒரு முக்கிய காரணமாகும். இன்றைய அம்பாறை மாவட்டத்தைத் தவிர எந்தவொரு மாவட்டத்திலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இல்லை.

வடக்கு மாகாணத்திலும், மட்டக்களப்பு மாவட்டத்திலும் தமிழர்கள் பெரும்பான்மையாக இருக்கின்றனர். இதனால் அவர்களுடைய அரசியல் பலம் முஸ்லிம்களைவிட அதிகமாகவே இருக்கிறது. முஸ்லிம்களுக்கிருக்கும் இன்னொரு பிரச்சினை என்னவென்றால், மதத்தாலும், கலாசாரத்தாலும் ஓர் இனமாக இருந்தாலும், அவர்கள் மொழியால் வேறுபட்டே இருக்கின்றனர் என்பதே. வடக்கிலும், கிழக்கிலும், வடமேற்குக் கரையோரப் பகுதிகளிலும் இவர்கள் தமிழையே தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும், சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் சிங்களமொழி அவர்களுடைய பேச்சுமொழியாக மாறிக்கொண்டு வருகிறது. இதனால் இப்பகுதிகளில் வாழும் முஸ்லிம் இனச்சந்ததியினரிடையே சிங்கள-பௌத்த கலாச்சாரம் பரவிக்கொண்டே வருகிறது. தமிழ் மொழியில் இருக்கும் இஸ்லாமிய இலக்கியங்களை வாசிப்பதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் இல்லை. பள்ளிவாசல்களில் செய்யப்படும் ஜும்மா பிரசங்கங்களும், இஸ்லாமிய உணர்வை வளர்க்கும் தப்லீக் இயக்கத்தார் செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய பிரச்சாரங்களும் கூட தமிழ் மொழியிலேயே செய்யப்படுவதனால் சிங்களத்தைத் தமது மொழியாகக் கொண்டுள்ள இவ்விளஞ்சந்ததியினரிடையே இஸ்லாமிய அறிவு மங்கிக் கொண்டு வருகிறது. எனவே மொழியில் மாத்திரமல்ல, கலாச்சாரத்தில் கூட இன்று இரு முஸ்லிம் சமூகங்களை நாம் பார்க்கிறோம். கேவலம், தொழிலுக்கு தம்முடைய மதத்தையே புறக்கணிக்கும் ஒரு சமுதாயத்தை இன்று நாம் இலங்கையில் காண்கிறோம். தொழில் கிடைக்கும் உத்தரவாதமாவது இருக்குமென்றால் அதுதான் இல்லை.

முஸ்லிம்கள் ஒரு தனி இனமாக இயங்குவதற்கு முடியாமைக்கு இன்னுமொரு காரணம் இருக்கிறது. நாம் ஏற்கனவே கூறியது போல், பல இன மக்களைக் கொண்டதுதான் இன்றைய முஸ்லிம் சமூகம். இலங்கைச் சோனகர், என்ற பிரிவினர் அரபு நாட்டிலிருந்து வந்தவர்களென்றும், அரபு பாரம்பரியத்தை உடையவர்கள் தொன்றுதொட்டு இந்நாட்டில் வசிப்பவர்கள் என்ற வரலாற்றுண்மையை நாம் ஏற்கனவே கூறியுள்ளோம். சம்மான்காரர் என்றழைக்கப்படுபவர்கள், தென்னிந்தியாவிலிருந்து இங்கே வந்து குடியேறியவர்கள். ஒல்லாந்தருடைய ஆட்சிக்காலத்தில் மலாயா மக்கள் இந்நாட்டில் குடியேறினார்கள். பிறகு பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த மேமன்களும், போராக்களும், இந்நாட்டில் வந்து குடியேறினார்கள். இப்படிப் பலதரப்பட்ட இனங்களைச் சேர்ந்தவர்கள் தான் இன்றைய இலங்கை முஸ்லிம் சமூகத்தினர். இவர்கள் ஒரு தனி இனமாக இயங்கமுடியாமக்கு இதுவும் ஒரு காரணம்.

இக்காலகட்டத்தில், முஸ்லிம்களுடைய அரசியல் நோக்கம் பெரும்பாலும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதாகவே இருந்தது. முஸ்லிம் தேசியத் தலைமைத்துவம், சமயோசித புத்தியுடன் நடந்துகொண்டது என்றாலும், மிகவும் பயந்த சுபாவத்துடனும், எச்சரிக்கையுடனும் நடந்து கொண்டது. அவர்களுடைய நோக்கமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகியதாகவே இருந்தது. தம்முடைய கலாசாரத்தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தின் உதவியை முஸ்லிம் தலைவர்கள் நாடினார்கள். முஸ்லிம்களுக்கென்றே தனிப்பட்ட சட்டங்களை அமுலாக்குவதில் மும்முரமாயிருந்தார்கள். முஸ்லிம்களின் விவாகம், விவாகரத்துச் சட்டமும், முஸ்லிம்களின் மரபுரிமை வக்புச்சட்டமும் இக்காலக்கட்டத்தில் அமுலாக்கப்பட்டன. முஸ்லிம்களுடைய கல்வி நிலையங்கள் தமிழ் ஆசிரியர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதிலும், முஸ்லிம்களுக்கென்றே தனியாக இஸ்லாமிய சூழ்நிலையில் அமைக்கப்பெற்ற கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதிலும் மும்முரமாக ஈடுபட்டார்கள்.

1915ஆம் ஆண்டு கலகத்திற்குப்பிறகு, முஸ்லிம்கள், சிங்களவரை சந்தேகத்துடனும், பயத்துடனும் பார்த்தார்கள். சிங்களவரின் தேசிய இயக்கத்திற்கு எதிராக முஸ்லிம்களையும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களையும், பிரித்தானிய ஆட்சியின் கவர்னர்கள் பாவித்தார்கள். இலங்கைக்கு சுதந்திரம் பெறுவதையே நோக்கமாக கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தேசிய காங்கிரசில் சேராமல் முஸ்லிம்கள் விலகியே நின்றனர். முஸ்லிம்கள் இப்படி விலகி நின்றதற்குக் காரணம், இத்தேசிய காங்கிரசின் பின்னணியில் மது ஒழிப்பு இயக்கம் இருந்ததே. இம்மது ஒழிப்பு இயக்கத்தின் பிரசாரத்தினால் ஏற்பட்ட 1915 கலவரம், எவ்வளவு தூரம் முஸ்லிம்களைப் பாதித்தது என்பதை முஸ்லிம்கள் மறந்துவிடவில்லை. முஸ்லிம்களுக்கெதிரான செய்கைகளில் ஈடுபட்ட பொன்னம்பலம் இராமநாதனை சிங்கள மக்களின் முக்கிய தலைவர்களில் ஒருவராக சிங்கள மத்திய வர்த்தகத்தினர் ஏற்றுக்கொண்டதும் ஒரு காரணம். 1911ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில், சிங்களத்தலைவர்களில் ஒருவரான சர். மார்க்கஸ் பர்ணாந்துவை தோற்கடித்து படித்த சிங்கள மக்களின் பிரதிநிதியாக சர். பொன்னம்பலம் வென்றதும் பிறகு 1917ஆம் ஆண்டில் சிங்கள மக்களிடையே அதிக செல்வாக்குள்ள இன்னொரு சிங்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவரான, இ. டபிள்யு, பெரேராவைத் தோற்கடித்துத் திரும்பவும் சட்டசபை அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், முஸ்லிம்கள் இலங்கைத் தேசிய இயக்கத்திலிருந்து விலகி நிற்பதற்கு ஒரு காரணம். எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல பொன்னம்பலம் இராமநாதனின் சகோதரரான சர். பொன்னம்பலம் அருணாசலம் 1919ம் ஆண்டில் இலங்கை தேசிய இயக்கத்தின் பிரதிபலிப்பாகத்தோன்றிய இலங்கைத்தேசிய காங்கிரஸின் முதலாவது தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டது, முஸ்லீம்களின் எதிர்கால அரசியலுக்கு முற்றுப்புள்ளி போட்டதாக அமைந்தது. சிங்களத்தீவிரவாதிகளின் இனவெறிக்குப்பலியான முஸ்லீம்கள் தம்மை அரசியலிலிருந்து ஒதுக்கி வைப்பதற்குக் காரணமான தமிழ்த்தலைவர்களின் தலைமையில் இயங்கிய தேசிய இயக்கத்தில் எவ்வாறு பங்கு கொண்டிருக்க முடியும்? தேசிய இயக்கத்தில் முஸ்லீம்கள் சேரவில்லை என்ற சிங்களத்தலைவர்களின் குற்றச்சாட்டு எவ்வகையில் நியாயமானது? அன்றைய சட்டசபையின் அங்கத்தவர்களாக இருந்த டபிள்யு. எம்.அப்துல் றஹ்மான், என். எச். எம். அப்துல்காதர், மொகமட் மாக்கான் மாக்கார் ஆகியோர் தேசிய காங்கிரசில் சேரவில்லை.

1921 ஆம் ஆண்டில் சிங்கள-தமிழ் ஒற்றுமை முறிந்தது. மேல்மாகாணத்தில் தமிழருக்கென்றே ஒரு பிரத்தியேக பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டும் என்ற தமிழரின் கோரிக்கையைக் கைவிடுமாறு சிங்களத் தலைவர்களின் வேண்டுகோளைத் தமிழ்த் தலைவர்கள் நிராகரித்துதான் இச் சிநேக உறவு முறிவதற்குக் காரணம். முஸ்லிம்களுடைய கோரிக்கையான தமக்கும் மேல்மாகாணத்தில் தனிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதைச் சிங்களத் தலைவர்கள் எதிர்த்தனர். இதன் காரணமாக முஸ்லிம்களும் தமிழர்களுடன் சேர்ந்து தமது உரிமைகளுக்காகப் போராடவேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்விரு சமூகங்களின் கோரிக்கைகள் ஒரே மாதிரியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த காரணத்தினால் இருசாராரும் ஒருங்கிணைந்து அரசியல் போராட்டத்தை நடத்தினார்கள்.

சிறுபான்மை இனத்தவரின் நியாயமான கோரிக்கையை சிங்களத்தலைவர்கள் எதிர்த்த காரணத்தினால் சர். பொன். இராமநாதன் இலங்கைத் தேசிய காங்கிரசினின்றும் விலகினார். இராமநாதனின் பேச்சுத் திறத்தினால் ஈர்க்கப்பட்ட முஸ்லிம் தலைவர்கள் அவருடைய தலைமையின் கீழ் இயங்கினார்கள். ஆனால் முஸ்லிம்கள் உரிமைக்காகப் போராடக்கூடிய வெளிச்சம் ஜாயா என்ற மலாய இளைஞன் உருவத்தில் அரசியல் அடிவானத்தில் தோன்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1915ம் ஆண்டுக்குப் பின்னர் இருந்த அரசியல் சமூக சூழ்நிலை

1915 ஆம் ஆண்டின் கலவரத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகம் ஒரு தலைவனைத் தேடி நின்றது. முஸ்லிம்களின் பிரச்சினைகளை பேரவைகளிலும், பொது அரங்கங்களிலும், சட்டசபையிலும், லண்டன் 'வைட் ஹாலிலும் எடுத்துரைப்பதற்கு அடிவானத்தில் ஓர் உதயசூரியன் தோன்றினான். இந்த உதய சூரியன்தான் றி.பி. ஜாயா. 1919 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அகில இலங்கை முஸ்லிம் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய றி.பி. ஜாயா பின்வருமாறு கூறினார்:

“நாம் என்ன சாதித்திருக்கிறோம்? அவர்கள் (மற்றைய சமூகத்தார்) வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும், சிறந்த கல்விமான்களையும் அறிஞர்களையும் உருவாக்கிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் மத்தியில் சிறந்த சட்டவல்லுனர்களும், டாக்டர்களும், நகரசபைத் தலைவர்களும் தோன்றும் அதே வேளையில் முஸ்லிம்களாகிய நாம் என்ன சாதித்திருக்கிறோம்? எமது மத்தியில் அரச சேவையில் பணியாற்றும் கல்விமான்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? டாக்டர்களாகவும், சட்டவல்லுநர்களாகவும் எத்தனை பேர் எமது சமூகத்தில் இருக்கிறார்கள்? எம்மிடையே எத்தனைக் கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன? முஸ்லிம் அல்லாத பாடசாலைகளுக்காவது எமது குழந்தைகளைக் கல்வி கற்க அனுப்புகிறோமா? எம்மிடையே ஓரிரண்டு ஆரம்ப பாடசாலைகள் இருக்கின்றன என்பதை நாம் ஏற்றுக் கொண்டாலும் அவை முஸ்லிம்களின் முழு ஆதரவுடன் ஆரம்பிக்கப்படவில்லையே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சைத் தட்டிப் பாருங்கள். எம்மிடையே "கல்லூரி" என்று கூறுவதற்கு ஒரு கல்வி நிலையமாவது இருக்கிறதா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஒரே பதில் இல்லை என்பதே. இன்றைய நவநாகரிகத்திற்கு வித்திட்ட ஒரு மாபெரும் நாகரிகத்தின் வாரிசுகளாகிய முஸ்லிம்கள் எம்மிடையே மூன்று இலட்சம் பேர்களிருந்தும் எமது இன்றைய நிலையை நினைத்து வெட்கப்படவேண்டும். இந்த நிலை இன்னும் நீடிக்கக்கூடாது. இந்நிலையை நாம் மாற்றியமைக்க வேண்டும். இந்த நோக்கத்தோடுதான் ஒரு முஸ்லிம் கலாசாலையை நிறுவுவதற்கு உங்களை நான் வரவேற்கிறேன். ஆனால் இலங்கையின் சர். சையத் அஹ்மத்கானாக வரக்கூடியவர் யார்?" இவ்வாறு முஸ்லிம்களின் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பினார் றி.பி. ஜாயா. அரசியல் மட்டத்தில் ஜாயா செய்த அதே கைங்கரியத்தை அறிவுலகிலும், எழுத்துலகிலும் செய்தவர்கள் சித்திலெப்பையும், ஐ. எல். எம். அப்துல் அஸீஸுமே. சர். பொன். இராமநாதன் முஸ்லிம்களைப் பற்றிப்பரப்பிய தவறான கருத்துகளை எதிர்த்து வாதாடினார்கள் இவ்விருவரும். "மதத்துவேஷம் கொண்ட வெலன்டைன் என்ற டச்சுக்காரனின் கருத்துக்களை ஆதாரமாக வைத்துத்தான் இராமநாதன் இம்முடிவுக்கு வந்திருக்கலாம்" என்று அப்துல் அஸீஸ் வாதாடினார். மேலும், "முஸ்லிம்களுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்த கிறிஸ்தவ பாதிரிமார்களான வண. கோபட் பிதா, வண. கோர்டைனர் போன்றவர்களினது கருத்துக்களையும், சீ. பிரிட்டோ மெரிக்னொல்லி போன்றவர்களின் பாரபட்சமுள்ள கருத்துக்களையும் தனக்கு ஆதாரமாக இராமநாதன் எடுத்துக் கொண்டார்" என அஸீஸ் கூறினார். "தென்னிந்தியாவின் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த இம்முஸ்லிம்கள் இன்று இந்நாட்டில் மீன் பிடிப்பவர்களாகவும் கூலிகளாகவும் சிறு வியாபாரிகளாகவும் நடமாடுவதை நாம் பார்க்கிறோம். தமிழர்களைப் போல் உருவ அமைப்பில் இருக்கும் இவர்களது வரலாற்றை எனது ஆராய்ச்சியில் காட்ட விரும்புகிறேன்" என்று பொன். இராமநாதன் றோயல் ஏசியாடிக் சொஸைட்டியின் கூட்டத்தில் கூறினார். இராமநாதனின் இத்தவறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களையெதிர்த்து இலங்கை முஸ்லிம்களின் உண்மை வரலாற்றை ஆதாரபூர்வமாக தன்னுடைய 'இலங்கை சோனகரின் பாரம்பரியம்' என்ற நூலில் எடுத்துக்காட்டினார் ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ். இன்றைய இலங்கை வரலாற்றாசிரியர்கள் அப்துல் அஸீஸின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டார்கள் என்பதற்கு அவர்களது ஆய்வுகளிலிருந்து நாம் அறிகிறோம். ஆகவே, ஒரு சமூகத்திற்குத் தகுந்த அரசியல் தலைவர்கள் எப்படித் தேவையோ அதேபோல சமூகத்தைப் பற்றிச்சிந்திப்பதற்கும் அச்சமூகத்தின் பிரச்சினைகளைப் பற்றி எழுதுவதற்கும், சிந்தனையாளர்களும், எழுத்தாளர்களும் அவசியம் தேவை.

இனி 1920 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையும், அதன்பின்னால் நின்ற அரசியல் இயக்கங்களையும் நாம் கவனிப்போம். இலங்கைச் சமுதாயத்தில் இருந்த சாதி வேற்றுமையை பிரித்தானிய ஆட்சியாளர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினார்கள். 1921 ஆம் ஆண்டு கவனர் மேனிங்கின் சட்டசபை சீர்திருத்தம் வரைக்குமுள்ள காலப்பகுதியில், பெரும்பான்மை இனமாகிய சிங்கள சமூகத்திலிருந்த சாதி வேற்றுமையைப் பயன்படுத்துதலே பிரித்தானிய அரசாங்கத்தின் முக்கிய கொள்கையாக இருந்தது.

1915 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலவரம் இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமைந்தது. 'யுத்தகால சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, சிங்கள மக்களையும், சிங்களத்தலைவர்களையும் மிகவும் கொடூரமான முறையில் தண்டித்த பிரித்தானிய அடக்குமுறை ஆட்சியை இந்நாட்டிலிருந்து அகற்ற வேண்டும்' என்ற முடிவுக்கு சிங்களத் தலைவர்கள் வந்தார்கள். மது ஒழிப்புச் சங்கம், பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் போன்றவைகளின் காரணமாக இச்சாதி வேறுபாடு சிங்கள மக்களிடையே குறைந்தது. 'கராவ' சாதியைச் சேர்ந்த சில குடும்பங்கள், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் காரணமாக பெரும் பொருளை ஈட்டின. டி சொய்சா, டி சில்வா, டயஸ், சல்காது, அமரசூரிய, பீரிஸ், டி மெல், போன்ற குடும்பங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத்தோடு சமூக அந்தஸ்தையும் பெற்றனர். இலங்கையிலும், இங்கிலாந்திலும் இவர்கள் பெற்ற ஆங்கிலக்கல்வி இவர்களுடைய அந்தஸ்தை மேலும் உயர்த்தியது. இலங்கை பௌத்த மத மறுமலர்ச்சிக்கு மாத்திரமல்ல, இலங்கையின் சுதந்திர இயக்கத்திற்கும் இச்சாதியினர் தலைமைதாங்கிய காரணத்தினால் பிரித்தாளும் சூழ்ச்சிக்குப் பேர்போன பிரித்தானிய அரசாங்கம் கராவ சாதியினருக்கெதிராக கொய்கம சாதியினரை ஆதரித்தது. 1915 ஆம் ஆண்டின் கலவரத்தை ஒடுக்குவதில் பிரித்தானிய அரசாங்கத்தின் கொடூரமான செய்கைகளினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் பாணதுறையிலுள்ள இச்சாதியைச் சேர்ந்த பௌத்த குடும்பங்களே. எனவே கராவ சாதியைச் சேர்ந்த குடும்பங்களின் பொருளாதார அதிகாரத்தையும், அரசியல் செல்வாக்கையும் குறைப்பதே பிரித்தானிய அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்தது.

1920 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் இலங்கையின் பிரித்தானிய அரசாங்கம், 'இலங்கை மக்களுக்கும் அரசாங்கத்தில் ஓரளவு பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும்' என்ற முடிவுக்கு வந்தது. இப்பொழுதும் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கைவிடவில்லை. சாதிவேற்றுமைக்குப் பதிலாக இனவேற்றுமையை அரசியலில் புகுத்தினார்கள். இனவாத அரசியலை அவர்கள் புகுத்தியதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. இடதுசாரி அரசியல் இலங்கையில் முதன்முதலாகத் தலைதூக்கத் தொடங்கியது. 'லங்கா இளைஞர் மன்றம்', ஏ.ஈ. குணசிங்கவின் தலைமையில் தோன்றியது. தீவிர அரசியல் கொள்கைகளைக் கொண்டவர்களின் இச்சங்கம் இலங்கைத் தொழிலாளவர்க்கத்திற்குத் தலைமை தாங்கியது. தொழிற்சங்கங்கள் தோன்றின. வர்க்கப்போராட்டத்தின் எதிரொலி இலங்கை அரசியல் வானில் எதிரொலிக்கத் தொடங்கியது.

இலங்கை அரசியல் மாற்றம் ஏற்படுவதற்கும், பிரித்தானிய அரசாங்கத்தின் கொள்கையில் மாற்றம் ஏற்படுவதற்கும், உலக அரசியல் அரங்கில் ஏற்பட்ட மாற்றங்களே காரணம். முதலாம் உலக மகாயுத்தத்திற்குப் பிறகு ஐரோப்பாவிலும், காலனித்துவ நாடுகளிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. ஜெர்மானிய சாம்ராஜ்யம் நேசநாடுகளின் ஆதிக்கத்திற்குள்ளாக்கப்பட்டது. ஜெர்மனி தன்னுடைய காலனித்துவ நாடுகளை இழந்ததுமல்லாமல் ஐரோப்பாவிலும் கைத்தொழில் பிரதேசங்களையும் இழந்தது. அவுஸ்திரிய சாம்ராஜ்யம் உலக வரைப்படத்திலிருந்து மறைந்தது. ஒட்டோமன் இஸ்லாமிய சாம்ராஜ்யம் துண்டாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய சுதந்திர இயக்கத்தினால் இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள்

ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகளைப் பற்றிய ஆய்வு நடத்தும்போது அச்சமூகம் தனது வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் எதிர்நோக்கிய பிரச்சினைகள் யாவை? அப்பிரச்சினைகளுக்கு எப்படி தீர்வு கண்டது? அச்சமூகத்தை தலைமை தாங்கியவர்கள் யார்? அவர்களது வரலாற்றுப்பின்னணி என்ன? அச்சமூகம் வாழ்ந்த சமுதாயத்தில் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்கள் எவ்வாறு இலங்கையைப் பாதித்தது? இம்மாற்றங்களினால் சிறுபான்மை சமூகமான இலங்கை முஸ்லிம்கள் எத்தகைய பாதிப்புக்குள்ளானார்கள்? என்ற தெளிவு ஏற்பட்டால்தான் முஸ்லிம்களது இன்றைய பிரச்சினைகளுக்கு ஒரு தீர்க்கமான முடிவைக் காணலாம்.

முதலாம் உலக மகாயுத்தத்தில் வெற்றிபெற்ற வல்லரசுகளுக்குத் தலைமை தாங்கிய அமெரிக்கா உலகில் இஸ்லாமிய சாம்ராஜ்யம் திரும்பவும் தலை தூக்காமலிருப்பதற்கு வேண்டிய எல்லா உபாதைகளையும் கையாண்டது. அமெரிக்காவின் ஜனாதிபதி வில்சன், துருக்கி சாம்ராஜ்யம் இருந்த இடமாகிய ஆசிய முனையில் ஆர்மீனியர்களுக்கென்று ஒரு தனிக்குடியரசும், குர்திகளுக்குக் குரிதிஸ்தான் என்ற ஒரு குடியரசும் ஸ்தாபிப்பதில் தீவிரமாக இருந்தார். துருக்கியின் மேல் படையெடுத்த கிரேக்க படைகளை வென்று தமக்கு எதிராகப் போர் தொடுத்த ஆமீனியர்களை அவர்களது தேசமாகிய ஆர்மீனியாவுக்கு விரட்டியடித்து ஒரு புதிய குடியரசை துருக்கியில் ஸ்தாபித்தார், கமால் அத்தாதுர்க் என்ற ஒரு துருக்கிப் படைத்தலைவன். ஆயிரத்து முன்னூறு வருடங்களாக ஆட்சி செய்து இஸ்லாமிய சாம்ராஜ்யத்திற்குப் பதிலாக சிற்றரசுகள் தோன்றின. சில அரசுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியரசுகளாகவும், சில அரசுகள் அரசர்களின் கீழும் சில சர்வாதிகார அரசுகளாகவும் தோற்றம் அளித்தன. அமெரிக்காவின் இந்த கொள்கைக்குப் பக்கவாத்தியம் ஊதின இங்கிலாந்தும் பிரான்சும். மத்திய கிழக்கில் சிரியா, ஈராக், குவைத், சவூதி அரேபியா, ஜோர்தான், எகிப்து ஆகிய நாடுகள் உலக வரைபடத்தில் இடம்பெற்றன. துருக்கிய சுல்தானுக்கு எதிராகத் தோன்றிய இச்சுதந்திர இயக்கங்களுக்கு உதவியளித்த பிரான்சும், இங்கிலாந்தும், முஸ்லிம் மக்களின் மேல் அனுதாபம் கொண்டதனாலல்ல, இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை ஒழிக்க வேண்டும் என்ற காரணமே இவர்களை இப்படி செய்யத்தூண்டியது. முஸ்லிம்களிடையே திரும்பவும் ஒற்றுமையேற்படாமலிருப்பதற்காக இங்கிலாந்து 1932 ஆம் ஆண்டில் 'பெல்பர் பிரகடனம்' என்ற ஒரு பிரகடனத்தை செய்து இஸ்ரவேல் என்ற ஒரு நாட்டை மத்திய கிழக்கில் உருவாக்கியது.

ரஷ்யாவில் ஏற்பட்ட ஒக்டோபர் புரட்சி சோவியத் யூனியன் என்ற ஒரு கம்யூனிஸ்ட் நாட்டைத் தோற்றுவித்தது. சோஷலிச கருத்துக்கள் உலகெங்கும் பரவத் தொடங்கியது. அதன் எதிரொலி இலங்கையிலும் கேட்டது. 1919 ஆம் ஆண்டில் 'தொழிலாளர் நலன்புரிச் சங்கம்' தோன்றியது. 1920 ஆம் ஆண்டில் இலங்கைத் தொழிலாளர்கள் ஒன்றியம் ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கைத் தொழிலாளர் இயக்கத்திற்குத் தலைமை தாங்கியவர்கள் ஏ. ஈ. குணசிங்கவும், நடேசஐயர் என்பவருமே. இலங்கைத் தொழிலாளர் சங்கம் 1922 ஆம் ஆண்டில் குணசிங்கவின் தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டது. 1923 ஆம் ஆண்டில் 20,000 தொழிலாளர்களைக் கொண்ட இலங்கையின் முதலாவது வேலை நிறுத்தம் நடைபெற்றது. 1915 ஆம் ஆண்டில் கொழும்பில் நடந்த கலவரத்திற்குக் காரணம், 'கொழும்பு காடையர்களல்ல. ரயில்வே தொழிலாளர்களே' என்று குமாரி ஜயவர்தன தன்னுடைய ஆய்வுக்கட்டுரையொன்றில் கூறுகிறார். இதனால் பிரித்தானிய ஏகாதிபத்திய அரசாங்கத்தினரால் ரயில்வே தொழிலாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் மோசமான முறையில் தண்டிக்கப்பட்டார்கள். இலங்கையில் தொழிலாளர் இயக்கங்கள் தோன்றுவதற்கு இதுவும் ஒரு காரணம் என்று குமாரி ஜயவர்தனா கூறுகிறார். இச் சோஷலிச கருத்துக்கள் முஸ்லிம் சமுதாயத்தில் பரவிய காரணத்தினால் முஸ்லிம்களிடையே இன்னொரு தலைவர் தோன்றுகிறார். அவர்தான் பிற்காலத்தில் கல்வியமைச்சராக வந்த பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள். 54 அங்கத்தவர்களைக் கொண்ட முஸ்லிம் லீக், பதியுத்தீன் 1927 ஆம் ஆண்டு இச்சங்கத்தின் காரியதரிசியாக கடமையேற்றவுடன், அகில இலங்கை இயக்கமாக மாறியது. ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டிருந்த முஸ்லிம் தலைவர்களை ஒரே மேடைக்குக் கொண்டு வந்தார் பதியுத்தீன். முற்போக்குக் கருத்துக்களைக்கொண்ட இளைஞன் பதியுத்தீனுடைய செல்வாக்கு முஸ்லிம் சமூகத்தில் பரவ வாய்ப்பிருக்கவில்லை. 1960ஆம் ஆண்டுக்குப்பிறகுதான் இவருடைய செல்வாக்கு சமூகத்தில் ஏற்படத்தொடங்கியது. எமது அண்டை நாடான இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பு இலங்கையையும் பாதித்தது. இந்திய தேசிய காங்கிரஸ், மிதவாதிகளின் தலைமையிலிருந்து மீட்கப்பட்டது. மகாத்மா காந்தியின் தலைமையில் இந்திய சுதந்திர இயக்கம் மக்கள் இயக்கமாக மாறியது. காந்தியின் ஒத்துழையாமை இயக்கமும், சத்தியாக்கிரகமும் இலங்கையிலும் பரவலாம் என்று பிரித்தானிய ஆட்சியாளர்கள் பயந்தனர். இந்தியாவிற்கு 'பூரண சுயராஜ்யம்' வேண்டும் என்ற கோஷமும் இந்தியா முழுவதும் பரவியது. 'வெள்ளையனே வெளியேறு' என்று ஏகோபித்த மக்கள் குரல் நாடெங்கிலும் கேட்டது. 1919ஆம் ஆண்டு இந்திய ஏகாதிபத்திய அரசாங்கம் அமுலாக்கிய 'ரௌலாத் சட்டம்' இந்திய மக்களைப் பெரும் வதைக்குள்ளாக்கியது. ஆயிரக்கணக்கான சுதந்திரத்தியாகிகள் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டார்கள். பிரித்தானிய அரசாங்கத்தின் அடக்குமுறை ஆட்சியின் அக்கிரமச் செயலான 'ஜலியன் வாலா பாக்' என்ற இடத்தில் நிராயுத பாணியாக நின்ற மக்களைப் படுகொலை செய்ததன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி உலகெங்கும் பரவியது. பிரித்தானிய அரசாங்கத்தின் வெறிகொண்ட இப்போக்கு இலங்கையில் 1915 ஆம் ஆண்டில் நடந்த கலவரத்தின் போது சிங்கள மக்களைக் கொடுமைப் படுத்தியதை இது ஒத்திருந்தது. இலங்கைத் தேசியத் தலைவர்களும், பிரித்தானிய அரசாங்கம் தமக்கிழைத்த அநீதியோடு இதனை ஒப்பிட்டனர். 1919ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் பாராளுமன்றம் 'மொன்டேகு செம்ஸ்போர்ட்' (1917) என்ற இருவரின் அறிக்கையின்படி இந்தியாவின் சட்டசபையில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தது. சில குறிப்பிட்ட தொகுதிகளைக் கொண்ட மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இந்திய சட்டசபையில் இடம் பெற்றனர். சிலர் பொதுத்தேர்தல் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். இந்திய வைசராயின் நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட ஏழு அங்கத்தவர்களைக் கொண்ட சபையில் மூன்று இந்தியர்கள் இடம்பெற்றனர். இருந்தாலும், அதிகாரம் பிரித்தானிய அரசாங்கத்தின் அதிகாரிகளிடம்தான் இருந்தது. மாகாணங்களில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இந்திய பிரதிநிதிகளும், அரசாங்க அதிகாரிகளும், ஆட்சியில் சம பங்கு கொண்டனர். இலங்கைத் தேசிய காங்கிரஸ், விலிங்டன் பிரபுவினால் பம்பாய் மாவட்ட சட்டசபைக்குக் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்களையொட்டியே தமக்கும் அரசியல் சீர்திருத்தங்கள் வேண்டுமென்று இங்கிலாந்துக்கு முறையிட்டனர். இலங்கை தேசிய காங்கிரசின் கோரிக்கையை பிரித்தானிய அரசாங்கம் நிராகரித்தது.

இங்கிலாந்து அரசாங்கம், இலங்கையில் இடதுசாரி கொள்கைகள் பரவுவதைத் தடுப்பதற்காவும், இலங்கைத் தேசிய காங்கிரஸின் தீவிர போக்கைக் குறைப்பதற்காவும், இந்திய சட்டசபையில் கொண்டுவரப்பட்ட 'மொன்டேகு செம்ஸ்போர்டு' சீர்திருத்தங்களை ஒட்டிய சீர்திருத்தங்களை இலங்கையிலும் கொண்டு வரவேண்டுமென்று கவர்னர் மேனிங்குக்கு உத்தரவிட்டது. கவர்னர் மேனிங் கொண்டு வந்த சீர்திருத்தங்கள் பிரதிநிதித்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கை நெறியைப் புகுத்தியது. சிங்களவருக்கும், தமிழர்களுக்கும் தொகுதிவாரியாக பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டது. 1921 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்களில் 13 சிங்களவரும், 3 தமிழர்களும், 1 முஸ்லிமும், 1 இந்தியத் தமிழரும் அங்கம் வகித்தார்கள். மேல்மாகாணத்தில் தமக்கு பிரத்தியேகமாக ஒரு பிரதிநித்துவம் வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கைக்கு இலங்கை தேசிய காங்கிரஸ் ஆதரவளிக்காததால் தமிழர்கள், சிங்கள மக்களிடமிருந்து பிரிந்தனர். சிங்கள-தமிழர்களின் ஒற்றுமையில் பிளவு ஏற்பட்டது. நாளுக்கு நாள் இப்பிளவு பெரிதாகி இரு சமூகங்களும் வெவ்வேறு திசையில் செல்லத் தொடங்கின. அது மட்டுமல்ல, இவ்விரு சமூகங்களிடையேயும் இருந்த நேச உறவு மறைந்து, பகையுணர்வு வளரத் தொடங்கியது. 1921 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட இச்சீர்திருத்தங்கள் ஒரு சமூகத்தையும் திருப்திப் படுத்துவதாயில்லை.

இந்தியாவில், இந்து - முஸ்லிம் ஒற்றுமைதான் இந்திய சுதந்திர இயக்கத்தின் வெற்றிக்குக் காரணம் என்பதை உணர்ந்த சிங்களத் தலைவர்கள் சிங்களவருக்குக்கிடைக்கும் பிரதிநிதிகளின் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு தமிழர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று இங்கிலாந்துக்கு அனுப்பிய மனுவில் கேட்டார்கள். வடக்கிலும், கிழக்கிலும் அதிகமாகத் தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று தேசிய காங்கிரஸ் தலைவர்கள் தமது மனுவில் கேட்பதற்குக் காரணம், சிங்கள மக்களோடு தமிழ் மக்களையும் தமது தேசிய இயக்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற காரணமே. ஆனால் தமிழர்கள் இந்த அழைப்பை நிராகரித்தார்கள். சிங்கள - தமிழ் ஒற்றுமையேற்பட்டால் தம் ஆட்சிக்கு முடிவு ஏற்படலாம் என்று உணர்ந்த கவர்னர் மேனிங் தமிழர்களையும் ஏனைய சிறுபான்மை இனங்களாகிய முஸ்லிம்களையும், இந்தியத் தமிழரையும், தம் பக்கம் ஈர்க்கும் வண்ணம் இங்கிலாந்து அரசாங்கத்தின் அனுமதியுடன் 1924 ஆம் ஆண்டு சில அரசியல் சட்டசபைத் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய ஷரியா சட்டமுறை பாதுகாக்கப்பட்ட வரலாறு

முஸ்லிம்கள் உலகத்தில் எப்பிரதேசத்தில் வாழ்ந்தாலும், அவர்கள், இஸ்லாமிய 'ஷரியத்' சட்டப்படி வாழக் கடமைப்பட்டுள்ளனர். ஒரு முஸ்லிமின் அன்றாட வாழ்க்கையும், முஸ்லிம் சமூகம் என்னென்ன கட்டுப்பாட்டுடன் வாழவேண்டும் என்றும் திருக்குர்ஆனும் எம்பெருமானின் ஹதீஸும் வரையறுத்துக் கூறுகின்றன. இதனை விளக்கி மிகவும் விவரமாக எழுதினார்கள், ஷாபி, ஹனபி, ஹம்பலி, மாலிக் என்ற இஸ்லாமிய சட்ட வல்லுனர்களாகிய நான்கு இமாம்கள். எனவே இஸ்லாமிய கட்டுப்பாடுக்குள் அமைந்த ஒரு சமுதாய அமைப்பையே நாம் இங்கே காண்கிறோம். முஸ்லிம்கள் எங்கெங்கு குடியேறினாலும் தம்முடைய வாழ்க்கை முறையை 'ஷரியத்' சட்டமுறைப்படியே அமைத்துக் கொண்டனர். திருமண முறை முதற்கொண்டு வாணிபம் வரை தம்முடைய சட்ட திட்டங்களுக்கமையவே வாழ்ந்தனர்.

இலங்கையில் குடியேறிய பலவேறுபட்ட இனங்களைக் கொண்ட முஸ்லிம்கள் தம்முடைய 'ஷரியத்' சட்டத்தின் படியே வாழ்ந்தனர். மத்திய காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த, இப்னு பத்தூதா போன்ற அராபிய பிரயாணிகள், சமய விஷயத்தில் சிங்கள அரசர்களின் தாராள மனப்பான்மையைக் கண்டு வியந்தார்கள். முஸ்லிம்கள் பூரண உரிமை அளிக்கப்பட்டார்கள். பன்னிரண்டாம் நூற்றாண்டில் இலங்கைக்கு விஜயம் செய்த அரபிய யாத்திரிகர், இத்ரீசி, முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், யெஹூதிகளும், தங்கள் சமயங்களைக் கடைப்பிடிப்பதற்கு எவ்விதத் தடைகளுமின்றி வாழ்ந்தார்களென்றும், தங்களுடைய சட்டதிட்டங்களின் படியே வாழ்ந்தார்கள் என்றும் கூறியிருக்கிறார். பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கீசர் இலங்கைக்கு வந்தபோது, கொழும்பிலிருந்து தீர்ப்பதற்கும், இஸ்லாமிய சட்டமுறைப்படி நீதி பரிபாலிப்பதற்கும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றத்தை அமைத்திருந்தார்கள் என்ற உண்மையை அவர்களுடைய குறிப்புகளிலிருந்து நாம் அறிய முடிகிறது.

இலங்கையில் குடியேறிய முஸ்லிம்கள் தம்முடைய தனித்துவத்தைப் பாதுகாக்க இவ்விஸ்லாமிய ஷரியத் முறை பெரிதும் உதவியது. சமய அறிவு படைத்த உலமாக்கள், முஸ்லிம்கள் ஷரியா முறையினின்றும் வழுவாமல் வாழ்வதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள். உலமாக்களின் செல்வாக்கும் முஸ்லிம்கள் தங்கள் தனித்துவத்தைப் பாதுகாக்க உதவியது. வெள்ளிக்கிழமை ஜூம்ஆக் கொத்பாக்களில் உலமாக்கள் இஸ்லாமிய ஷரியா முறைகளை அடிக்கடி வலியுறுத்தி வந்தார்கள். இலங்கை முஸ்லிம்கள், இமாம் ஷாபி வகுத்த இஸ்லாமிய சட்ட முறையை பின்பற்றி வந்தார்கள். ''மனித சிந்தனையில் மிக உயர்ந்த பகுத்தறிவாற்றலின் முடிபுகள்தான் ஷாபி இமாம் வரைந்த சட்ட திட்டங்கள்'' என்று பேராசிரியர் ஜோசப் ஷாக்ட் என்பவர் கூறுகிறார். ஷஸி இமாம் எழுதிய 'மின்ஹாஜ் அத்தனியீன்' என்ற நூல் திருக்குர் ஆனையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீசையும், நபிகளாரின் தோழர்கள் எடுத்த முடிவுகளையும் மையமாக வைத்து எழுதப்பட்ட ஒரு நூல். இந்நூலில் தொழுகை, தூய்மை, தானம், சக்கரத், நோன்பு, ஹஜ், திருமணம், மணவிலக்கு காப்புச் செலவு, இழவுச் சடங்குகள், தவிர்க்கப்பட வேண்டியவை, மரபுரிமை, வாணியல் முறைகள் போன்ற இன்னோரன்ன விஷயங்கள் அடங்கியுள்ளன. இச்சட்டதிட்டம் முஸ்லிம்கள், எங்கு வாழ்ந்தாலும் தங்கள் தனித்துவத்தைப் பேணிக்காக்க உதவியது. இஸ்லாமிய சமயஞானம் படைத்த உலமாக்கள், முஸ்லிம்கள் வழிதவறி நடக்காமல், இறைவன் வகுத்த வழியிலேயே செல்வதற்கு இச்சட்ட முறைகளை அடிக்கடி மக்கள் மத்தியில் எடுத்துக் கூறினார்கள். எட்டாம் நூற்றாண்டில் பாக்தாதில் பிரசித்தி பெற்ற இரு உலமாக்களான, அப்துர் ரஹ்மான் பின் அபி ஹாத்திம், மூசா அஸ் செய்லானி, என்பவரும் இஸ்மாயில் பின் முஸ்தபா அலி கலம்பவி என்பவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளித்த தீர்ப்புகளும் திருக்குர் ஆனுக்கு எழுதிய விளக்கங்களும் மிகச் சிறந்தவை என்று, பிற அறிஞர்களின் குறிப்புக்களிலிருந்து நாம் அறிய முடிகிறது. 'புரோக்கல்மன்' என்ற மேல்நாட்டு ஆசிரியர், பதினைந்தாம் நூற்றாண்டில் திருக்குர் ஆனுக்கு விளக்கம் எழுதிய மசூத் பின் காத் அலி–தப்தகானி என்பவர் 'இலங்கையைச் சேர்ந்த இவ்விரு உலமாக்கள் எழுதிய குறிப்புகளை மேற்கோள் காட்டியுள்ளார்' என்று கூறியிருக்கிறார். எனவே, இலங்கை இஸ்லாமிய சமூகம், நெறி தவறாமல், தன்னுடைய தனித்துவத்தைக் காப்பாற்ற உலமாக்கள்தான் அடித்தளமாக அமைந்தார்கள் என்பது வெள்ளிடைமலை.

போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் இலங்கையின் கரையோர ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு முஸ்லிம்களின் மத்திய கிழக்காசிய நாடுகள் தொடர்பு முறிந்துவிட்டது. இதனால் அவர்களுடைய இஸ்லாமிய அறிவும் குன்றியது. தமக்கிருந்த எஞ்சிய அறிவை, மக்தப்களின் மூலமும், மத்ரசாக்களின் மூலமும் காப்பாற்றி வந்தார்கள். இவ்வறிவு நாளுக்கு நாள் சிதைவு பெற்று, நலிந்து, பிறமதக் கோட்பாடுகளின் செல்வாக்கினால் பாதிக்கப்பட்டு, மறைந்து போகும் தறுவாயில் இருந்தபோதுதான் தென்னிந்திய உலமாக்களின் வருகை இதற்குப் புத்துயிர் அளித்தது. இஸ்லாமிய அறிவை தூய்மையாகவே காப்பாற்றி வந்த தென்னிந்திய உலமாக்கள் இலங்கை முஸ்லிம்களின் இஸ்லாமிய அறிவை விருத்தி செய்வதற்குப் பெரிதும் உதவினார்கள். இலங்கை முஸ்லிம்களின் பள்ளிவாசல்களில் தென்னிந்திய உலமாக்கள் கதீப்களாக நியமிக்கப்பட்டார்கள். இலங்கை முஸ்லிம்களும் தம்முடைய அறிவு ஞானத்தை விருத்தி செய்ய தென்னிந்திய மத்ரசாக்களில் மார்க்கக்கல்வி பயின்றார்கள்.

இலங்கையின் கரையோரப் பகுதிகளில் தமது ஆட்சியை நிலைநாட்டிய டச்சுக்கம்பெனியார், இந்நாட்டில் தமது நாட்டு சட்ட முறையை நிறுவினார்கள். ஒரு சமூகத்தின் பழக்கவழக்கங்களோடு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தொன்றுதொட்டுக் காப்பாற்றி வந்த நடைமுறைகளையும் ஒத்திருக்க வேண்டும் ஒரு சட்டமுறை. சட்டங்களை இயற்றுவோர் மக்களின் நடைமுறைகளுக்கு ஏற்பவே சட்டங்களை இயற்றுதல் வேண்டும். மக்களின் நடைமுறைகளுக்கும், பழக்கவழக்கங்களுக்கும், நெறிமுறைகளுக்கும் ஒவ்வாத சட்டங்களைக் கொண்ட ஓர் ஆட்சி அடக்குமுறையாட்சி என்று நாம் கொள்ளலாம். எந்தவொரு சிவில் சட்டமும் மக்களின் பழக்க வழக்கங்களை மையமாக வைத்தே அமைதல் வேண்டும். இந்தத்தத்துவத்தின் அடிப்படையில் தான் டச்சுக் கம்பெனியார் செயல்பட்டார்கள். போர்த்துக்கீசரின் அடக்குமுறை ஆட்சியின் கீழும் தமது மத அனுஷ்டானங்களையும், சமூக பழக்க வழக்கங்களையும் காப்பாற்றி வந்த முஸ்லிம்களும், யாழ்ப்பாணத் தமிழர்களும், டச்சுக் கம்பெனியார் தம்முடைய சட்டக் கோவையில் இப்பழக்கவழக்கங்களை கோவை செய்ய முற்பட்ட போது அவர்களுக்குப் பெரிதும் உதவினார்கள்.

இஸ்லாமிய உலகோடு இருந்த தொடர்பு முறிந்த பின், இலங்கை முஸ்லிம்கள் ஷரியா சட்டங்களைப் பேணுவதில் அக்கரை காட்டியதாகத் தெரியவில்லை. இஸ்லாமிய அறிவு ஞானம் குன்றக் குன்ற இஸ்லாமிய ஷரியா முறையின் அனுஷ்டானமும் குன்றத் தொடங்கியது. அன்றைய முஸ்லிம்களை நாம் குறை கூற வேண்டிலதில்லை. ஏனென்றால் இஸ்லாமிய உலகுடனிருந்த தொடர்பு குன்றியபோது முஸ்லிம்களுக்கு இஸ்லாமிய அறிவை வளர்க்கும் சந்தர்ப்பமும் குன்றியது. இஸ்லாமிய ஷரியா சட்டமுறைகள் ஏட்டிலில்லாத காரணத்தினாலும், உலமாக்களின் அறிவில் மட்டும்தான் இருந்த காரணத்தினாலும் இவ்வுலமாக்களின் மரணத்திற்குப் பிறகு, அவர்களோடு இவ்வறிவும் மறைந்தது. முஸ்லிம் சமுகத்தின் தலைவர்களாக இருந்த பள்ளிவாசல் 'மத்திச்சம்' என்பவர்கள் தமக்குச் சாதகமாக, ஷரியா சட்டங்களென்று கூறி சமூகப்பிரச்சினைகளுக்குத் தீர்ப்பு வழங்கினார்கள். குடும்ப வழக்குகளில் எழும் பிரச்சினைகளுக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுரிமை வழக்குப் பிரச்சினைகளுக்கும், தமது மனங்கொண்ட தீர்ப்புகளை வழங்கினார்கள். டச்சுக் கம்பெனி கவர்னர், போல்க் என்பவர் 1770ஆம் ஆண்டில் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு பட்டேவியாவிலிருந்த தலைமைக் காரியாலயத்திலிருந்து இஸ்லாமிய திருமண, மரபுரிமை சட்டக் கோவையைத் தருவித்தார். இஸ்லாமிய சட்ட நூல்களிலிருந்து சேர்க்கப்பட்ட இச்சட்டக்கோவை கிழக்கிந்திய நாடுகளில் பத்து வருடங்களாகச் செயல் முறையில் இருந்தது. பட்டேவியாவின் சட்டக் கோவையிலிருந்த முகம்மதியர்களுக்கே சிறப்பாகவுள்ள சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்த்து முஸ்லிம் கிராமத்தலைவர்களுக்கே விநியோகம் செய்தது டச்சுக் கம்பெனி. இஸ்லாமிய ஷரியத் முறையில் தான் இச்சட்டங்கள் அமைந்திருக்கின்றன என்ற அங்கீகாரத்தை முஸ்லிம் கிராமத்தலைவர்களிடமிருந்து பெற்ற பிறகு கவர்னர் போல்க் இம்முகம்மதிய சட்டக்கோவை டச்சு நீதிமன்றங்களால் நீதி பரிபாலனத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற உத்தரவைப் பிறப்பித்தார். “இலங்கை முஸ்லிம்களின் பழக்கவழக்கங்களுக்கமைய சில மாற்றங்கள் செய்யப்பட்டு இம்முகமதிய சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது” என்று பேராசிரியர் நடராஜா ‘இலங்கையின் சட்டவரலாறு’ என்ற தனது நூலில் கூறியுள்ளார்.

இலங்கைக் கரையோர ஆட்சி, பிரித்தானியர் கைவசம் வந்த போது கவர்னர் நோத் இச்சிறப்புச் சட்டங்கள் பாதுகாக்கப்படும் என்ற உத்தரவாதத்தைத் தன்னுடைய 1790 ஆம் ஆண்டின் பிரகடனத்தில் பறைசாற்றினார்.

இப்பிரகடனத்தில் ‘இச்சிறப்புச் சட்டங்கள்’ கரையோரப் பகுதியிலுள்ள எல்லா நீதிமன்றங்களினாலும் பரிபாலிக்கப்பட வேண்டும், என்று கூறப்பட்டது. தேவையான மாற்றங்களை அவ்வப்போது செய்வதற்கும் இடமளிக்கப்பட்டது. சர்வதேச சட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடுகளின் படியும், இங்கிலாந்து அரசாங்கத்தின் சட்டச்செயல் முறையின்படியும் 'பலவந்தமாகக் கைப்பற்றப்பட்ட ஒரு நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியவர்கள், தங்கள் சட்டதிட்டங்களை அமுலாக்கும் வரைக்கும் அந்நாட்டு மக்களின் பழக்கவழக்கங்களை மதித்தே தங்கள் நீதிபரிபாலனத்தை நடத்த வேண்டும், என்ற தத்துவத்தின் பிரகாரம் இலங்கைக் கரையோரத்தின் ஆட்சியைக் கைப்பற்றிய பிரித்தானியர், இப்படிச் செயல்பட்டதில் வியப்பில்லை. 1801 ஆம் ஆண்டில் வெளியான அரசாங்க நீதி பிரகடனப்படி, 'சிங்களவரும் முஸ்லிம்களும் அவரவர்களுடைய சட்டங்களினால்தான் விசாரிக்கப்படுவார்கள்' என்றும் முஸ்லிம்களுக்கிடையே தகராறுகள் ஏற்பட்டால் முஸ்லிம் சிறப்புச் சட்டத்தின் பிரகாரமே விசாரிக்கப்படுவார்கள் என்றும் 'சிங்களவருக்கும், முஸ்லிம்களுக்குமிடையே காணித்தகராறு. வரி, பொருட்கள் போன்றவைகளில் தகராறு ஏற்படின் எதிர்க்கட்சிவாதிக்கு உரித்தான சட்டத்தின் பிரகாரமே விசாரிக்கப்படுவார்' என்றும் கூறப்பட்டது.

இலங்கை ஆட்சியைக் கைப்பற்றிய ஆங்கிலேயர், இந்நாட்டிலிருந்த 'உரோமன்-டச்' சட்டத்தையே கடைப்பிடித்தார்கள். இங்கிலாந்து சட்ட முறையையும் கொண்டு வந்த இவர்கள் சிவில் வழக்குகளில் இந்நாட்டு மக்களின் பழக்கவழக்கங்களை ஒட்டிய சட்டங்களை கடைப்பிடிக்கத் தவறியதில்லை. சிறுபான்மை மக்களாகிய தமிழர்களின் 'தேசவழமை' சட்டத்தையும் முஸ்லிம்களின் 'மதச்சார்புள்ள திருமணம், திருமண முறிவு மரபுரிமை போன்ற சட்டங்களை' தங்கள் நீதி பரிபாலனத்தின் முக்கிய அம்சங்களாகக் கணித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'முகம்மதிய சட்டக்கோவை' தோன்றிய வரலாறு

பிரித்தானிய ஆட்சியில் இலங்கை வாழ் மக்களின் வெவ்வேறு பழக்க வழக்கங்களை அடிப்படையாக வைத்து 'சிவில்சட்டம்' அமுலாக்கப்பட்டது. 1801 ஆம் ஆண்டின் அரச நீதி பிரகடனப்படி சிங்களவரும், முஸ்லிம்களும் தத்தமது பழக்கவழக்கங்களை மையமாக வைத்தே நீதி பரிபாலிக்கப்படுவர் என்று அரசாங்கம் உத்தரவிட்டது. 1805 ஆம் ஆண்டில் கவர்னர் மெயிட்லண்ட், 'மாகாண நீதி மன்றங்கள், மக்களின் பழக்கவழக்கங்களை மிகவும் கண்டிப்பாகக் கைக்கொள்ள வேண்டும்' என்று உத்தரவிட்டார். பிரதம நீதி அரசர் அலெக்சாந்தர் ஜொன்ஸ்றன் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட பால்க்கினுடைய முஸ்லிம்களைப் பற்றிய சட்டக்கோவை உடனடியாக கொழும்பிலுள்ள எல்லா பள்ளி வாசல்களிலும் விளம்பரப் படுத்தப்படல் வேண்டும் என்றும் அதனுடைய தமிழ், அரபு மொழி பெயர்ப்புகளும் விளம்பரத்தப்படுத்தப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டார். 1806 ஆம் ஆண்டில் 'முகமதியார்களைப் பற்றிய சிறப்புச் சட்டங்கள்' என்ற சட்டக்கோவையை கவர்னர் ஜொனஸ்றன் 'கவர்னரின் அரச மன்றத்தில்' சமர்ப்பித்தார். இச்சட்டக் கோவையை சமர்ப்பிக்கும் போது கவர்னர் ஜொனஸ்றன், கொழும்பு மாகாண முஸ்லிம்கள் தம்முடைய பழக்க வழக்கங்கள் இச்சட்டக்கோவையில் அடங்கியிருக்கின்றன' என்ற அங்கீகாரத்தை இது பெற்றிருக்கிறது என்றும் அதற்கு ஆதாரமாக இருபது முஸ்லிம் தலைவர்களின் கையொப்பங்களும் இதில் இருக்கிறது என்று ஓர் இணைப்புப் பத்திரத்தையும் இதனுடன் சேர்த்து சமர்ப்பித்தார். "முகம்மதியர்களின் இச்சட்டக்கோவை, ஒல்லாந்தர்களின் பட்டேவியா சட்டநூலின் 34 வது பிரிவின் தமிழ் மொழி பெயர்ப்பே கொழும்புடச்சுக்கம்பெனியினரால் நிர்வகிக்கப்பட்டது" என்று பேராசிரியர் நடராசா தமது, 'இலங்கைச் சட்டங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு' என்ற நூலில் கூறியிருக்கிறார். இச்சட்டக் கோவை இரண்டு பிரிவுகளைக் கொண்டது. முதல் 63 அத்தியாயங்களைக் கொண்ட உரிமைப்பத்திரங்கள் என்ற முதலாம் பிரிவு இறப்பு சம்பந்தமான மரபுரிமைச் சட்டங்களைக் கொண்ட தாயிருந்தது. இரண்டாவது பிரிவு திருமணம், மணமுறிவு போன்ற சட்டங்களை அடக்கியதாயிருந்தது.

1952 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 5 வது சட்டத்தின் 10வது உட்பிரிவின் படி முஸ்லிம்களைப் பற்றிய இச்சட்டம் முழு இலங்கையிலும் நிர்வகிக்கப்பட வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிய ஆங்கிலேயர், 'உள்ளூர் வாசிகளின் சமயங்களிலுள்ள, பழக்கங்கள் மரபுரிமை வழக்கங்கள், திருமண முறைகள் போன்றவற்றை அனுஷ்டித்தே நீதிபரிபாலிக்கப்படும்' என்ற தமது பிரகடனப்படி கண்டி உயர் நீதி மன்றம் முஸ்லிம் சட்டப்படியே கண்டி முஸ்லிம்களை நீதிபரிபாலனஞ் செய்தது, என்ற உண்மையை 1851 ஆம் ஆண்டில் கண்டி நீதிமன்றத்தில் 'சாய்பு தம்பிக்கும் அஹமதுக்குமிடையில்' நடந்த வழக்கின் தீர்ப்பில் மூலம் நாம் அறிய முடிகிறது. பால்க்கினுடைய இந்தச் சட்டக்கோவைக்கும், முஸ்லிம்களின் வேறு சட்ட நூல்களிலிருக்கும் கோட்பாடுகளுக்குமிடையில் வேறுபாடு இருந்தால், இச்சட்டக்கோவையையே நீதிமன்றங்கள் பின்பற்றின என்பதற்கு, 1902ஆம் ஆண்டில் 'பந்திராலவுக்கும் நாச்சியாவுக்கு' மிடையில் நடந்த வழக்கின் மூலம் அறிகிறோம். இச்சட்டக்கோவையிலுள்ள சட்டங்களுக்கு ஏற்ப இஸ்லாமிய சட்டம் இருந்தால் மட்டும் தான் இஸ்லாமிய சட்டம் அமுலாக்கப்பட்டது. இலங்கை முஸ்லிம்களின் பழக்கவழக்கங்களும் நீதிபரிபாலனத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. முஸ்லிம்களின் பழக்கவழக்கங்கள் இச்சட்டக் கோவையில் கூறப்படாமலிருந்தால், அவைகளை விளக்குவதற்கு இஸ்லாமிய சட்டநூல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயோகிக்கப்பட்டன. இதற்கு ஆதாரமாக 1916 ஆம் ஆண்டில் 'அப்துல் ரஹ்மானுக்கும், உசன் உம்மாவுக்கு'மிடையில் நடந்த வழக்கை நாம் உதாரணமாக எடுக்கலாம்.

மரபுரிமை வழக்குகளில் தீர்ப்பு வழங்குவதற்கு முகம்மதிய சட்டக்கோவையில் ஆதாரம் கிடைக்காத விடத்து, சட்டத்தரணிகளும், நீதிபதிகளும் இதுசம்பந்தமாக இஸ்லாமிய சட்டவல்லுநர்களின் உதவியை நாடினார்கள். இவ்வழக்கத்தில் குறைபாடுகளிருந்த படியால், 1912 ஆம் ஆண்டில் இலங்கை உயர்நீதி மன்றம் இதைக் கைவிட்டு இஸ்லாமிய சட்ட நூல்களில் கூறப்பட்டவைகளையே ஆதாரமாகக் கொள்வதென்று முடிவெடுத்தது. 1912 ஆம் ஆண்டில் லெப்பை என்பவருக்கும் தமீம் என்பவருக்குமிடையில் நடந்த வழக்கில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. 1919 ஆம் ஆண்டில் எம். றி. அக்பர் (பின்னர் உயர் நீதியரசர் அக்பர்) அவர்கள் இம்முகம்மதிய சட்டக்கோவையிலுள்ள குறைபாடுகளை விளக்கும் போது 'இது முஸ்லிம் சமுகத்திற்கு ஏற்பட்ட ஒரு பேரிடர்' என்றே கூறுகிறார். மரபுரிமை வழக்குகளில் தீர்ப்பு வழங்குவதற்கு முகம்மதிய சட்டக்கோவையிலிருந்து ஆதாரம் பெற முடியாத விடத்து ரோமன்–டச் சட்டத்தையே பின்பற்றுவது நல்லது என்ற கருத்து பலரால், முன் வைக்கப்பட்டபோது, 1876 ஆம் ஆண்டில் வெளியாக்கப்பட்ட 'திருமண உரிமைகள், மரபுரிச்சட்டத்தை' மேற்கோள்காட்டி, முஸ்லிம் சட்டத்தைப் பாதுகாத்தனர் முஸ்லிம் வழக்கறிஞர்கள்.

முஸ்லிம் சட்டப்படி முஸ்லிம்களிடையே நடக்கும் திருமணங்கள் பதிவாக்கப்படுவதற்கு சில முக்கிய விதிகள் இருத்தல் அவசியம். திருமணம் செய்ய விருப்பம் தெரிவித்தல், அதை ஏற்றுக்கொள்ளல், பெண்ணுக்கு ஆண் கொடுக்க வேண்டிய மஹர்கூறப்படுதல், இரண்டு சாட்சிகள், ஆகியவை இருந்தால் திருமணம், முஸ்லிம் சட்டப்படி பதிவாக்கப்படலாம். முகம்மதிய சட்டக்கோவையின் 73 வது பிரிவின் படி திருமண வைபவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துவதற்கு ஒருலெப்பையும், இருகட்சிகளுக்குமிடையில் ஏற்படும் ஒப்பந்தம், முக்கியமாக மஹரும் பதிவு செய்வதற்கு ஒருவரும் இருத்தல் அவசியம். அரசாங்கம் உண்மையில் முஸ்லிம்கள் கடைப்பிடித்து வந்த 'கடுத்தம்' என்ற முறையை இதன் மூலம் அங்கீகரித்தது. மலையாள மொழியின் 'கடிதம்' என்ற சொல்லின் திரிபுதான் 'கடுத்தம்' என்பது. முஸ்லிம் திருமணங்களைப் பதிவு செய்த முஸ்லிம் லெப்பைகள், திருமணம், மஹர், சீதனம், மணமுறிவு போன்றவைகளைப் பதிவு செய்வதற்கு ஒரு பதிவேட்டை வைத்திருந்தார்கள். இதைத்தான் கடுத்தம் என்று கூறினார்கள். இப்பழக்கம் பழங்காலம் தொட்டே பழக்கத்திலிருந்து வந்திருக்கிறது. இதை அரபுத்தமிழிலேயே எழுதி வந்தார்கள். 'எந்தவொரு ஒப்பந்தமும் எழுத்தில் இருக்கவேண்டும்' என்ற இஸ்லாமிய முறையையே இவர்கள் கடைப்பிடித்து வந்தார்கள்.

பிரித்தானிய ஆட்சியின் ஆரம்பகாலத்தில் கடுத்தம் என்ற இப்பதிவேட்டிலிருந்த தகவல்கள், அரசாங்க அதிபரினால் வைக்கப்பட்டிருந்த ஒரு பொதுப்பதிவேட்டில் பதியப்பட்டன. பிறகு இப்பழக்கம் கைவிடப்பட்டபோது, லெப்பைமார்கள் சிலரின் தூண்டுதலின் பேரில் அவர்களுக்குச் சாதகமாக, இப்பதிவேட்டில் சில தில்லுமுல்லுகளைச் செய்ய ஆரம்பித்தார்கள். 'முஸ்லிம்கள் தங்கள் திருமணங்களைப் பதிவு செய்யும் இச்சம்பிரதாய பழக்கத்தில் குறைபாடுகளிருந்தாலும் அவர்களிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படாமலிருக்க இப்பழக்கம் பெரிதும் உதவியது' என்று வடமத்திய மாகாண அரசாங்க அதிபர் 1880ஆம் ஆண்டில் தன்னுடைய அறிக்கையில் கூறியிருக்கிறார்.

1882 ஆம் ஆண்டின் அரசாங்க பிரகடனப்படி திருமணங்களெல்லாம் அரசாங்க பதிவேட்டில் பதியப்பட வேண்டும் என்ற சட்டத்தை முஸ்லிம்களும் ஏனைய சமூகத்தவரும் கடைபிடிக்கவில்லை. அரசாங்கம் 1847ஆம் ஆண்டில் இதை வாபஸ் செய்தது. இதன் பிறகு முஸ்லிம்களிடையே ஏற்பட்ட திருமண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குகளில் கடுத்தம் என்ற இப்பதிவேடு சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது 'ராபியா உம்மாவுக்கும் சாய்புக்கு' மிடையில் 1914 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வழக்கின் மூலம் நாம் அறிகிறோம்.

1883 ஆம் ஆண்டில் றெஜிட்ரார் ஜெனரலின் ஆலோசனைப்படி எல்லாத்திருமணங்களும் அரசாங்கத்தில் பதியப்பட வேண்டும் என்ற சட்டம் அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டது. முஸ்லிம்களின் ஏகோபித்த எதிர்ப்பின் காரணமாக 'முகம்மதிய திருமண பதிவுச் சட்டம்' 1886 ஆம் ஆண்டில் அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லை. இதற்கு மாறாக சில திருத்தங்களுடன் இச்சட்டம் 1888ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்டது. முஸ்லிம் திருமணங்கள் அரசாங்கத்தில் பதிவு செய்தல் கட்டாயமில்லையென்றும், இப்பதிவேடு மட்டும்தான் சாட்சியமாகக் கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் அகற்றப்பட்டது. இலங்கையின் ஆங்கிலேயப் பிரஜைகளாக இருக்கும் முகம்மதிய மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரம்தான் இது பொருந்தும் என்றும் இப்பிரகடனத்தில் கூறப்பட்டது. லெப்பைமார்கள் திருமணப் பதிவாளர்களாக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் அரசாங்கப்பதிவாளர் நாயகத்தின் மேற்பார்வையில் இயங்கவேண்டும் என்றிருந்தது. ஆனால் நடைமுறையில் அரசாங்கப் பதிவாளரின் தலையீடு எதுவுமில்லாமல் லெப்பைமார்கள் செயல்பட்டார்கள் என்றாலும் கடுத்தம் என்ற முறையைக் கைவிடவில்லை. 1910ஆம் ஆண்டில் இச்சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதாவது, திருமணமாகாத ஓர் ஆணும் பெண்ணும் தகாத உடலுறவு கொண்டால் அது தண்டிக்கப்பட வேண்டியது என்பதே. மேலும் இச்சட்டத்திலுள்ள எந்த விதிமுறைகளையும் பாவித்து சட்டப்படி செல்லுபடியாகாத திருமணங்களை செல்லுபடியாக்க முயல்வது தவிர்க்கப்பட்டுள்ளது என்றும் இத்திருத்தம் கூறியது மேலும் இச்சட்டத்தில் 1915ஆம் ஆண்டிலும் 1922ஆம் ஆண்டிலும் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1808 ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்ட முகம்மதிய சட்டக்கோவையிலுள்ள குறைபாடுகள் ஒரு வழக்கின் தீர்ப்பில் வெளிப்படுத்தப்பட்டன. 1871ஆம் ஆண்டில் காலியில் கடமையாற்றிய கில்மன் என்ற நீதிபதி ராபியா உம்மாவுக்கும் சாய்புக்குமிடையில் மண முறிவு வழக்கில் தீர்ப்பு வழங்கும்போது 'முகம்மதிய சட்டக்கோவை அல்லாத பொதுச்சட்டக்கோவையின் மூலம் மணமுறிவு கோறலாம்' என்று தீர்ப்பு வழங்கினார். அன்றைய சட்டசபையில் சிறுபான்மை இனத்தவரின் பிரதிநிதியாகவிருந்த முத்துகுமாரசாமி இலங்கை முஸ்லிம்களின் வேண்டுகோளுக் கிணங்கி ஒரு பிரேரணையைச் சட்டசபையில் சமர்ப்பித்தார். இதற்குத் தூண்டுகோலாக இருந்தவர்கள் அப்துல் றஹ்மானும், கல்வி அறிவு படைத்தவர்களும், ஆலிம்களும், களுத்துரை நிலச் சொந்தக்காரர்களும் என்று முத்துக்குமாரசாமி சட்டசபையில் கூறினார். இவர் அரசாங்கத்தின் முன் வைத்த பிரேரணை என்னவென்றால் 'பால்கினால் பிரகடனப்படுத்தப்பட்ட முஸ்லிம் சட்டக்கோவையில் பெரும் குறைபாடுகள் இருந்தபடியால் அரசாங்க சட்டவல்லுனர்களைக் கொண்ட ஒரு கமிட்டி முஸ்லிம்களுடைய திருமணம், மணமுறிவு,மரபுரிமை போன்றவைகளை மறுபரிசீலனை செய்து முழுமையான ஒரு முஸ்லிம் சட்டக்கோவையை அமைக்க வேண்டும்' என்பதே. பதிவாளர் நாயகத்தின் மேற்பார்வையில் கடமையாற்ற லெப்பைமார்கள் பதிவாளர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. அரசாங்கம் சமய விவகாரங்களில் தலையிடுகிறது என்ற குற்றச்சாட்டு தம்மேல் சுமத்தப்படும் என்று ஒரு பொய்க்காரணத்தைக் கூறி அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை. 1872ஆம் ஆண்டில் எம்.சி. அப்துல் றஹ்மான் தாமாகவே, 'திருத்தப்பட்ட ஒரு புதிய முஸ்லிம் சட்டக்கோவை'யைத் தயாரித்து முஸ்லிம்களுடைய கருத்துக்களைப் பெறும்படி பிரதம சட்டத்தரணி மூலம் எல்லா அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைத்தார். 1875 ஆம் ஆண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் மாகாண அரசாங்க அதிபர் சர் சார்ல்ஸ் லயார்டின் உதவியுடன் ஒரு புதிய 'முகம்மதிய சட்டக்கோவை' தயாரிக்கப்பட்டு பொது மக்களின் கவனத்திற்காக விளம்பரப்படுத்தப்பட்டது. இது 1806ஆம் ஆண்டில் வெளியாக்கப்பட்ட முஸ்லிம் சட்டக்கோவையில் அடங்கியிருந்த திருமணம், மணமுறிவு, மரபுரிமை போன்றவைகளின் குறைபாடுகளை நீக்கி அவைகளின் திருத்தமே இப்புதிய சட்டக்கோவை. ஆனால் முஸ்லிம்களுடைய கோரிக்கைகளை உதாசீனம் செய்து இதைச்சட்டமாக்கவில்லை அரசாங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'முகம்மதிய சட்டம்', இலங்கையில் அமுலாக்கப்பட்ட வரலாறு

இலங்கை முஸ்லிம் சட்ட வரலாற்றில் 1925ஆம் ஆண்டு ஒரு முக்கிய மைல்கல்லாக அமைகிறது. மிஸ்கின் உம்மாவுக்கு எதிராக அரசாங்கம் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பு முஸ்லிம்கள் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இத்தீர்ப்பு முஸ்லிம் சமூகத்தையே அவமதித்த ஒரு செயலாகும் என்று பலரும் கருதினர். இஸ்லாமிய ஷரியத் முறையைப் பின்பற்றி வாழமுடியாத ஒரு நிலைக்கு முஸ்லிம்கள் தள்ளப்பட்டனர். இஸ்லாமிய முறைப்படி திருமணமாகிய முஸ்லிம் பெண்கள் அரசாங்கத்தினால் கைது செய்யப்படும் ஒரு சூழ்நிலை உருவாகியது.

உயர் குடும்பத்தைச் சேர்ந்த மிஸ்கின் உம்மா என்ற ஒரு முஸ்லிம் பெண்மணி எல்லோரையும் போல் இல்லாமிய முறைப்படி ஒரு கணவனுக்குத் திருமணமாகி வாழ்க்கைப் பட்டிருந்தபோது அவருடைய சொத்துக்களில் பெரும் பாகத்தைச் செலவு செய்த கணவன் தலைமறைவாகிவிட்டார். பல வருடங்கள் காத்திருந்தும் கணவன் வராமற் போகவே அவர் இறந்து விட்டார் என்ற முடிவுக்கு வந்த ஊரார் அச்சமயத்தில் அவ்வூருக்கு தென்னிந்தியாவிலிருந்து வந்திருந்த மார்க்க அறிவு ஞானம் பெற்ற ஒரு ஷேய்க்கின் ஆலோசனைப்படி அவரை இறந்துபோன கணவனின் வொலியாக (பிரதிநிதியாக) நியமித்து அவர் மூலம் அப்பெண்ணுக்கு தலாக் (விவாகரத்து) வழங்கினார்கள். (இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அரசங்கம் ஒரு காதி மூலம் விவாகரத்து வழங்கலாம்) காதி ஒருவர் இல்லாத காரணத்தினால் ஊர் ஜமாஅத் (ஊர் முஸ்லிம் சமூகம்) இம்முடிவை எடுத்ததில் தவறில்லை. காதி பதவியை பிரித்தானிய அரசாங்கம் ஏற்கனவே ஒழித்திருந்தது. முகம்மதிய சட்டக்கோவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாத பொதுச் சட்டக்கோவையின் மூலம் விவாகரத்து கோரலாம் என்ற தீர்ப்பை கில்மன் என்ற நீதிபதி காலியில் நடந்த வழக்கொன்றில் தீர்ப்பு வழங்கினார் என்பதை நாம் ஏலவே கூறியிருக்கிறோம். '1799 ஆம் ஆண்டில் இலங்கைக்கரையோரப் பகுதிகளின் ஆங்கில தேசாதிபதியாகக் கடமையாற்றிய கவர்னர் நோத் இலங்கை முஸ்லிம்களின் சமய சம்பந்தமான வழக்குகளை விசாரணை செய்து ஷரியத் முறைப்படி தீர்ப்பு வழங்குவதற்கு ஷாபி மத்ஹப்பைப் பின்பற்றி வந்த எகிப்து தென்னிந்தியா போன்ற நாடுகளிலிருந்து ஒரு முப்தியையும் பல காதிகளையும் தருவிக்க வேண்டும் என்று அரசாங்கத்திற்கு சிபார்சு செய்தார்' என்று பேராசிரியர் நடராசா, தன்னுடைய 'இலங்கை சட்டவரலாறு' என்ற நூலில் கூறுகிறார். கவர்னர் நோத்தின் மேலுரையை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை. இலங்கை முஸ்லிம் சட்டக்கோவையில் இக்குறைபாடு இருந்ததை இவ்வழக்கு நடக்கும்வரையில் யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

விவாகரத்து வழங்கப்பட்ட மிஸ்கின் உம்மா, உரியகாலத்திற்கு 'இத்தா' இருந்துவிட்டுத்திரும்பவும் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டார். இதுகாலவரையும் தலை மறைவாகவிருந்த கணவன் திடீரென்று தோன்றி கணவன் உயிரோடிருக்க நடந்த அத்திருமணம் செல்லுபடியாகாது எனறு போலிசில் புகார் கொடுத்தார். உடனே போலிசும் 'இருமனை வாழ்வு' ஏன்ற குற்றத்திற்காக மிஸ்கின் உம்மாவைக் கைது செய்தது. போலிசின் இச்செய்கை இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பரவி ஒரு நெருக்கடியான சூழ்நிலையை உருவாக்கியது.

மாவட்ட நீதி மன்றத்தில் இதை விசாரித்த மாவட்ட நீதிபதி இலங்கைச் சட்டத்தின் கீழ் 'மிஸ்கின் உம்மா செய்தது குற்றம்' என்று தீர்ப்பு வழங்கினார். உடனே மிஸ்கின் உம்மா உயர் நீதி மன்றத்திற்கு மனுச்செய்தார். அப்பொழுது அரசாங்க சட்டத்தரணி நாயகமாகக் கடமையாற்றிய எம்.றி. அக்பர் இது பொதுச்சட்டத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் குற்றமாகக் கணிக்கப்பட்டாலும் ஒரு காதி நீதிபதி இல்லாதபட்சத்தில் ஒரு ஜமாஅத்இம்முடிவை எடுத்ததில் தவறில்லை என்றும் இஸ்லாமிய சட்டப்படி ஒரு பெண்மணி குற்றவாளியல்ல என்று உயர் நீதி மன்றத்திற்கு ஆலோசனை வழங்கினார். மிஸ்கின் உம்மாவின் வழக்கில் மாத்திரம்தான் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. என்றாலும் இது பொதுவாகவே ஒரு குற்றமாகவே கணிக்கப்பட்டது. எனவே காதிநீதிபதி இல்லாத காரணத்தினால் முஸ்லிம் பெண்கள் பல இன்னல்களை அனுபவித்தார்கள். இந்நிலையைச் சீர் செய்வதற்காக அன்றைய முஸ்லிம் தலைவர்கள் அரசாங்கத்திடம் முறையிட்டார்கள்.

1926ஆம் ஆண்டில் என்.எச்.எம். அப்துல்காதர் முஸ்லிம் திருமண சட்டத்தை மறுபரிசீலனை செய்து சட்டசபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஒரு விசேஷ குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என்ற ஒரு பிரேரணையை சட்டசபையில் சமர்ப்பித்தார். இக்குழுவில் பின்வருவோர் அங்கம் வகித்தனர். எம். றி. அக்பர் தலைவராகவும், என். எச். எம். அப்துல்காதர், கே. பாலசிங்கம், டபிள்யு. துரைச்சாமி, றி.பி.ஜாயா, சி.டபிள்யு. டபிள்யு கன்னங்கர, எச். எம். மாக்கான் மாக்கார், மொலமுரே, தம்பிமுத்து ஆகியவர்கள் அங்கத்தவர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள். முஸ்லிம்களைப் பாதிக்கும் நன்கொடைகள், மரபுரிமை, 'பீடை கமிஸ்ஸா' ஆகியவைகளைப் பற்றியும் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இக்குழுவுக்குக் கட்டளையிடப்பட்டது. இக்குழு பொது மக்கள் பலரின் கருத்துக்களைக் கேட்ட பிறகு 1928ஆம் ஆண்டில் இரண்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்தது.

இக்குழுவின் முக்கிய ஆலோசனைகளில் ஒன்றுதான் முஸ்லிம்களின் திருமணம் சம்பந்தமான வழக்குகளை விசாரிப்பதற்கு காதி நீதிபதிகள் நியமிக்கப்படல் வேண்டும் என்பது. இக்குழு முஸ்லிம் சட்டத்திலுள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டியது. பிரித்தானிய ஆட்சியில் இஸ்லாமிய மண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறிவு சட்டத்தின் முக்கிய குறைபாடுகளுக்குக் காரணம். இவ்வாட்சி காதிநீதிபதிகளின் பதவியையொழித்ததே. கணவன் மனைவிக்கிடையில் ஏற்படும் தகராறை சமரச முயற்சியில் தீர்த்து வைப்பததுதான் இவ்வுத்தியோகத்தரின் முக்கிய கடமை.

ஒவ்வொரு முஸ்லிம் கிராமத்துக்கும் ஒரு காதி நீதிபதி நியமிக்கப்படுதல் வேண்டும். கணவன்மார்கள் அடிக்கடி விவாகரத்துக் கோருவதைத் தவிர்ப்பதற்கு இவ் வுத்தியோகஸ்தர்களின் செல்வாக்கு பயன்படும்.

மனைவிமார்கள் தங்கள் கணவன்மார்களிடமிருந்து விவகாரத்துக் கோருவதைத் தடுப்பதற்கும் இக்காதிகளின் செல்வாக்குப் பயன்படலாம். கணவனின் தகாத போக்கினால் பாதிக்கப்பட்ட ஒரு மனைவி அவனிடமிருந்து விலகி வாழ்வதற்கு ஒரு நீதிமன்றத்தில் விவகாரத்துக் கோரி வழக்கு தாக்கல் செய்யலாம். பெரும்பாலான வழக்குகள் நீதிமன்றத்திற்குப் போவதற்கு முன்னமேய இவைகளின் காரணத்தையறிந்து கணவன்-மனைவிக்கிடையிலுள்ள வேறுபாடுகளை அகற்றி, திரும்பவும் அவர்கள் தாம்பத்ய வாழ்க்கையை நடத்துவதற்கு இக்காதி - நீதிபதிகளின் செல்வாக்கு பயன்படலாம். ஒரு மனைவி காப்புச் செலவு தேவையில்லையென்று விவகாரத்து கோரி ஒரு நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கும் போது கணவன் அதற்கு உடனே உடன்படுகிறான். இன்றைய நடைமுறையில் இருக்கும் பழக்கம் இது தான். இதனால் விவாகரத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு பெண் தன் குழந்தைகளைப் பராமரிக்க முடியாமல் வறுமையில் வாடுகிறாள். பிள்ளைகளும் ஆதரவற்றவர்களாக வளர்கின்றன. விவாகரத்துக்கோரும். ஒரு கணவன் மூன்று முறை அறிவித்தல் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு அறிவித்தலின் பின்னும் ஒரு கால இடைவெளி இருக்க வேண்டும். ஒரு காதி நீதிபதி இக்கால இடைவெளியைப் பயன்படுத்தி இவ்விருசாராரின் குடும்பங்களின் உறவினர்களை அணுகி அவர்களின் உதவியோடு பாதிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன்-மனைவியரிடத்திலிருந்த மனவேறுபாடுகளுக்குரிய காரணங்களை அகற்றி அவர்களிடையே ஒரு சுமூகமான உறவை ஏற்படுத்தி விவகாரத்தை அவர் தவிர்க்கலாம். இஸ்லாமிய சட்டமும் இதையே கூறுகிறது. விவகாரத்தைத் தடுக்க முடியாத விடத்து கணவன் பாதிக்கப்பட்ட தன் மனைவிக்கும் அவளது குழந்தைகளுக்கும் மாதா மாதம் காப்புப் பணத்தைச் செலுத்த வேண்டும், என்று உத்தரவளிப்பதற்கு காதிக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இக்காப்புப் பணம் கொடுப்பதில் தாமதம் ஏற்படும் போது உள்ளூர் குற்றவியல் நீதிபதிக்கு விண்ணப்பித்து போலிசின் மூலம் பாதிக்கப்பட்ட பெண்ணுக்குக் காப்புப் பணம் பெற்றுக் கொடுப்பதற்கும் இக்காதிக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். முஸ்லிம் பெண்கள் போலிஸ் நிலையங்களுக்குச் செல்வதைத் தடுக்கலாம். இதன் மூலம் விவகாரத்து அடிக்கடி ஏற்படுவதையும் தடுக்கலாம்.

முஸ்லிம்களின் விவகாரத்து வழக்குகளை விசாரணை செய்வதற்குக் காதி ஒருவர் நியமிக்கப்படாமையினால் ஒரு தவறான வழக்கம் முஸ்லிம் சட்டத்தினுள் புகுந்துள்ளது. உயர் நீதிமன்ற வழக்குகளின் தீர்ப்புக்களடங்கிய 'புதிய சட்ட அறிக்கைகளின்' படி ஒரு முஸ்லிம் மனைவி தன் விருப்பப் படி தன்னால் நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியின் மூலம் தன் கணவனுக்கு எதிராக விகாரத்துக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யலாம். இதன் காரணமாக ஒருமோசமான நிலைமை உருவாகியது. இந்நிலைமை இன்னும் மோசமாவதைத் தடுப்பதற்காக உயர் நீதிமன்றம், உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட விவகாரத்துத் தீர்ப்புக்கள் செல்லுபடியாகாது என்று முடிவெடுத்தது. இனிமேல் உயர்நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் விவாகரத்து வழக்குகள் முதலில் மாவட்ட நீதி மன்றங்களில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது. இந்தத் தீர்ப்பு, நிலைமையை இன்னும் மோசமாக்கியது. மாவட்ட நீதிமன்றங்களில் விசாரனை செய்யப்படும் வழக்குகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கை அதிகமாதலால், பெரும்பாலும் வழக்குகள் தவணைகளுக்குப் பிற்போடப்படும். இதனால் கணவன்களினால் கைவிடப்பட்ட மனைவிகள் இம்மாவட்ட நீதிமன்றங்களில் வழக்கு தொடர்வதற்கு, முத்திரை செலவிற்கும், சட்டத் தரணிகளின் கட்டணங்களுக்கு போதிய பணவசதியில்லாமையால் அன்றாட வாழ்க்கைக்கே திண்டாடினர். மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட பெரும்பான்மையான வழக்குகளில் கணவனும் மனைவியும் திரும்பவும் சேர்ந்து வாழ்வதென ஏற்றுக் கொண்டனர். பெரும் பணச்செலவில் தொடரப்பட்ட இவ்விகாரத்து சுமூகமாக தீர்த்து வைப்பதற்கு ஓர் உத்தியோகஸ்தர் தேவை. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதுதான் காதிகளின் முக்கிய கடமை.

'காதிகள் நியமிக்கப்படல் வேண்டும்' என்ற இக்கமிட்டியின் சிபாரிசை அரசாங்கம் நடைமுறைபடுத்தாவிட்டால், முஸ்லிம் திருமணம், மணமுறிவு சட்டங்களினால் எவ்வித நன்மையும் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்படப்போவதில்லை. இதனால் முஸ்லிம்களின் குடும்ப வாழ்க்கையில் ஒழுக்கமின்மையேற்படும்' என்று இக்குழு தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டது.

மேலும் இக்குழு திருமணங்களும், விவாரத்துக்களும் கட்டாயமாகப் பதியப்பட வேண்டும் என்றும் சிபார்சு செய்தது. 1886 ஆம் ஆண்டில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட முஸ்லிம் திருமண சட்டத்தின் பிரகாரம் முஸ்லிம் திருமணங்கள் பதியப்பட வேண்டியது அவசியமில்லை என்ற சட்டத்தின் காரணமாக முஸ்லிம் சமூதாயத்தில் பல ஊழல்கள் தோன்றின. முஸ்லிம் சட்டப்படி முஸ்லிம் திருமணங்களோ, விவாகரத்துக்களோ பதியப்படவில்லை என்ற ஒரே காரரணத்திற்காக அவைகள் செல்லுபடியாகாது என்று விவாதிப்பது முஸ்லிம் சமூகத்திற்கு இழைக்கும் பெரும் அநீதியாகும். இவ்வாறு இக்குழு அரசாங்கத்திற்கு சமர்ப்பித்த தனது அறிக்கையில் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலீபா, உமர் இப்னல் கத்தாப் (றலி), அபூமூசா என்பவரை மஷாரா என்ற ஊருக்குக் காதி நீதிபதியாக நியமித்த போது அவருக்குக் கலீபா கூறிய அறிவுரைகளை நாம் இங்கே நினைவு கூறுதலில் தவறொன்றுமில்லை. “திருக்குர்ஆனில் கூறப்பட்டவையை நடைமுறைப் படுத்துவதே ஒரு காதியின் முக்கிய கடமையாக இருக்க வேண்டும். இதுகாலவரையில் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறை பழக்கத்தையும் அவர் கருத்திற் கொள்ளலாம். இவைகளைக் கருத்திற் கொண்டுதான் நீர் உம்மிடம் கொண்டு வரப்படும் வழக்குகளை விசாரணை செய்ய வேண்டும். செல்லுபடியாகாத ஒரு வழக்கினை விசாரிப்பதில் பயனில்லை. எல்லா முஸ்லிம்களையும் நீர் சமமாகவே பாவிக்க வேண்டும். ஒருவரை உயர்த்தியும் இன்னொருவரைத் தாழ்த்தியும் நீர் வழக்குகளை விசாரிக்கக் கூடாது. நீர் விசாரிக்கும் முறையில் பணக்காரன் தனக்குச் சாதகமாகவும், ஏழை தனக்குப் பாதகமாகவும் தீர்ப்பு வழங்கப்படும் என்று எண்ணுவதற்கு நீர் இடமளிக்ககூடாது. வழக்குத்தாக்கல் செய்பவர் தகுந்த ஆதாரங்களைக் காட்ட வேண்டிய அதே நேரத்தில் எதிர்வழக்காடி இவ்வாதாரங்களைத் தான் ஏற்றுக்கொள்வதாகச் சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும். இஸ்லாமிய சட்டத்தை மீறாத பட்சத்தில் இரு சாராரிடத்திலும் ஒரு சுமுகமான முடிவை நீர் ஏற்படுத்தலாம். நீர் தீர்ப்பு வழங்கிய பிறகு இவ்வழக்கு சம்பந்தமாக சில உண்மைகளை நீர் அறிய வந்து முன்னைய தீர்ப்புக்கு மாறாக ஒரு புதிய தீர்ப்பை வழங்கவேண்டிய நிலையேற்பட்டால் நீர் முதலில் வழங்கிய தீர்ப்பு இதற்குத் தடையாக இருக்கக் கூடாது. ஏனென்றால் நீதி வழங்கப்படுதலில் தடையிருக்கக் கூடாது”.

“அநீதியான தீர்ப்பை வழங்குவதை விட உம்முடைய தீர்ப்பை மாற்றிக் கொண்டு நீதி வழங்குவது மேல், என்பதை நீர் உணர வேண்டும். உம்முடைய தீர்ப்பை வழங்குமிடத்து சட்டத்திலோ பழக்க வழக்கங்களிலோ நீர் ஆதாரம் காட்ட முடியாதவிடத்து, உம்முடைய புத்தியை நீர் பயன்படுத்த வேண்டும். நீர் தீர்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதற்கு முன் பல சம்பவங்களை ஒப்பிட்டுப்பார்த்து ஆண்டவனுக்குத் திருப்தியளிக்கும் ஒரு தீர்ப்பை நீர் வழங்க வேண்டும். இத்தீர்ப்பு உம்முடைய எண்ணத்தில் ஒரு நியாயமானதும், நீதியானதுமான தீர்ப்பாக இருக்க வேண்டும். ஒருவன் ஒரு வழக்கு தாக்கல் செய்தவிடத்து, எதிர்வழக்காடி சமூகமளிக்கவில்லையென்றால் நீர் அவருக்கு நீதிமன்றத்தில் ஆஜாராகுவதற்குத் தவணை வழங்கலாம். ஒரு வழக்காடி தகுந்த ஆதாரங்களை சமர்ப்பிக்காத விடத்து அவருக்கெதிராக நீர் தீர்ப்பு வழங்கலாம். தண்டனை வழங்கப்பட்டவர்களையும் பொய் சாட்சி கூறியவர்களையும் ரத்த பாசத்தினால் சாதகமாக சாட்சி கூறுவர் என்று கருதப்படுவர்களையும் தவிர்த்து மற்ற எல்லா முஸ்லிம்களினதும் சாட்சியங்களை நீர் ஏற்றுக்கொள்ளலாம். நீர் பகிரங்கமாக எப்படி நடந்தாலும், உம்முடைய அந்தரங்க நடவடிக்கைகளைத்தான் ஆண்டவன் கண்காணித்து வருவான். நீதிமன்றத்தில் நீர் விசாரணை செய்யும் போது களைப்பையோ, சோர்வையோ, கட்சிக்காரர்களின் விவாதங்கள் உம்மைத் தொந்தரவு செய்கிறது என்ற நிலையையோ நீர் காட்டிக் கொள்ளக்கூடாது. நீர் அல்லாவின் பரிசைப் பெறுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அவன் உமக்கு அளிக்கின்றான். ஒருவன் அல்லாவிடம் வைத்த நம்பிக்கை உறுதியானதாக இருக்குமிடத்து அல்லாவும் அவனிடம் உறவு கொள்கின்றான். எவன் அந்தரங்கத்தில் கெட்டவனாக இருந்து, பகிரங்கத்தில் நல்லவனாக நடிக்கப் பாசாங்கு செய்கிறானோ, அவனை அல்லா வெட்கப்படும்படி செய்வான்."

இவ்வாறு கலீபா உமர் கந்தாப் (ரலி) அவர்கள் காதிகளை நியமிக்கும் போது அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்கள் என்று தியாப்ஜி தன்னுடைய 'முகம்மதிய சட்டம்' என்ற நூலில் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் முஸ்லிம் விவாகம், விவாக-ரத்துச் சட்டம் தோன்றிய வரலாறு

முஸ்லிம் திருமணம், மண முறிவு ஆகியவைகளைப் பற்றிய 'அக்பர் குழுவின்' அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. 1888ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட முகம்மதிய சட்டக்கோவையை அரசாங்கம் வாபஸ் செய்தது. 1929ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 'திருமண - மண முறிவு பதிவு' சட்டக்கோவை அக்பர் குழுவின் அறிக்கையில் அடங்கிய மேலுரைகளைக் கொண்டதாக அமைந்தது. இச்சட்டத்தின் 'முன்வரைவு' அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டபோது அது தன் நோக்கங்களையும், காரணங்களையும் கொண்டதாக இருந்தது. இச்சட்டத்தின் கட்டளை விதிகளைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இன்னொரு குழு அரசாங்கத்தினால் அமர்த்தப்பட்டது. பீ.ஈ. பீரிஸ் என்பவரைத் தலைவராகக் கொண்ட இக்குழு றி.பி.ஜாயா, எம்.சி. அப்துல் காதர், எஸ்.எம். அபூபக்கர், மொகமட் மாக்கான் மாக்கார், ஏ. எச். எம். இஸ்மாயில், எம். ஐ. எம். ஹனீபா, பீ. டி. ரணதுங்க ஆகியவர்களை அடங்கியதாக இருந்தது. இக்குழுவின் அறிக்கை 1934 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டு, 1937 ஆம் ஆண்டில் திருமண-மண முறிவு, பதிவுச்சட்டம் அமுலாக்கப்பட்டது. இச்சட்டம், கமிட்டியின் அறிக்கையில் அடங்கியிருந்த எல்லா மேலுறைகளையும் கொண்ட சட்ட விதிகளைக் கொண்டிருந்தது.

இச்சட்டம் 'இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றும் பிரஜைகளுக்கு மாத்திரம் தான் பொருந்தும்' என்று விதித்தது. இதனால் இஸ்லாமிய மதத்தின் திருமணம், விவாகாரத்துச் சட்டங்கள் பாதுகாக்கப்பட்டன. இதனால் முஸ்லிம்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டன. முகம்மதிய என்ற பதத்திற்குப் பதிலாக 'முஸ்லிம்' என்ற பதம் உபயோகிக்கப்பட்டது. நீதி மன்றங்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் எந்த மத்ஹபைச் சேர்ந்தவர்களோ அந்த மத்ஹபின் திருமண விவகாரத்துச் சட்டங்களை ஏற்றுக் கொண்டன. இலங்கை அரசாங்கம், முஸ்லிம்களின் பழக்கவழக்கங்களைத் தவிர்த்து, இஸ்லாமிய சட்ட நூல்களில் கூறப்பட்ட இஸ்லாமிய சட்டங்களை அமுலுக்கு கொண்டு வந்தது, இதுவே முதல் கடமையாகும்.

1916 ஆம் ஆண்டில் அப்தல் ரஹ்மானுக்கும், உசன் உம்மாவுக்குமிடையில் நடந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய சினெய்டர் என்ற நீதிபதி, தீர்ப்பு வழங்கும் போது அமீர் அலி, தியாப்ஜி, மின்ஹாஜ் போன்ற சட்ட நிபுணர்கள் எழுதிய சட்ட நூல்களை ஆதாரமாகக் காட்டியதோடு, இஸ்லாமிய சட்ட நூல்கள் கூறும் இஸ்லாமிய சட்டங்கள் இலங்கை முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களுக்கேற்பதாக இருந்தால் அவைகளை மேற்கொள்ளலாம் என்றும், இவை முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களுக்கு முரணாக இருந்தால் பழக்க வழக்கங்களையே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கினார். சட்டத்தரணிகள், முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களையே மேற்கோள் காட்டுவதற்கு இவ்வழக்கத்தின் தீர்ப்பு ஆதாரமாயமைந்தது. இம்முறையை மாற்றியது, 1934ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட சட்டம், 1937ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட காதி நீதிபதிகள் சபை ஷாபி மதிஹபின் மூலசட்ட நூல்களை எழுதிய மின்ஹாஜ், கல்யூபி, பஜுரி, இயானா போன்றவர்களையே பெரும்பாலும் ஆதாரமாகக் கொண்டது. மின்ஹாஜ் எழுதிய சட்ட நூல் மாத்திரம் தான் ஆங்கில மொழிபெயர்ப்பில் இருந்த காரணத்தினால் இந்நூலையே நீதிமன்றங்களில் வழக்காடிய சட்டத்தரணிகள் மேற்கோள்காட்டினர். எனவே காதி நீதி சபை நிறுவப்பட்ட பிறகு ஷாபி மத்ஹபின் மூலசட்ட நூல்களில் கூறப்பட்ட சட்டவிதிகளே நடைமுறைப்படுத்தப்பட்டன. இச்சட்டத்தின் பிரகாரம் இஸ்லாமிய அறிவு படைத்த, சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்ற பண்புள்ள ஒரு முஸ்லிம் ஆணைக் காதியாக நியமிப்பதற்கு கவர்னருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இச்சட்டம் நிக்காஹ் வைபவத்தை நடத்தும் மௌலவிக்கு, முஸ்லிம் திருமணங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாகரத்துகளையும் பதிவு செய்வதற்கு அனுமதியளித்தது. சமய ஞானம் படைத்த உலமாக்கள் மாத்திரம் தான் காதிகளாக நியமிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை நிராகரிக்கப்பட்டது. காதிகளின் நியமனம் பெரும்பாலும், பதிவாளர் நாயகம் றொக் என்பவரின் 1936 ஆம் ஆண்டின் நிகழ்ச்சிக் குறிப்பின் பிரகாரமே நடைபெற்றன. ஒரு காதிக்கு இருக்க வேண்டிய முக்கிய தகுதி யென்னவென்றால் இஸ்லாமிய சமயத்தில் ஞானமும், இஸ்லாமிய சட்டத்தில் ஆழ்ந்த அறிவு, முஸ்லிம்களின் பழக்கவழக்கங்கள் பற்றிய நுகர் அறிவும் இருத்தலோடு, உண்மைகளைப் பகுத்து நியாயமான முறையில் விசாரணை செய்வதில் ஆற்றலும் இருக்க வேண்டும், என்பதே.

இவர் இரு கட்சிக்காரர்களிடையேயும் இருக்கும் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்து, காப்புப் பணம் போன்றவைகளைச் சமாதானமாகத் தீர்த்து வைப்பதில் ஆற்றல் உள்ளவராக இருத்தல் வேண்டும். எல்லாவற்றிலும் மேலாக, கல்வியறிவு படைத்த, சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தை உடையவராகவும், எல்லோருடைய நன்மதிப்பைப் பெற்றவராகவும், நியாயஸ்தர் என்ற மதிப்பைப் பெற்றவராகவும் இவர் இருத்தல் வேண்டும் என்றும் தன்னுடைய குறிப்பில் பதிவாளர் - நாயகம் எழுதி வைத்தார்.

1934 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட திருமண-விவகாரத்துச் சட்டம் நடைமுறையில் பதினெட்டு மாதங்கள் இருக்கும் போதே அதன் குறைபாடுகள் தெள்ளத் தெளிவாகின. உண்மையில் காதிகளின் சங்கம் தான் இக்குறைபாடுகளை அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்டியது. ஆகவே 1939 ஆம் ஆண்டில் அரசாங்கம் இதனைப் பரிசீலனை செய்வதற்கு இன்னொரு குழுவை நியமித்தது. இக்குழுவில் பதிவாளர் - நாயகம், தலைவராகவும், எம். றி. அக்பர், ஜாயா, ஏ. ஆர். ஏ. ராஸிக், அப்துல்காதர், ஹனிபா, ஷம்சுதீன் ஆகியோர் அங்கத்தவர்களாகவும் கடமையாற்றினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குழுவின் அறிக்கை 1941 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இக்குழுவின் மேலுரைகளும் திருமண விவகாரத்து ஆலோசனை சபையின் மேலுரைகளும் அடங்கிய இன்றும் அமுலில் இருந்து கொண்டிருக்கும், திருமண விவகாரத்துச் சட்டம் 1951 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இச்சட்டம் 1954 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம் இது சம்பந்தமான முன்னைய சட்டங்களை வாபஸ் செய்தது. இச்சட்டம் முஸ்லிம்களின் திருமணம், விவாகரத்து, வழக்குகளில் இருசாராரின் உரிமைகளையும், கடமைகளையும் பாதுகாப்பதோடு, இவ்விரு கட்சிக்காரர்களின் மத்ஹபுகள் கூறும் சட்டங்களின் பிரகாரமே அவர்களது வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்ப்பு அளிக்கப்படும் என்றும் கூறியது. எனவே இம்மாம்கள் கூறிய இஸ்லாமிய சட்டங்களை இச்சட்டம் உறுதிப்படுத்தியதோடு, இஸ்லாமிய சட்டத்திற்கு முரணான முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களை நிராகரித்தது. இச்சட்டம் சில திருத்தங்களுடன் இன்றும் அமுலில் இருந்து வருகிறது.

இச்சட்டத்தின் அடிப்படையில், திருமணங்களைப் பதிவுசெய்வதற்கு, பதிவாளர்-நாயகத்தினால் முஸ்லிம் பதிவாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். காதிகளும், அமைச்சரினால் நியமிக்கப்பட்டார்கள். ஷியா பிரிவைச் சேர்ந்த போராக்களுக்கும், ஹனபி மத்ஹபைச் சேர்ந்த மேமன்களுக்கும் விசேஷ காதிகள் நியமிக்கப்பட்டார்கள். ஆனால் முஸ்லிம் விவாகரத்து வழக்குகளில், அமைச்சரினால் நியமிக்கப்பட்ட காரணத்தினால் காதிகளின் தீர்ப்பு இலங்கை அரசியல் சட்டத்தின் 55வது உட்பிரிவுக்கு முரணானது என்ற காரணத்தினால் காதியின் தீர்ப்பு செல்லுபடியாகாதென்று, 1962 ஆம் ஆண்டில் நடந்த செய்னுலாப்தீன் - தனீனா உம்மா வழக்கில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பு முஸ்லிம், சமூகத்திற்குப் பேரிடியாக விழுந்தது. உயர் நீதி மன்றத்தின் இத்தீர்ப்பினால் காதிகளின் நீதிபதி ஸ்தானம் அடியோடு ஒழிக்கப்பட்டது. விவாகரத்துக் கோரி நிற்கும் கணவன் மனைவிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்க்கதிக்காளானார்கள். மாவட்ட நீதிமன்றங்களுக்குப் போவதா அல்லது காதி நீதிமன்றங்களுக்குப் போவதா என்ற பெரும் பிரச்சினை முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. காதி நீதிமன்றங்கள் செயலிழந்து நின்ற காரணத்தினால் மாவட்ட நீதிமன்றங்களுக்கு விவாகரத்துக் கோரி வழக்குகளைத் தாக்கல் செய்த முஸ்லிம்கள் பெரும் பணச்செலவிற்கும், தாமதத்திற்குமுள்ளானார்கள். இத்தீர்ப்பை எதிர்த்து முஸ்லிம்களின் இந்நிலையைச் சீர்செய்யும்படியும், காதிகள் நீதி பரிபாலன சபையினால் நியமிக்கப்படல் வேண்டும் என்றும், இந்நூல் ஆசிரியர் தினகரனில் அப்போது பல கட்டுரைகள் வரைந்தார். இதன் பின்னர் 1965 ஆம் ஆண்டில் காதிகள் நீதிபரிபாலன சபையினால் நியமிக்கப்பட்டார்கள். எனவே நீதிபதி என்ற ஸ்தானம் காதிகளுக்குத் திரும்பவும் கிடைத்தது.

மிஸ்கின் உம்மாவழக்கில் எப்படி ஒரு போலிஸ்காரனின் அடாவடித்தனம் ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் தலைவிதியையே மாற்றியது என்பதை அறிந்தோம். எனவே 'ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் பாதுகாப்பு' சட்டத்தில் அடங்கியிருக்க வேண்டும். அரசியல் யாப்பில் சீர்திருத்தம் கொண்டு வரப்போகும் இத்தருணத்தில் முஸ்லிம்கள் வாழாவெட்டியாக இராமல், தமக்குள்ளே இருக்கும் பிரிவுகளையும் பிழைகளையும் மறந்து ஒரே குரலில் முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பிற்காக கோரிக்கைகளை முன் வைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் விவாகம், விவாக-ரத்துச் சட்டத்திலுள்ள உட்பிரிவுகள்

1954 ஆம் ஆண்டில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட திருமண - விவாகரத்துச் சட்டம், பதிவாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட முஸ்லிம் திருமண பதிவாளர்களால் முஸ்லிம் திருமணங்கள் பதியப்படல் வேண்டும் என்றும், காதிகளால், விவாகரத்துக்கள் பதியப்படல் வேண்டும் என்றும் கூறியது. ஒரு மத்ஹபைச் சேர்ந்த இருசாரார்களுக்கிடையில் ஏற்படும் திருமண ஒப்பந்தம், அம்மத்ஹபுக்குரிய இஸ்லாமிய சட்டத்தின் பிரகாரம், செல்லுபடியாகும், அல்லது செல்லுபடியாகாது என்று இருக்கும் பட்சத்தில் பதிவு செய்த ஒரே காரணத்திற்காக இது செல்லுபடியாகும் என்று இச்சட்டம் கூறவில்லை. இதேபோல இஸ்லாமிய சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகாத ஒரு திருமணம், பதிவு செய்யாத காரணத்திற்காக செல்லுபடியாகாது என்று இச்சட்டம் கூறவில்லை. ஒரு திருமணம் நடந்தது என்பதற்குச் சாட்சியாக இது பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு நிக்காஹ் நிகழ்ச்சி நடந்தபிறகு அதைப் பதிவு செய்யும் பொறுப்பு நிக்காஹ்வை நடத்துபவருக்கும் மாப்பிள்ளைக்கும் வொலிக்கும் கடமையாக்கப்பட்டது. அப்படிப் பதிவு செய்யாதவிடத்து, 81 ஆவது பிரிவின்படி அவர்கள் தண்டிக்கப்படவேண்டிய குற்றவாளிகளாகக் கருதப்படுவார்கள்.

இச்சட்டம் யார் யாருக்கிடையில் திருமணம் நடக்கக் கூடாது என்று அழுத்தம் திருத்தமாக கூறுகிறது. இதை மீறும் பட்சத்தில் இதற்குரிய தண்டனைகளையும், 82, 87, 92ஆம் பிரிவுகளில் திட்ட வட்டமாகக் கூறுகிறது. பின்வருபவர்களிடையே திருமணங்கள் நடைபெறக்கூடாது என்று இச்சட்டம் கூறுகிறது.

இத்தாவில் இருக்கும் ஒரு பெண்மணி. ஷாபி மத்ஹபைச் சேர்ந்தவர்கள் ஒரு வொலி இல்லாமல் திருமணத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தக்கூடாது. காதி, 'வொலி' தேவையில்லை' என்று அனுமதியளித்தால் மட்டுமே வொலியில்லாமல் திருமணத்தை நடத்தலாம். ஒரு குறிப்பிட்ட மத்ஹபைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு, யார் வொலியாக இருக்கக்கூடாது என்று அம்மத்ஹபுக்குரிய சட்டம் கூறும் பட்சத்தில் அவர் திருமணத்தில் வொலியாக இருக்க முடியாது. காதியினுடைய அனுமதி பெற்றாலொழிய பன்னிரண்டு வயதுக்குக்கீழ் உள்ள ஒரு பெண் திருமணம் செய்ய முடியாது.

திருமணமாகிய ஓர் ஆண், காதிக்கு ஒரு மாத கால முன்னறிவித்தல் கொடுக்காத பட்சத்தில் அவர் இரண்டாம் திருமணம் செய்ய முடியாது. இத்தாவிலிருக்கும் ஒரு பெண் செய்யும் திருமணமோ, வொலி இல்லாமல் நடக்கும் திருமணமோ, வொலியாக இருக்கத் தகுதியில்லாத ஒருவர் வொலியாகக் கடமையாற்றும் திருமணமோ, செல்லுபடியாகாது என்று ஷாபி மத்ஹபின் சட்டங்கள் கூறுகின்றன. இதே விதிகளை இச்சட்டம் மிகவும் அழுத்தமாகக் கூறுகிறது. அதாவது திருமணத் தொடர்பு வைக்கத்தகாத உறவினர்கள் செய்யும் திருமணங்கள் செல்லுபடியாகாது என்பதே.

யார் வொலியாக இருக்கத் தகுதியுடையவர், யார் தகுதியில்லாதவர் என்பதையும் இச்சட்டம் கூறுகிறது. காதியின் அனுமதி பெற்றாலொழிய ஷாபி மத்ஹபைச் சேர்ந்தவர்களிடையே நடக்கும் திருமணங்களில் வொலி கட்டாயமாக இருக்க வேண்டும். இச்சட்டத்தின் 25வது பிரிவின்படி ஒரு திருமணம் சட்டப்படி செய்யக்கூடியதாக வேண்டுமென்றால், திருமணப் பெண்ணின் உடன்பாடு அவசியம் என்று கூறுகிறது. இதில் எவ்வித விதி விலக்கும் இல்லை. ஷாபி மத்ஹப்சட்டத்தைத் தவறாகப் புரிந்து கொண்ட ஒரு நீதிபதி றோடாறைட், இப்ராஹிம் வழக்கில் முன்பு மணமாகிய ஒரு பெண் ஒரு வொலியின் அனுமதியில்லாமல் திரும்பவும் திருமணம் செய்யலாம் என்று தீர்ப்பளித்தார். இதைத் தொடர்ந்து பல நீதிபதிகளும் தீர்ப்பு வழங்கினார்கள். இச்சட்டம் இந்நிலையில் சிறுமாற்றம் செய்தது. அதாவது, ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை சில சமயங்களில் திருமணமாகாத தன் மகளை அவளுடைய இணக்கம் இல்லாமல் திருமண முடித்துக் கொடுக்கலாம் என்பதே. இதை காதி நீதிபதிகள் சபையும் ஏற்றுக்கொண்டது என்பதை யாசீம் - நூர் நயீமா வழக்கின் மூலம் அறிகிறோம். ஷாபி மத்ஹபைச் சேர்ந்த சட்டவல்லுனர்கள் 'ஒரு தந்தை' திருமணமாகாத ஒரு கன்னிப் பெண்ணின் இணக்கத்தைப் பெறுவது நல்லது என்று கூறுகிறார்கள். இதைத்தான் சில திருத்தங்களுடன் மேலே குறிப்பிட்ட விதி கூறுகிறது. ஷாபி சட்டவல்லுநர்கள், 'எக்காரணத்தைக் கொண்டும் ஒரு தந்தை திருமணமாகிய தன் மகளை அவளுடைய உடன்பாடு இல்லாமல் திருமணம் செய்து கொடுக்க முடியாது' என்று கூறுகிறார்கள். தந்தை அல்லாத ஒருவர் வொலியாகக் கடமையாற்றும் போது அவர் திருமணமாகாத ஒரு கன்னிப் பெண்ணின் இணக்கத்தைக் கட்டாயமாக பெற்றிருக்க வேண்டும்.

அப்துல் றஹ்மான் - முஹம்மதுயாசின் வழக்கில், காதிசபையினர், அமீர் அலி என்ற ஷாபி சட்டவல்லுனரை ஆதாரம் காட்டி, வயது வந்த கன்னிப் பெண்ணை மணமுடித்துக் கொடுக்கும் போது அவளுடைய இணக்கத்தைத் தந்தை பெற வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினார்கள். 'ஹனபி மத்ஹப்' சட்டப்படி வயது வந்த எல்லா முஸ்லிம் பெண்களும் தம்முடைய திருமண ஒப்பந்தங்களைத் தாமே செய்து கொள்ளலாம்.

முஸ்லிம்களிடையே இருக்கும் 'பலதாரமணம்' இச்சட்டத்தின் மூலம் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. திருமணமான ஓர் ஆண், தன் மனைவி இருக்கும்போதே இரண்டாவது திருமணம் செய்ய விரும்பினால் திருமணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே காதிக்கு அறிவித்தல் கொடுத்து அவருடைய அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். காதி இவ்வனுமதி கொடுப்பதற்கு முன் அவ்வாணின் மனைவிக்கு அறிவித்தல் கொடுப்பதோடு, அப்பிரதேசத்திலுள்ள எல்லாஜும்மா பள்ளி வாசல்களிலும் இவ்வறிவித்தலைப் பகிரங்கமாக விளம்பரப்படுத்த வேண்டும். 1939 ஆம் ஆண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமிக்கப்பட்ட குழு, பலதாரமணத்தை ஊக்குவிக்கக் கூடாது என்று தனது அறிக்கையில் கூறியது. இரண்டாம் திருமணம் செய்ய விரும்பும் ஓர் ஆணின் குடும்பத்தின் நலன் கருதியே இப்படி மேலுரை செய்தது. காதிக்கு அறிவித்தல் கொடுக்காத பட்சத்தில் இவர் தண்டிக்கப்படுவார். இத்திருமணத்தைப் பதிவு செய்யும் பதிவாளர் 'குறைந்தது ஆறுமாத கடுங்காவல் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்' என்றும் இச்சட்டம் கூறுகிறது. இச்சட்டத்தின் கட்டுப்பாட்டினால் பலதாரமணம் இன்று முஸ்லிம்களிடையே குறைந்து வருகிறது.

முஸ்லிம் சமூகங்களிடையே நிலவி வந்த பிள்ளைப் பருவ திருமணங்கள் இச்சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. முக்கியமாக பருவமடையாத பெண்பிள்ளைகள் பொருளாதார நிலை காரணமாக வயது வந்தவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டார்கள். 'ஒரு காதியின் அனுமதியில்லாமல் பன்னிரண்டு வயதுக்குக் குறைந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கக் கூடாது' என்று இச்சட்டம் விதிக்கிறது. ஒரு பதிவாளர் இதற்கு முரணாக நடந்து கொண்டால் அவர் தண்டனைக்குள்ளாக்கப் படுவார். இலங்கைப் பொதுச்சட்டத்தின் கீழ் பன்னிரண்டு வயதுக்குக் குறையாத ஒரு பெண்ணுடன் (அவர் மனைவியாக இருந்தாலும்) ஒருவன் உடலுறவு வைத்துக்கொண்டால் அது கற்பழிப்பதற்குச் சமம் என்று கருதப்படும். ஆனால் முஸ்லிம் சட்டத்தின் கீழ் பருவமடையாத ஒரு பெண்ணை அவளது தந்தை, ஒருவருக்குத் திருமணம் செய்து வைத்தால் அப்பெண் வயது வரும் வரை, தந்தை அவளது கணவனிடம் அனுப்பக் கூடாது. தகுந்த ஆதாரமில்லாவிடத்து பருவ வயது என்பதைப் 'பதினைந்து வயது' என்று இச்சட்டம் வரையறுக்கிறது. இவ்வளவு கட்டுப்பாடுகள் இருந்தும் இன்றும் பிள்ளைப்பருவ திருமணங்கள் கிராமங்களில் நடைபெறுகின்றன என்று முன்னைநாள் பதிவாளர் நாயகம் எச். எம். இஸட். பாரூக் தன்னுடைய 'இலங்கை முஸ்லிம் சட்டம்' என்ற நூலில் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதி நீதிபதிகளின் அதிகாரமும் இச்சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. மஹர் கொடுக்கப்படாத விடத்து, அதைப்பெற்றுக் கொடுப்பது, விவாகரத்துச் செய்யப்பட்ட ஒரு பெண்ணுக்கோ அவளது குழந்தைகளுக்கோ சேரவேண்டிய காப்புப் பணத்தைப் பெற்றுக்கொடுப்பது, அப்பெண் கர்ப்பமாயிருந்தால் பிள்ளைப் பெறும் வரையில் அவளுடைய செலவுக்கான பணத்தைப் பெற்றுக்கொடுப்பது, போன்ற அதிகாரங்கள் காதிக்கு வழங்கப்பட்டுள்ளன. முன்பு வழங்கப்பட்ட காப்புப்பணத்தைக் கூட்டவும் குறைக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு. ஒரு பெண்ணுக்கு வொலி இல்லாதவிடத்து அவளது திருமணத்தை நடத்தி வைத்து அதைப் பதிவு செய்யும் அதிகாரமும் அவருக்குண்டு. ஒரு பெண்ணின் உடன்பாட்டை வேண்டுமென்றே மறைத்து வைத்து, அவளுடைய திருமணத்தைப் பலவந்தமாக நடத்த முயலும் ஒரு வொலியை அப்புறப்படுத்தி அத்திருமணத்தைப் பெண்ணின் விருப்பத்திற்கேற்ப நடத்தி வைக்கும் அதிகாரமும் அவருக்குண்டு. மஹர் பணம் இவ்வளவுதான் இருக்க வேண்டும், காப்புப்பணம் இவ்வளவாக இருக்க வேண்டும், என்ற நிபந்தனையை இச்சட்டம் அகற்றுகிறது. கைக்கூலித் தொகையைத் திரும்பவும் பெறுவதற்கு முறையீடு செய்யும் போது அதை நிர்ணயிக்கும் தகைமையும் இவருக்குண்டு. இஸ்லாமிய சட்டத்தில் கைக்கூலி என்று ஒன்றில்லை. இலங்கை முஸ்லிம்களின் பழக்கத்திலிருந்து பெறப்பட்டவை. இப்பழக்கம் பெரும்பாலும் தென்னிந்தியாவிலிருந்து பெறப்பட்ட ஒரு பழக்கம். திருமணப் பெண்ணின் பெற்றோர், மணமகனுக்குக் கொடுக்கும் ஒரு பண முடிப்பு என்று தமிழ் அகராதி கூறுகிறது. இஸ்லாமிய சட்டத்திலில்லாத இன்னொரு நடைமுறை பழக்கமும் இப்பொழுது முஸ்லிம்களின் திருமணங்களிலிருந்து வருகிறது. அதுதான் சீதனம் அல்லது 'ஸ்திரீதனம்' என்பது.

இது சம்பந்தமாக நூலாசிரியரின் 'இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள்' என்ற நூலைப்பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதிகளுக்கு இன்னும்பல அதிகாரங்களும் இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. தம்பதிகளில் ஒருவரின் வேண்டுகோளின் படி விவாகரத்தை ரத்து செய்யவும், கணவன் மனைவிக்கிடையில் ஏற்படும் தகராறை சுமுகமாகத் தீர்த்து வைக்கவும் பன்னிரண்டு வயதுக்குக்குறைந்த பெண்பிள்ளையைத் திருமணம் செய்து கொடுப்பதற்கு அனுமதி வழங்கவும் இவருக்கு அதிகாரமுண்டு. இச்சட்டத்தின் 48 ஆவது பிரிவின்படி விவாகரத்து வழக்குகளில் காப்புப்பணத்தின் தொகையை நியாயமான முறையில் நிர்ணயிப்பதற்குக் காதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் விவாகம் - விவாகரத்துச்சட்டம் அமுலாக்கப்படல்

இலங்கை முஸ்லிம் திருமண - விவாகரத்துச் சட்டத்தில் 27 ஆவது பிரிவில், 'ஒரு கணவன் தன் மனைவியை விவாகரத்து செய்யும் முறை' கூறப்பட்டிருக்கிறது. ஒரு கணவன், தான் விவாகரத்துச் செய்யப்போவதாகத் தன் மனைவி வாழும் பிரதேசத்தின் காதிக்கு அறிவித்தல் கொடுக்க வேண்டும். இவ்வறிவித்தலைப் பெற்ற காதி, இவ்விரு சாராருடைய உறவினர்களின் உதவியையும், அவ்வூரின் செல்வாக்குள்ள முஸ்லிம்களின் உதவியையும் பெற்று இரு சாராருக்குமிடையே உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து ஒரு சமாதானத்தையேற்படுத்த முயல்வார். முப்பது நாட்களுக்குள் ஒரு சுமுகமான நிலையேற்படாதவிடத்து, கணவன் காதியின் முன்னால் வந்து இரண்டு சாட்சிகளின் முன்னால் தான், 'தன் மனைவியைத் தலாக்' செய்யப்போவதாக அறிவிக்க வேண்டும். காதி இதனைப் பதிவு செய்து மனைவி சமுகமளிக்காதவிடத்து அவருக்கு அறிவித்தல் கொடுப்பார். இதன் பிறகு இன்னும் ஒரு மாத காலத்தில் கணவன் - மனைவி உறவில் ஒரு சுமுகமான நிலையேற்படாதவிடத்து அவருக்கு அறிவித்தல் கொடுப்பார். இதன் பிறகு இன்னும் ஒரு மாத காலத்தில் கணவன்-மனைவி உறவில் ஒரு சுமுகமான நிறைவு ஏற்படாதவிடத்து கணவன் திரும்பவும் காதியின் முன்னால் இரண்டாவது முறையாக 'தலாக்' கூறவேண்டும். இதைப் பதிவு செய்த காதி இருசாராருக்குமிடையில் ஒரு சமாதான நிலையையேற்படுத்திக் கொள்ள இன்னும் ஒரு மாதகாலம் அவகாசம் கொடுப்பார். இக்காலக்கெடுவுக்குப் பின்னும் கணவன் தன் மனைவியைக் விவாகரத்துச் செய்ய வேண்டும் என்ற முடிவில் மாற்றமில்லாமலிருந்தால் மூன்றாம் முறையாகக் காதியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் தோன்றி 'தலாக்' கூற வேண்டும். கணவனின் முடிவு மாற்ற முடியாதது என்ற முடிவுக்கு வந்த காதி, விவாகாரத்தைப் பதிவு செய்வார். காதி, எக்காரணத்தைக் கொண்டும் கணவன், விவாகரத்துச் செய்வதற்குக்கூறிய காரணங்களைப் பதிவு செய்யக்கூடாதென்று இப்பிரிவின் மூன்றாம் விதி கூறுகிறது.

இம்முறை கணவன்– மனைவி விவாகரத்தைத் தவிர்க்க எல்லா சந்தர்ப்பங்களையும் கொடுக்கிறது. ஒரு மனைவிக்குக் கொடுக்கப்படவேண்டிய மஹர் பணத்தைக் கணவனிடமிருந்து பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு காதிக்குண்டு. இம்முறையைப் பின்பற்றாமல், காதி நீதிமன்றத்திலல்லாமல் வேறு முறையைப்பின்பற்றி வேறோரிடத்தில் விவாகரத்தை முடிப்பது 92 ஆம் பிரிவின் படி ஒரு குற்றமாகக் கருதப்படும்.

இச்சட்டம் கூறும் விதிமுறையைப் பின்பற்றாமல் நடத்தப்படும் விவகாரத்து 'குற்றம்' என்று இச்சட்டம் கூறுகிறதேயொழிய 'செல்லுபடியாகாது' என்று கூறவில்லை. காதிகள் சபையும் இச்சட்டத்தைப் பற்றி இந்நிலையே கொண்டிருக்கிறது.

இச்சட்டத்தின் 28ஆவது பிரிவு ஒரு மனைவி எப்படி விவாகரத்து கோரலாம் என்று கூறுகிறது. இதை 'பஸஹ்' என்று சட்டம் கூறுகிறது. ஒரு குறிப்பிட்ட மத்ஹபைச் சேர்ந்த முஸ்லிம்களுக்குரிய முஸ்லிம் சட்டத்தில் கூறப்பட்ட காரணங்களைக் கூறி, ஒரு மனைவி விவாகரத்துக்காக ஒரு காதிக்கு மனுச் செய்யலாம். இதை, முஸ்லிம் சட்டத்தின்படி விசாரணை செய்து தீர்ப்பு வழங்குவதற்குக் காதிக்கு முழு அதிகாரம் இருக்கிறது. ஒரு மனைவி 28 ஆம் பிரிவின்படி விவாகரத்து கோருமிடத்து அவள் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் இச்சட்டத்தின் மூன்றாவது அனுபந்தத்தில் விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. முஸ்லிம் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் கணவனுடைய கொடுமைகளையும் அவனுடைய தகாத நடவடிக்கைகளையும் அவன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாதிருத்தலையும் காரணங்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாகரத்துக் கோரும் ஒரு மனைவி காட்டலாம். ஷாபி மத்ஹபின் விதிகளின் படி மனைவியைக் கொடுமைப்படுத்தல், மனைவியைத் தத்தளிக்கவிட்டு ஓடிப்போதல், மனைவியைக் காப்பாற்ற முடியாமை, ஆகியவைகளைக் காரணங்களாக ஒரு மனைவி காட்டலாம். 1947ஆம் ஆண்டு நடந்த நூருல் நலீபா-மரிக்கார் ஹாஜியார் விவாகரத்து வழக்கில் மேற்கூறிய காரணங்களே ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் 1978 ஆம் ஆண்டில் வெளியான முஸ்லிம் சட்ட ஆய்வுக்குழுவின் அறிக்கைப்படி ஒரு கணவனின் ஆண்மைத்தன்மை இல்லாமை, பைத்தியம், புத்திசுவாதீனமின்மை, குஷ்டரோகம் போன்ற கொடிய நோய்களையும், ஒரு மனைவியைக் காப்பாற்ற முடியாமை காரணங்களாக ஒரு மனைவி காட்டலாம். இக்காரணங்கள் சட்டத்தில் புகுத்தப்பட வேண்டும் என்றும் இவ்வாய்வுக்குழு கூறியது. இக்கோரிக்கையை விசாரிப்பதற்கு முன் ஒரு காதி மூன்று முஸ்லிம்களுடைய உதவியுடன் இருசாராரிடையே ஒரு சுமுகமான நிலைமையை உருவாக்க முயலவேண்டும். அப்படி முடியாத பட்சத்தில், காதி சாட்சிகளின் சாட்சியங்களைப் பதிவு செய்யலாம். ஒரு மனைவி இரண்டு சாட்சிகளையாவது கொண்டு வரவேண்டும். தன்னோடு விசாரணையில் ஈடுபட்டிருக்கும் மூன்று முஸ்லிம் மதிப்பீட்டாளர்களுடைய கருத்துக்களை மனதில் வைத்து முஸ்லிம் சட்டத்தின் விதிகளின் படி ஒரு காதி நியாயமான தீர்ப்பை வழங்கலாம்.

1972 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பதிவாளர் நாயகத்தின் 1966 ஆம் ஆண்டு அறிக்கையில், 'ஆண்களின் தலாக் விவாகரத்தைவிட பெண்களின்' பசஹ்' விவாகரத்தே அதிகம், என்று அவர் கூறுகிறார். 1961 ஆம் ஆண்டில் 56 பசஹ் விவாகரத்தும், 44 தலாக் விவாகரத்தும் பதிவாயிருக்கின்றன. 1966 ஆம் ஆண்டில் இவ்விரு விவாகாரத்துக்குமிடையில் இருந்த வித்தியாசம் 1% என்றும் தனது அறிக்கையில் பதிவாளர் நாயகம் கூறுகிறார். இவ்விவாகாரத்துக் கோரியவர்கள் சராசரி 4 ஆண்டுகளே கணவன் - மனைவியாக வாழ்ந்திருந்தனர். 18%

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகிதமானோர் ஒரு வருடத்திற்குக் குறைவாகவே தம்பதிகளாக வாழ்ந்திருந்தனர்என்றும் இவ்வறிக்கை கூறுகிறது.

1929 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட விவாகரத்துச் சட்டம், காதி நீதிமன்றங்களில் சட்டத்தரணிகள் ஆஜராவதைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. ஆனால் நடைமுறையில் காதிகளின் அனுமதியுடன் சட்டத்தரணிகள் இவ்வழக்குகளில் தோற்றியிருக்கின்றனர். 1941 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட குழு, சட்டத்தரணிகளை வைத்து வழக்காடுவது பொருள் செலவு ஏற்படுவது மட்டுமல்ல, வழக்குகளைத் தீர்ப்பதில் அனாவசியமான தாமதம் ஏற்படுவதுடன், பெரும்பாலும் ஒரு சுமுகமான முடிவை ஏற்படுத்துதலைத் தவிர்க்கவும், சட்டத்தரணிகளை வைத்து வாதாடும் கட்சிக்காரர்களுக்குப் பாரபட்சமாக தீர்ப்பு வழங்கப்படுதலையும் நாம் கண்டிருக்கிறோம்' என்ற தனது அறிக்கையில் கூறியது. 1954 ஆம் ஆண்டில் காதிகள் சபையினர், சட்டத்தரணிகள் ஆஜராகாத வழக்குகள் பெரும்பாலும் நியாயமான முறையில் தீர்க்கப்படாமையும், நியாயங்கள் தகுந்த முறையில் ஒப்புவிக்கப்படாமையும், அவசியமற்ற சாட்சியங்களை ஏற்றுக் கொள்ளுதலும், பெரும்பாலான வழங்குகளில் சட்டம் பிழையான முறையில் பரிபாலிக்கப்பட்டதையும், தம்முடைய அனுபவத்திலிருந்து அறிந்த உண்மைகள் என்று குறிப்பிட்டிருந்தார்கள். காதிகள் சபையின் முன்னால் சட்டத்தரணிகள் ஆஜராகுவதை இவர்கள் தடுக்கவில்லை. 1941 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட குழுவின் ஆலோசனைப்படி சட்டத்தரணிகள் காதி நீதிமன்றங்களில் ஆஜராகுவது தடைசெய்யப்பட்டது.

இச்சட்டத்தின் பிரகாரம் ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட காதிகள் சபையும், காதிகளும், சமூகத்தில் அந்தஸ்தும், சிறந்த ஒழுக்கமும், கல்வியறிவும் கொண்ட முஸ்லிம் ஆண்கள் நியமிக்கப்பட்டார்கள். இச்சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்ப காலம் தொட்டே சட்டத்தரணிகளே பெரும்பாலும் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டார்கள். இதற்கு விதிவிலக்காக முன்னைநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டசபை அங்கத்தவர்கள் இருவரும் இச்சபையில் அங்கம் வகித்தார்கள். சட்டத்தரணிகள் மாத்திரமே காதிகள் சபைக்கு நியமிக்கப்படவேண்டும் என்ற பிரேரணையும் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1972 ஆம் ஆண்டின் புள்ளி விபரங்களின் படி சேவையில் இருக்கும் 44 காதிகளில் 17 பேர் சட்டத்தரணிகளும், 2 உலமாக்களும், ஏனையோர் சட்டம் தெரியாதவர்களும் இருந்தார்கள் என்று நாம் அறிகிறோம். இந்நிலை மாற்றப்படல் வேண்டும். சட்டம் தெரியாதவர்கள் காதிகளாக இருக்கும் பட்சத்தில் விவகாரத்து வழக்குகள் 'நியாயமான முறையில் தீர்க்கப்படும்' என்று நாம் கூறுவதற்கில்லை. முஸ்லிம் சட்டத்தின் பிரகாரம், சாட்சியங்கள் எப்படி ஒப்புவிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடாதவிடத்து, 1951 ஆம் ஆண்டின் 13 வது சட்டம், 'சாட்சியங்கள் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிகளுக்கமைய இருக்க வேண்டும்' என்ற காரணத்தினால் சட்டம் தெரிந்த சட்டத்தரணிகள் காதிகளாகவும், காதிகள் சபை அங்கத்தவர்களாகவும் நியமிக்கப்படல் வேண்டும் என்ற அவசியத்தை நாம் உணர்த்தத்தேவையில்லை. காதிகளின் தீர்ப்புக்களை ஏற்றுக்கொள்ளாத கட்சிக்காரர்களின் மனுக்களைப் மறுபரிசீலினை செய்தலும், 28 வது பிரிவின் கீழ் பசஹ் முறைப்படி விவாகரத்துக் கோரும் மனைவிகளின் விண்ணப்பங்களை விசாரிப்பதுமே காதிகள் சபையினரின் முக்கிய கடமையாகும். இச்சட்டத்தின் கீழ் காதி சபையினரின் அனுமதியுடன் உயர் நீதிமன்றத்திற்கு முறையீடு செய்வதற்கும் கட்சிக்காரர்களுக்கு இடமுண்டு. இச்சட்டத்தின் ஐந்தாம் அனுபந்தம், இம்முறையீடுகள் செய்யும் முறையை விரிவாகக் கூறுகிறது. இதுதவிர காதிகள் வழக்குகளை விசாரிக்கும் முறையில் கடைபிடிக்கும் முறைகளையும் அவர்கள் வைத்திருக்கும் குறிப்புக்களையும் விசாரணை செய்வதற்கு 'காதிகள் சபைக்கு' அதிகாரம் உண்டு. காதிகளின் தீர்ப்புகள் நியாயமற்றன, என்று சபைக்குத் தோன்றுமிடத்து இத்தீர்ப்புக்களை மாற்றியமைக்குமாறு காதிகளுக்கு உத்தரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பிக்கும் அதிகாரமும் காதிகள் சபைக்கு உண்டு. பதிவாளர் நாயகத்திற்கும், காதிகளுக்கும் முஸ்லிம் சட்டம் பற்றிய ஆலோசனைகளை வழங்கவும் இச்சபையினருக்கு அதிகாரம் உண்டு. இச்சபையின் ஆலோசனைகளைக் காதிகள் ஏற்கவேண்டும்.

இச்சட்டம் முஸ்லிம் திருமண - விவாகரத்து ஆலோசனை சபையொன்றை நியமிப்பதற்கும் இடமளித்திருக்கிறது. ஐந்து அங்கத்தவர்களுக்குக் குறையாமலும் ஒன்பது அங்கத்தவர்களுக்குக் கூடாமலும் இச்சபை இருத்தல் வேண்டும். அமைச்சரினால் நியமிக்கப்பட்ட இவ்வாலோசனைச் சபைக்கு, அதன் தலைவரான பதிவாளர் நாயகத்திற்கு முஸ்லிம் சட்டம் பரிபாலனம் செய்யும் முறையைப் பற்றி ஆலோசனை கூறுவது கடமையாக்கப்பட்டது.

1956 ஆம் ஆண்டில் இலங்கையின் திருமண விவாகரத்துச் சட்டங்களைப் பரிசீலனை செய்யுமாறு பதின்மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டது. 1959 ஆம் ஆண்டில் வெளியான இக்குழுவின் அறிக்கை இலங்கையின் சகல மக்களும் ஒரு பொதுச்சட்டத்தின் கீழ் திருமணமும் விவாகரத்தும் நடத்த வேண்டும் என்று கூறியது. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தங்கள் திருமணங்களையும் விவாகரத்துக்களையும் பொதுச் சட்டத்தின் கீழும் முஸ்லிம் சட்டத்தின் கீழும் நடத்தலாம் என்றும் கூறியது.

இக்குழுவின் முஸ்லிம் அங்கத்தவராயிருந்த அல்-ஹாஜ் எம். ஐ. எம். ஹனிபா இதனை எதிர்த்தார். முஸ்லிம்களிடையே ஏற்படும் திருமணங்கள் முஸ்லிம் சட்டப்படியே நடைபெற வேண்டும் என்றும், ஒரு முஸ்லிம், முஸ்லிம் அல்லாத ஒருவரைத் திருமணம் செய்யும் போது பொதுச்சட்டத்தின் கீழ் செய்யலாம் என்றும் இவர் கூறினார். முஸ்லிம்களிடையே திருமணங்கள் இஸ்லாமிய ஷரியத்தோடு பின்னிப்பிணைந்திருக்கிறது என்ற காரணத்தையும் இவர் எடுத்துக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதுவராத பிள்ளைகளைப் பராமரிக்கும் விஷயத்தில் இலங்கை நீதிமன்றங்கள் முஸ்லிம் சட்டத்தில் கூறப்பட்ட விதிகளையே ஏற்றுக்கொண்டுள்ளன. குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பு ஒரு குழந்தையின் தாய்க்கும், அவளில்லாதவிடத்து குழந்தையின் தாயின் - தாய்க்குமே இருக்குமேயொழிய, தந்தைக்கு எவ்வித உரிமையுமில்லை. இலங்கையின் 1865 ஆம் ஆண்டு, 'வயது வந்தோர் சட்டம்' இருபத்தியொரு வயதை, வயது வந்தோராகக் கணிக்கிறது. ஆனால் இங்கிலாந்தின் உயர் நீதி மன்றம் 1952 ஆம் ஆண்டு எ. எச். எம். அப்துல் காதர்-ஏ. ஆர். ஏ. ராசிக்கின் வழக்கில், திருமணம் செய்வதற்கு 'வயது வந்தோர்' என்ற பதத்திற்கு முஸ்லிம் சட்டப்படி கன்னிப் பருவம் அடைந்தவரையே குறிக்கும் என்று தீர்ப்பளித்தது. 1948 ஆம் ஆண்டில் அசனார்– ஹமீத் வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதியரசர் கிரேஷியன், ஒப்பந்தம் செய்வதற்கோ, காணிகளை விற்பதற்கோ, 'வயது வந்தவர்' என்ற பதத்தின் விளக்கம் முஸ்லிம் சட்டம் கூறுகின்ற விளக்கமாகவே இருக்கும் என்றும் கூறினார்.

இஸ்லாமிய நாடுகளில் இன்று அமுலிலிருக்கும் சட்டத்தின் பிரகாரம் வயது வராத குழந்தைகளைப் பராமரிப்பது தாயின் உரிமையல்ல என்றும் குழந்தையின் எதிர்கால வாழ்வின் நன்மையைக்கருதியே நீதி மன்றங்கள் தீர்ப்பு வழங்க வேண்டும் என்றிருக்கிறது. 1953 ஆம் ஆண்டு சிரியாவில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட சட்டத்தில், வயது வராத குழந்தையின் பராமரிப்பு தாய் இல்லாதவிடத்து அவளுடைய உறவினர்களை விட, தந்தைக்கு அதிக உரிமையிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இராக்கிலும், றியூனிசியாவிலும் குழந்தையின் நன்மையையே கருத்தில் கொள்ள வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. பாக்கிஸ்தான் உயர்நீதிமன்றம் ஹனபி சட்டத்தின் பிரகாரம் இரண்டாம் தரம் திருமணம் செய்த ஒரு தாய் தன் குழந்தையைப் பராமரிக்கத் தகுதியுடையவர் அல்ல என்ற விதியை 1966 ஆம் ஆண்டு பாராய் - வசீர் முஹம்மத் வழக்கில் நிராகரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையைப் பொறுத்தவரையில் ஷாபி மத்ஹபில் கூறப்பட்டுள்ள இஸ்லாமிய ஷரியத் முறையை இலங்கை முஸ்லிம் சட்டத்தில் புகுத்திய பெருமை முஸ்லிம் தலைவர்களில் ஒருவரான நீதியரசர் அக்பரையே சாரும். எந்தவொரு அரசியல் வாதியும் செய்யாத ஒரு பெரும் பணியை அக்பர், முஸ்லிம் சமுதாயத்துக்குச் செய்தார் என்பதை யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மரபுரிமைச்சட்டமும் வக்புச் சட்டமும்

1956 ஆம் ஆண்டில் இலங்கையின் திருமண - விவாகரத்துச் சட்டங்களைப் பரிசீலனை செய்யுமாறு நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையில் முஸ்லிம்களுக்கு விசேஷ சலுகைகள் கொடுக்கக் கூடாது என்று கூறியதோடு முஸ்லிம்களுக்குப்பொதுச்சட்டத்தின் கீழேயோ அல்லது முஸ்லிம் சட்டத்தின் கீழோ தங்கள் திருமணங்களையும் விவாகரத்துக்களையும் நடத்தலாம் என்று கூறியது. இக்கூற்று முஸ்லிம்களின் ஷரியா முறையை உதாசீனம் செய்ததற்கு ஒப்பாகும். ஆனால் இக்குழுவின் முஸ்லிம் அங்கத்தவராயிருந்த எம். ஐ. எம். ஹனிபா இதனை எதிர்த்தார். "முஸ்லிம்களிடையே நடத்தப்படும் திருமணங்கள் முஸ்லிம் சட்டப்படியே நடத்தப்பட வேண்டும் என்றும் ஒரு முஸ்லிம் முஸ்லிமல்லாத ஒருவரைத் திருமணம் செய்யும் போது பொதுச்சட்டத்தின் கீழ் செய்யலாம்" என்றும் இவர் கூறினார். முஸ்லிம்களுடைய திருமணங்கள் இஸ்லாமியஷரியத்தோடு பின்னிப்பிணைந்திருக்கிறது என்ற காரணத்தையும் இவர் எடுத்துக் காட்டினார். எனவே முஸ்லிம்களுடைய ஷரியா முறை எம். ஐ. எம். ஹனிபாவினால் பாதுகாக்கப்பட்டது.

இலங்கை முஸ்லிம்களைப் பாதிக்கும் சிறப்புச் சட்டங்களில் ஒன்றுதான் 1931 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட, 'இறுதிப்பத்திரம் எழுதாமல் இறப்பவர்களின் சொத்துக்களைப் பயன்படுத்த உரிமையுள்ள பின் மரபினருக்குரிய சட்டமும் வக்பு சட்டமும்'. அக்பர் குழுவின் அறிக்கையின் மேலுரையையொட்டியே இவ் அவசரச் சட்டம் வெளியிடப்பட்டது. இச்சட்டத்தின்படி இறுதிப்பத்திரம் எழுதாமல் மரணிக்கும் ஓர் இலங்கை வாழ் முஸ்லிமின் சொத்துக்கள் அவர் எந்த மத்ஹபைச் சேர்ந்தவரோ அம்மத்ஹபின் சட்டப்படியே அவருடைய சொத்துக்கள் மரபுரிமைப்பேறு பெற்றவர்களிடையே பிரிக்கப்படும். 1806 ஆம் ஆண்டின் சட்டத்தொகுப்பிலிருந்த முதலுரிமைப் பத்திரத்தின் விதிகள் 'ஷாபி மத்ஹப்' சட்டத்திற்கமைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததென்றாலும் அது பொதுவாக எல்லாமத்ஹபைச் சேர்ந்தவர்களுக்கும், பொதுவாக இருந்தபடியால், இப்புதிய சட்டம் இதனை நீக்கி, அவ்வம்மத்ஹபைச் சேர்ந்தவர்களுக்குரிய சட்டவிதிகளை நிலை நாட்டியது. இறுதியில் பத்திரம் எழுதாமல் இறப்பவர்களின் சொத்துக்கள் எப்படிப் பிரிக்கப்படல் வேண்டும் என்று மிகவும் தெளிவாக இருக்கிறபடியால், 1806 ஆம் ஆண்டில் வெளியான 'முகம்மதிய அவசரச்சட்டம்' கூறும் உதாரணங்களை நாம் திரும்பவும் கூறவேண்டியதில்லையென்று அக்பர் குழுவினர் தம்முடைய அறிக்கையில் கூறினர். இஸ்லாமிய சட்டத்தின் பிரகாரம் ஒருவன் தன்னுடைய சொத்துக்களில் மூன்றிலோரு பங்கைத்தான் தன் விருப்பப்படி இறுதிப்பத்திரத்தில் எழுதலாம் என்ற கட்டுப்பாடு இக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டதென்றாலும் இது அமுலாக்கப்படவில்லை. மாறாக, 'ஒரு முஸ்லிம் மரபுரிமைப்பேறு அல்லாதவர்களுக்கும் தன் சொத்துக்களை எழுதி வைக்கலாம்' என்ற உரிமையை 1844ஆம் ஆண்டின் 'வில்ஸ் அவசரச் சட்டத்தின்படி'பெற்றிருந்தார். 1931ஆம் ஆண்டின் அஹ்மத்-ஷரிபா உம்மா வழக்கின் தீர்ப்பிலிருந்து இதை நாம் அறியலாம். 1844ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வில்ஸ் 'அவசரச்சட்டத்திற்கு' முன்பு நீதிமன்றங்கள் முஸ்லிம்களின் மரபுரிமை வழக்குகளில் தீர்ப்பளிக்கும் போது இஸ்லாமிய சட்டத்தையே பின்பற்றினர். முஸ்லிம்களுடைய உரிமையைப் பறித்த 'வில்ஸ் சட்டம்' 1931 ஆம் ஆண்டின் சட்டத்திலும் நீக்கப்படவில்லை. எனவே ஒரு முஸ்லிம் தன் விருப்பப்படியே தன் சொத்துக்களைத் தான் விரும்பிய யாருக்கும் விட்டுச் செல்லலாம். இஸ்லாத்தின் ஷரியா முறை இங்கே கடைபிடிக்கப்படவில்லை.

1931 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட இச்சட்டம், முஸ்லிம்களின் நன்கொடைகள் பற்றிய தெளிவில்லாத சட்டவிதிகளை நீக்கி இவைகள் பற்றித் தெளிவான விதிகளைப் புகுத்தியது. ஒரு குறிப்பிட்ட மத்ஹப், நன்கொடைகள் பற்றி என்னென்ன விதிகளைக் கூறுகிறதோ அவ்விதிகளே அம்மத்ஹபைச் சேர்ந்த ஒரு முஸ்லிமுக்குப் பொருந்தும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சட்டம் கூறுகிறது. பருவ வயது எய்தாதவர்களின் சொத்துக்கள் விற்க முடியாத சொத்துக்கள், நம்பிக்கைக்குப் பொறுப்பான சொத்துக்கள், ஆகியவை நன்கொடையாகக் கொடுக்கப்படுமிடத்து உரோமன்-டச் சட்டப்படியே வழங்கலாம் என்று இச்சட்டம் கூறுகிறது. உறுதிப்பத்திரத்தில் 'நன்கொடை மாற்றலாம்' என்று கூறப்படாதவிடத்து இஸ்லாமிய சட்டப்படி, குறிப்பிட்ட சில நன்கொடைகள் மாற்ற முடியாததென்றிருந்தாலும், இச்சட்டத்தின் மூன்றாவது பிரிவின்படி இவ்விதி செல்லுபடியாகாது என்று இச்சட்டம் கூறுகிறது. நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட ஒரு சொத்தின் உறுதிப் பத்திரம் ஒப்படைக்கப்பட்டது என்பதற்கு அத்தாட்சி இருக்கும் பட்சத்தில் அச்சொத்திற்குச் சொந்தக்காரர், நன்கொடை பெற்றவரே என்று இச்சட்டம், இஸ்லாமிய சட்டத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தது,

அக்பர் குழு, பள்ளிவாசல்களின் சொத்துக்களைப் பராமரிப்பதற்குரிய விதிகளையும் தம்முடைய அறிக்கையில் சிபார்சு செய்தது. இக்குழுவினர் இந்திய மதச்சார்பான நன்கொடைச் சட்டத்தைப் பின்பற்றியே தம்முடைய மேலுரைகளைச் செய்தனர். 1931 ஆம் ஆண்டு அவசரச் சட்டம் அமுலாக்கப்படுவதற்கு முன்னம், பள்ளிவாசல் சொத்துக்கள் பராமரிக்கப்பட வேண்டுமென்றால், அம்மாவட்டத்தின் அரசாங்க அதிபரின் அனுசரணையுடனோ அல்லது மாவட்ட நீதி மன்றத்தின் உத்தரவுடனோதான் பரிபாலனம் செய்யலாம்.

1917 ஆம் ஆண்டின் அவசரச்சட்டத்தில் இது ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டதென்றாலும், 1930 ஆண்டு சட்டத்திற்குப் பிறகுதான் பள்ளிவாசல் சொத்துக்கள் சீராகப் பராமரிக்கப்பட்டன. வக்புச் சொத்துக்கள் சரியான முறையில் பரிபாலனஞ் செய்யப்படவேண்டுமென்றால் ஒரு மத்திய நிலையம் அவசியம் என்பதை அன்றைய முஸ்லிம் தலைவர்கள் உணர்ந்தார்கள். எனவே 1933 ஆம் ஆண்டில் அதனைப் பரிசீலித்து அரசாங்கத்திற்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழு பௌத்த கோயில்களின் சொத்துக்கள் எப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராமரிக்கப்படுகின்றனவோ அதேபோல வக்புக் சொத்துக்களையும் பரிபாலனஞ் செய்வதற்கு அரசாங்கத்திலுள்ள உயர் அதிகாரி நியமிக்கப்பட வேண்டும். அவருக்குத் துணையாக ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைச் சபை நியமிக்கப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்தது. இக்குழுவின் மேலுரையை ஏற்ற அரசாங்கம், எம். றி. அக்பரின் தலைமையில் ஒரு கமிட்டியை நியமித்தது. சட்டப்பகர்ப்பு ஒன்றைத் தயாரிக்கும்படி இதற்கு பணித்தது. இக்கமிட்டி பள்ளிச்சொத்துக்களெல்லாம் பதியப்பட்டு அரசாங்கத்தின் பொது நம்பிக்கையாளரினால் நிர்வகிக்கப்படவேண்டும் என்றும் அவருக்குத் துணையான ஏழு அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைச் சபை நியமிக்கப்பட வேண்டும் என்றும் சிபார்சு செய்தது. இச்சபை வெறும் ஆலோசனை மட்டும் செய்வதை முஸ்லிம் தலைவர்கள் விரும்பவில்லை. அரசாங்கமும், நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட ஒரு சபையின் முடிவுகளை அமுல் நடத்தும் பொது நம்பிக்கையாளர் செயல்படுவதை விரும்பவில்லை.

1948 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பிறகு முஸ்லிம்கள் பள்ளிச் சொத்துக்கள் சம்பந்தமாக முறையீடு செய்ததால் முஸ்லிம் பாராளுமன்ற அங்கத்தவர்களையும், முஸ்லிம் செனட்டர்களையும் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டது. முஸ்லிம்களின் முறையீடுகளை விசாரணை செய்து இப்பிரச்சினையை மறுபரிசீலனை செய்து அரசாங்கத்திற்கு ஒரு தீர்க்கமான முடிவைச் சமர்ப்பிக்கும்படி, இக்குழுவினருக்குப் பணிக்கப்பட்டது. இக்கமிட்டியின் சிபார்சின் பேரில் 1956 ஆம் ஆண்டில் ஓர் அவரசச் சட்டம் வெளியிடப்பட்டது. 1931 ஆம் ஆண்டின் வக்புச் சட்டம் 1962லும், 1982லும் திருத்தப்பட்டு இன்று அமுலில் இருக்கிறது. இச்சட்டம் முஸ்லிம் பள்ளிவாசல்கள், முஸ்லிம் புனித ஸ்தலங்கள் ஆகியவை பதியப்படவேண்டும் என்று கூறுகிறது. மேலும் இவைகளைப் பரிபாலனஞ் செய்யும் நம்பிக்கையாளர்களின் அதிகாரங்கள், கடமைகள் ஆகியவைகளை வரையறுப்பதோடு முஸ்லிம் உதவி நன்கொடை நிதிகளைப் பரிபாலனஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்பவர்களின் கடமைகளையும் பொறுப்புகளையும் இச்சட்டம் கூறுகிறது.

ஆலோசனை சபையினதும், அதன் தலைவரினதும் ஸ்தானத்தைப்பற்றியும், அவர்களுடைய அதிகாரங்களைப் பற்றிய பிரச்சினைகளையும் இச்சட்டம் தீர்த்து வைத்தது. ஆலோசனை சபை நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட ஒரு சபையாக மாறியது. ஏழு முஸ்லிம் அங்கத்தவர்களும் அமைச்சரினால் நியமிக்கப்பட்டனர். இச்சபையின் தலைவராக வக்புக்கமிஷனர் நியமிக்கப்பட்டார். வக்புக்கமிஷனரும் அவரின் உதவியாளரும், அரசாங்கத்தில் உத்தியோகம் வகிக்கும் முஸ்லிம்களாக இருத்தல் வேண்டும். 1982 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட திருத்தம் இவ்வுத்தியோகத்தருக்குக் 'கமிஷனர்' என்ற பெயரை நீக்கி 'பணிப்பாளர்' என்ற பட்டத்தை வழங்கியது. 1982 ஆம் ஆண்டின் திருத்தப்படி, வக்புசபையின் அங்கத்தவர்களில் ஒருவரைத் தலைவராக அமைச்சர் நியமிப்பார். இச்சபை தன்னுடைய அதிகாரங்களையும், கடமைகளையும் பணிப்பாளருக்குப் பகிர்ந்தளிக்கும்.

1982 ஆம் ஆண்டின் திருத்தம், இன்னொரு முக்கிய மாற்றத்தையும் கொண்டு வந்தது. இதுகாலவரையும், பள்ளிவாசல்களின் வக்புச் சொத்துக்களிலோ அல்லது நம்பிக்கைச் சொத்துக்களிலோ நிதிகளிலோ பிரச்சினைகள் எழும்பட்சத்தில் அவைகளைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு மாவட்ட நீதிமன்றங்களுக்கிருந்தன. இதனை நீக்கி, நீதிபரிபாலனசபையினால் நியமிக்கப்பட்ட மூன்று முஸ்லிம் அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு வக்பு நீதிச்சபை நியமிக்கப்பட்டது. வக்புச் சொத்துக்கள் சம்பந்தமான எல்லா பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும் அதிகாரம் இச்சபைக்கு வழங்கப்பட்டது. இத்தீர்ப்புகளை வழங்கும்போது மத்ஹபுகளில் கூறப்பட்ட சட்டங்களையும் மக்களின் பழக்கங்களையும் வைத்தே தனது தீர்ப்புகளை இச்சபை வழங்க வேண்டும். பள்ளிச் சொத்துக்களை அடகு வைக்கவோ நிதிகளை வட்டிக்குக் கொடுக்கவோ முடியாதென்று இச்சட்டம் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1920-30 ஆண்டுகளில் ஏற்பட்ட சட்டசபை மாற்றங்கள்

1920 ஆம் ஆண்டுக்கும், 30 ஆம் ஆண்டுக்குமிடையில் உள்ள 10 வருடங்களில் சட்டசபையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களின் தொகை குறைந்து கொண்டே வந்த அதே வேளையில் தேர்தல் மூலம் சட்டசபைக்கு வந்தவர்களின் தொகை அதிகரித்தது. காலவரையின்றி நியமிக்கப்பட்ட அரசாங்க அங்கத்தவர்கள் கூட ஒரு கால எல்லைக்குள் மட்டும்தான் அங்கத்தவர்களாக இருக்கலாம் என்ற கொள்கை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே கொண்டு வரப்பட்டது. சாதிவேற்றுமையைப் பயன்படுத்திய பிரித்தானிய ஆட்சியாளர் பிறகு இனவேற்றுமையை அரசியலில் புகுத்தினர். சிங்கள மக்களின் சுதந்திர இயக்கத்தைத் தடுப்பதற்காக இன்னொரு பிரிவினையையும் கொண்டு வந்தனர். சிங்கள மக்களைக் கரையோரச் சிங்கள மக்கள் என்றும் கண்டிச் சிங்கள மக்கள் என்றும் பிரித்தனர். கண்டிச் சிங்கள மக்களின் செல்வாக்கை வளர்த்தனர். தென்னிந்தியாவிலிருந்து தேயிலை, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்ய வந்த இந்தியத் தமிழர்களுக்கும் சட்டசபையில் இடம் கொடுத்தனர். சிறுபான்மை சமூகங்களுக்கு அதிகமாக சலுகைகளைக் கொடுத்து இலங்கைப் பெரும்பான்மை சமூகத்திற்கும் சிறுபான்மை சமூகங்களுக்குமிடையே இருந்த நேச உறவை முறித்து பகையுணர்வை வளர்த்தனர். இலங்கைச் சமுதாயத்தில் 4% வீதத்தினருக்கே சட்டசபை அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டது. கல்வியறிவு பெற்றவர்களும், பணம் படைத்தவர்களும் மாத்திரம்தான் வாக்குரிமை மூலம் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம். இவ்வுயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டத்திலுள்ளவர்கள் வாக்குரிமை பரவலாக்கப்படுவதை விரும்பவில்லை. இதே நிலை தான் முஸ்லிம் சமுதாயத்திலும் இருந்தது. முஸ்லிம் சமூகத்தில் இரு பெரும் குடும்பங்களின் போட்டியை நாம் இக்காலத்தில் காண்கிறோம். மாக்கான் மாக்கார் குடும்பத்துக்கும் கபூர் குடும்பத்துக்குமிடையேயிருந்த தலைமைப் பதவிப்போட்டியை இக்காலத்தில் காண்கிறோம். இவ்விரு குடும்பத்தினரும் இஸ்லாத்திலுள்ள சில உட்பிரிவுகளான காதிரியா தரீக்கா, ஷாதுலியாதரீக்கா ஆகிய பிரிவுகளைத் தமது அரசியல் செல்வாக்குக்காக உபயோகித்தனர்.

இனி 1924ஆம் ஆண்டில் கவனர் மேனிங்கினால் கொண்டு வரப்பட்ட சட்டசபை மாற்றங்களைக் கவனிப்போம். பிரதேசவாரி தேர்தல் தொகுதிகளின் மூலம் 14 சிங்களவரும், 7 தமிழர்களும் இடம்பெற்றனர். இனவாரியான தேர்தல் தொகுதிகளின் மூலம் 6 அங்கத்தவர்களும் (இதில் ஒரு தமிழரும் அடங்குவர்) தெரிவு செய்யப்பட்டனர். இன அடிப்படையில் 3 முஸ்லிம்களும், 2 இந்தியத் தமிழர்களும் ஐரோப்பியரின் நலம்காக்க 3 அங்கத்தவர்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் 12 பேரும் நியமிக்கப்பட்டனர். எல்லாமாக 1924 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சட்டசபையில் 47 அங்கத்தவர்கள் இடம்பெற்றனர். இச்சபையில் 14 சிங்களவரும், ஏனைய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 33 பேரும் இருந்தனர். மிகவும் தந்திரமாக பெரும்பான்மையின மக்களான சிங்களவரின் அரசியல் செல்வாக்கை இச்சட்ட மன்ற சீர்திருத்தங்களின் மூலம் கவர்னர் மேனிங் குறைந்தார். இச்சட்டமன்ற திருத்தங்களை எதிர்த்து சிங்கள தலைவர்கள் சீறி எழுந்தனர். இலங்கை தேசீய காங்கிரசின் முறையீடுகளை இங்கிலாந்து அரசாங்கம் ஏற்க மறுத்தது. அதேவேளை நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட சபை கவர்னரின் நேரடி மேற்பார்வையிலேயே இருந்தது. தேர்தலின் மூலம் வந்த எந்தவொரு அங்கத்தவருக்கோ அல்லது அரசாங்கம் சார்பற்ற அங்கத்தவருக்கோ இச்சபையில் இடம் கிடைக்கவில்லை. இலங்கைத் தேசிய காங்கிரசின் முறையீடுகளுக்குப் பிறகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய அரசாங்கம் சிங்களவரின் தொகையை 16 ஆக அதிகரித்தது. அதேவேளையில் முஸ்லிம்களுக்கும், இந்தியத் தமிழருக்கும் தமது பிரதிநிதிகளை தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கும் உரிமையையும் வழங்கியது.

1924 ஆம் ஆண்டின் சீர்திருத்தப்படி நடந்த பொதுத்தேர்தலில் முதலாவதாகப் பாதிக்கப்பட்டவர்கள் கண்டிச் சிங்களவரே. 1920 ஆம் ஆண்டில் கண்டிச் சிங்கள மக்கள் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை 1924 ஆம் ஆண்டில் வாபஸ் செய்யப்பட்டது. 1924 ஆம் ஆண்டில் 23 சிங்கள அங்கத்தவர்களில் 3 பேர் மாத்திரமே கண்டிச் சிங்களவர்களாயிருந்தனர். தமக்குக் கொடுத்த வாக்குறுதியை கரையோரச் சிங்களத் தலைவர்கள் மீறிவிட்டார்கள் என்ற கண்டிச் சிங்களத் தலைவர்களான மொலுமுரே, கொப்ப கடுவ, ரத்னாயக்க போன்றவர்கள் முறையிட்டார்கள். இதனால் கரையோரச் சிங்களவருக்கும் கண்டிச் சிங்களவருக்குமிடையேயிருந்த சுமுகமான உறவு நீங்கி பகையுணர்வே வளர்ந்தது.

இச்சமயத்தில் சிங்களத் தலைவர்களில் ஒருவரான பண்டாரநாயக்க, கண்டிச்சிங்கள மக்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் இலங்கையில் எல்லா இன மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டுமானால் ஒரு சமஷ்டி அரசாங்கம் நிறுவப்பட வேண்டும் என்றும் வாதாடினார். 1915ஆம் ஆண்டு கலகத்திற்குப் பிறகு சிங்கள - பௌத்த தீவிர வாதப்போக்கு ஒரு வகையில் குறைந்திருந்ததென்றாலும், சிங்கள மஹாஜன சபா என்ற உருவத்தில் இவ்வியக்கம் வேறொருவிதமாகத் தலையெடுத்தது. இச்சபை தேசிய காங்கிரசுடன் இணைந்தது, இவர்கள் தமது கூட்டங்களில் சிங்கள மொழியை மாத்திரமே உபயோகித்தனர். தனிச்சிங்களம் என்ற மொழிக் கொள்கையின் ஆரம்பத்தையும் நாம் இக்கால கட்டத்தில் காணலாம். இவர்கள் ஏனைய சிறுபான்மை மக்களின் அரசியல் கொள்கையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்ததோடு, சிங்கள கிறிஸ்தவர்களையும் எதிர்த்தனர். இதுகாலவரையும் அரசியல் ஆதிக்கம் செலுத்தி வந்த சிங்கள உயர்வகுப்பினருக்குஎதிராக பாமர சிங்கள மக்களை தமது இயக்கத்தில் சேர்த்தனர். சிங்கள ஆயுர்வேத வைத்தியர்களும், சிங்கள மொழி ஆசிரியர்களும் சிறு வர்த்தகர்களும் கமக்காரர்களும் சிங்கள மொழி புத்தி ஜீவிகளும் அடங்கிய இவ்வியக்கத்தினரின் அரசியல் வெற்றியை நாம் 1957 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் காண்கிறோம்.

அரசியல் சீர்திருத்தம் கேட்ட சிங்கள உயர் மட்டத்தலைவர்களும், சிங்கள - பௌத்த தீவிரவாதிகளும் நகரங்களில் வாழும் ஏழை சிங்களத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை உதாசீனம் செய்தனர். இத்தொழிலாளர்களின் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து தொழிலாளர்களை ஒன்று சேர்த்து அரசியல் இயக்கமாக இவர்களை மாற்ற முன்வந்தனர். இன்னொரு குழுவினர், இங்கிலாந்தில் ஆங்கிலக் கல்வி மூலம் பட்டம் பெற்று நாடு திரும்பிய கராவ, சலாகம சாதியைச் சேர்ந்த குடும்பத்தினர் தமது அரசியல் வாழ்க்கைக்கு எதிராகக் கொவிகம சாதியைச் சேர்ந்த சிங்கள அரசியல் தலைவர்கள் செயல்படுவார்கள் என்பதை உணர்ந்து இத்தொழிலாளர் இயக்கத்திற்குத் தலைமை தாங்க முன்வந்தனர். இவர்கள்தான் 'சூரியமல் இயக்கம்' என்றும் லங்கா சமசமாஜக் கட்சியென்றும், போல்ஷேவிக் லெனின் கட்சியென்றும், கம்யூனிஸ்ட் கட்சியென்றும் அரசியல் அரங்கத்தில் குதிக்க முன் வந்தனர்.

இதே சமயத்தில்தான் சிங்களத் தலைவர்களின் அரசியல் கொள்கையில் விரக்தியடைந்த தமிழ்த்தலைவர்கள் 1923ஆம் ஆண்டில் 'இலங்கைத் தமிழ் லீக்' என்ற சங்கத்தை ஸ்தாபித்தனர். இலங்கைத் தேசிய காங்கிரசின் ஆரம்பத் தலைவரான சர். பொன்னம்பலம் அருணாசலம் 1921 ஆம் ஆண்டு தம் பதவியை இராஜினாமாச் செய்து காங்கிரசிலிருந்தும் விலகிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். இக்காங்கிரஸ் சிங்கள மக்களின் ஒரு பிரிவினரையே பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்றும் இலங்கையின் சமூகங்களிடையேயிருந்த சுமுகமான உறவை முறித்ததோடு மற்ற சிறுபான்மை சமூகங்கள் சிங்கள மக்களின் மேல் வைத்த நம்பிக்கையையும் சிதறடித்தது என்று அவர் குற்றஞ்சாட்டினார். 1923ல் நடந்த இலங்கைத் தமிழரின் லீக் கூட்டத்தில் பொன். அருணாசலம் பின்வருமாறு உரையாற்றினார்.

"தமிழ் ஈழம் என்ற நம் குறிக்கோளை அடைய வேண்டுமானால் எம்மிடையே ஒற்றுமையை வளர்ப்பதோடு எமது கொள்கைகளை நாம் என்றும் கடைப்பிடிக்க வேண்டும். எமது பாரம்பரியத்தை நினைவு கூர்வதோடு எமது தனித்துவத்தை நாம் பாதுகாக்க வேண்டுமானால் ஒரு பலமுள்ள சமுதாயமாக எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்". இன்றைய தமிழ் ஈழம் என்ற குரலை நாம் 1923 ஆம் ஆண்டிலேயே கேட்கத் தொடங்கிவிட்டோம். இந்தக் கொள்கையை அடிப்படையாக வைத்தே 1930 ஆம் 1940 ஆம் ஆண்டுகளில் அகில - இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கைச் சட்ட சபையில் சிங்களவருக்கு 50 விகிதமும், ஏனைய சிறுபான்மை சமூகங்களுக்கு 50 விகிதம், பிரதிநிதித்துவமும் சட்டசபையில் வழங்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கையை பிரித்தானிய அரசாங்கத்தின் முன் வைத்தது.

சிங்கள - பௌத்த இயக்கத்தினரின் தீவிரப் போக்கினால் விரக்தியடைந்த முஸ்லிம்களும், தமது உரிமையைப் பெறுவதற்காகத் தமிழர்களுடன் ஒத்துழைத்தனர். தமிழ்த் தலைவர்களின் கீழ் முஸ்லிம் தலைவர்களும் இயங்கினர். இவ்வொற்றுமை 1940 ஆம் ஆண்டுவரை நீடித்தது. இலங்கையின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட சிங்களத் தலைவர்கள், முஸ்லிம் தலைவர்களுடைய உதவியை நாடி நின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்னர் மேனிங்கின் 1924 ஆம் ஆண்டு சட்டசபை சீர்திருத்தத்தின்படி மூன்று முஸ்லிம்கள், இலங்கை சட்டசபையில் அங்கம்வகித்தனர். என். எச். எம். அப்துல்காதர், மொகமட்மாக்கான்மார்க்கார், றி. பி. ஜாயா ஆகியவர்களே அம்மூவரும். ஏனைய இன அரசியல் தலைவர்களைப் போல இவர்களும் உயர்மட்ட வர்க்கத்தைச் சார்ந்தவர்களே. ஏழை முஸ்லிம்களின் பிரச்சினைகளை இவர்கள் அறிந்திருக்க நியாயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலில் குடும்பங்களின் ஆதிக்கம்

நாற்பது வருடங்களுக்குமுன் அமெரிக்காவின் அரசியல் பொருளாதாரத்தைப் பற்றி எழுதிய இங்கிலாந்தின் பொருளியல் பேராசிரியர் ஹரல்ட் லாஸ்கி அமெரிக்காவின் பொருளாதார அரசியலை அறுபது குடும்பங்களே ஆதிக்கம் செலுத்துகின்றன என்று எழுதினார். இதே போலத்தான் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையின் அரசியல் சமுதாய பொருளாதாரத் துறைகளில் ஆதிக்கம் செலுத்தியவர்கள் ஒரு சில உயர்மட்டத்தைச் சேர்ந்த குடும்பங்களே. சிங்கள சமூகத்தில் கொய்கம சாதியைச் சேர்ந்த நிலப் பிரபுத்துவ குடும்பங்களும், கராவ - சலாகம சாதியைச் சேர்ந்த புதிய பணக்கார குடும்பங்களும், தமிழ் சமூகத்தில் வெள்ளாள சாதியைச் சேர்ந்த குடும்பங்களும், முஸ்லிம் சமூகத்தில் வியாபாரத்தின் மூலமும், பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் மூலமும், மாணிக்கக்கல் வியாபாரம் மூலமும் பொருள் சம்பாதித்த ஒரு சில குடும்பங்களே அரசியல் தலைமையேற்று நடத்தினர். இக்குடும்பங்களுக்கிடையேயிருந்த போட்டியையும், பகைமையையும் தமக்குச் சாதகமாகப் பாவித்தார்கள் பிரித்தாளும் சூழ்ச்சியில் கைதேர்ந்த பிரித்தானிய ஏகாதிபத்திய அரசாங்கத்தின் ஏஜெண்டுகளான கவனர்கள். இக்குடும்பங்கள் மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புள்ள அரசியலமைப்பைத் தான் கேட்டார்களேயொழிய மக்கள் மயமாக்கப்பட்ட ஜனநாயக அரசியலமைப்பிலமைந்த பூரண சுதந்திரத்தைக் கேட்கவில்லை. இலங்கைச் சனத்தொகையில் 4% விகிதமானவர்களுக்கு மட்டுமே தேர்தல் உரிமை இருந்த காரணத்தினால் சட்ட நிரூபணசபை பிரதிநிதிகள் பிரதேச வாரியாகத் தேர்ந்தெடுக்கப்படும் போது கூட இக்குடும்பத்தி லிருந்தவர்களுக்கு மாத்திரமே பிரதிநிதிகளாக வரும் தகைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. சாதாரண பொது மக்களுக்கு இத்தகைமை இருக்கவில்லை. பொன். இராமநாதனும் அவரின் சகோதரர் பொன். அருணாசலமும் கேட்டதென்ன? மேல் மாகாணத்திலிருக்கும் படித்த தமிழர்களுக்கு மாத்திரமே ஒரு பிரதிநிதி வேண்டும் என்று கேட்டார்களேயொழிய தமிழ் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கேட்கவில்லை. கராவ சாதியைச் சேர்ந்த கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையில் பட்டம் பெற்று வந்த ஜேம்ஸ் பீரிஸின் சட்டசபை நியமனத்தை கொய்கம சாதியைச் சேர்ந்த ஒபேயசேகர பலமாக எதிர்த்தார்.

தமிழர் சமூகத்தை ஆட்டிப்படைத்த வெள்ளாள சாதியினரின் தலைமைத்துவத்துக்கெதிராகத் தோன்றிய இயக்கங்கள் தான் 'தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள்' என்ற போர்வையில் தோன்றிய தாழ்ந்த சாதியினரின் இயக்கங்கள். பெரும்பான்மை சமூகத்தில் கொய்கம சாதியினருக்கெதிராகத் தோன்றிய இயக்கம் தான் ஜே. வி. பி. இயக்கம் என்றால் அது மிகையாகாது. முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்த வரையில் இன்றும் முஸ்லிம் சமூகம் ஒரு சில குடும்பங்களின் ஆதிக்கத்திலேயே இருந்து வருகிறது. முஸ்லிம்களின் தலைமைத்துவம் இக்குடும்பங்களிலிருந்து வர வேண்டும், இல்லையேல் இவர்களுடன் திருமண சம்பந்தம் வைத்தவர்களின் மூலம் வரவேண்டும் என்றிருக்கும்போது, புதுக்கடையில் நடந்த சம்பவம் போல, நிர்க்கதியான ஏழை முஸ்லிம்கள் இனவெறி பிடித்த, சட்டத்தைக் காப்பாற்ற வேண்டியவர்களின் அட்டகாசத்திற்கு இனிமேலும் பலியாக மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? முஸ்லிம் சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து ஒரு தலைவன் தோன்ற வேண்டும். முஸ்லிம் சமூகத்தின் அவலநிலையைப் பொது மேடைகளிலும், பொதுச் சபைகளிலும் எடுத்துரைக்கும் திராணியுள்ள ஒரு தலைவனை முஸ்லிம் சமூகம் இனம் காண வேண்டும். அப்பொழுது தான் முஸ்லிம் சமூகம் தன்மானமுள்ள ஒரு சமூகமாக தலைநிமிர்ந்து நடக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க, கவர்னர் மேனிங் சட்டசபை சீர்திருத்தங்களைக் கொண்டு வந்த சமயத்தில் முஸ்லிம்களுக்குத் தேர்தல் மூலம் பிரதிநிதிகள் வழங்கப்படல் வேண்டும் என்ற முறையீட்டை செய்தது. கமர் காசிமின் தலைமையில் இருந்த இலங்கை முஸ்லிம் சங்கம். இலங்கைச் சட்ட நிருபண சபைக்கு நான்கு பேர் போட்டியிட்டார்கள். என். எச். எம். அப்துல் காதர், எச். எம். மாக்கான் மார்க்கார், றி. பி. ஜாயா, எம். எல். எம். றியால். இந்நான்கு பேரும் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் தமது தேர்தல் பிரசாரங்களைச் செய்தார்கள். ஷாதுலியா கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் தமது கூட்டத்தின் தலைவராகிய மாக்கான் மார்க்காருக்கும், காதிரியா கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் தமது தலைவராகிய என். டி. எச். அப்துல் கபூருக்கும் தமது வாக்குகளைக் கொடுத்து சட்ட நிருபண சபை அங்கத்தவர்களாக தேர்ந்தெடுத்தார்கள். இக்குடும்பங்களைச் சேராத றி. பி. ஜாயாவை படித்த முஸ்லிம் வாலிபர்கள் தெரிவு செய்தார்கள். ஏ.ஈ. குணசிங்கவின் தொழிலாளர் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரும் சிறந்த பேச்சாளரும் ஆகிய றியால் அவர்களை முஸ்லிம் சமூகத்தினர் நிராகரித்தனர். பெருங் குடும்பங்களின் இஸ்லாமியப் போர்வையில் மதி மயங்கிய முஸ்லிம் சமூகத்தினர் ஏழைகளுக்காக வாதாடிய றியால் அவர்களை நிராகரித்தது எம் சமூகத்தவரின் அறியாமையையே காட்டுகிறது.

கலகெதரையைப் பிறப்பிடமாகக் கொண்ட றி.பி.ஜாயா அவர்களுடைய தலைமைத்துவத்தை எள்ளி நகையாடினர். இப்பெரும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் றி.பி.ஜாயா, ஜாவா இனத்தைச் சேர்ந்தரென்றும் முஸ்லிம் சமூகத்தை ஒரு "ஊமை சமுதாயம்" என்று கூறினாரென்றும் துண்டுப்பிரசுரங்களின் மூலமும் பொது மேடைகளிலும் பிரசாரம் செய்து முஸ்லிம் சமூகத்தின் தலைவராயிருக்க இவருக்குத் தகுதியில்லையென்றும் கூறினார்கள். ஜாயா அரசியல் அரங்கில் பிரவேசிப்பதற்கு முன், முஸ்லிம் தலைமைத்துவம் ஒரு வாய் மூடி மௌனியாகவே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கே. எம். டி. சில்வா தன்னுடைய ஆய்வொன்றில் பின்வருமாறு கூறினார்:

"சட்டநிருபண சபையில் அங்கம் வகித்த முஸ்லிம்களில் ஒருவரையாவது நாம் தேசிய மட்டத்தில் வைத்து கணிக்க முடியாது. அவர்களுடைய அரசியல் கொள்கை பழமை வாய்ந்ததாகவே இருந்தது. சட்டசபையில் தமது கருத்துக்களைக் கூறுவதற்கு அவர்களுக்குத் தன்னம்பிக்கையிருக்கவில்லையோ என்னவோ, பிரித்தானிய அரசாங்கத்தின் கொள்கைக்கும், பிறகு, பொன். இராமநாதனின் கருத்துக்களுக்கும் மௌன சம்மதத்தைத் தெரிவித்தார்கள். தேசிய சட்டசபையில் நடந்த வாதப் பிரதிவாதங்களில் கலந்து கொள்ளாமைக்கு இவர்களுக்குத் தன்னம்பிக்கையில்லாததையே காட்டுகிறது என்ற முடிவுக்கு நாம் வருவதற்கு இவர்கள் நடந்து கொண்ட விதமே காரணம். அவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையிலும் அரசியல் வாழ்க்கையிலும் நேர்மையுள்ள மனிதர்களாக இருந்தாலும், மக்களின் அபிமானத்தைப் பெற்று அவர்களைப் பெருஞ்சாதனைகளைப் புரியும் ஒரு சக்தியாக மாற்றும் திறமை அவர்களிடம் இருக்கவில்லை".

1889 ஆம் ஆண்டில் சட்டசபையில் நியமனம் பெற்ற எம். சி. அப்துல் றஹ்மானும், அவருக்குப் பிறகு 1897 ஆம் ஆண்டில் நியமனம் பெற்ற மட்டக்களப்பைச் சேர்ந்த ஏ. எம். ஷரீப் அவர்களும் முஸ்லிம் சமூகத்துக்காக சாதனைகள் ஏதும் புரிந்தார்கள் என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. 1900 ஆம் ஆண்டிலிருந்து 1916 ஆம் ஆண்டுவரை சட்டசபை உறுப்பினராயிருந்த டபிள்யு. எம். அப்துல் றஹ்மான் (வாப்பிச்சிமரைக்காரின் மகன்) சட்டசபை விவாதங்களில் எவ்வித பங்கும் கொள்ளவில்லை என்று டாக்டர் கலீல் தன்னுடைய 'நினைவுகள்' என்ற நூலில் கூறுகிறார். எம்முடைய முன்னைய தலைமைத்துவம் இந்த நிலையில் தான் இருந்தது. 1915 ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிராக நடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலவரத்தில் முஸ்லிம்கள் நாடு பூராவும் அநியாயமாக வெட்டிக் கொல்லப்பட்ட வேளையில் முஸ்லிம்களுக்கெதிராக கண்டனம் தெரிவித்த பொன். இராமநாதனுக்கெதிராக வாதாடும் திறமை இவருக்கிருக்கவில்லை. பேசா மடந்தையாக சட்டசபையில் இவர் இருந்துவிட்டார். தமக்கொரு பிரதிநிதியிருந்தும், அரசியல் அனாதைகளாக்கப்பட்ட முஸ்லிம்கள் பூண்டோடு அழிந்திருப்பார்கள், அன்றைய அந்நிய அரசாங்கம் அவர்களைக் காப்பாற்றாவிட்டால்.

அரசாங்கப் பதவியே தன் குறிக்கோள் என்றிருந்த அப்துல் ரஹ்மானுக்குப்பிறகு, சட்டசபை நியமனம் பெற்ற என். எச். எம். அப்துல் காதர், சர். பொன். இராமநாதன் முஸ்லிம்களை 'ஹம்பயா' என்று கூறியபோது, "உம்மை வன்னியன் என்று அழைத்தால் எப்படியிருக்கும்" என்று பதிலுரைத்தார், என்று டாக்டர் கலீல் கூறுகிறார். ஹம்பயா என்ற வார்த்தையை வாபஸ் செய்யும்படி இவர் கேட்டதற்கிணங்க சபைத்தலைவர், இவ்வார்த்தையை வாபஸ் செய்யும் படி இராமநாதனைப் பணித்தார்.

சட்டசபைக்குள் றி.பி. ஜாயா புகுந்ததன் பின் சபை விவாதங்களில் ஒரு திருப்பத்தைக் காண முடிகிறது. சட்டசபையில் இருந்த மூன்று முஸ்லிம்களில் ஜாயா மாத்திரம் தான் கல்வி கற்றவராக இருந்த காரணத்தினால் முஸ்லிம்களின் குரலாக அவர் மாறினார். சட்டசபை விவாதங்களில் முஸ்லிம்களின், பிரச்சினைகள் எடுத்துக் கூறியதுமல்லாமல், சட்டசபை சீர்திருத்தங்களிலும் முக்கிய பங்கெடுத்தார். முஸ்லிம் சமூகத்தில் பெரும் பொருளும், பெரும் அந்தஸ்தும் பெற்றிருந்த மாக்கான்மார்க்கார் விவாதங்களில் பங்கு கொள்ளும் திறமையில்லாத காரணத்தினால்தான் ஜாயாவுக்கு இப்பதவி கிடைத்தது, என்று கூறுகிறார் பேராசிரியர் கே. எம். டி. சில்வா அவர்கள். "ஜாயா ஒரு சிறந்த பேச்சாளனாக இல்லாவிட்டாலும், அவருடைய அறிவுத்திறமையினால் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளைக் காரணகாரிய முறையில் விவாதிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமை அவருக்கிருந்தது'', என்று அவர் மேலும் கூறுகிறார். ''அன்றைய சட்டசபையில் இளைஞராயிருந்த றி. பி. ஜாயா அரசியலில் அனுபவம் முதிர்ந்த பொன். இராமநாதனின் நிழலிலேயே இருந்தார்'' என்று சில்வா கூறுகிறார். இனி டொனமூர் கமிஷனர்கள் சட்டசபை சீர்திருத்தத்திற்காக இலங்கை வந்த சமயம் முஸ்லிம் தலைவர்கள் எப்படி இயங்கினார்கள் என்பதை அடுத்த அத்தியாயத்தில் ஆராய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொனமூர் கமிஷனர்களின் வருகையும் இலங்கை சமூகங்களிடையே ஏற்பட்ட சலசலப்பும்

இலங்கையின் சட்டசபையில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு ஒரு குழுவை இங்கிலாந்து அரசாங்கம் அனுப்பப்போவதாக, 1927 ஆம் ஆண்டில் கவர்னர் கிளிப்போர்டு அறிவித்தார். டொனமூர் பிரபுவின் தலைமையில் நியமிக்கப்பட்ட இக்குழு இலங்கை வருவதற்கு முன்னேயே தத்தமது பிரேரணைகளை இக்குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு இலங்கையின் எல்லா சமூகங்களும், சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கின.

இலங்கைத் தேசிய காங்கிரசின் அங்கத்தவர்களிடையே அபிப்பிராய பேதங்கள் தோன்றின. காங்கிரசின் தலைமை பீடம் 'இலங்கைக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுய ஆட்சி தான் தேவை' என்றும் வாக்குரிமை எல்லோருக்கும் வழங்கப்படக்கூடாது என்ற கருத்தையும் கொண்டிருந்தது. ஆனால் ஏ. ஈ. குணசிங்கவும் அவருடைய சகாக்களும், வாக்குரிமை வயது வந்த எல்லா மக்களுக்கும் வழங்கப்படல் வேண்டும் என்ற அபிப்பிராயத்தைக் கொண்டிருந்த காரணத்தினால் அவர்கள் 1927 ஆம் ஆண்டில் தேசிய காங்கிரசிலிருந்தும் விலகினார்கள். இலங்கைக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுய ஆட்சி தேவை என்ற கருத்தை ஒரு சில தலைவர்கள் கொண்டிருந்த போதும் டபிள்யு. பெரேரோ போன்றவர்கள் இலங்கை சுய ஆட்சி பெறுவதற்கு இன்னும் தகுதி பெறவில்லை என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். கொழும்பில் வாழ்ந்த சில உயர்மட்ட வர்க்க 'பக்கா' சாஹிப்களான மார்க்கஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்னாண்டோ, ஒபேயசேகரா போன்றவர்கள் ஸ்தாபித்த இலங்கை 'யூனியனிஸ்ட் சங்கம்' இவர்களுடைய கருத்துக்களுக்கு ஆதரவளித்தது.

கண்டிச் சிங்களவரும், சிறுபான்மை இனங்களான தமிழர்களும், முஸ்லிம்களும் தத்தமது பிரேரணைகளையும் குழுவின் முன் சமர்ப்பித்தனர். கண்டிச் சிங்களவரைக் கொண்ட 'கண்டி தேசிய சங்கம்' சுய ஆட்சி பெறுவதற்குத் தமது ஆதரவை அளிக்கவில்லை. இலங்கைக்கு 'சமஷ்டி ஆட்சி முறை'தான் தகுந்தது என்ற கருத்தை இவர்கள் கொண்டிருந்தனர். தமிழ்த்தலைவர்களான பொன். இராமநாதன் போன்றவர்கள் இலங்கைக்கு சுய ஆட்சி வழங்கப்படுதலையும், வாக்குரிமை பரவலாக்கப்படுதலையும் பலமாக எதிர்த்தார்கள். ஆங்கில அரசாங்கம் இலங்கையில் நீடிக்கப்படுவதையே இவர்கள் விரும்பினார்கள்.

டொனமூர் குழுவினர் இலங்கைக்கு வருகிறார்கள் என்ற அறிவித்தல் இலங்கை முஸ்லிம் சமூகத்திலும் சலசலப்பை ஏற்படுத்தியது. சோனகர் சங்கங்களும், மலாய சங்கங்களும் இலங்கையில் முஸ்லிம்கள் மத்தியில் தோன்றத் தொடங்கின. முஸ்லிம்கள் மத்தியில் இருபெறும் சங்கங்கள் தோன்றின. றி.பி. ஜாயாவின் தலைமையில் 'முஸ்லிம் இளைஞர் லீக்' என்ற சங்கமும், என். எச். எம். அப்துல் காதரின் தலைமையில் 'முஸ்லிம் சோஷல் யூனியன்' என்ற சங்கமும் தோன்றின. முஸ்லிம்களின் ஒற்றுமையையும், முஸ்லிம்களின் நலன்களைப் பாதுகாப்பதையும் தமது குறிக்கோளாகக் கொண்டிருந்த இவ்விரு சங்கங்களும், இன அடிப்படையில் வேறுபட்டன. ஜாயாவின் தலைமையிலிருந்த சங்கம் மலாயா இனத்தைச் சேர்ந்த சங்கம் என்றும், அப்துல் காதரின் தலைமையிலிருந்த சங்கம் சோனகர்களின் சங்கம் என்றும் பிரபலமாயின. டொனமூர் குழுவினர் இலங்கைக்கு வந்த சமயத்தில் முஸ்லிம்களிடையே இவ்வின வேறுபாட்டை நாம் காண்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு மருதானைப் பள்ளிவாசல் தர்மகர்த்தா குழு நியமனத்தில் மலாய இனத்தைச் சேர்ந்த ஒருவரும் நியமனம் பெறக்கூடாது. என்ற சட்ட மூலம் மலாய இனத்தைச் சேர்ந்தவர்களை விலக்கி வைத்தனர் சில முஸ்லிம் தலைவர்கள். மலாய இனத்தைச் சேர்ந்தவர்களும், முஸ்லிம் சோனகர்களின் இப்போக்கிற்கு எதிராக மலாய அரசியல் சங்கங்களை நிறுவினர். ஜே. ஏ. குட்டிலானின் தலைமையில் மலாய அரசியல் சங்கமும், எம். ஜே. மஜீதின் தலைமையில் கண்டி மலாய சங்கமும் தோன்றின. இவ்விரு இனத்தவரும் தமக்கு வெவ்வேறு பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்று டொனமூர் குழுவினரைக் கேட்டுக் கொண்டனர். றி. பி. ஜாயா, முஸ்லிம்கள் இவ்வினரீதியில் பிரிவதை விரும்பவில்லை. மலாயர்களுக்கும், சோனகர்களுக்கும் தனித்தனியே பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற இவர்களது கோரிக்கைகளை நிராகரித்த ஜாயா பொதுவாக முஸ்லிம்களுக்கு தனிப்பிரதிநிதித்துவம் வேண்டும் என்றே கேட்டார். முஸ்லிம் தலைவர்கள், சிங்களத் தலைவர்களின் தேசிய காங்கிரசை சந்தேகக்கண் கொண்டு பார்த்த வேளையில் ஜாயா தேசிய காங்கிரசை ஆதாரித்தார். 1928 ஆம் ஆண்டு சட்டநிருபண சபையில் உரையாற்றிய ஜாயா பின்வருமாறு கூறினார்.

"எல்லா சமூகத்தினருக்கும் பொதுவாக ஸ்தாபிக்கப்பட்ட சங்கமே தேசிய காங்கிரஸ். இதன் கதவுகள் எல்லோருக்கும் திறந்தேயிருருக்கும். எந்த சமூகத்தையும் அது விலக்கி வைக்கவில்லை. முகம்மதியர்கள், தமிழர்கள், இந்தியர்கள், பறங்கியர், சிங்களவர் ஆகிய எல்லா சமூகத்தினரும் ஒன்று சேர்ந்துதான் இலங்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டும்".

நாட்டின் ஒற்றுமைக்காகவும், சமூகங்களிடையே நேச உறவுக்காகவும், றி. பி. ஜாயா பாடுபட்ட அதே வேளையில் சமூகங்களிடையே வெறுப்பு உணர்ச்சியை வளர்ப்பதிலும் சாதி, சமய, மொழி, பிரதேச பிரிவினைகளைக் கொண்டு வருவதிலும் சிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் நேரத்தை செலவிட்டார்கள். முஸ்லிம்களிடையேயும் பல பிரிவுகளை நாம் காண முடிகிறது. டொனமூர் கமிஷனர்களின் வருகையோடு முஸ்லிம்கள் மத்தியில் பல அரசியல் சங்கங்கள் தோன்றின. என். எச். எம். அப்துல் காதரின் தலைமையில் 'முஸ்லிம் அரசியல் சங்கமும்', எம். எல். எம். ரியாலின் தலைமையில் 'சோனகர் அரசியல் சங்கமும்', ஏ.கே. காரியப்பரின் தலைமையில் 'மட்டக்களப்பு முஸ்லிம் சங்கமும்', எம். எம். இஸ்மாயிலின் தலைமையில் 'காலி முஸ்லிம் சங்கமும்', எஸ். ஏ. மரிக்காரின் தலைமையில் 'காலி முஸ்லிம் வாலிபர் சங்கமும்' 'கொழும்பு முஸ்லிம் வாலிபர் சங்கமும்' தோன்றின. இச்சங்கங்களெல்லாம் தனித்தனியே தத்தமது பிரேரணைகளை கமிஷனர்கள் முன் சமர்ப்பித்தனர். எல்லா சங்கங்களும் பொதுவாக முஸ்லிம்களின் பிரநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்றே கேட்டனர். டொனமூர் கமிஷனர்களின் கருத்துப்படி, "ஒவ்வொரு முஸ்லிம் சங்கமும் தமது முயற்சியினாலேயேதான் முஸ்லிம்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரித்தது என்று பின்னால் டம்பம் அடிப்பதுதான் அவர்களின் நோக்கமாயிருந்தது". "முஸ்லிம் சமுதாயத்தில் இளைஞர் சமுதாயத்திற்கும், பழைய மரபினருக்குமிடையே வேற்றுமைகள் இக்காலப்பகுதியில் தான் நாம் காண்கிறோம்" என கலாநிதி காமில் அசாத் கூறுகிறார். மேலும் அவர் "இக்காலகட்டத்தில்தான் கொழும்பு முஸ்லிம்கள் என்றும் பிரதேச முஸ்லிம்கள் என்றும் பிரிவினையை முஸ்லிம்களிடம் நாம் காண்கிறோம்" என்று கூறுகிறார். கொழும்பான், மட்டக்களப்பான், காலியான், நாட்டான் என்ற பதங்கள் முஸ்லிம்களிடையே பரவலாக உபயோகிக்கப்பட்டன.

கமிஷனர்களின் விசாரணையில் சோனகர்கள் என்றும் மலாயர்கள் என்றும் இனவாத பிரிவைனையின் உச்சகட்டத்தை நாம் காண்கிறோம். மலாயர் தூதுக்குழுவிற்குத் தலைமை தாங்கிய எம். ஜே. மஜித், "நாம் எப்போதும் முற்போக்கு எண்ணம் படைத்த மலாயர்களுடன் தான் தொடர்பு கொள்ளுவோமேயொழிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்போக்கு எண்ணம் படைத்த பின்தங்கிய சோனகர்களோடு தொடர்பு கொள்ள மாட்டோம். அதனாற்றான் எம் சமூகத்திற்குத் தனியாக பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கேட்கிறோம்'' என்று கமிஷனர்களிடம் கூறினார். கொழும்பில் நடந்த மலாயர்களின் கூட்டத்தில் மன்தாரா, சோனகர்களைக் குறிக்கும் போது 'தம்பிகள்' என்ற பதத்தைப் பிரயோகித்தார். சோனகர்களைப் பற்றி மிகவும் மோசமான முறையில் குறிப்பிட்ட மலாயர்களின் போக்கைச் சோனக சங்கங்கள் பலமாக எதிர்த்தன.

அந்நியர்களின் முன்னிலையில் தமது குரோதங்களையும், பொறாமைகளையும், பகைமை உணர்ச்சிகளையும் மற்றும் வேற்றுமைகளையம் பகிரங்கமாகக் கூறிய இத்தலைவர்களுக்கு சம்மட்டியடித்தாற் போலிருந்தது, கமிஷனர்களின் கூற்று. 'முஸ்லிம்களின் நன்மையைக் கருதி முஸ்லிம்கள் தமக்குள்ளே இருக்கும் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக, ஏனைய சமூகங்களோடு ஒத்துழைக்கவேண்டும் என்ற முடிவுக்கு நாம் வருகிறோம்' என்று கமிஷனர்கள் தமது அறிக்கையில் கூறினார்கள். ஒரு சமூகத்தின் தலைவர்களுக்குத் தீர்க்க தரிசனப்பார்வை இருக்க வேண்டும். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போல பிரிவினைகளை உண்டாக்குவதன் மூலம்தான் தமக்குப் பதவிகள் கிடைக்கும் என்ற இழிவான எண்ணம் படைத்த தலைவர்களின் போக்கினால் தான் ஒரு சமூகத்தின் எதிர்கால வாழ்வு நாசமாகிறது. குறிப்பாக ஒரு சிறுபான்மை சமூகத்தில் சந்தர்ப்ப வாதிகள் தோன்றுவதால் அச்சமூகத்தின் நலன் காற்றில் பறக்கவிடப்படுகிறது''. இந்நாட்டில் சமூகங்களிடையே இருக்கும் நேச உறவு முறிவதற்கும் வகுப்பு வாத, மத, இனவேற்றுமை வளர்வதற்கும் காரணமாக இருந்த இனவாத பிரதிநிதித்துவத்தை நாம் அரசியலிலிருந்து ஒழிக்கிறோம்,'' என்று கமிஷனர்கள் முடிவெடுத்தார்கள். கமிஷனர்களின் அறிக்கை 1928 ஆம் ஆண்டு வெளியானபோது முஸ்லிம்கள் பொதுக்கட்டங்களை வைத்து, தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டனத்தைத் தெரிவித்தார்கள். கமிஷனர்களின் முடிவு தமது சமூகத்தை வெகுவாகப் பாதிக்கும் என்று முஸ்லிம்கள் பயந்தார்கள்.

கமிஷனர்களின் வருகை இலங்கைத் தமிழர்களின் மத்தியிலும் ஒரு பெரும் சலசலப்பையேற்படுத்தியது. இந்திய காங்கிரஸ் அடிப்படையில் யாழ்பாணத்தில் 'இளைஞர் காங்கிரஸ்' அமைக்கப்பட்டது. 1931ஆம் ஆண்டில் இந்தியத் தேசியத் தலைவர்களில் ஒருவரான கமலாதேவி சட்டோபாத்யாய யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொனமூர் அரசியல் திட்டத்தினால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு

இலங்கை அரசியலில் மாற்றங்களைக் கொண்டுவரும் நோக்கத்துடன் நியமிக்கப்பட்ட டொனமூர் அரசியல் குழு இலங்கைக்கு வந்த சமயம் எல்லா சமூகங்களும் தங்கள் தங்கள் பிரேரணைகளை இக்குழுவிற்கு சமர்ப்பித்தனர். கரையோர சிங்களத் தலைவர்களைக் கொண்ட இலங்கைத் தேசிய காங்கிரஸ் மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புள்ள அரசாங்கத்தைக் கேட்டனர். தமிழ்த்தலைவர்களும், முஸ்லிம் தலைவர்களும் இன அடிப்படையில் அமைக்கப்பட்ட பொறுப்புள்ள ஓர் அரசாங்கத்தைக் கேட்டனர். கண்டிச் சிங்களவர், சமஷ்டி அரசாங்கம் இலங்கையில் நிறுவப்பட வேண்டும் என்று கேட்டனர். இதில் ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால் இவர்கள் எல்லோரும் உயர்மட்டத்தைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த, அதிலும் குறிப்பிட்ட சில குடும்பங்களைச் சேர்ந்தவர்களே தமக்குச் சாதகமான ஓர் அரசியல் அமைப்பைக் கேட்டனர். தம் சாதியினருக்கும், குடும்பத்தினருக்கும் மாத்திரமே அரசியல் அதிகாரமும், பதவியும் கிடைக்க வேண்டும் என்று இவர்கள் கேட்டதில் ஒரு தவறுமில்லை. மேல் மட்டத்திலிருந்த இவர்கள் இந்நாட்டைப் பற்றியோ இந்நாட்டின் நலனைப் பற்றியோ மக்களின் எதிர்காலத்தைப் பற்றியோ நினைக்க வேண்டும் என்பது என்ன நியாயம். இதற்கு விதிவிலக்காக ஓர் இயக்கம் வடக்கில் தோன்றியது. இந்திய சுதந்திர இயக்கத்தின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாண இளைஞர் மன்றம் இலங்கைக்குப் பூரண சுதந்திரம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விளைஞர் மன்றத்தின் முக்கிய அங்கத்தவர்களாக ஆசிரியர்களும், மாணவர்களுமே இருந்தனர். கமலாதேவி சட்டோபாத்யாயவின் தலைமையில் 1931ல் நடந்த யாழ்ப்பாண இளைஞர் மன்றத்தின் வருடாந்த கூட்டத்தில் சுயராஜ்யம் என்ற முடிவு எடுக்கப்பட்டது. டொனமூர் சட்ட அமைப்பில் நடத்தப்பட இருந்த தேர்தலைப் பகிஷ்கரிக்க முடிவெடுத்தது இவ்வாலிபர் சங்கம். பழைய தலைமைத்துவத்தை விட புதிய தலைவர்களுக்கு செல்வாக்கு அதிகமாயிருந்தது. பழைய தலை முறையினர் மானிப்பாய் போன்ற இடங்களில் கூட்டங்களை வைத்தும், உள்ளூர் ஆட்சிமன்றங்களின் மூலம் தீர்மானங்களை நிறைவேற்றியும் பலனில்லாமல் போய்விட்டது. இவர்களுடைய முடிவுக்கு சிங்களப் பிரதேசங்களிலிருந்து ஆதரவு கிடைத்தது. என்றாலும் யாழ்ப்பாணத்துத் தமிழர், தேர்தலைப் பகிஷ்கரித்ததைப் போல் இவர்கள் எதுவும் செய்யவில்லை.

டொனமூர் அரசியல் திட்டத்தைத் தமிழ்த்தலைவர்கள் எதிர்த்ததற்கு முக்கிய காரணம், சட்டசபையில் தமிழ்ப் பிரதிநிதித்துவம், சிங்களப்பிரதிநிதித்துவத்தோடு ஒப்பிடுகையில் 2:1 இருந்த நிலைமை போய் டொனமூர் திட்டத்தில் 5:1க்குக் குறைந்ததுவேயாம். டொனமூர் திட்டத்தில், அரச சபை அங்கத்தவர்கள் ஏழு நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட குழுக்களாகப் பிரிந்து இக்குழுக்களின் தலைவர்கள் அமைச்சர் சபையில் அங்கம் வகிக்கும் உரிமை பெற்றிருந்தனர். தமிழர்களின் பகிஷ்கரிப்பினால் அரச சபையிலோ இவ்வமைச்சர் சபையிலோ ஒரு யாழ்ப்பாணத் தமிழர் கூட இடம் பெறவில்லை. மாறாக கவர்னர், இந்தியத்தமிழர்களில் ஒருவரான பெரியண்ணன் சுந்தரத்தை அமைச்சர்களில் ஒருவராக நியமித்தார். உண்மையில் இப்பதவி மட்டக்களப்புத் தமிழ் பிரதிநிதியான தம்பிமுத்துவுக்குப் போயிருக்கவேண்டும். டொனமூர் சீர்திருத்தம் சட்டசபையின் தீர்மானத்துக்கு விடப்பட்ட போது சபை 18-18 ஆகப் பிரிந்தது. தம்பிமுத்துவின் ஒருவாக்கினால் 19-17 என்ற முடிவில் டொனமூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்தப் பிரேரணை சட்டமாக அமுலாக்கப்பட்டது. தமிழர் தலைமைத்துவம், பழைய தலைமையினரும், புதிய தலைமுறையினரும்,– டொனமூர் திட்டத்தை எதிர்த்த வேளையில் மட்டக்களப்பைச் சேர்ந்த தம்பிமுத்து அதற்கு ஆதரவளித்தார்.

தம்மை ஒரு தேசிய இனமாகக் கருதுவதற்குத் தகைமையில்லாதிருந்த போதும், கண்டிச் சிங்களவர், தம் சமூகத்திற்கு ஒரு சமஷ்டி ஆட்சி தான் சிறந்தது என்ற கோரிக்கையை கமிஷனர்கள் முன்வைத்தபோது தமிழ்த் தலைவர்கள் தமிழ் சமூகத்தை ஒரு தேசிய இனமாகக் கருதாமல் தம்மை ஒரு வகுப்புவாத சமூகமாகக் கருதியதற்கு அவர்களுடைய உயர்மட்ட வர்க்க உணர்வுதான் காரணம் என்று தன்னுடைய 'விடுதலைப் போராட்டம்' என்ற நூலில் சச்சி பொன்னம்பலம் கூறுகிறார். 'அவர்கள் சிறுபான்மை இனத்தின் உரிமைகளுக்காகப் போராடினார்களேயொழிய ஒரு சமஷ்டி ஆட்சியில் தமிழர் சமூகத்திற்கு ஒரு தேசிய இடத்தைப் பெறத் தவறி விட்டார்கள்' என்று அவர் மேலும் கூறுகிறார். 1944ஆம் ஆண்டில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்று பிரகடனஞ் செய்த சமயத்தில் கூட தமிழ்த்தலைவர்கள் இதன் முக்கியத்துவத்தை உணரத் தவறி விட்டார்கள் என்று அவர் கூறுகிறார். ஒரு தலைமைத்துவத்திற்கு தீர்க்கதரிசனப் பார்வையிருக்க வேண்டும். அப்படி இருந்திருந்தால் பிரித்தானிய அரசாங்கத்திடமிருந்து சமஷ்டி ஆட்சியை தமிழர்கள் எப்பொழுதோ பெற்றிருப்பார்கள்.

இது இவ்வாறிருக்க, முஸ்லிம் சமூகத்தின் தலைவர்கள், நாட்டுக்கும் தம் சமூகத்திற்கும் செய்த சேவைகள் என்ன? என்று பார்ப்போம். 1930ஆம் ஆண்டில் சர். பொன்னம்பலம் இராமநாதன் இறந்தார். அவருடைய மறைவுக்குப்பின் அவர் வகித்த ஸ்தானத்தை நிரப்புவதற்குத் தமிழர்களில் யாரும் இருக்கவில்லை. இந்தியத் தமிழர்களின் பிரதிநிதியாகவிருந்த பெரி. சுந்தரத்தினால் கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. இப்பதவியை நிரப்புவதற்கு முஸ்லிம் தலைவர்களில் ஒருவருக்கு வாய்ப்பிருந்தது. "முஸ்லிம்களின் அன்றைய பிரதிநிதியாயிருந்த மாக்கான் மார்க்கார், அரசியலில் அனுபவ முதிர்ச்சியும், வியாபார நுணுக்கமும் கொண்டவராயிருந்தா ரென்றாலும், இத்தலைமைப் பதவியை நிரப்ப அவருக்குத் தகுதியிருக்கவில்லை. காரணம், அவருக்கு அரசியல் தீர்க்கதரிசனப்பார்வையோ, பாமர மக்களின் தொடர்போ இருக்கவில்லை" என்று பேராசிரியர் கிங்ஸ்லி சில்வா கூறுகிறார்.

இக்கால கட்டத்தில் முஸ்லிம்கள் தங்கள் தனித்துவத்தைக் காப்பாற்றுவதிலேயே மும்முரமாயிருந்தார்கள். அரசாங்கத்தின் ஆதரவுடன் முஸ்லிம் விவாகம், விவாகரத்துச் சட்டத்தை அமுலாக்கினார்கள். அடுத்து முஸ்லிம் மரபுரிமைச்சட்டத்தையும், வக்புச் சட்டத்தையும் அரசசபையில் நிறைவேற்றினார்கள். முஸ்லிம்களின் நலனுக்காக கொண்டுவரப்பட்ட இச்சட்டங்களின் காரணகர்த்தா, அரசாங்கத்தால் சட்டசபை அரசாங்க உத்தியோகராக நிமிக்கப்பட்ட உயர்நீதிபதி அக்பர் அவர்களே.

மாக்கான் மாக்கார் குடும்பத்துக்கும் எம். டி. எச். அப்துல் கபூர் குடும்பத்துக்குமிடையேயிருந்த அரசியல் போட்டியின் உச்சக்கட்டத்தை நாம் இக்காலப்பகுதியில் காண்கிறோம். அகில இலங்கை முஸ்லிம் லீக் என். டி. எச். அப்துல் கபூருக்கு 'சர்' பட்டம் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்திற்கு சிபார்சு செய்தது. கவர்னரும், அப்துல் கபூருக்கு 'சர்' பட்டத்தினின்றும் தரத்தில் குறைந்த 'சி.பி. இ'. பட்டத்தை வழங்க முடிவெடுத்தார். அக்பரின் ஆலோசனையின் பேரில் அப்துல் கபூர் இப்பட்டத்தை நிராகரித்தார்.

இதே சமயத்தில் அகில இலங்கை சோனகர் சங்கம் மாக்கான் மாக்காருக்கு 'சர்' பட்டம் வழங்கப்படல் வேண்டும் என்று அரசாங்கத்திற்கு சிபார்சு செய்தது. இதையடுத்து மாக்கான் மாக்காரும்,கொழும்பு மாநகரமே கண்டிராத ஒரு பெரும் விருந்தை கவர்னருக்கு அளித்தார். விருந்துண்ட கவர்னரும் நன்றிக்கடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்காமல், மாக்கான் மார்க்காருக்கு 'நைட்' பட்டம் வழங்கினார். மாக்கான் மார்க்கார், 'சேர்' மாக்கான் மாக்கராக மாறினார். ஏனைய தலைவர்கள் தங்கள் சமூகத்தின் நலனுக்காகவும் நாட்டின் நலனுக்காகவும் பாடுபட்ட அதேவேளையில் முஸ்லிம் தலைவர்கள் பட்டம் பெறுவதில் தங்கள் நேரத்தை விரயம் செய்தார்கள்.

டொனமூர் சட்ட அமைப்பின்படி முஸ்லிம்கள் மூன்று தேர்தல் தொகுதிகளில் மாத்திரம்தான் வெற்றிபெறும் வாய்ப்பிருந்தது. மத்திய கொழும்பில் ஒன்றும் கிழக்கு மாகாணத்தில் இரு இடங்களுமே அவர்களால் வெற்றி பெறலாம் என்றிருந்தது. மத்திய கொழும்புத் தொகுதியில் றி. பி. ஜாயா தோற்றார். இதற்கு காரணம் இலங்கை சோனகர் சங்கம் றி.பி. ஜாயாவை ஆதரிக்காமல், எ. ஈ. குணசிங்கவை ஆதரித்ததே என்று டாக்டர் கலீல் கூறுகிறார். மட்டக்களப்புத் தெற்குத் தொகுதியில் மாக்கான் மாக்கார் வெற்றிபெற்றார். முஸ்லிம்கள் பயந்தமாதிரியே அவர்களுக்கு டொனமூர் அமைப்பில் போதிய அளவு பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. ஐம்பது தொகுதிகளில் வெற்றியீட்டிய பிரதிநிதிகளில் ஒரேயொரு முஸ்லிம்தான் இருந்தார். சட்டசபையில் மூன்று முஸ்லிம்கள் இருந்தார்கள். டொனமூர் அரச சபையில் ஒரேயொருவர் இருந்தார். கவர்னர், மலாயா இனத்தைச் சேர்ந்த சல்டின் என்பவரை அரசசபைக்கு நியமித்தார். எனவே 60 அங்கத்தவர்களைக் கொண்ட அரசசபையில் 2 முஸ்லிம்களே இருந்தார்கள். மாக்கான் மாக்கார் போக்குவரத்து குழுவின் தலைவராக நியமனம் பெற்றார். இதனால் இவர் அமைச்சரவையில் இடம்பெற்றார்.

பொதுத்தேர்தல் நடந்து முடிந்த பிறகு 1931ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதியில் கொழும்பில் முஸ்லிம்களுடைய ஒரு மாபெருங்கூட்டம் நடந்தது. முஸ்லிம்களுக்கு இன்னும் இரண்டு பிரதிநிதிகள் வழங்கப்பட வேண்டும் என்று கவர்னர் தொம்சனிடம் கேட்பதென்று முடிவாகியது. கவர்னர் தொம்சன் முஸ்லிம்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கையை நிராகரித்ததுமல்லாமல் இங்கிலாந்தின் காலனித்துவ அமைச்சிற்கு முஸ்லிம்களுக்கெதிராக ஓர் அறிக்கையையும் அனுப்பிவைத்தார். "என்னைச் சந்தித்த முஸ்லிம் தூதுக்குழுவினர் தம்முடைய விண்ணபத்திற்கான தகுந்த காரணங்களை சமர்ப்பிக்கும் திறமையற்றவர்களா யிருந்தார்கள். முஸ்லிம்களுடைய நலன் அரச சபையினால் பாதுகாக்கப்பட மாட்டாது என்ற அவர்களின் சந்தேகம் ஆதாரமற்றது. இங்கிலாந்துக்கு முறையீடு செய்வதற்காக வரவிருக்கும் முஸ்லிம் தூதுக்குழவின் தலைவர்களான றி.பி. ஜாயாவும், அப்துல் காதரும் பொதுத்தேர்தலில் தோல்வியடைந்தவர்களே. இவர்கள் தங்கள் சொந்த நலனுக்காகவே இம்முறையீட்டை செய்கிறார்கள்" என்று கவர்னர் தொம்சன், இங்கிலாந்தின் காலனித்துவ அமைச்சருக்கு எழுதினார். காலனித்துவ அமைச்சர் முஸ்லிம் தூதுக்ககுழுவை சந்திக்க மறுத்துவிட்டார். முஸ்லிம்களிடையே ஒன்றுமையில்லாத காரணத்தினால் தமக்குக்கிடைக்க வேண்டிய பிரதி நிதித்துவத்தையும் அவர்கள் இழந்து விட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொனமூர் கமிஷனர்கள் இலங்கை வந்த சமயம் இலங்கையில் இருந்த பொருளாதார சமூக அமைப்பு

டொனமூர் குழுவினர் இலங்கைக்கு வந்த சமயத்தில் இலங்கையின் சமுதாய, பொருளாதார அமைப்பை நாம் அவதானிக்க வேண்டியது அவசியம். இவ்விரு துறைகளின் பாதிப்பை அன்றைய அரசியல் தலைவர்களின் நோக்கத்திலும், கருத்துக்களிலும் நாம் அறியலாம். கரையோரச் சிங்களத் தலைவர்களுக்கும், கண்டிச் சிங்களத் தலைவர்களுக்கு மிடையேயிருந்த கருத்து வேறுபாடுகளுக்கு பொருளாதார வேறுபாடு ஒரு முக்கிய காரணமாயிருக்கலாம். இலங்கை மலைப்பிரதேசத்தில் ஏற்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் வளர்ச்சியின் காரணமாக இப்பிரதேசத்தில் குடியேறிய இந்தியத் தமிழர்களின் வருகை ஒருவித பயப்பீதியை கண்டிச் சிங்கள மக்களிடையே ஏற்படுத்தியது. கண்டிச் சிங்களத் தலைவர்களிடையே தோன்றிய கருத்து வேறுபாடுகளுக்கு இதுவும் ஒரு காரணமாயிருக்கலாம். யாழ்ப்பாணத்தமிழர் சமுதாய அமைப்பும், இவ்வமைப்பிலே பொருளாதார காரணிகளால் ஏற்பட்ட வெடிப்புகளும், தமிழர் தலைவர்களின் கருத்துக்களுக்குக் காரணமாயமைந்தது. கிழக்கு மாகாணத்தைத் தவிர்த்த ஏனைய பாகங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் பெரும்பாலும் ஒரு வர்த்தக சமுதாயமாக இருந்த காரணத்தினால் 1929ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலக பொருளாதார வீழ்ச்சி முஸ்லிம் சமூகத்தினரை வெகுவாகப்பாதித்தது. இதன் விளைவாக முஸ்லிம் தலைவர்களிடையே ஏற்பட்ட கருத்து வெளிப்பாட்டினை நாம் இக்கால கட்டத்தில் அவதானிக்க முடிகிறது. வியாபாரத்தில் வைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை போய், கல்வி வளர்ச்சியில் முஸ்லிம்கள் அதிக கவனம் செலுத்துவதை நாம் கவனிக்கலாம். இக்காலகட்டத்திற்றான், நாம் முஸ்லிம்களின் தனிப்பெருந்தலைவராக ராசிக்பரீத் அவர்களின் எழுச்சியைக் காண்கிறோம். அதோடு ராசிக் பரீத் அவர்களுக்கும், ஜாயா அவர்களுக்குமிடையே ஏற்பட்ட தலைமைத்துவப் போட்டியையும் நாம் இக்கால கட்டத்தில்தான் அவதானிக்க முடிகிறது. இதே காலத்தில் தான் கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கும், ஏனைய பிரதேச முஸ்லிம்களுக்குமிடையே ஏற்பட்ட இடைவெளியையும் நாம் காண முடிகிறது. டொனமூர் குழுவினரின் சர்வஜன வாக்குரிமைதிட்டத்தின் காரணமாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அரசியல் முக்கியத்துவம் பெறுகின்றனர். இதன் காரணமாகத்தான் கொழும்பு முஸ்லிம் தலைவர்கள் தேர்தல் காலங்களில் தங்கள் பரிவாரங்களுடன் கிழக்கு மாகாணத்தை நோக்கிப்படையெடுப்பதைக் காண்கிறோம். சர்வஜன வாக்குரிமைத்திட்டம், சிங்கள மக்களிடையே சிங்கள-பௌத்த இன உணர்வுக்குத் தூபம் இடும் என்ற பீதி அன்று இலங்கையிலிருந்த ஐரோப்பிய பறங்கியர் சமூகத்தின் தலைவர்களது கருத்துக்களையும் பாதித்தது. சிங்கள-பௌத்த மக்களின் இவ்வின உணர்வு கிறிஸ்தவ மக்களிடையேயும் ஒருவித பீதியை ஏற்படுத்தியது.

1931ஆம் ஆண்டு டொனமூர் குழுவினரின் அறிக்கை வெளியான சமயம், இலங்கையின் சனத்தொகையை நாம் ஆராய வேண்டியது அவசியமாகிறது. காரணம், சர்வஜன வாக்குரிமை இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்டபோது எப்படி ஒவ்வொரு சமூகத்தையும் இப்புதிய திட்டம் பாதித்தது என்பதை அறிவதற்கே. 1871ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 2,400,000 மாக இருந்த சனத்தொகை 1931ஆம் ஆண்டில் இரட்டிப்பாகியது. 5,306,871ஆகப் பெருகியது. 1871 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் சனத்தொகை இயற்கையாகப் பெருகியதைவிட தென்னிந்தியாவிலிருந்து இலங்கையில் குடியேறிய மக்களின் தொகையே அதிகமாயிருந்தது. 1871ஆம் ஆண்டிலிருந்து 1881 ஆம் ஆண்டுவரையிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதிகளில் இலங்கையின் சனத்தொகை 119,792 ஆகப் பெருகியபோது இந்திய மக்களின் தொகை 239,566 ஆகப் பெருகியது. 1881 ஆம் ஆண்டிலிருந்து, 1931 ஆம் ஆண்டுவரையிலுமுள்ள காலப்பகுதியில் இந்தியர்களின் வருகை 844,921 ஆக இருந்தது. இதே காலப்பகுதியில் இலங்கையின் சனத்தொகை இயற்கை வளர்ச்சி 1,702,213 ஆக இருந்தது. இந்த ஐம்பது வருட காலப்பகுதியில் இலங்கையின் சனத்தொகையின் இயற்கை வளர்ச்சி யோடு ஒப்பிடுகையில் இந்தியர்களின் எண்ணிக்கை 50% விகிதமாக இருப்பதை நாம் அவதானிக்கலாம். இலங்கை சனத்தொகையில் கூடிய சதவிகிதமானோர் வாழும், தென்மேற்குக் கரையோரப் பகுதிகளில் 1901ஆம் ஆண்டில் இருந்த சனத்தொகை 1,382,549, 1946ஆம் ஆண்டில் 2,688,609 பெருகியபோது மலைநாட்டுப் பிரதேசத்தில் 1,131,261 ஆக இருந்த சனத்தொகை 1946ல் 2,252,910 ஆகப் பெருகியது. இதற்குக் காரணம் பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக வந்த இந்தியர்களின் வருகையே. இவர்களுடைய வருகையினால் கண்டிச் சிங்களவரின் சனத்தொகையின் விகிதாசாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

1891 ஆம் ஆண்டிலிருந்து, 1930 ஆம் ஆண்டுவரை உள்ள காலப்பகுதியில் 468,132 இந்தியர்கள் இலங்கையின் ரப்பர், தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இலங்கை வந்தார்கள். இதே காலப்பகுதியில் 320,744 இந்தியர்கள் இந்தியாவை நோக்கித் திரும்பிச் சென்றார்கள். 1930ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கைக்கு வந்த இந்தியர்களின் தொகையை விட இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சென்றவர்களின் தொகை அதிகமாக இருந்தது. இதற்கு 1929ஆம் 30ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உலகப் பொருளாதார வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்ட இலங்கைப் பெருந்தோட்டங்களின் வருவாய் குறைந்தே காரணம் என்று புவியியல் பேராசியர் சோ. செல்வநாயகம் தன்னுடைய ஆய்வுக்கட்டுரையொன்றில் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியத் தமிழருக்கும் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதையெதிர்த்துப் போராடிய சிங்களத் தலைவர்களின் நடவடிக்கைகளே இக்காலப் பகுதியில் அரசியல் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்தியத் தொழிலாளர்களின் முதலாளிகளான ஐரோப்பியத் துரைமார்களின் அரசியல் செல்வாக்கு வளரலாம் என்று சிங்களத் தலைவர்கள் பயந்தனர். இவர்களின் செல்வாக்கு வளர்ந்தால் தம்முடைய சுதந்திர இயக்கம் வெகுவாகப் பாதிக்கப் படலாம் என்றும் தேசிய காங்கிரஸ் தலைவர்கள் கருதினர். மலைநாட்டுப் பிரதேசங்களில் இந்தியத்தமிழர்களின் எண்ணிக்கை இப்பிரதேச சிங்கள மக்களின் அரசியல் வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கலாம் என்றும் எண்ணினர். எனவே கண்டிச் சிங்களத் தலைவர்களும், கரையோரச் சிங்களத் தலைவர்களும் இதில் இணக்கம் கண்டனர். இலங்கைத் தமிழர் தலைவர்களுக்குத் தூரத்து அரசியல் பார்வை இருந்திருந்தால் இந்தியத் தமிழர்கள் வாக்குரிமை பெறுவதை ஆதரித்திருப்பார்கள்; சிறுபான்மையின மக்களின் அரசியல் செல்வாக்கும் ஓங்கியிருக்கும்.

1931 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி இலங்கையின் சனத்தொகை 64% சதவிகிதத்தினர் சிங்களவராகவும், (41% கரையோர சிங்களவரும், 23% கண்டிச் சிங்களவரும் இதில் அடங்கும்) 12% விதத்தினர் இலங்கைத் தமிழராகவும், 13% சதவிகிதத்தினர் இந்தியத் தமிழராகவும் 10.2% விகிதமானோர் முஸ்லிம்களாகவும் இருந்தனர். இலங்கை சோனகர் சங்கம் முஸ்லிம்களுக்குச் செய்த பெரும் ' துரோகம்' முஸ்லிம்களைப் பல பிரிவுகளாகப் பிரித்ததுதான். இதன் காரணமாக இலங்கைச் சோனகர் 5.4% மாகவும், இந்திய முஸ்லிம்கள் 4.5% விகிதமாகவும், மலாயர்கள் 0.27% மாகவும் பிரிக்கப்பட்டனர். 10% சதவிகிதமாக இருக்க வேண்டிய முஸ்லிம்கள் 5% மாகக் குறைக்கப்பட்டனர். இச்சங்கம் முஸ்லிம்களுக்குச் செய்த 'சேவைகளிலெல்லாம் பெரும் சேவையாகும்'. இதனால் முஸ்லிம்கள் அரசியல் செல்வாக்கும் குறைந்தது. கவர்னரும், பிரித்தானிய அரசாங்கமும் முஸ்லிம்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கையை உதாசீனம் செய்ததில் வியப்பொன்றுமில்லை. முஸ்லிம்களின் ஒற்றுமைக்காக ஜாயா பாடுபட்ட அதேவேளையில் ராசிக் பரீத் முஸ்லிம்களின் பிரிவினைக்காகப் பாடுபட்டார். அன்றைய சனத்தொகையை சமய அடிப்படையில் பிரிப்போமானால் சிங்கள பௌர்தர்கள், 60% விகிதமாகவும், இந்துக்கள் 23% விகிதமாகவும், கிறிஸ்தவர்கள் 10% விகிதமாகவும், முகம்மதியர்கள் 7% விகிதமாகவும் இருந்தனர். 1871 ஆம் ஆண்டில் 5% சதவிதமாக இருந்த இந்தியத் தமிழர்கள், 1931ஆம் ஆண்டில் 13% விகிதமாகப் பெருகினர். எது எப்படியிருந்தாலும் முஸ்லிம்கள் ஐந்தாவது ஸ்தானத்துக்குத் தள்ளப்பட்டனர். கண்டிச் சிங்களத் தலைவர்கள் தம்மை ஒரு தனிச் சமூகமாகக் கருதப்படவேண்டும் என்றும், சமஷ்டி அரசாங்கத்தில் தமக்கு ஓர் இடம் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரித்தானிய அரசாங்கத்தின் முன் வைத்தபோது இலங்கைத் தமிழர் தலைவர்கள் அக்கோரிக்கைக்கு ஆதரவு அளித்திருப்பார்களேயானால் சிறுபான்மையினங்களும் 50% விகிதமாகவும் கண்டிச் சிங்களவரைத் தவிர்த்த ஏனைய சிங்கள சமூகத்தினர் 41% விகிதமாகவும் பிரிக்கப்பட்டிருப்பர். அன்றைய தமிழர் தலைவர்களின் சுயநலப் போக்கினாலும், அதிகார ஆசையினாலும் இச்சந்தர்ப்பத்தை இவர்கள் நழுவ விட்டனர். இந்தியத் தமிழர்களின் பிரஜா உரிமை பறிபோவதற்கும் இவர்கள் ஒரு முக்கிய காரணமாயிருந்தார்கள்.

தமிழர் தலைவர்கள் ஏன் இப்படி நடந்தார்கள் என்பதற்கு அவர்களுடைய அரசியல் பொருளாதாரப் பின்னணி மாத்திரமல்ல சமூகப்பின்னணியும் ஒரு முக்கிய காரணம். அவர்கள் அப்படித்தான் நடத்திருப்பார்கள். அப்படித்தான் நடந்திருக்க வேண்டும். அப்படி நடந்திராவிட்டால், அது இயற்கைக்கு விரோதமானது. சர்வஜனவாக்குரிமை பாமர மக்களுக்கு வழங்கப்படக்கூடாது என்று வாதாடிய இராமநாதனும் மற்றும் பழமை பேண் வாதிகளும் (செல்லத்துரை, சிறிபத்மநாதன் ஆர். தம்பிமுத்து இதற்குப் புறநடையானவர்கள்) வெள்ளாளரல்லாத சாதியினருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கும் வாக்குரிமை அளிப்பது கும்பலாட்சிக்கு இடம் கொடுக்கும் பாரிய பிழையென்று நம்பினர். வாதிட்டனர். சிறப்பாக இராமநாதனோ, அவ்வாறு வழங்குவது இந்த வாழ்க்கை முறைக்குப் பழிகேடு விளைவிப்பது என்று கருதினார் என்று ஜேன் றசல், தனது 'டொனமூர் சட்ட அமைப்பில் வகுப்புவாத அரசியல்' என்ற நூலில் கூறுகிறார். இக்கருத்தைப் பேராசியர் கா. சிவத்தம்பி அவர்களும் தனது 'யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல்' என்ற கை நூலில் ஆதரிக்கிறார். இவர்கள் இப்படி நடந்து கொண்டதற்கு இவர்களின் சமூகப் பின்னணிதான் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத் தமிழர் சமூகத்தின் அடிப்படைத்தன்மை

டொனமூர் அரசியல் சீர்திருத்த குழுவினர் இலங்கை மக்களுக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்படவேண்டும் என்று சிபாரிசு செய்தபோது இத்திட்டத்தை தீவிரமாக எதிர்த்தவர்களில் ஒருவர் தான் சேர். பொன்னம்பலம் இராமநாதன். இவரும் பழமை பேண்வாதிகளும் யாழ்ப்பாணமக்களுக்கு இவ்வுரிமை வழங்கப்பட்டால் கும்பலாட்சி ஏற்படுவதோடு, இந்து வாழ்க்கை முறைக்குப் பழிகேடு விளையும் என்றும் கருதினர். 1920-30களில் பாடசாலைகளில் சாதியமைப்பை ஊறு செய்யும் வகையில் பள்ளிப்பிள்ளைகளுக்குச் சமாசனம், சமபோசனம் வழங்கப் படுவதற்கு எதிரான இயக்கம் இருந்தது. "கோப்பாய் பயிற்சிக் கலாசாலையில் சேர்க்கப்பட்ட வெள்ளாளரல்லாத மாணவர்களுடன் வெள்ளாள மாணவர்களுக்கு சமபோசனம் வழங்குவதை எதிர்த்து 1920ல் சேர். பொன். இராமநாதன் தேசாதிபதியைச் சந்தித்தார்" என்ற ஜேன்றசலின் கூற்றைப் பேராசிரியர் சிவத்தம்பி தன்னுடைய ஆய்வில் சுட்டிக்காட்டுகிறார்.

தாழ்ந்த சாதியினர் ஒருவர் தன்மனைவியின் இறுதி ஊர்வலத்தில், பறையடித்துச் சென்றதை எதிர்த்த உயர் சாதியினருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் இவர்களுக்கு ஆதரவாக வாதாடிய சேர். பொன். இராமநாதன் தேச வழமைப்படி அந்த மரண ஊர்வலத்தை நிறுத்த உரிமையுடையவர் என்று வாதிட்டார் என்று சிறிராமநாதன் தன்னுடைய தேச வழமையைப்பற்றிய நூலில் கூறியுள்ளதை சிவத்தம்பி அவர்கள் தன்னுடைய ஆய்வில் மேற்கோள் காட்டியிருக்கிறார். பழமை வாதிகளின் பிதாமகனான சேர். பொன். இராமநாதனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களும், செய்கைகளும் அவருடைய வர்க்கத்தின் கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கிறதே யன்றி வேறொன்றுமில்லை.

யாழ்ப்பாண தமிழர்களின் சமூக அடிப்படையை நாம் ஆராய்ந்தால் அப்பிரதேசத்தில் வாழ்ந்து இன்று அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்கள், அவர்களோடு சமமாக இனிமேலும் வாழமுடியுமா என்ற கேள்வி எழுகிறது. சர்வஜன வாக்குரிமை வழங்கப்படுவதால் இந்துமதவாழ்க்கை முறைக்குப் பழிகேடு விளையும் என்று சேர்.பொன். இராமநாதனின் கூற்றின் முக்கியத்துவத்தை நாம் அறிய வேண்டுமானால், யாழ்ப்பாணத்தமிழர் சமூகத்தின் அடிப்படைத்தன்மையை நாம் ஆராய்வதில் தவறில்லை. சர்வஜன வாக்குரிமை வழங்கப்படுவதற்கும் இந்து மத வாழ்க்கைக்கும் என்ன தொடர்பிருக்கிறது? ஆரியர்கள் தங்கள் ஆட்சியை இந்தியாவில் நிலைநாட்டிய போது சமுதாயத்தை வருண அடிப்படையில் நால்வகையாக பிரித்தார்கள். மதகுருமார்களாகிய பிராமணர்களும், நாட்டை ஆண்ட வீரர்களாகிய ஷத்திரியர்களும் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்களென்றும், வாணிபம் செய்து நாட்டில் குடியேறியவர்களை வைசியர்கள் என்றும் நிலத்தை உழுது வாழ்வோரை சூத்திரர் என்றும் வகுத்தனர். இவ்வருண அடிப்படைக்கு உட்படாத பிற தொழில்களை (இழிவான தொழில்கள் என்று இவர்கள் கருதினர்) செய்பவர்கள் தாழ்ந்த சாதியினர் என்றும் வகுத்தனர். ஒரு நாட்டைக் கைப்பற்றிய பிறகு சத்திரியர்கள், நிலத்தைத் தம்மிடையே பங்கிட்டனர். இந்நிலத்தில் வேலை செய்த சூத்திரர்கள் பெரும்பாலும் அடிமைகளாகவோ, அல்லது குத்தகைக்காரர்களாகவோ இருந்தனர். பெரும்பாலும் ஆட்சியாளர்கள், உயர்ந்த சாதியினராகவும் ஆட்சி செய்யப்பட்டவர்களாகிய இந்திய பூர்விகக்குடிகள், தாழ்ந்த சாதியினராகவும் கருதப்பட்டனர். இச்சாதி அடிப்படையில் ஊறிப்போயிருந்த, இந்திய சமுதாயத்திலிருந்து இலங்கையில் குடியேறிய சிங்களவரும், தமிழரும் பெரும்பாலும் இந்நிலவுடைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பையே பின்பற்றினர். நிலத்தின் உரிமையாளர்கள், சிங்கள சமுதாயத்தில் 'கொய்கம' வென்றும் தமிழர் சமுதாயத்தில் வெள்ளாளர் என்றும் வழங்கப்பட்டனர். இவர்கள் உயர் சாதியினர் என்றும் கருதப்பட்டனர்.

இந்திய சமுதாயத்தில் ஆட்சியாளர்களின் மதகுருமார் களாகவும் ஆலோசகர்களாகவும் இருந்த உயர்சாதியினரான, பிராமணர்கள், யாழ்ப்பாண சமுதாயத்தில், கோயில்களின் தர்மகர்த்தாக்களாகிய வெள்ளாளர்களின் சம்பளத்தில் வாழ்கின்ற குருக்களாக மாற்றப்பட்டனர். ஆகவே இங்கே சர்வ அதிகாரமும் கொண்டவர்கள் தான் இவ்வெள்ளாள சாதியினர். இதே கருத்தைப் பேராசிரியர் சிவத்தம்பி தன்னுடைய ஆய்வில் பின்வருமாறு கூறுகிறார்:

"யாழ்ப்பாணத்தின் சாதியமைப்பில் சில விசேட பண்புகள் உள்ளன. முதலாவது, இங்கு தமிழகத்திலுள்ளது போன்று பிராமணமேலாண்மை இல்லை. சடங்காசாரமாக நோக்கும் பொழுது பிராமணர்கள் சைவக்குருக்கள்மார் முதலிலே பேசப்படும் மரபு உண்டெனினும், உண்மையான சமூக அதிகாரம் வெள்ளாளரிடமேயுண்டு. இந்த வெள்ளாள மேலாண்மை காரணமாக இன்னொரு கருத்து நிலையும் வளர்ந்துள்ளது. வருண அடிப்படையில் வேளாளரும் சூத்திரரே. சூத்திரரே இறுதிக்குழுமத்தினர். இந்த இக்கட்டு நிலையிலிருந்து விடுபடுவதற்காக இங்கு சூத்திரரை, 'சற்சூத்திரரென்றும்', 'அசற்சூத்திரர்' என்றும் வகுத்தனர். சற்சூத்திரர் என்போர் உயர்ந்தோர். இந்தக் கொள்கையினை யாழ்ப்பாண மட்டத்தில் மிகவும் வற்புறுத்தியவர் ஆறுமுகநாவலர் ஆவார்."

இச்சாதி அடிப்படையில் ஊறிப்போயிருந்த தமிழர் வாழும் பிரதேசத்தில் வந்து குடியேறிய முஸ்லிம்களை வாணிபம் செய்ய வந்த வேற்றுநாட்டவர் என்றும் சைவம் அல்லாத வேறொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தைப் பின்பற்றுபவர்கள் என்றும், மாமிசம் உண்பவர்கள் என்றும் அவர்களைத் தமிழ் உயர் சாதியினர் ஒதுக்கியே வைத்தனர். நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கருகில் வாழ்ந்த முஸ்லிம்கள் அப்பிரதேசத்தை விட்டு விரட்டியடிக்கப்பட்டதின் செய்கையும் இக்கருத்தோட்டத்தின் விளைவே. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம்களைத் தமிழர்கள் தம்மோடு இணைத்து சமமாகக்கருதாததற்கும் ஓர் அடிப்படைக்காரணம் இருக்கிறது.

ஒரு சமூகத்தின் சமுதாய அமைப்பிலிருந்து தோன்றுவது தான் கருத்து நிலை; இக்கருத்துநிலை அச்சமுதாயத்தின் பண்பாட்டினை பிரதிபலிக்கிறது. இக்கருத்து நிலை பெரும்பாலும் அச்சமுதாயத்தின் உயர் மட்டத்திலிருப்பவர்களின் கருத்துக்களைக் கொண்டதாகவே இருக்கும். இக்கருத்துக்களைப் பற்றிக் குறிப்படும்போது மேலோர் கூறியது என்றும் பெரியோர் கூறியது என்றும் குறிப்பிடுவது வழக்கம். ஒரு சமுதாயத்தின் பண்பாடும் அதன் கருத்து நிலையும், அதன் அசைவியக்கமும் அச்சமுதாயத்தின் மதக்கோட்பாடுகளிலிருந்து தோன்றுகின்றன என்ற உண்மையை நாம் வாரலாற்றிலிருந்து அறிகிறோம்.

"யாழ்ப்பாணச் சமூகத்தின் பிரதான கருத்து நிலை யாது?" என்ற கேள்வியை எழுப்பிய பேராசிரியர் சிவத்தம்பி அதற்கு விடையாக பின்வருமாறு கூறுகிறார்:

"யாழ்ப்பாணச் சமூகத்தின் பிரதான கருத்து நிலையானது, அந்தச் சமூகத்தின் அதிகாரப்படி நிலைத்தன்மையை நியாப்படுத்துவதாக அமைவது அவசியமாகும். அதிகாரப்படிநிலை என்பது மதஞ்சார்ந்த ஒரு கருத்தாகும். அந்த அளவில் அந்த அதிகாரப்படி நிலையை ஏற்றுக்கொள்ளும் மதம் முக்கிய இடம் பெறுவது தவிர்க்க முடியாததாகின்றது. இவ்வாறு சிந்திக்கும் பொழுது யாழ்ப்பாணத்தின் ஒரு குறிப்பிட்ட மட்ட சமூக அங்கீகாரத்துடனும் எடுத்துப் பேசப்பெறும் 'சைவமும் தமிழும்' என்ற கருத்துநிலை முக்கியத்துவம் பெறுகின்றது. சைவத்தமிழ் கருத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையென்பது யாழ்ப்பாணத்தின் பிரதான மதமரபினையும் மொழிப்பண்பாட்டையும் நோக்குகின்ற ஓர் உலக நோக்காகும். இதன் படிக்குச் சைவமும் தமிழும் ஒன்றிலிருந்து மற்றது நீக்கப்பட முடியாததாய் ஒன்று மற்றதில்லாமல் பூரணத்துவம் அடைய முடியாததாய் இருக்கும்". இந்தக் கருத்து நிலையை நாம் கூர்மையாக அவதானிக்கும் போது பிறசமயத்தவருக்கு இங்கே இடமில்லை என்ற உண்மை புலனாகிறது. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் நாயன்மார்களால் வளர்க்கப்பட்ட சைவம் தான் யாழ்ப்பாணத்து நல்லை நகர் ஆறுமுகநாவலரின் சைவசித்தாந்தத்தின் அடிநிலைவாதமாகும். சைவமும், தமிழும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்திருக்கிறது. சைவம்தான் தமிழ், தமிழ்தான் சைவம் இந்தக் கருத்தை வலியூட்டினார் ஆறுமுகநாவலர். கிறிஸ்தவ மிஷனரிமாரின் மதம்மாற்றும் கொள்கையை நாவலர் வெகுவாக எதிர்த்தாரென்றாலும், மேல் நாட்டு நாகரிகம் தமிழர்களின் இந்துமத வாழ்க்கை மரபைப் பாதிக்காத விடத்து அதையேற்றுக்கொள்வதில் அவர் ஆட்சேபனையைத் தெரிவிக்கவில்லை. இதே கருத்தைத்தான் பேராசிரியர் சிவத்தம்பி, "நாவலர் பிரித்தானிய வழிவந்த சமூக மாற்றங்களை அவை மேற்குறிப்பிட்ட அறநெறி ஒழுக்கத் தாக்கங்களை ஏற்படுத்தாதுவிடின் அவர் அவற்றை ஏற்கத் தயங்கவில்லை என்பதும் தெட்டத்தெளிவாக விளங்குகின்றன" என்று கூறுகிறார்.

சைவ சித்தாந்தத்தை வலியுறுத்திய நாவலர், யாழ்ப்பாண சமூகத்தின் உயர் சாதியினரின் பிரதிநிதியாகவும், பிற்போக்கு சக்திகளின் பிரதிபிம்பமாகவும் இருந்தார். இக்கருத்து நிலைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட இயக்கம்தான் யாழப்பாண இளைஞர் காங்கிரஸ் ஆகும். யாழ்ப்பாண சமுதாயத்தின் பண்பாடு, அதன் மொழியாகிய தமிழ் மொழியிலிருந்து, இந்து மத மரபிலிருந்தும் தோன்றியதால் வேறு எந்த மதத்துக்கும் இங்கே இடமில்லை. இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றும் முஸ்லிம்களுக்கு தமிழில் உரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாட யோக்கியதை இல்லை. இனி பேராசிரியர் சிவத்தம்பி இது பற்றிக் கூறுவதைப் பார்ப்போம். "இதன்படிக்குத் தமிழ் மனிதன் அவன் மொழி அதன் பண்பாடு ஆகியவற்றின் உருவாக்கத்தில் வேறு எந்த மதத்துக்கும் இடமில்லை எனும் எண்ணத்துணிவு முன்வைக்கப்படுகின்றது. சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களின் தமிழ்சார் பங்களிப்புக்களை இக்கருத்து நிலை முற்று முழுதாக மறுதலிக்கின்றது. இந்த உட்கிடக்கையை பல்வேறு மதத்தினரின் தமிழ்த்தொண்டு எனப்பெறும் கருதுகோளிலே காணலாம். இதன் படிக்கு சமணம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகியன தமிழுக்கு ஆற்றிய தொண்டு பற்றிப்பேசலாம். சைவம் தமிழுக்கு ஆற்றியதொண்டு என்று பேசப்படுவதில்லை." இந்த கருத்து நிலைப்பாட்டிலிருந்து நாம் ஆராயும்போது முஸ்லிம்கள் தமிழில் எவ்வளவு பாண்டித்தியம் பெற்றிருந்தாலும், எத்தகைய இலக்கியங்களைப் படைத்திருந்தாலும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு எத்துணை பங்களிப்புக்கள் செய்திருந்தாலும், அவர்கள் தமிழக்குத் தொண்டுதான் செய்கிறார்கள். முஸ்லிம்கள் பெரும்பாலும் தங்கள் மதமாகிய இஸ்லாத்தைப் பற்றி எழுதுவதனால் சைவம்தான் தமிழ் என்ற கொள்கையைக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத் தமிழர்கள் இவைகளை இலக்கியங்களாகக் கொள்வதில்லை. யாழ்ப்பாணத் தமிழர் பண்டித வர்க்கத்தினர் முஸ்லிம்களின் தமிழை 'சோனகத் தமிழ்' என்றும், 'கொச்சைத்தமிழ்' என்றும் கூறுவதற்கு அவர்களுடைய இந்த சாதிவெறியும், சைவ சமய உணர்வும் காரணம் என்றால் அது மிகையாகாது. இலங்கை முஸ்லிம்கள், இந்தியாவின் மலபார் கரையோரங்களில் வாழ்ந்த வெறுக்கப்பட்ட ஒரு தாழ்ந்த சமுதாயத்தின் வழித்தோன்றல்கள் என்ற தமிழர் உயர் சாதியினரின் பிதாமகரும், தமிழர் தலைவருமான சேர். பொன். இராமநாதனின் கூற்றை நாம் அவதானித்தால் முஸ்லிம்களின் தமிழ் 'இழிசனர் வழக்கு' என்று பண்டித பரம்பரையினரின் வழித்தோன்றல்களில் ஒருவரான பேராசிரியர் சதாசிவம் கூறியதில் வியப்பொன்றுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருத்து நிலையையும், இவ்வாணவக் கொள்கையையும் எதிர்த்து நின்று வெற்றிகண்ட பெருமை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தையே சாரும். 'இவர்களிடையே எல்லா சாதியினரும், எல்லா மதத்தவரும் ஒன்று என்ற கொள்கை முன் வைக்கப்பட்டது. இங்கே சுபைர் இளங்கீரனும் எச். எம். பி. மொகிதீனும், டொமினிக் ஜீவாவும், டானியலும், சிவத்தம்பியும், கைலாசபதியும் ஒரே சமநிலையில் நின்று தமிழ் இலக்கியத்தை வளர்த்ததைப் பின்னர் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் 'சிங்கள-பௌத்த' உணர்வின் தோற்றம்

டொனமூர் அரசியல் திட்டம் அமுலுக்கு வந்த பிறகு 1930ஆம் ஆண்டுக்கும், 44ஆம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலத்தில் இலங்கை அரசியல் உலகில் சுதந்திர இயக்கம் உத்வேகம் பெறுவதைப் பார்க்கிறோம். 1930 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட 60 ஆண்டு காலத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் இப்பொழுது துரிதமடைவதைக் காண்கிறோம். 1920ஆம் ஆண்டுக்கும் 1930ஆம் ஆண்டுக்குமிடையில் உள்ள காலகட்டத்தில் சட்டசபையில் ஏற்பட்ட மாற்றங்களால் அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. முன்பிருந்த சட்டசபை அங்கத்தவர்களின் தரத்திற்கும், 31ஆம் ஆண்டுக்குப் பிறகு அரசசபையில் இருந்த அங்கத்தவர்களின் தரத்திற்கும் பெரும் வித்தியாசம் இருந்தது. சட்டசபையில் இருந்த பெரும்பான்மையான அங்கத்தவர்கள், அரச சார்புடையவரும், அரச சார்பு அல்லாதவர்களும் பிரித்தானிய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டவர்களே. இவர்கள் பெரும்பாலும் பிரிதானிய அரசாங்கத்திற்கு உடந்தையாயிருந்த உயர்வர்க்க வகுப்பினரே. 1925 ஆம் ஆண்டில் மட்டுப்படுத்தப்பட்ட தேர்தல் தொகுதிகளின் மூலம் அங்கத்தவர்கள் பலர் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும், இலங்கையின் அன்றைய சனத்தொகையில் 4% சதவிகித மானோருக்கே வாக்குரிமை இருந்த காரணத்தினால், உயர்வர்க்கத்தினரின் அரசியல் ஆதிக்கம் இருந்து கொண்டே வந்தது. டொனமூர் அரசியல் திட்டத்தில் சர்வஜன வாக்குரிமை இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்டதால் பொதுத் தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் தரத்திலும் மாற்றத்தை நாம் காண்கிறோம். உயர்வர்க்கத்தினரதும், உயர் சாதியினரதும், பழமை பேண் வாதிகளினதும், அரசியல் ஆதிக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையவில்லையென்றாலும், முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட ஒரு புதிய தலைமுறையின் தோற்றத்தை இக்கால கட்டத்தில் காண்கிறோம். மகாத்மா காந்தியின் இந்திய சுதந்திர இயக்கத்தின் செல்வாக்கை யாழ்ப்பாணத்து இளைஞர் இயக்கத்திலும், ஐரோப்பாவின் மாக்சீய-சோஷலிச இயக்கங்களின் தாக்கத்தை இலங்கை சமசமாஜக்கட்சியிலும் நாம் காண்கிறோம். யாழ்ப்பாணத்து மக்களின் பிரதிநிதியாக ஜி. ஜி. பொன்னம்பலமும், தொழிலாளர் வர்க்கத்தின் பிரதிநிதிகளாக பிலிப்குணவர்த்தனாவும் டாக்டர் என். எம். பெரேராவும், இந்தியத் தொழிலாளர் வர்க்கத்தின் தலைவராக நடேசஐயர் போன்றவர்கள், அரசியல் உலகில் பிரவேசிப்பதைப் பார்க்கிறோம். முஸ்லிம் பிரதிநிதிகளின் தரத்தில் எவ்விதமாற்றமும் ஏற்படவில்லை. அப்படி ஏற்படுவதற்கு சந்தர்ப்பமும் இருக்கவில்லை. 1931ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலில் மாக்கான் மாக்கார் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டார். 1936ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் ஒரு முஸ்லிமும் தெரிவு செய்யப்படவில்லை. மாக்கான் மாக்கார், ஜாயா உட்பட எல்லா முஸ்லிம் அபேட்சகர்களும் தோற்கடிப்பட்டார்கள். ஏனைய சமூகங்கள் அரசியல் உரிமைக்காகப் போராடிய அதே வேளையில் முஸ்லிம் சமூகத்தினர் அரசியல் உணர்வே இல்லாதிருந்ததற்குக் காரணம் கல்வியறிவின்மையே. கிழக்கு மாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய பாகங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் பெரும்பாலும் வியாபாரத்தையே நம்பியிருந்த காரணத்தினால் கல்வியறிவின் முக்கியத்துவத்தை அறிந்திருக்க நியாயமில்லை. கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பெரும்பான்மையானோர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த காரணத்தினால் நிலவுடைமைக்காரர்களினதும், வட்டவிதானை மார்களினதும், வன்னியர்களினதும், போடியார்களினதும், அதிகாரத்தின் கீழ் முடங்கிப் போயிருந்தனர். முஸ்லிம் சமூகத்தைத் தமது அதிகாரத்தின் கீழ் வைத்திருந்த இவ்வுயர் வர்க்கத்தினர் தமது சமூக ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு மதத்தைப் பாவித்த காரணத்தினால் தம் சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் அக்கறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டவில்லை. பாமர மக்கள் கல்வி வளர்ச்சியில் இவ்வுயர் வர்க்கத்தினர் கவனம் செலுத்துவார்கள் என்று மக்கள் எதிர்பார்ப்பதிலும் நியாயமில்லை. மத்ரசா பள்ளிக்கூடங்களின் மூலம் சமயக்கல்வியையே ஊக்குவித்த இவர்கள் சமூகத்தைத் தமது காலடியின் கீழ் வைத்திருப்பதற்கு சமயத்தைப்பாவித்தத்தில் வியப்பொன்றுமில்லை. மக்களிடையே கல்வி வளர்ச்சியேற்பட்டால் தம்முடைய சமுதாய ஆதிக்கம் போய்விடுமே என்ற பயமும் இவர்களுக்கிருந்தது. சர்வஜன வாக்குரிமை ஏனைய சமூகங்களிடையே ஏற்படுத்திய மாற்றங்களைப்போல் முஸ்லிம் சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படவில்லை. சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதால் மற்றைய சமூகங்களிடையே அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்ட அதே வேளையில் முஸ்லிம் சமூகத்தவரிடையே, முக்கியமாக அரசியல் அந்தஸ்தைப் பெற்ற கிழக்குமாகாண முஸ்லிம்களிடையே எவ்வித சலனமும் ஏற்படவில்லை. அதனாற்றான், 1936ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஒரு முஸ்லிம் கூடத் தெரிவு செய்யப்படவில்லை. முஸ்லிம்களின் பிரதிநிதிகளாகத் தமிழர்கள் தான் தெரிவு செய்யப்பட்டார்கள். இதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. முஸ்லிம்களிடையேதான் குடும்ப ஆதிக்கமும் அதிகமாக இருந்தது. முஸ்லிம் சமூகத்தின் தலைமைத்துவமும், இக்குடும்பங்களின் ஏகபோக உரிமையாயிருந்தது. தலைவராக இருக்கவேண்டியவர், ஒன்று இக்குடும்பங்களின் வாரிசாக இருக்க வேண்டும் அல்லது இக்குடும்பங்களில் திருமண உறவு வைத்தவராக இருக்க வேண்டும். இன்றும் கிழக்கு மாகாண முஸ்லிம் தலைவர்கள் இவ்விதிக்கு உட்பட்டவர்களே. ஒரு புதிய அரசியல் கட்சியை அமைப்பதாயிருந்தாலும் இவர்கள்தான் அமைக்கவேண்டும். ஏழை மக்களில் ஒருவன் தலைவனாவதை இவர்கள் விரும்ப மாட்டார்கள். அப்படி ஒருவன் தோன்றினால் அவனுக்கு சீதனம் கொடுத்து தம் குடும்பத்தில் ஒருவனாக ஆக்கிவிடுவார்கள். இல்லாவிட்டால் அவனை அரசியல் உலகிலிருந்து ஒதுக்கிவிடுவார்கள். கிழக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண முஸ்லிம்கள் தம்முடைய அரசியல் முக்கியத்துவத்தை உணராது தம்மைக் காப்பாற்றிக்கொள்ளாதவரையில் கொழும்பிலுள்ள முஸ்லிம் தலைவர்கள் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு ஒத்தூதி அரசாங்கப்பதவிகளைத் தம் குடும்பத்தவர்களுக்குப் பெற்றுக்கொடுத்து முஸ்லிம் வெளிநாட்டு ஸ்தானிகர் நிலயங்களின் மூலம் வெளிநாட்டுப் பயணங்களையும் அவர்களுடைய விருந்துகளுக்கு அழைப்பைப் பெறுவதிலும், பெயரளவில் தாம் ஸ்தாபித்த முஸ்லிம் இயக்கங்களுக்குப் பணம் பெறுவதிலும், முஸ்லிம்களின் அவல நிலைமையை உபயோகிப்பார்களேயொழிய, தம்மைக் காப்பாற்றுவார்கள் என்று எண்ணுவது எவ்வளவு மடமை. அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபனங்களானாலென்ன, அரசாங்க வங்கி போன்ற அரச ஸ்தாபனங்களானாலென்ன, உயர்கல்வி அதிகார சபைகளானாலென்ன, இவ்வுயர் வர்க்கக் குடும்பங்களின் வாரிசுகள் முஸ்லிம்களின் பிரதிநிதிகளாக நியமனம் பெறுவதில் இன்றும் ஏகபோக உரிமை கொண்டாடுகிறார்கள். சமூக உணர்வும், சமூக நலனும் கொண்ட ஏழை முஸ்லிம் குடும்பங்களிலிருந்து எத்தனை முஸ்லிம்கள் இப்பதவிகளுக்கு நியமனம் பெறுகிறார்கள்? பத்திரிகைகளில் வரும் சினிமாப்பக்கங்களிலும், ஒலிபரப்பில் வரும் நேயர் விருப்பங்களிலும், தம்பெயர் வரவேண்டும் என்ற எண்ணம் கொண்ட முஸ்லிம் இளைஞர் சமுதாயத்தினரின் போக்கைக் கண்டு, அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை. தம்முடைய அன்றாட வாழ்க்கையிலும், சம்பாஷணைகளிலும் ஆட்சியாளர்களின் மொழியாகிய சிங்கள மொழியை உபயோகிப்பதனால் தம்முடைய அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளலாம் என்ற தாழ்வு மனப்பான்மையைக் கொண்ட ஒரு சமூகத்தினரின் போக்கைக்கண்டு இரத்தக் கண்ணீர் விடுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது. முஸ்லிம் சமூகத்தினர் தம்முடைய தாழ்ந்த நிலையிலிருந்து விடுபட வேண்டுமானால் ஆட்சியாளர்களின் அடிவருடிகளுக்குப் பக்க வாத்தியம் ஊதுவதைவிட்டுத் தம்மை உயர்த்திக் கொள்ள 'இனி ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி செய்யவேண்டும். அப்பொழுதுதான் முஸ்லிம் சமூகம் தன் மானத்துடன் தலை நிமிர்ந்து வாழலாம்.

டொனமூர் அரசியல் திட்டம் ஒரு சமூகத்தையும் திருப்திப்படுத்தவில்லை. டொனமூர் குழுவினரால் வகுப்புவாத அரசியலை முழுதாக ஒழிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் கொண்டுவரப்பட்ட அரசியல் திட்டம் வகுப்புவாத அரசியலைக் கொழுந்து விட்டெரியச் செய்தது. முனிதாச குமாரதுங்க போன்ற சிங்கள எழுத்தாளர்கள் இதற்குத் தூபம் இட்டார்கள்.

இலங்கையில் சுதந்திர அரசாங்கம் அமைவதற்கு அத்திட்டம் ஒரு முன்னேற்பாடாக அமையும் என்று டொனமூர் குழுவினர் கருதினர். இலங்கையில் அரசியற் கட்சிகள் உருவாவதற்கு ஒரு முட்டுக்கட்டையாக அமைந்ததோடு பிரதிநிதிகளின் தனித்துவமும் மேலோங்கியது. இதற்கு முன்னிருந்த சட்டசபைகளில் சிங்களவரின் பிரதிநிதித்துவம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. சர்வஜன வாக்குரிமை காரணமாகச் சிங்களவரின், சனத்தொகைக்கேற்ப அவர்களது பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் பெருகியது. அரசசபையில் அவர்களது ஆதிக்கம் கூடியதனால் அவர்களது இன உணர்வும் அதிகரித்தது. தேர்தல் தொகுதிகளை அமைக்கும்போது மலைநாட்டில் இந்திய வம்சாவழியினரின் சனத்தொகையைக் கருத்திற் கொண்டே அவை அமைக்கப்பட்ட காரணத்தினால் இந்தியத் தமிழருக்கு வழங்கப்பட்ட வாக்குரிமை கட்டுப்படுத்தப்பட்டதின் விளைவாக சிறிய சனத் தொகையை கொண்ட கண்டிச் சிங்கள மக்களின் எண்ணிக்கைக்கதிகமான சிங்களப் பிரதிநிதிகள் அரசசபையில் இடம்பெற்றனர். சர்வஜன வாக்குரிமையை இலங்கைக்கு சிபார்சு செய்த டொனமூர் குழுவினர், இந்திய வம்சாவழியினரைப் பொறுத்தவரையில் குறைந்தது ஐந்து வருடமாவது இலங்கையில் தொடர்ந்து வசித்திருந்தாலொழிய அவர்களுக்கு வாக்குரிமை பெறும் உரிமை இல்லையென்று தமது அறிக்கையில் கூறினார்கள். இக்கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைக்குள் எட்டு மாத காலம் இலங்கைக்கு வெளியே இருந்தால் இவ்வாக்குரிமை பாதிக்கப்படாது என்றும் கூறினர். இந்தத் தகைமையில்லாதவர்கள், காணி உடைமைக்காரர்களாகவும், ஆங்கிலம், சிங்களம் அல்லது தமிழ் மொழிகளில் வாசிக்கவும் எழுதவும் தகைமை உள்ளவர்களாகவும் இருந்தால் வாக்குரிமை பெறலாம் என்றும் சிபாரிசு செய்தனர். இவ்விரு தகைமை காரணமாக தமது குடும்பங்களை இந்தியாவில் விட்டுவிட்டு வந்த இந்தியத் தோட்டத்தொழிலாளர்களில் அநேகம் பேர் வாக்குரிமை பெறும் தகுதியில்லாதவர்களானார்கள். இதனால் டொனமூர் குழுவினர் எதிர்பார்த்ததைவிட சிங்கள மக்களுக்கு அதிகமான பிரதிநிதித்துவம் கிடைத்தது. இதன் காரணமாக சிங்கள இன உணர்வும் சிங்கள ஆதிக்கமும் தலை தூக்கியது. டொனமூர் அரசியல் திட்டம் சிங்கள மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று ஜி.ஜி. பொன்னம்பலம் கூறினார். சேர். பொன்னம்பலம் இராமநாதன் அரசசபையில் சிங்களப் பிரதிநிதிகளின் அதிகரிப்பினால் சிங்கள-பௌத்த உணர்வு சிறுபான்மை இனங்களைப் பாதிக்கும் என்ற கூற்றின் உண்மையை அடுத்த அத்தியாயத்தில் ஆராய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொனமூர் அரசியலில் தோன்றிய சிங்கள இனவாதம்

டொனமூர் அரசு குழுவினர் தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும்போது 70,000க்கும் 90,000க்கும் இடையில் உள்ள சனத்தொகையின் கணிப்பிலேயே இவைகளை அமைத்தார்கள். இதனால் சனத்தொகையில் கூடுதலாக இருந்த தென்-மேற்கு மாகாணத்தின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள்தான் அரசசபையில் அதிகமாக இருந்தனர். இவர்களுடைய செல்வாக்கும் அதிகமாக இருந்தது. கொழும்பு நகரின் முக்கியத்துவமும் வளர்ந்தது. கொழும்பு நகரின் வர்த்தகர்களின் செல்வாக்கு ஏனைய இடங்களுக்கும் பரவி கொழும்பின் ஆதிக்கம் ஒருவித 'பொருளாதார காலனித்துவமாக' மாறியது. இதை கருத்திற் கொண்டுதான் டொனமூர் குழுவினர் "கொழும்புக்கும் இதர மாகாணங்களில் இருக்கும் அரச சபைகளுக்கும் இடையில் ஒரு பெரும் வித்தியாசம் இருக்கிறது" என்றும் "கொழும்பிலுள்ள மேல் நாட்டு கலாசாரத்தைப் பின்பற்றும் மத்தியதர வகுப்பினருக்கும் ஏனைய பிரதேச மக்களுக்குமிடையே ஒரு பாரிய இடைவெளி இருப்பதையும் நாம் காணக்கூடியதாக இருக்கிறது". என்றும் கூறினார்கள். கொழும்பிலுள்ள மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தை குறைப்பதற்கு டொனமூர் குழுவினர், பிரதேச சபைகளையும் மாகாணசபைகளையும் உருவாக்க வேண்டும் என்று சிபாரிசு செய்தார்கள். ஆனால் இவர்களுடைய இவ்வெண்ணம் நிறைவேறவில்லை. 'மத்திய அரசாங்கத்தின் சில அதிகாரங்கள் மாகாணசபைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டும்' என்ற அவர்களுடைய பிரேரணை நிறைவேறியிருந்தால், கொழும்பின் ஆதிக்கம் குறைந்திருக்கும். மத்திய அரசாங்கத்தின் கூட்டங்கள் கண்டியிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெறவேண்டும் என்றும் கூறினார்கள். கொழும்பிலுள்ள தலைவர்கள், சிறுபான்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமக்களின் பிரச்சினைகளை நேரடியாக அறிவதற்கு இப்பிரேரணை ஒரு வாய்ப்பளித்திருக்கும். ஆனால் சிங்கள தலைமைத்துவம் தம்முடைய அரசியல் அதிகாரத்தை சிறுபான்மையின மக்களோடு பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. யாழ்ப்பாணத்துத் தமிழரின் பிரதிநிதித்துவம் இல்லாத முதலாவது அரசசபையிலும் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் இல்லாத இரண்டாவது அரசசபையிலும் சிங்களத் தலைவர்களின் ஆதிக்கத்தை நாம் காண்கிறோம். டொனமூர் அரசியல் திட்டத்தில் சிறுபான்மையின மக்களுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லை என்பதை நிரூபிப்பதற்காக சிங்களத்தலைவர்கள் இரண்டாவது அரசசபையில் தனிச்சிங்கள மந்திரிசபையை அமைத்தார்கள். சிறுபான்மையின மக்கள் பயந்தது உண்மையாகிவிட்டது.

சேர். பொன். இராமநாதனும் அவருடைய சகோதரர் சேர். பொன். அருணாசலமும் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிங்களத் தலைவர்களின் அரசியல் இயக்கத்திற்கு தம்முடைய முழு ஆதரவையும் அளித்ததோடு அதற்குத் தலைமை தாங்கவும் செய்தார்கள். அவர்கள் கொடுத்த புகழ் மாலைகளால் இவ்விருவரும் மதிமயங்கிப் பெருமிதம் அடைந்தார்கள். சிங்களத் தலைவர்கள் தம்முடைய தேவைகள் பூர்த்தியான பிறகு இவ்விருவரையும் அரசியல் உலகிலிருந்து ஒதுக்கிவிட்டார்கள். 1915ஆம் ஆண்டு கலவரத்தின்போது தம்மை சிறையிலிருந்து விடுவிப்பதற்கு யார் பாடுபட்டார்களோ அவர்களுடைய தலைமைத்துவத்தையும், அரசியல் செல்வாக்கையும் அகற்ற வேண்டும் என்று டொன் ஸ்டீபன் சேனாநாயக்கவும், அவருடைய சகோதரர் எப். ஆர். சேனாநாயக்காவும் கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்தார்கள். "அருணாசலம் ஓர் அகந்தையும் ஆணவமும் கொண்ட அரசியல் தீவிரவாதி" என்று எப். ஆர். சேனாநாயக்க அருணாசலத்தின் தலைமைத்துவத்தைக் கண்டித்தார். தமிழர்கள் அரசியலில் தனித்தியங்க வேண்டும் என்ற எண்ணம் இலங்கைத் தேசிய காங்கிரசின் ஆரம்பகாலத்தலைவராயிருந்த அருணாசலத்திற்கு அப்பொழுதுதான் ஞானம் பிறந்தது. 1923ஆம் ஆண்டில் 'இலங்கைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் சங்கம்' என்பதை ஸ்தாபித்தார். “தமிழ் ஈழம்”, என்ற எமது குறிக்கோளை அடைவதற்கு நாம் எம்மிடையே ஒற்றுமையை வளர்ப்பதுடன் இதை நாடெங்கும் பறைசாற்ற வேண்டும்” என்றும் கூறினார்.

1928ஆம் ஆண்டில் டொனமூர் அரசியல் அறிக்கையைப் பற்றிய விவாதத்தில் உரையாற்றிய முஸ்லிம்களின் பிரதிநிதியாக இருந்த ரி. பி. ஜாயா சட்டசபையில் பின்வருமாறு கூறினார். “தேசிய காங்கிரசை முஸ்லிம் சமூகம் எதிர்த்தபோது நான் தனியாகச் சென்று காங்கிரசில் சேர்ந்தேன். நான் காங்கிரசிலிருந்து விலகினால் எனது சமூகத்தின் முழு ஆதரவும் எனக்குக் கிடைக்கும் என்று தேர்தலின் போது எனக்குக் கூறப்பட்டது” என்று கூறினார். எனவே கரையோரச் சிங்களவரின் ஆதிக்கத்தைத் தமிழரும், முஸ்லிம்களும், கண்டிச் சிங்களவரும் எதிர்த்தார்கள். இதே கருத்தை டொனமூர் குழுவினரும் தமது அறிக்கையில் 13ஆவது பக்கத்தில் “இலங்கையின் சனத்தொகையை நாம் ஆராயும்போது அதில் ஒருமைப்பாடின்மையைக் காண்பதோடு ஒவ்வொரு இனமும் ஏனைய இனங்களைச் சந்தேகத்துடன் பார்ப்பதைக் காண்கிறோம். தேசிய வாதம் என்று கூறும்போது இங்கே இனவாதத்தைத் தான் காண்கிறோம். சுதந்திரம் வேண்டுமென்று கோஷமிடுபவர்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவர்களே. வெளிநாட்டுக் கட்டுப்பாடு அகற்றப்பட்டால் இவ்வின மக்கள் ஏனைய சிறுபான்மை மக்களின்மேல் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டுவார்கள்” என்று கூறினார்கள். எனவேதான் டொனமூர் குழுவினர் சிறுபான்மையின மக்களுக்கு எதிராகச் சட்டம் இயற்றப்பட்டால், அவற்றைத் தள்ளுபடி செய்வதற்கும் ஒரு சிறுபான்மை இனத்திற்குத் தகுந்த பிரதிநிதித்துவம் கிடைக்காத விடத்து அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவதற்கும் அரசாங்க சேவையில் நியமனம் பெறுவதில் சிறுபான்மையின மக்கள் பாதிக்கபடாமலிருப்பதற்கு 'ஓர் அரச சேவை கமிஷன்' நிறுவுவதற்கும் கவர்னருக்கு அதிகாரம் வழங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொனமூர் குழுவினரின் எண்ணம் நடைமுறையில் சாத்தியமாகவில்லை. ஏழு நிறைவேற்றும் கமிட்டிகளாகப் பிரிந்த அரசசபையினர் பொருளாதாரக்கமிட்டிகளாக இயங்கின. கமிட்டித் தலைவர்கள் மந்திரி சபையின் அங்கத்தவர்களாக இயங்கினார்கள். அரச சபையின் தலைவரும், மந்திரிசபையின் உபதலைவருமான டி. எஸ். சேனாநாயக்காவை, கவனர் ஹென்றி மொன்க் மேசன் சபையின் இறுதிக்காலத்தில் ஒரு பிரதம மந்திரியாகவே மதித்தார். மந்திரி சபையில் ஒரு முஸ்லிமும், ஓர் இந்தியத் தமிழரும் இடம் பெற்ற அதே வேளையில் கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட இரு இலங்கைத் தமிழர்கள் இருந்தபோதும் இலங்கைத் தமிழர்களுக்கு மந்திரிசபையில் இடம் கொடுக்கப்படவில்லை. சிங்கள அமைச்சர்களுடன் இரு சிறுபான்மையின அமைச்சர்கள் ஒத்துழைக்கவில்லை என்று காரணங்காட்டி சிங்களத் தலைவர்கள் 1936ஆம் ஆண்டின் இரண்டாவது அரச சபையில் தனிச்சிங்கள மந்திரிசபையை நிறுவினார்கள். சிங்களத் தலைவர்களின் இந்தப் போக்கினால் சுதந்திர இலங்கையில் சிறுபான்மையின மக்களின் உரிமைகள் பறிக்கப்படலாம் என்ற பயத்தினாற்றான் ஜி. ஜி. பொன்னம்பலம் இலங்கை அரசியல் அமைப்பில் மாற்றம் கொண்டு வரும் நோக்குடன் இலங்கை வந்த சோல்பரிகுழுவினரிடம், சிறுபான்மையின மக்களுக்கு சமநிலை பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார். சிங்களத் தலைவர்கள் பாரொன் ஜயத்திலக்காவுக்கும், டி. எஸ். சேனாநாயாக்கவுக்கும் இவ்வெண்ணத்தைக் கொடுத்ததுமல்லாமல் செய்யும் முறையையும் வகுத்துக்கொடுத்த பெருமை ஓர் இலங்கைத் தமிழரையே சாரும். அவர்தான் அன்றைய இலங்கை சர்வகலாசாலைக் கல்லூரியின் கணிதப் பேராசிரியாகவிருந்த சீ. சுந்தரலிங்கம் அவர்கள். கரையோர சிங்களத் தலைவர்களின் இந்த இனவாதப் போக்கு யாழ்பாணத்தில் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் தலைமையில் தமிழ் காங்கிரஸும், சிங்கள மக்கள் மத்தியில் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தலைமையில் சிங்கள மகாசபாவும் உருவாவதற்கும் காரணமாயமைந்தது என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகநாதன் தன்னுடைய "மாக்சீய கண்ணோட்டத்தில் இலங்கை வரலாறு" என்ற நூலில் கூறுகிறார்.

இலங்கையில் சிங்கள ஆதிக்கம் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற கருத்து நிலையை உருவாக்கியவர்கள், அநகாரிக தர்மபால, பியதாச சிறிசேன, முனிதாச குமாரதுங்க போன்ற சிங்கள எழுத்தாளர்களே. இதே கருத்து நிலை தான் இன்று 'ஜாதிக சிந்தனய' (தேசிய சிந்தனை) யென்றும் "ஹெலஉருமய", (பூர்வீகக்குடிகளின் உரிமையென்றும்) உருவெடுத்திருக்கின்றன. இவர்கள் வரலாற்றைத் திரித்துக் கூறியது மட்டுமல்ல உலக வரலாற்றிலேயே சிறந்த வரலாற்றையுடையது எம்முடைய நாடு என்றும், சிங்கள இனத்தவரின் யுத்த வெற்றிகளைப் போல வேறு எந்த நாட்டிலும் நாம் காணமுடியாது என்றும் எழுதினார்கள். இதே கருத்திற்றான் ஈ. றீ. டீ. சில்வா "இது சிங்களவருக்குரிய நாடு, இலங்கை சிங்களவரின் தாய் நாடு" என்றும் கூறினார். சிங்கள இன வாதத்திற்குத் தூபம் இட்டவர் முனிதாச குமாரதுங்க என்ற எழுத்தாளர். "சிங்கள இளைஞர்களே அரசியல் ஆதிக்கம் செய்யும் கிழட்டு அரசியல் வாதிகளை அரசியலிலிருந்து ஒதுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. அரசசபையில் சிங்கள மொழியில் பேசமுடியாத எவரையும் அடுத்த பொதுத் தேர்தலில் நீங்கள் தெரிவு செய்யக்கூடாது" என்று குமாரதுங்க எழுதினார். இதனையொட்டி ஜி. கே. டபிள்யு பெரேரா 1932ஆம் ஆண்டில் அரசசபையில் அரசாங்க நீதி பரிபாலனத்தில் சிங்கள மொழியும், தமிழ் மொழியும், உபயோகிக்கப்படல் வேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டு வந்தார். இதனையடுத்து 1937ஆம் ஆண்டில் பிலிப் குணவர்தனவும், 1944ஆம் ஆண்டில் ஜேர். ஆர். ஜயவர்த்தனவும், 1945ஆம் ஆண்டில் பண்டாரநாயாக்காவும், "அரசசபையில் சிங்களமும் தமிழும் அரசகரும மொழியாகக் கொண்டுவரப்பட வேண்டும்" என்ற பிரேரணைகளைக் கொண்டு வந்தார்கள். சிங்கள மொழி அத்திவாரத்தில் வளர்ந்த சிங்கள இனவாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார வர்த்தகத் துறைகளையும் பாதித்தது. 1937ஆம் ஆண்டில் அரசசபையில் எச். டபிள்யூ, அமரசூரிய, "ஒரு நாட்டின் உயிர் நாடி வர்த்தகம்; இத்துறையில் இலங்கையருக்கு முக்கிய இடம் கிடைக்காவிட்டால் பொருளாதார சுதந்திரம் எம்மால் அடைய முடியாது" என்று கூறினார். இந்தக்காலக்கட்டத்தில் ஜயதிலக்க-சேனாநாயக்க தலைமைத்துவத்தில் விரக்தியடைந்த பண்டாரநாயக்கா, 'சிங்கள மக்களின் ஒற்றுமையும், அவர்களின் வளர்ச்சியும் அவர்களது கலாசார அடிப்படையிலிருந்துதான் தோன்ற முடியும்' என்ற நோக்கத்தில் சிங்கள-மகாசபாவை ஸ்தாபித்தார். சுதந்திர இலங்கையில் ஏற்பட்ட சிங்கள சமூகத்தின் ஆதிக்கத்தின் காரணமாகத் தோன்றிய இனவாத அரசியலுக்கும், இனக்கலவரங்களுக்கும் காரணமாயமைந்த கருத்துநிலை இக்கால கட்டத்தில்தான் உருவாகியது. இதனால் சிறுபான்மையின மக்கள் தங்கள் உரிமைகளைப்படிப்படியாக இழந்து வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தமிழர்கள் இலங்கை அரசியலில் ஒதுக்கப்பட்ட வரலாறு

டொனமூர் அரசசபை காலமாகிய 1930ஆம் 40ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த சம்பவங்களும், இயக்கங்களும், சமூகங்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளும், அரசியல் தலைவர்களின் கொள்கைகளும், போட்டிகளும் தான் இன்றைய அரசியல் இனப்பிரச்சினைகளுக்குக் காரணமாயமைகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சிங்கள-பௌத்த இன உணர்வை மக்கள் மத்தியில் அநகாரிக தர்மபால போன்ற எழுத்தாளர்கள் தூண்டி விட்டார்களென்றாலும் அதை ஓர் அரசியற் கொள்கையாக சிங்கள அரசியல் தலைவர்கள் கடைப்பிடித்தது இக்காலப்பகுதியிற்றான். தம்முடைய இக்கொள்கையை நிலைநாட்ட இதுகாலவரையும் சிங்களத் தலைவர்களுக்கு வாய்ப்பிருக்கவில்லை. சட்டசபையில் அவர்களுக்குப் பெரும்பான்மை எண்ணிக்கை இல்லாமையே இதற்குக் காரணம். டொனமூர் குழுவினரால் சர்வஜன வாக்குரிமை இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்ட காரணத்தினால் பெரும்பான்மை இனமாகிய சிங்கள மக்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும், அரசசபையில் அதிகரித்தது. வாக்காளர் தொகுதிகளைப் பிரிக்கும்போது சனத்தொகையின் அடிப்படையிலே பிரிக்கப்பட்டதனாலும், இந்தியத்தமிழர்கள், வாக்குரிமை பெறுவதில் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டதனாலும் மலைநாட்டு கண்டிச் சிங்களவர்களுக்குத் தம்முடைய சனத்தொகையிலும் பார்க்க அதிகப்படியான பிரதிநிதித்துவம் கிடைத்தது. மத்திய மாகாணத்தில் 1931ஆம் ஆண்டில் கண்டிச் சிங்களவர்கள் 43 சதவிகிதமாகவும் இந்தியத் தமிழர்கள் 40 சதவிகிதமாகவும் இருந்தனர். ஊவா மாகாணத்தில் கண்டிச் சிங்களவர்கள் 53.5 சத விகிதமாகவும் இந்தியத் தமிழர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34.5 சதவிகிதமாகவும் இருந்தனர். முதல் அரசசபையில் பொதுத்தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 50 பிரதிநிதிகளில் கண்டிச் சிங்களவர்கள் 10 பேர் இருந்த அதே நேரத்தில் இந்தியத் தமிழர்கள் இருவர் மட்டுமே இருந்தனர். 6 லட்சம் இந்தியர்களில் ஒரு லட்சம் பேருக்கே வாக்குரிமை வழங்கப்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் 4 தேர்தல் தொகுதிகள் இருந்தும், 1931ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலை யாழ்ப்பாணத் தமிழர்கள் பகிஷ்கரிப்புச் செய்த காரணத்தினால் 4 பிரதிநிதிகள் ஸ்தானங்கள் அரசசபையில் காலியாகவே இருந்தன. கவர்னரால் நியமிக்கப்பட்ட 8 அங்கத்தவர் உட்பட மொத்தத் தொகை 58 பேரில் 38 பேர் சிங்கள அங்கத்தவர்களாக இருந்தனர். இதனால் அரசசபையில் சிங்களப் பிரதிநிதிகளின் ஆதிக்கம் அபரிமிதமாக இருந்தது. சிறுபான்மை இனமக்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்யும் அளவிற்கு அவர்களது செய்கைகள் இருந்தன. டி. எஸ். சேனாநாயக்காவின் 'குடியேற்றத் திட்டங்களும்', ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் 'சிங்கள மொழிக் கொள்கையும்' கன்னங்கராவின் 'கல்விக் கொள்கையும்' சிறுபான்மை மக்களாகிய தமிழர்களையும், கிறிஸ்தவர்களையும் பாதிப்பனவையாகவே இருந்தன.

இக்காலப்பகுதியிற்றான் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னோடியான பண்டாரநாயக்காவின் சிங்கள மகாசபையின் தோற்றத்தையும் இடது சாரி கட்சிகளான லங்கா சமாசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகளின் தோற்றத்தையும், இலங்கை சோனகர் சங்கத்தின் வளர்ச்சியையும், இந்தியத் தமிழர்களின் தொழிற்சங்க எழுச்சியையும், யாழ்ப்பாணத் தமிழர்களின் தமிழ்க் காங்கிரசின் தோற்றத்தையும் காண்கிறோம். சிங்கள எழுத்தாளர்களின் கருத்துக்கள் அரசியலில் பிரதி பலிக்கத்தொடங்கின. இக்காலகட்டத்தில் சிங்கள இலக்கியத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் தமிழ் இலக்கியத்தில் ஏற்படவில்லையென்றே கூறலாம். பௌத்த சமயத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட சிங்கள இலக்கியத்தில் ஒரு திருப்பு முனையை இக்காலப்பகுதியில் நாம் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்நாட்டு இலக்கியத்தின் தாக்கத்தை நாம் இங்கே காணகிறோம். சிங்கள எழுத்தாளர்கள் சிறுகதை நாவல் போன்ற புதிய உத்திகளைத் தமது இலக்கியத்தில் கையாண்டனர். சிங்கள இலக்கியம், படித்த உயர் வர்க்கத்தினிடமிருந்து விடுபட்டு, பாமர மக்களிடையே பரவியது. இதனால் சிங்கள எழுத்தாளர்களின் செல்வாக்கும் மக்களிடையே வளர்ந்தது. இவ்வெழுத்தாளர்களின் கருத்துக்களும் மக்களிடையே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. 'பியதாச சிறிசேன' 'பௌத்த மரபை' தன்னுடைய இலக்கியத்தில் புகுத்தினார். டபிள்யு. ஏ. சில்வா பொழுது போக்கிற்காக எழுதினார். 'முனிதாச குமாரதுங்க' சிங்கள மக்களின் உணர்ச்சியைத் தூண்டும் வகையில் எழுதினார். மார்ட்டின் விக்ரமசிங்க, 'யதார்த்த இலக்கியத்தைப்' படைத்தார். சரத்சந்திர எதிரிவீர, விமர்சனத்தை வலியுறுத்தினார். இவர்களின் எழுத்துகளினால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களின் இன உணர்ச்சியின் பிரதிபலிப்பை நாம் அரசியலில் காணலாம். இலங்கையை 'தம்மதீப' என்றும் 'சிஹதீப' என்றும் வர்ணித்தார்கள். இலங்கை, 'பௌத்த சமயத்தின்' இருப்பிடம் என்ற கருத்து சிங்கள மக்கள் மத்தியில் வலுவடைந்தது. தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரையில் ஆறுமுக நாவலருக்குப் பின் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. தமிழ் எழுத்தாளர்கள் பண்டைய தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்தலிலும், அவைகளுக்கு உரையெழுதுவதிலும், அகராதிகளைப் பதிப்பித்தலிலுமே தங்கள் கவனத்தைச் செலுத்தினார்கள். தமிழ்ப் பண்டிதர்கள் சைவசித்தாந்த கருத்துகளிலேயே மூழ்கியிருந்தார்கள். இலங்கைச் சர்வகலாசாலைக் கல்லூரி, லண்டன் சர்வகலாசாலைப் பரீட்சைகளுக்குத் தயார் செய்த காரணத்தினால் இலங்கைத் தமிழிலக்கியத்தில் தமிழ்ப் பேராசிரிகளின் செல்வாக்கைக் காண முடியவில்லை. தமிழ் மொழி, பண்டிதர்களின் ஆக்கிரமிப்பில் இருந்தது. பண்டிதர்களின் ஆக்கிரமிப்பிலிருந்த தமிழை விடுவிப்பதற்கு அப்பொழுது ஒரு கைலாசபதியும், சிவத்தம்பியும் இருக்கவில்லை. மகாத்மா காந்தியின் இந்திய சுதந்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தின் பாதிப்பினால் தோன்றிய யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் தலைவர்கள், பெரும்பாலும் ஆங்கில அறிவுடையவர்களாக இருந்த காரணத்தினால், அவர்களுடைய செல்வாக்கு, தமிழ் மக்களிடையே எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. மக்கள் அபிமானத்தை இழந்த காரணமாகத்தான் 1935ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடந்த பொதுத் தேர்தலில் இளைஞர் காங்கிரஸ் தலைவர்கள் போட்டியிடவில்லை. பகிஷ்கரிப்பு இயக்கத்தில் பங்குபற்றிய ராஜரட்ணம், செல்வதுரை அமரசிங்கம், சரவணமுத்து தேர்தலில் தோல்வியுற்றனர். பழமைபேண்வாதிகளே வெற்றி பெற்றனர்.

இக்காலகட்டத்தில்தான் சிங்களச் சமூகமும் தமிழ் சமூகமும் வெவ்வேறு திசைகளை நோக்கிச் செல்வதைக் காண்கிறோம். இவ்விரு சமூகங்களையும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களினால் பாதிக்கப்பட்டு தம்மை எதிரிகளாக எண்ணத் தொடங்கின. இதற்கு ஓர் அடிப்படைக் காரணமும் இருக்கிறது. சிங்கள சமூகத்தினர் தமது வரலாற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். தமிழர்கள் தமது பாரம்பரிய மரபுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இந்தியர் தமிழர்கள் வரலாற்றையும், பாரம்பரியத்தையும் வலியுறுத்தினர். முஸ்லிம்க்ள் தம்முடைய தனித்துவத்தை நிலைநாட்டுவதற்கு வரலாற்றையும், தம்முடைய சமயத்தையும் சமயப்பண்பாட்டையும் முன் வைத்தனர். பௌத்த பிக்குகளால் எழுதப்பட்ட இலங்கை வரலாற்று நூல்களான மகாவம்ச, சூளவம்ச, தீபவம்ச போன்ற நூல்களிலிருந்து சிங்கள மன்னர்களின் ஆட்சிக் காலங்களைப் பற்றியும், பௌத்த சமயம் எந்த அரசனின் காலத்தில் இலங்கைக்குக் கொண்டு வந்ததைப் பற்றியும் அறியலாம். ஆனால் இலங்கைத் தமிழர்கள் எந்த நூற்றாண்டில் இலங்கைக்கு வந்தார்கள், எப்பொழுது குடியேறினார்கள். எந்த ஆண்டில் எந்த அரசன் ஆண்டான் என்பன போன்ற விபரங்களை அறிவது கஷ்டம். பரராஜசேகரன் என்ற அரசன் 1478லிருந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1519ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தை ஆண்டான் என்ற குறிப்பு இருக்கிறதேயொழிய, விஜய கூளங்கைச் சக்கரவர்த்தி, குலசேகர சிங்கராயன் ஆகிய அரசர்கள் எப்பொழுது ஆண்டார்கள் என்ற விவரம் தெளிவாக இல்லை. யாழ்ப்பாணத்தமிழரின் வரலாற்றிலிருக்கும் மயக்கத்தை வைத்துத்தான் சில சிங்கள எழுத்தாளர்கள், தமிழர்கள் யாழ்ப்பாணத்தில் குடியேறியது சமீப காலத்திற்றான் என்ற கருத்தை முன்வைக்க முனைகின்றனர். முஸ்லிம்களின் இலங்கை வருகையைக்கூட, பேராசியர்விஜேசேக்கர போன்றவர்கள், 15ஆம் நூற்றாண்டு என்று கூறுகிறார்கள். தமிழர்களின் படையெடுப்புக்களினால் இலங்கையின் பண்டைய நாகரிமும், நாகரிகச் சின்னங்களும் அழிக்கப்பட்டனவென்ற கருத்தை இவ்வரலாற்றாசிரியர்களும் எழுத்தாளர்களும் மக்கள் மத்தியில் பரவவிட்டனர். எனவே சிங்கள மக்கள் தமிழர்களைத் தம்முடைய பரம விரோதிகளாகவே எண்ணத் தொடங்கினர். டொனமூர் அரச சபைக் காலத்தில் இவ்வுணர்வு வலுப்பெற்றது.

யாழ்ப்பாணத்துத் தமிழர்களும், இந்தியத் தமிழர்களைத் தம்மோடு சமமாக எண்ணவில்லை. யாழ்ப்பாணத்து சமூகத்தில் ஆதிக்கம் கொண்ட உயர்வர்க்கத்தினரான வெள்ளாள சாதியினர், இந்தியத் தமிழரைக் குறைவாகவே மதித்தனர். யாழ்ப்பாணத்தின் ஏனைய தாழ்ந்த சாதியினரும், இந்தியத் தமிழரைத் தமக்குச் சமமாக எண்ணவில்லை. தேயிலை, றப்பர் தோட்டங்களில் கூலிகளாக வேலை செய்ய வந்தவர் தென்னிந்தியாவின், திருச்சி, தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர், ஆர்க்காடு, மதுரை, புதுக்கோட்டை, திருநெல்வேலி போன்ற பிரதேசங்களிலிருந்து வந்த தாழ்ந்த சாதியினரான பள்ளர், பறையர், இருளர், குறவர், நாடார், சக்கிலி போன்றவர்கள் என்ற காரணத்தினால் இவர்களும் தமிழினத்தைச் சேர்ந்தவர்கள், என்ற சாதி உணர்வில் ஊறியிருந்த யாழ்ப்பாணத்தமிழர்கள் எண்ணவில்லை. தம்முடைய தமிழ், செந்தமிழ் என்றும், தோட்டத் தமிழரின் தமிழ் கொடுந்தமிழ் என்றும் அடைமொழிகளை உபயோகித்தனர். 'தோட்டக்காரன்' என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கூலி' என்றும் 'புதிய தமிழர்' என்றும் இவர்களுக்கு நாமம் சூட்டினர். ஆகவே இந்தியத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்ட நேரத்தில் இவர்களுக்கு ஆதரவாக வாதாட எந்த இலங்கைத் தமிழரும் முன் வரவில்லை. எனவே இலங்கை சனத்தொகையில் 13% சதவிகிதமாகவிருந்த இந்தியத் தமிழருக்கு இரண்டே இரண்டு ஸ்தானங்கள் தான் முதலாம் அரசபையில் கிடைத்தன. 1930 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையுள்ள காலப்பகுதியில் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் வரலாறு கண்ணீரால் எழுதப்படவேண்டியதொன்று. "இலங்கை பொருளாதார வளர்ச்சியில் பெரும் தொண்டாற்றிய இலங்கையின் அதிக தொகையினரைக் கொண்ட, ஒரு தொழிலாள வர்க்கத்தினர், ஜனநாயக உரிமையான வாக்குரிமை பறிக்கப்பட்டு, பொருளாதார, சமூக நீதியும் மறுக்கப்பட்ட வரலாற்றைத்தான் இந்தியத் தமிழரின் வரலாற்றில் நாம் காண்கிறோம்" என்று குமாரி ஜயவர்த்தன கூறுகிறார். ஏ. ஈ. குணசிங்க 30 ஆம், 40 ஆம் ஆண்டுகளில் தோட்டத்து இந்தியர்கள் வாக்குரிமை பெறுவதை எதிர்த்தார். மரத்தால் விழுந்தவனை மாடு முட்டுவதைப்போல, 1930 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி இத்தொழிலாளர்களைப் பெரிதும் பாதித்தது. வேலையிழந்த இந்தியத் தொழிலாளர் ஒரு லட்சம் பேர் இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றார்கள்.

1936 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் இந்தியத் தமிழர்களின் தொகை 145,000 மாக அதிகரித்ததனாலும், இரண்டாம் மகாயுத்தம் முடிவில் அவர்களது வாக்காளர் தொகை 2,25,000 கூடியதாலும்,மத்திய மாகாணத்தில் 6 சதவிகிதமாகவும், ஊவா மாகாணத்தில் 4 சதவிகிதமாகவும் இருந்த முஸ்லிம்களின் அரசியல் செல்வாக்கு குறைந்தது. மலை நாட்டுத் தமிழரின் அரசியல், செல்வாக்கு வளர்ந்ததனால் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்களே. ஆகவே முஸ்லிம் தலைவர்களின் கொள்கையிலும் நாம் மாற்றத்தைக் காண முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பாதுகாக்க முஸ்லிம் தலைவர்கள் எடுத்த முயற்சி

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, 'ஒரு நாட்டின் சனத் தொகையில் ஐந்தாவது ஸ்தானத்திலிருக்கும் ஒரு சிறுபான்மை சமூகத்தினர், தமது எண்ணிக்கையின் பலவீனத்தை நீக்கி ஒரு பலமுள்ள, ஒரு சக்திவாய்ந்த, அரசியல் அந்தஸ்துள்ள ஒரு சமூகமாக மாறினர்' என்பதே. வெறும் வாணிபத்திலும், கமத்தொழிலும் ஈடுபட்டிருந்த முஸ்லிம் சமுதாயம், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தான் தனது பலவீனத்தை உணர்ந்தது. இப்பலவீனத்துக்குக் காரணம் கல்வியறியாமையே என்பதை உணர்ந்த அன்றைய தலைவர்களான சித்திலெப்பை, வாப்பிச்சிமரைக்காயர் போன்றவர்கள் கல்விக் கழகங்களையும் கல்விக் கூடங்களையும் நிறுவினார்கள். சட்டசபையில் தமக்கு பிரதிநிதித்துவம் வேண்டும் என்று வாதாடிய முஸ்லிம்களுக்கு எதிராக அவர்கள் ஒரு தனியினம் அல்ல, தமிழர்களின் வழித் தோன்றல்கள் என்றும் அவர்களுக்கும் பிரத்தியேகமாக ஒரு பிரதிநிதித்துவம் தேவையில்லையென்ற கருத்தைப் பிரித்தானிய அரசாங்கத்தினரிடம் முன்வைத்த பொன். இராமநாதனுடைய கருத்துக்கு எதிராக ஐ. எல். எம். அப்துல் அசீஸ் போன்ற முஸ்லிம் தலைவர்கள், முஸ்லிம்களின் வரலாற்றையும், பாரம்பரியத்தையும் தகுந்த ஆதாரங்களை வைத்து முஸ்லிம்களின் தனித்துவத்தை நிலைநாட்டினார்கள். 1906 ஆம் ஆண்டில் நடந்த துருக்கித் தொப்பி விவகாரத்தில் முஸ்லிம்கள் தம்முடைய தனித்துவத்தை உறுதிப்படுத்தினார்கள். முதலாவது உலக மகாயுத்தத்தில், துருக்கி இஸ்லாமிய சாம்ராஜ்யத்திற்கு எதிராக இங்கிலாந்து போர் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது இங்கிலாந்தின் செய்கையை இலங்கை முஸ்லிம்கள் கண்டிக்கவில்லை. வாழையடி வாழையாக முஸ்லிம்கள் பெரும்பான்மை சமூகமான சிங்களவருடன் வைத்திருந்த சிநேக உறவு 1915 ஆம் ஆண்டு சிங்கள - முஸ்லிம் கலவரத்தினால் முறிந்தது. இச்சம்பவத்திற்கு பிறகு பெரும்பான்மை சமூகத்தை முஸ்லிம்கள் சந்தேகக் கண்கொண்டே பார்த்தார்கள். பிரித்தானிய அரசாங்கத்திற்கு ஆதரவாக இருந்த முஸ்லிம்கள், 'சட்டசபையில் தமக்குக் கூடுதலாக பிரதிநிதித்துவம் வேண்டும்' என்ற கோரிக்கையையும், அரசாங்கத்தின் முன்வைக்கத் தவறவில்லை. சிங்களத் தலைவர்களும் தமிழர் தலைவர்களும் 1917–19 ஆம் ஆண்டுகளில் இலங்கை தேசிய காங்கிரசை நிறுவி சட்டசபை சீர்திருத்தத்திற்கு வாதாடிய போது முஸ்லிம்கள் விலகி நின்றதோடு பிரித்தானிய அரசாங்கத்திற்கு ஆதரவாகவும் இருந்தார்கள். தேசிய காங்கிரஸ், பிரதேசவாரியாக பிரதிநிதித்துவம் கேட்டபோது சிறுபான்மை சமூகத்தினர், இக்கோரிக்கைக்கு எதிராக நின்றதோடு தமக்கு சமூகரீதியில் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்டனர்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய கவர்னர் மேனிங், சட்டசபையில் முஸ்லிம்களுக்கு மூன்று பிரதிநிதிகளை வழங்கினார். சிங்களத் தலைவர்களின் உறுதி மொழிகளினால் விரக்தியடைந்த தமிழ்த்தலைவர்கள் தேசிய காங்கிரசை விட்டும் விலகி, பிரித்தானிய அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்தார்கள். சிங்களத் தலைவர்களின் கோரிக்கைகள் நிறைவேறாவண்ணம் பொன். இராமநாதன் கவனர் மேனிங்குடன் சேர்ந்து ஒத்துழைத்தார். முஸ்லிம் சமூகத்தினரும் தம்முடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கு, இராமநாதனுடன் சேர்ந்து ஒத்துழைத்தார்கள். "தம்முடைய தனித்துவத்தைப் பாதுகாப்பதே முஸ்லிம்களின் முக்கிய குறிக்கோளாயிருந்தது, 1915 ஆம் ஆண்டு சம்பவத்தினால் சிங்களச் சமூகத்தவரோடு ஏற்பட்ட கசப்பு உணர்வுதான் முஸ்லிம்களைத் தமிழ்த்தலைவர்களின் கீழ் இயக்கத் தூண்டியது. டொனமூர் குழுவினரின் அரசியல் அமைப்பில் முஸ்லிம்கள் தம்முடைய பிரதிநிதித்துவத்தை இழந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய அரசாங்கத்தில் வைத்திருந்த நம்பிக்கையை இழந்த முஸ்லிம்களின் கொள்கையில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. பெரும்பான்மை இனமான சிங்களவரின் போராட்டத்திற்குத் தமது ஒத்துழைப்பை நல்குவதென முஸ்லிம் தலைவர்கள் தீர்மானித்தார்கள். முஸ்லிம்களின் இக்கொள்கை மாற்றத்திற்குக் காரணமாயிருந்தவர் 1936 ஆம் ஆண்டில் சட்டசபையில் அங்கத்தவராக நியமனம் பெற்ற ராசிக் பரீத் அவர்களே. 1936-37 ஆம் ஆண்டின் சட்டசபையின் 'வரவு-செலவு' திட்டத்தில் உரையாற்றிய ராசிக் பரீத் அவர்கள், "இச்சபைக்கு அங்கத்தவராக வந்தது முதல் இங்கே நான் கண்ட முக்கிய அம்சம் என்னவென்றால், இச்சபையிலிருக்கும் கௌரவ அங்கத்தவர்கள் எல்லோரும், எல்லா சமூகங்களிடையேயும், ஒற்றுமையேற் படுத்துவதற்காகப் பாடுபடுவதே, இலங்கைத் தாய்த்திரு நாட்டின் எதிர்காலம் நல்லதாகவே இருக்கும். எல்லா சமூகங்களினதும் ஒற்றுமைக்காகப் பாடுபடுவதே எனது குறிக்கோளுமாகும் என்றுமுரைத்தார் முஸ்லிம்களின் தனித்துவத்தை வலியுறுத்திய ராசிக் பரீத், சட்டசபையில் அவருடைய முதலாவது உரையில், "முஸ்லிம்களாகிய நாம், அரபுத் தமிழையே பேசுவதனால் இளம் வயதிலேயே ஆங்கிலப் பரீட்சைகளில் எம்மால் சித்தியடைய முடியவில்லை. ஆங்கில மொழியையே பேசும் மொழியாகக் கொண்ட பறங்கியர், பதின்மூன்று வயதிலேயே கேம்பிரிட்ஜ் ஜூனியர் பரீட்சையில் சித்தியடைகிறார்கள். சிங்களவரும், தமிழரும் இரண்டு மொழிகளைக் கற்கும் அதே வேளையில் முஸ்லிம்களாகிய நாம் மூன்று மொழிகளைக் கற்க வேண்டும். எங்கள் பெற்றோர் எமது தாய்மொழியாகிய அறபு மொழியைக் கற்றபின் தான், வேறு பாடசாலைகளுக்குப் போவதற்கு எமக்கு அனுமதியளித்தனர். இன்று சாகிராக்கல்லூரியில் மாத்திரம் தான் அரபுமொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது" என்று கூறினார். முஸ்லிம்களின் தாய்மொழி அரபு மொழி என்றும், அவர்களுக்கென்று ஒரு தனித்துவம் இருக்கிறதென்றும் பறை சாற்றினார் சேர். ராசிக் பரீத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே கருத்தை சேர். ராசிக் பரீத் 1944 ஆம் ஆண்டு அரச சபையில் வலியுறுத்தினார். அரபும், அரபுத்தமிழும் தான் எம்முடைய தாய்மொழி என்ற எனது பிரேரணையை இச்சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டதை கௌரவ அங்கத்தவர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். ஆனால் இன்றைய அரசமொழி விவாதத்தில் சில கௌரவ அங்கத்தவர்கள் முஸ்லிம்களுடைய மொழி தமிழ் என்றும் வேறு சிலர் 'சிங்களம்' என்றும் வாதிட்டார்கள். இப்படிப் பேசுவதனால் இலங்கை சோனகரை ஒதுக்குவதாகும் என்று நான் கருதுகிறேன்'' என்று சேர். ராசிக் பரீத் பேசினார்.

முஸ்லிம்களுடைய வரலாற்றையும் தனித்துவத்தையும், மேலும் வலியுறுத்த விரும்பிய சேர். ராசிக் பரீத் 1948 ஆம் ஆண்டில் அரசபையில் பின்வருமாறு உரையாற்றினார்.

''இலங்கைச் சோனகர்கள்... எனது சிங்களச் சகோதரர்கள், சகோதரிகளைப் போல் எமது தாய்த்திரு நாடாம், லங்காவின் அருமைப் புதல்வர்கள். இப்புண்ணிய பூமியில் இலங்கைச் சோனகர்களும், சிங்களவரும், ஒற்றுமையுடனும், நட்புறவுடனும் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். கடந்த காலங்களில் எம்மிடையே பல தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். அத்தவறுகள் திரும்பவும் நடைபெறாது என நான் நினைக்கிறேன். அதுதான் என்னுடைய அவா கூட. எந்தப் பிரச்சினையையும் சுமுகமாகத் தீர்க்கும் ஓர் அறிவுபடைத்த மக்கள் வாழும் காலத்தில் வாழ்கிறோம். எந்தப் பிரச்சினையையும் நாம் நல்லெண்ணத்துடனும், நல்லுணர்வுடனும் அணுகினால் எம்மால் தீர்க்க முடியாததொன்றல்ல. ஆகையால் என் சிங்களச் சகோதரர்களுக்கு நேசக்கரங்களை நீட்டுகிறேன்''.

முஸ்லிம்களின் தனித்துவத்தை வலியுறுத்திய சேர். ராஸிக் பரீத், சிங்கள மக்களின் நட்புறவையும் ஆதரவையும் நாடினர். சிங்கள மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராக இருக்காமல் அவர்களுடைய சுதந்திரப் போராட்டத்திற்கு முஸ்லிம்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதுணையாக இருக்க வேண்டும் என்ற கொள்கையை முஸ்லிம் மக்களிடையே பரப்பியவரும் இவரே.

சேர். ராசிக் பரீத் தலைமையில் இயங்கிய இலங்கை சோனகர் சங்கம், 1945 ஆம் ஆண்டில் சட்டசபை சீர்திருத்தத்திற்காக இலங்கை வந்த 'சோல்பரி குழுவினருக்கு' சமர்ப்பித்த அறிக்கையில், தம்முடைய தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கு தாம் எடுத்த முயற்சிகளாவன, தம்சமூகத்தவரிடையே மதக்கல்வியை புகட்டுவதற்காக காலியிலும், மகாரகமையிலும் இருமத்ரசாக் கல்லூரிகளை ஸ்தாபித்ததையும், சாகிராக் கல்லூரியில் அறபு மொழியையும் இஸ்லாமியக் கலாச்சாரத்தையும் கற்பிக்க எடுத்த முயற்சியையும், முஸ்லிம் தாய்மார்களுக்கு முஸ்லிம்களின் நன்கொடைகளைக் கொண்டு அமைத்த வைத்தியசாலைகளையும் முஸ்லிம்களின் கல்விக்காக அளுத்கமையில் ஒரு முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி நிறுவியதையும் உதாரணங்களாக எடுத்துக் காட்டினர்.

முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பாதுகாக்க முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம்களுக்கென்றே விசேஷ சட்டங்களான முஸ்லிம் விவாகம், விவாகரத்து, பள்ளிவாசல் நிர்வாகம் போன்ற சட்டங்களை அரச சபையில் நிறைவேற்றினார்கள். முஸ்லிம்களின் தனித்துவத்தை நிலைநாட்டவிரும்பிய சேர். ராசிக் பரீத் [illegible]ஸ்லிம்கள் தமிழ்பேசும் மக்களல்ல, அவர்களுடைய தாய்மொழி [illegible]றபும், அறபுத்தமிழும் என்று வாதிட்டார். சிங்களத்தலைவர்களின் சிங்களமொழி அரசமொழியாக வேண்டுமென்ற கொள்கைக்குப் பூரண ஆதரவை அவர் அளித்ததற்குக் காரணம் அவர்களுடைய ஆதரவைத் தம் சமூகத்திற்குப் பெற்றுக்கொடுப்பதற்கே; தம்மை எதிர்த்த தமிழர்களுக்கெதிராக சிங்களத்தலைவர்கள் முஸ்லிம்களை உபயோகிக்கத் தவறவில்லை.

மேலும் சேர். ராசிக் பரீத் முஸ்லிம்களின் தனித்துவத்தை ஸ்தாபிப்பதற்காக பின்வரும் பிரேரணைகளை அரச சபையில் சமர்ப்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 04.08.1930ல் முஸ்லிம் பாடசலைகளில் அறபு மொழி கற்பிப்பதற்காக அறபு ஆசிரியர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

2. 20.01.1938ல் ஜூம்மாத் தொழுகையில் நடைபெறும் குத்பாப்பிரசங்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படல் வேண்டும்.

3. ஆங்கிலக் கல்வி கற்பதற்காக அடுத்த பத்து வருடங்களுக்கு இலங்கைச் சோனகர் வாலிபர் இருவருக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படல் வேண்டும் (29.09.38)

4. 30.05.1940ஆம் ஆண்டில் அரசாங்கம் மாவட்ட அரசாங்க உதியோகத்தார் (டி.ஆர்.ஓ) நியமனத்தில் இரு சோனகர்கள் இடம் பெற வேண்டும்.

5. 14.06.41ல் மௌலவி ஆசிரியர்களை மேற்பார்வை செய்வதற்கு அறபு மொழி தெரிந்த வித்தியாதரிசிகள் நியமிக்கப்படல் வேண்டும்.

6. 13.11.1941ஆம் ஆண்டில் அரசாங்க உத்தியோகத்தர்களை நியமிக்கும்போது மூன்று சோனகர்களையாவது அரசாங்கம் நியமிக்கவேண்டும்.

7. இலங்கைச் சோனகர்களுக்கென்றே ஒரு முஸ்லிம் பெண்கள் பாடசாலையை அரசாங்கம் நிறுவவேண்டும். (04.08.1945)

மேலே குறிப்பிட்ட பிரேரணைகளை சேர்.ராசிக் பரீத், அரசசபையில் கொண்டுவருவதற்குரிய முக்கிய காரணம், தன்னுடைய சமூகம் ஏனைய இலங்கைச் சமூகங்களைவிட தனித்தன்மை வாய்ந்தது என்ற கருத்தை நிலைநாட்டுவதற்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களின் கொடூர நடவடிக்கைகளினால் அவஸ்தைப்படும் முஸ்லிம்களின் நிலையைக்காட்டி அரசசபையில் தமிழ்த் தலைவர்களைச் சாடிய சேர். ராசிக் பரீத் முஸ்லிம்கள் தமிழ்பேசும் மக்களென்றும் அவர்கள் தமிழ் சமூகத்தின் அங்கம் என்றும் கூறிய தமிழ்த்தலைவர்களின் கருத்தை முறியடித்தார். முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தை நிலைநாட்டிய சேர்.ராசிக் பரீத் முஸ்லிம் கல்வியின் வளர்ச்சிக்கும் வித்திட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சிங்களம் மட்டும்’ மசோதாவினால் ஏற்பட்ட பாதிப்புகள்

இலங்கையின் சனத்தொகையில் ஐந்தாவது ஸ்தானதில் உள்ள சிறுபான்மை இனமாகிய இலங்கை முஸ்லிம்கள் தம்முடைய தனித்துவத்தையும் அரசியல் செல்வாக்கையும் காப்பாற்றுவதற்காக அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டபோது தம்முடைய கொள்கைகளையும் மாற்றவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கேற்பட்டது. அப்படி மாற்றியிருக்காவிட்டால் இன்று அரசியல் அனாதைகளாக மாற்றப்பட்டிருப்பார்கள். இன்றைய அரசியல் நிலையை அவதானிக்கும்போது அப்படியொரு நிலை எதிர்காலத்தில் ஏற்படுமா, என்ற பயம் எழுகிறது. இன்றைய அரசியல் அமைப்பு சிறுபான்மை மக்களுக்கு ஓரளவு பாதுகாப்பு அளிக்கிறதென்று சிலர் கூறுவதை நாம் ஏற்றுக்கொண்டாலும் எதிர்காலத்தில் அப்படியொரு நிலை இருக்குமா? என்பதுதான் கேள்வி. இன்றைய அரசியல் அமைப்பு மாற்றப்பட்டால் எல்லா சிறுபான்மையின மக்களின் கதி பூஜ்யமாகுமா?

சிறுபான்மையின மக்கள் இன உணர்வைக் கிளப்பினால் அதற்கு எதிரொலியாகப் பெரும்பான்மையினத்தவரிடையே இன உணர்வு உத்வேக மடைந்தால் அதன் விளைவு என்னவாகும் என்பதைச் சிறுபான்மையின மக்கள் உணரவேண்டும். சிறுபான்மை மக்கள் தம் உரிமைக்காகப் போராடும் சூழ்நிலை இன்றில்லை. ஆலமரத்தின் கீழ் புல்பூண்டுகள் கூட வளரமுடியாது. கொடிகள் மட்டும்தான் படரலாம். சிறுபான்மையினர் யாசகம் கேட்டுத்தான் பிழைக்க வேண்டிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அரசியல் அமைப்பில் மாற்றம் ஏற்பட்டால் நிலைமை சீர்படுமா, மோசமாகிவிடுமா? இதுதான் முஸ்லிம்களை இன்று எதிர் நோக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை. பாவம், பிறந்த மண்ணிலிருந்து விரட்டப்பட்டு அகதிகளாகப் புத்தளத்தில் தஞ்சம் புகுந்த முஸ்லிம் ஆசிரியர்கள் தமக்குக் கிடைக்க வேண்டிய ஆறுமாதச் சம்பளத்தைக் கேட்டபோது அடிதடிக்குள்ளானார்கள் என்ற சம்பவம் முஸ்லிம்களின் எதிர்கால நிலைமையைப் பிரதிபலிக்கும் ஓர் அறிகுறியா?

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய பௌத்தமத மறுமலர்ச்சி இயக்கம் அரசியல் உட்கருத்துக்களைக் கொண்டிருந்ததனால் இலங்கையின் தேசிய இயக்கத்தின் அடிப்படைத்தத்துவமாக மாறியது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் பௌத்த மதத்தின் தாக்கத்தைக் தேசிய இயக்கத்தில் நாம் நேரிடையாக காணலாம். சிங்கள பிரேதேசங்களில் தோன்றிய மது ஒழிப்பு இயக்கம் பௌத்த மறுமலர்ச்சி இயக்கமாக மாறி, தேசிய இயக்கமாக வளர்ந்து, ஐம்பதாம் ஆண்டுகளில் அதன் முழு உருவத்தோற்றத்தைக் காண்கிறோம். அதன் தாக்கம் எல்லாத்துறைகளையும் பாதித்தது.

சிங்கள இனவாதம் முதலில் சிங்கள மொழி அரச மொழியாக மாறுவதில் காண்கிறோம். 1930ஆம், 40ஆம் ஆண்டுகளில் மொழிக்கொள்கை ஒரு முக்கிய அரசியற் கொள்கையாகக் கடைப்பிடிக்கப்படுவதை அவதானிக்கிறோம். இக்கால கட்டத்திற்றான் இலங்கையில் ஒரு தேசிய கல்வித்திட்டம் உருவாவதையும் காண்கிறோம். இப்புதிய கல்வித்திட்டத்தில் தாய்மொழி மூலம் கல்வி கற்பிக்கும் கொள்கையை அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஓர் ஆயுதமாக உபயோகித்தார்கள். 50ஆம் ஆண்டுகளில் மக்களின் இன உணர்வைத்தூண்டும் வகையில் அரசியலைக் கைப்பற்றுவதற்கு அரசியல் தலைவர்கள் சுய பாஷைக் கொள்கையை மக்கள் முன்வைத்தார்கள். பின்னால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு இது ஒரு மூலகாரணமாக அமைகிறது. தம்முடைய இக்கொள்கை தான் 1950ஆம், 1960ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்கலவரங்களுக்கு தளம் அமைத்துக் கொடுக்கும் என்று இவர்கள் அப்பொழுது உணரவில்லை.

உண்மையில் ஆங்கிலத்தை அரச மொழி ஸ்தானத்திலிருந்து நீக்கி சிங்கள-தமிழ் மொழிகளை அரசமொழியாக மாற்ற வேண்டும் என்ற இயக்கம் 1920ஆம் ஆண்டிலேயே ஆரம்பித்துவிட்டது. இந்தியாவிலேற்பட்ட தாய்மொழி இயக்கத்தைக் தழுவியே இலங்கையிலும் இவ்வியக்கம் தோன்றியது. 1930ஆம் ஆண்டுக்குப்பிறகு டொனமூர் அமைப்பின் கீழ் ஆட்சிப்பொறுப்பின் பெரும்பகுதி இலங்கையர் கைவசம் வந்த பிறகுதான் இச் சுய பாஷை இயக்கம் வலுப்பெற்றது.

இலங்கை அரசாங்க நிர்வாகம் இலங்கையர் மயமாக்கப்பட்டதன் பிறகு ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த உயர் வர்க்கத்தினரே நிர்வாகத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். சுயபாஷையில் கல்வி கற்ற தொழிலாள, விவசாய, வர்க்கப் பிரிவைச் சேர்ந்த பாமரமக்களுக்கு அரசாங்கத்தில் பதவிவகிக்கும் வாய்ப்பு கிட்டவில்லை. சுயபாஷையில் கல்வி புகட்டப்பட்ட அரசாங்க பாடசாலைகளில் இலவசக் கல்வி இருந்த அதே நேரத்தில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்பித்த கிறஸ்தவ மிஷனரிமார்களின் கல்விக்கூடங்களில் கட்டணம் அறவிடப்பட்டது. ஆகவே பணவசதி படைத்தவர்களின் பிள்ளைகளுக்குத்தான் இக்கல்வி பயிலும் பாக்கியம் கிடைத்தது. டொனமூர் அரசியல் திட்டத்தில் இலங்கையின் எல்லா மக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டதால் பாமர மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு அரசியல் வாதிகள் பல தந்திரோபாயங்களைக் கையாளத் தொடங்கினார்கள். இத்தந்திரோபாயங்களில் ஒன்றுதான் இச்சுயபாஷை இயக்கமும்.

ஆனால் இதற்கு விதிவிலக்காக இருந்தனர் சிலர். சோஷலிச கருத்துக்களின் தாக்கத்தினால் மக்கள் எல்லோரும் சமம் என்ற கருத்தை கொண்ட முற்போக்குவாதிகள் எல்லா மக்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம உரிமை வழங்கப்படல் வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்து இளைஞர் காங்கிரஸ் இயக்கத்தினர் சுய பாஷையின் இயக்கத்திற்கு முன்னோடிகளாக இருந்தனர். 1931ஆம் ஆண்டுக்குப் பிறகு நிறுவப்பட்ட அரசசபையில் 1932ஆம் ஆண்டில் ஜி.கே.டப்ளியு. பெரேரா அரசசபை விவாதங்கள் சிங்களம், தமிழ் மொழிகளில் நடைபெற வேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டுவந்தார். இரண்டு வருடங்களுக்குப் பிறகு அரசாங்க அலுவல்களிலும் நீதிமன்றங்களிலும் சுயபாஷைகள் உபயோகிக்கப்படல் வேண்டும் என்ற பிரேரணையையும் கொண்டு வந்தார். சுயபாஷை இயக்கம் உத்வேகம் பெறப்பெற சுயபாஷைக்கல்வி இயக்கமும் உத்வேகம் பெற்றது. இவ்வியக்கத்திற்குத் தலைமை தாங்கியவர்களில் கன்னங்கராவும், தகநாயக்காவும் பின்னால் கல்வி அமைச்சர்களாக நியமிக்கப்பட்டார்கள். பின்னால் அமைச்சராக வந்த றி.பி. ஜாயாவும் இவ்வியக்கத்திற்கு முழு ஆதரவையும் கொடுத்தார்.

1936 ஆம் ஆண்டில் தோன்றிய மார்க்சிய கட்சியான லங்கா சமசமாஜிக் கட்சியினரும் இவ்வியக்கத்திற்குத் தமது முழு ஆதரவையும் அளித்தார்கள். முஸ்லிம் தலைவர்களும் சுய பாஷை இயக்கத்தை ஆதரித்தார்கள்.

1943 ஆம் ஆண்டில் சுயபாஷை இயக்கம் ஓர் அரசியல் திட்டமாக உருப்பெறுகிறது. அரசசபையில் புதிய அங்கத்தவராகச் சேர்ந்த ஜே. ஆர். ஜயவர்த்தனாதான் இவ்வியக்கத்திற்கு வடிவம் கொடுத் தவர். 1943 ஆம் ஆண்டில் ஜே. ஆர். ஜயவர்தனா 'சிங்களம் மட்டும்' அரச மொழியாக இருக்க வேண்டும் என்ற பிரேரணையை அரசசபையில் சமர்ப்பித்தார். 'சிங்களம் மட்டும்' என்ற மசோதாவுக்கு ஆட்சேபம் தெரிவித்த வி. நல்லையா சிங்களம் என்ற வார்த்தை வரும் இடங்களிலெல்லாம் தமிழும் என்ற வார்த்தை வர வேண்டுமென்ற திருத்தத்தை கொண்டு வந்தார். இந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தத்தையேற்றுக்கொண்ட ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் மூல பிரேரணை பின்வருமாறு அமைந்தது.

1. எல்லாப் பாடசாலைகளிலும் போதனா மொழி, சிங்கள மொழியாக இருத்தல் வேண்டும்.

2. எல்லாப் பரீட்சைகளிலும் சிங்களம் கட்டாய பாடமாக அமைய வேண்டும்.

3. அரசசபையின் விவகாரங்களிளெல்லாம் சிங்கள மொழி புகுத்தப்படுவதற்குரிய சட்டம் நிறைவேற்றப்படல் வேண்டும்.

4. பிறமொழிகளிலுள்ள முக்கிய நூல்கள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்படுதலுக்குரிய ஒரு குழு நியமிக்கப்படல் வேண்டும்.

5. ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு ஏற்படும் நிலை மாறுபாட்டின் வளர்ச்சியைப்பற்றிய அறிக்கையை அடிக்கடி சபைக்கு சமர்பிப்பதற்கு ஓர் ஆணைக்குழு நியமிக்கப்படல் வேண்டும்.

ஜே. ஆர் ஜயவர்த்தனாவின் இப்பிரேரணை சிங்கள மொழியை அரியாசனத்தில் அமர்த்தியது. வீ. நல்லையா தன் திருத்தப் பிரேரணையை சபையில் சமர்ப்பித்தபோது ஜே. ஆர். ஜயவர்தனா பின்வருமாறு தன் கருத்தைத் தெரிவித்தார்.

"இப்பிரேரணையை சமர்ப்பிக்கும்போது சிங்கள மொழி மாத்திரமே இந்நாட்டின் அரச மொழியாக இருக்க வேண்டுமென்பதே என் நோக்கமாயிருந்தது. தமிழ் மொழியும் சம அந்தஸ்துடன் இந்நாட்டில் இருக்க வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கையை நான் உணர்கிறேன். உலகில் 30 லட்சம் பேர்களே சிங்கள மொழியைப் பேசுவதனால் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்கும் இந்நாட்டில் சம அந்தஸ்து வழங்கப்படுமானால் அதனால் பாதிக்கப்படுவது சிங்கள மொழியே என்று நான் பயந்தேன். நாலு கோடி மக்கள் தென்னிந்தியாவில் தமிழைக் தாய் மொழியாகக் கொண்டிருப்பதனாலும், தொன்மை வாய்ந்த தமிழிலக்கியத்தினாலும், தமிழ் பண்பாட்டினாலும் சிங்கள மொழியின் வளர்ச்சி தடைபெறும் என்ற பயமும் எனக்கிருந்தது," என்று ஜயவர்த்தனா கூறினார். இப்பயத்தின் அடிப்படையில் தோனறியதுதான் இன்றைய இனவாத அரசியல். எனவே இன்றைய இனபிரச்சினைகளுக்குரிய காரணத்தை 30 ஆம், 40 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சம்பவங்களிலிருந்தும் சிங்களத்தலைவர்களின் அன்றைய கருத்துகளிலிருந்தும் நாம் அறியலாம்.

சிங்களம் அரச மொழியாக வேண்டும் என்ற மசோதாவின் விவாதத்தில் கலந்து கொண்ட பண்டாரநாயக்க, தாய்மொழியின் அவசியத்தைப் பற்றிக்கூறும்போது "ஒரு சமூகத்தின், ஓர் இனத்தின் உணர்ச்சிகள் அவர்களது அபிலாஷைகள் அவர்களது மொழியின் மூலம்தான் வெளிப்படலாம். அதனாற்றான் தேசிய உணர்வு வெளிப்படுவதற்கு மொழி அவசியமாகிறது" 1என்றார். தமிழ் மொழியின் தேசிய அந்தஸ்தைப் பற்றிக்கூறும் பொழுது "சிங்கள மொழி மட்டும்தான் அரசாங்க மொழியாக வேண்டும் என்பதின் நோக்கம் என்ன?" என்ற வினா எழுப்பிய பண்டாரநாயக்க அதற்கு விடையளிக்கு முகமாக "இரண்டு மொழிகள் அரச மொழிகளாக இருப்பதில் பல சிரமங்கள் இருக்கின்றன என்பதுதான் பிரச்சினையென்றால் இரண்டுக்கும் அதிகமான மொழிகள் அரச மொழிகளாக இருக்கும் எத்தனையோ நாடுகளை என்னால் உதாரணத்திற்குக் காட்டமுடியும். தமிழ்மொழியை அரச மொழியாக ஏற்றுக்கொள்வதில் எவ்வித ஊறு விளையும் என்று நான் நினைக்கவில்லை. இந்நாட்டில் சமூகங்களிடையே பரஸ்பர நல்லெண்ணமும், நம்பிக்கையும், ஒற்றுமையும் ஏற்படுவது மிக அவசியம். அதற்காகத்தானே நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுபடுகிறோம். ஆகவே இந்நாட்டில் சமாதானமும், அமைதியும் நிலவவேண்டுமென்றால் இவ்விருமொழிகளும் அரசமொழிகளாக ஏற்றுக் கொள்வதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. அதை நடைமுறைப்படுத்துவதில் எவ்விதத்தீங்கும் விளையுமென்று நான் கருதவில்லை" என்று கூறினார்.

மலாயா இனத்தவரின் பிரதிநிதியாக நியமிக்கப்படிருந்த றி.பி. ஜாயா இம்மசோதாவின் முதல் நான்கு பிரிவுகளுக்கும் தன் எதிர்ப்பைத் தெரிவித்ததோடு ஐந்தாவது பிரிவில் பின்வரும் திருத்தத்தைக் கொண்டு வந்தார். "ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்கும் மாற்றம் செய்வதற்கு எடுக்கும் எல்லா முயற்சிகளைப் பற்றிய அறிக்கையை அடிக்கடி இச்சபைக்கு சமர்ப்பிப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்படல் வேண்டும்." ஜாயாவின் திருத்தப் பிரேரணைக்குச் சாதகமாக முஸ்லிம் அங்கத்தவர்களும், தமிழ் அங்கத்தவர்களும், டி. எஸ். சேனாநாயக்க உட்பட 12 பேர் வாக்களித்தார்கள். இத்திருத்தத்திற்கு எதிராக வாக்களித்த 25 அங்கத்தவர்களில் 23 சிங்களவரும், தமிழ் அங்கத்தவர் வீ. நல்லையாவும், ஆங்கில அங்கத்தவர் ப்ரீமனும் இருந்தார்கள். பண்டாரநாயக்க வாக்களிக்கவில்லை. ஆனால் அவர் "அம்மசோதாவில் அடங்கியிருக்கும் பிரேரணைகள் எதையும் உடனடியாக அமுல் செய்யக்கூடாது" என்ற தன் கருத்தை வலியுறுத்தினார்.

இத்திருத்தத்திற்கு எதிராக வாக்களித்த வீ. நல்லையா இவ்விவாதத்தில் தன்னுடைய கருத்தைப் பின்வருமாறு கூறினார்.

"இந்நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடுகிறோம் என்று எம்மைக் கூறிக்கொண்டு, பெரும்பாலான மக்கள் விளங்காத ஒரு மொழியில் இங்கே எமது விவகாரங்களை நடத்துவது கேளிக்கைக்கு இடமான செயலாகும். சிங்களமோ தமிழோ தெரியாமல் யாராவது இந்நாட்டில் வாழ விரும்பினால் அவர்கள் இம்மொழிகளில் ஒன்றைக் கற்றுக் கொள்வதுதான் நியாயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஹெலஹவுல' (தூய்மையான சிங்கள சகோதரத்தும்) என்ற ஒரு புதிய இயக்கத்தை ஆரம்பித்தார். இவ்வியக்கம் சிங்கள ஆசிரியர்கள் மத்தியிலும் பௌத்த பிக்குகள் மத்தியிலும் பெரும் செல்வாக்கைப் பெற்றது.

'கோயிலில் நடந்த புரட்சி' என்ற நூலை எழுதிய டி.சி. விஜயவர்தனவும் "அரசாங்க உத்தியோகங்களைப் பெறும் நோக்கத்துடன் ஆங்கிலக்கல்வியையும், கிறிஸ்தவ மதத்தையும் தழுவிய அரைகுறை கல்விகற்ற ஐரோப்பிய நடையுடைப் பாவனைகளைக் கொண்ட ஒரு கலப்பு இனம் இந்நாட்டில் தோன்றியது." என்றும் "இவர்கள் சிங்கள மொழியையும், பௌத்த சமயத்தையும், சிங்களவரின் பழக்கவழக்கங்களையும், சிங்களப் பெயர்களையும் கூட ஏளனம் செய்ததோடு இவை கீழத்தேய நாடுகளின் காட்டுமிராண்டி நாகரிகத்தின் சின்னங்கள் என்று எள்ளி நகையாடினார்கள்" என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.

சிங்கள-பௌத்தத் தலைவர்களதும், எழுத்தாளர்களதும் இக் கருத்தோட்டப்பின்னணியை வைத்து நாம் ஆராய்ந்தால் சுதந்திரத்திற்குப் பின் இந்நாட்டில் ஏற்பட்ட மாற்றங்களுக்கும், இனப்போராட்டங்களுக்குமுரிய விடையைக் காணலாம். சிங்கள மொழியை ஆதரித்த சர். ராஸிக் பரீத் போன்ற முஸ்லிம் தலைவர்களுக்கு சிங்கள-பௌத்த இனவாதிகளின் மனப்பான்மையை அறிய நியாயமில்லை. அரசியல் வாதிகள் என்ற முறையில், இப்பிரச்சினையை மேலோட்டமாக அரசியல் லாபத்தை வைத்து அணுகினார்களேயொழிய, இது எவ்வாறு தம் சமூகத்தைப் பாதிக்கும் என்று எண்ண அவர்களுக்கு நேரமிருக்கவில்லை.

கல்வித் துறையிலும் அரசாங்க உத்தியோகங்களிலும் கிறிஸ்தவ சமயத்தவரின் ஆதிக்கத்தை உடைப்பதற்கு, பௌத்த மக்களுக்கு இலவசக்கல்வித்திட்டம் ஓர் ஆயுதமாக அமைந்தது. கிறிஸ்தவர்களும்,தமிழர்களும் அரசாங்க உயர் பதவிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று இனவாதிகள் பிரசாரம் செய்தாலும், அங்கே ஒருவித சமநிலையைத் தான் நாம் காண்கிறோம். சுதந்திரம் கிடைப்பதற்கு முன் 1946ஆம் ஆண்டில் சிவில் சர்வீசில் 69 சிங்களவரும் 31 தமிழரும் 16 பறங்கியரும் இருந்தனர். சிங்களவரில் பெரும்பான்மையோர் கரையோர சிங்களக் கிறிஸ்தவர்களாகவே இருந்தனர்.

இலவசக்கல்வித்திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட பிறகு எப்படி சிங்கள-பௌத்த மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதை சிவில் சர்வீசில் சேர்ந்தவர்களின் பின்வரும் புள்ளி விபரங்களைக் கொண்டு நாம் அறியலாம். சில பாடங்களையே நாம் உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டோம்.

| 1946-56 ஆண்டுகளில் எண்ணிக்கை – தசம் | 1956-60 ஆண்டுகளில் எண்ணிக்கை – தசம் |
|---|---|
| வரலாறு - 9-12.8% | 2 - 0.6% |
| ஆங்கிலம் - 8-11.4% | 0.00 |
| பொருளாதாரம் - 18-25.7% | 2 - 0.6% |
| சமஸ்கிருதம் - 6-8.5% | 1 - 0.3% |
| கிரேக்க-லத்தீன் இலக்கியம் - 9-12.8% | 2 - 0.6% |
| சிங்களம் - 5-7.1% | 9 - 28% |
| தமிழ் - 5 - 7.1% | 2 - 0.6% |
| (மொத்தம் - 70-100% | 32 - 100% |

1946-56ஆம் ஆண்டுகளில் சிவில் சர்வீசில் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் ஆங்கில மொழி மூலம் தனியார் பாடசாலைகளில் கல்வி கற்றவர்களே இருந்தார்கள். 1956ஆம்-60ஆம் ஆண்டுகளில் இவர்களுக்கு சிவில் சர்வீசில் சேரும் வாய்ப்பு இருக்கவில்லை. தமிழ்மொழி, சமஸ்கிருதம் ஆகிய பாடங்களை எடுத்த தமிழர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. சிங்கள மொழி மூலம் சிவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வீசில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 7% லிருந்து 28%க்குக் கூடுவதை நாம் காணலாம். இலவசக்கல்வித்திட்டத்தைக் கொண்டு வருவதற்குரிய காரணங்களை இனிப்பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் முஸ்லிம்களின் பின்தங்கிய நிலை

1948ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின் சிங்கள-பௌத்த ஆட்சியில் இலங்கையின் சிறுபான்மையினத்தவர்கள் தங்கள் உரிமைகளைப் படிப்படியாக இழக்கத்தொடங்கினார்கள். இலங்கை அரசாங்க நிர்வாகத்தின் உயர்மட்ட உத்தியோகஸ்தர்கள் தெரிவில் சிங்கள மொழியின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 1946-56ஆம் ஆண்டுகளில் 7% தசத்திலிருந்து 56ஆம்-60ஆம் ஆண்டுகளில் 28% தசமாகக்கூடியது. இலவசக் கல்வித்திட்டம் அமுலாக்கப்பட்டதன் பின் பாடசாலைகளின் எண்ணிக்கையும், மாணவர்களின் தொகையும் அதிகரித்தன.

இலங்கையின் கல்வி வரலாற்றில் 1939ஆம் ஆண்டு ஒரு முக்கிய மைல்கல்லாக அமைகிறது. இவ்வாண்டில்தான் கல்வி நிர்வாகம் பற்றி ஒரு முக்கியமான சட்டம் அமுலாக்கப்பட்டது. 1939ஆம் ஆண்டு அரசாங்க அறிக்கையின்படி உதவி நன்கொடைப் பாடசாலைகளில் கிறிஸ்தவ பாடசாலைகள் 1183ஆக இருந்த அதே வேளையில் பௌத்த பாடசாலைகள் 300 ஆகவும், இந்துப்பாடசாலைகள் 102ஆகவும் இருந்தன. முஸ்லிம் நன்கொடைப் பாடசாலைகளைப் பற்றிய செய்தியே இல்லை. நாட்டின் சனத்தொகையில் 9.3%மாக இருந்த கிறிஸ்தவர்களுக்கு அரசாங்கம், கல்விக்காக ஒதுக்கிய செலவில் கிறிஸ்தவ நன்கொடைப் பாடசாலைகளுக்கு 75.2% மாகவும், ஏனைய 90.7% வீதமாக இருந்த பௌத்த, இந்து முஸ்லிம் மக்களுக்கு 24.8% வீதமே செலவு செய்தது. கிறிஸ்தவர்களுக்கும், ஏனைய மக்களுக்கும் கல்வியில் இருந்த இந்த ஏற்றத்தாழ்வு இலங்கை அரசியல்வாதிகளின் கவனத்தை ஈர்த்தது. அத்தோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நன்கொடைப் பாடசாலைகளில் கற்பிக்கப்படும் சமயக்கல்வியிலும் அவர்களுடைய கவனம் சென்றது. இந்நிலையை மாற்றுவதற்கும், இதற்குப் பரிகாரம் தேடுவதற்குமாகவே இலவசக் கல்வித் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட்து.

இலங்கையின் கல்வியமைப்பு பிரித்தானிய ஆட்சிக்காலத்துடன் தான் தொடங்குகிறது. 1832ஆம் ஆண்டில் இலங்கையின் அரசியலமைப்பைப் பரிசீலனைச் செய்ய வந்த 'கோல்புருக் கமிஷனர்' வந்த சமயத்தில் இலங்கையில் கல்வி பெரும்பாலும், தனியார்கையிலேயும், மிஷனரிமார்களின் கையிலேயும் இருந்ததை அவர்கள் அவதானித்தார்கள். தனியார் பாடசாலைகள் 640 ஆகவும், மிஷனரி பாடசாலைகள் 236 ஆகவும் இருந்த அதே வேளையில் அரசாங்க பாடசாலைகள் 97 ஆகவே இருந்தன. இலங்கையின் கல்வியை மேற்பார்வை செய்வதற்கு ஒரு கல்விக்கமிஷன் 'நியமிக்கப்படல் வேண்டும் என்று சிபார்சு செய்தார்கள். மிஷனரி பாடசாலைகள் பற்றி பெருமதிப்பு வைத்திருந்த கோல்புருக் கமிஷனர்கள் மிஷன் பாடசாலைகள் இருக்கும் இடங்களில் அரசாங்கம் பாடசாலைகளை நிறுவத்தேவையில்லை என்று கூறினார்கள். மிஷனரி பாடசாலைகளைப் புறக்கணித்து வந்த முஸ்லிம்களுக்கு இது ஒரு பேரிடியாக விழுந்தது. கோல்புரூக் குழுவினரின் சிபாரிசின்படி, புரோட்டெஸ்தான்த் கிறிஸ்தவ பாடசாலைகள் மாத்திரம்தான் அரசாங்க உதவிபெறும் பாடசாலைகளாக அங்கீகாரம் பெற்றன. 1843ஆம் ஆண்டு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதிட்டம், அடுத்த முப்பது ஆண்டுகளில் ஏனைய ரோமன் கத்தோலிக்க, பௌத்த, இந்து பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. இத்திட்டத்தினால் பெரும் பயனை அடைந்தவர்கள், ரோமன் கத்தோலிக்கர்களும், புரோடெஸ்தான்த் கிறிஸ்தவர்களுமே.

1900ஆம் ஆண்டில் கட்டாயக் கல்வித் திட்டம் அமுலாக்கப்பட்ட சமயத்தில் அரசாங்க பாடசாலைகள், 498 ஆகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த, இந்து, முஸ்லிம் நன்கொடைப் பாடசாலைகள் 211 ஆகவும் இருந்தன. நாட்டின் 10% விகிதமாக இருந்த கிறிஸ்தவர்களுக்கு 1117 நன்கொடைப்பாடசாலைகளும், ஏனைய 90% விகிதமான மக்களுக்குத் தேவையான பாடசாலைகள் இல்லாததினால் கட்டாயக் கல்வி அமுலுக்குக் கொண்டு வரப்படுவதால் பௌத்த, இந்து மக்கள், மிஷனரி பாடசாலைகளுக்குச் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப் படுவார்கள் என்ற வாதத்தைச் சிலர் கிளப்பினர். அரசாங்க பாடசாலைகளை நிறுவுவதற்கு அரசாங்கத்திடம் பணவசதியில்லாமையால் இம் மிஷனரி பாடசாலைகளே அத்திட்டத்தினால் பெரிதும் பயனடைந்தன.

மிஷனரி பாடசாலைகளைப் புறக்கணித்த முஸ்லிம்களுடைய கல்வி நிலையை நாம் ஆராயவேண்டுமானால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவ்வப்போது தோன்றிய அரசாங்க அறிக்கைகளை நாம் ஆதாரமாகக் கொள்ளலாம். 1880ஆம் ஆண்டுவரையில் தோன்றிய அரசாங்க அறிக்கைகளில் முஸ்லிம்களைப் பற்றிய எவ்வித குறிப்புமிருக்கவில்லை. 1874ஆம் ஆண்டில் வித்தியாதரிசிமாஷ் என்பவருடைய அறிக்கையில் ஆறாம் பார்ம் (பத்தாம் வகுப்பு) பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்ப்பட்டியலில் ஒரு முஸ்லிமும் குறிப்பிடப்படவில்லை. 1875ஆம் அறிக்கையிலும் அப்படியே. 1877 ஆம் ஆண்டிலும், பரீட்சையில் சித்தியடைந்த ஏனைய மாணவர்களைப் பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன. இந்தப் பட்டியலிலும் முஸ்லிம் பெயர்கள் இருக்கவில்லை. முஸ்லிம்கள் பெரும்பாலும் அரசாங்க பாடசாலைகளில் ஆரம்பக்கல்வியே கற்று வந்திருக்கலாம். 1939ஆம் ஆண்டில் கூட இலங்கை பூராவும் 3575 பாடசாலைகளில் 35 பிரசித்திபெற்ற பாடசாலைகளில் மாத்திரம்தான் உயர்கல்வி புகட்டப்பட்டது.

அன்றைய பாடசாலைகள் இரண்டு விதமாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒன்று நிர்வாக அடிப்படையில், மற்றது மொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில். அரசாங்க நிர்வாகத்திலுள்ள பாடசாலைகள் ஒரு பிரிவாகவும், தனியார் அல்லது மதஸ்தாபனங்களின் நிர்வாகத்தில் இருக்கும் பாடசாலைகள் இன்னொரு பிரிவாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. அதே நேரத்தில் ஆங்கிலம் கற்பிக்கும் பாடசாலைகள் ஒரு பிரிவாகவும், சிங்களம் அல்லது தமிழ் கற்பிக்கும் பாடசாலைகள் இன்னொரு பிரிவாகவும் வகுக்கப்பட்டிருந்தன. இவைகளுக்குப் புறம்பான வேறொருவகையான பாடசாலைகளும் இருந்தன. ஆங்கிலக் கல்வியோடு சிங்களம் அல்லது தமிழ் கற்பிக்கும் பாடசாலைகள். இவைகளை 'இருமொழிப் பாடசாலைகள்' என்று வகுத்தனர். இவையும் எண்ணிக்கையிலும் குறைவாகவே இருந்தன. 1939ஆம் ஆண்டில் ஆங்கிலப் பாடசாலைகள் 336 ஆகவும், அதில் கல்வி கற்கும் மாணவர்கள் 80,381ஆகவும் இருந்தனர். எல்லா ஆங்கிலப் பாடசாலைகளிலும் கல்விக் கட்டணம் அறவிடப்பட்டது. இருமொழிப் பாடசாலைகள் 74 ஆகவும் அதில் கல்விகற்கும் மாணவர்கள் 18,517 ஆகவும் இருந்தனர். நாட்டின் பெரும்பான்மையான பாமர ஏழைமக்கள் கல்வி கற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை 4701 ஆகவும், அவைகளிலே கல்வி கற்ற மாணவர்களின் தொகை 675, 281 ஆகவும் இருந்தது. இப்பாடசாலைகளில் கட்டணம் அறவிடப்படவில்லை. கட்டணம் அறவிடப்பட்ட. ஆங்கில பாடசலைகளில் கல்விகற்கும் மாணவன் ஒருவனுக்கு வருடத்திற்கு ரூ.36/- செலவு செய்த அரசாங்கம் இலவசக்கல்வி என்ற பெயரில் சுயமொழிப் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவன் ஒருவருக்கு வருடத்திற்கு ரூ18/– செலவு செய்தது. 10.5% விகிதம் மாணவர்கள் கல்விகற்ற பாடசாலைகளுக்கு ஒரு விதமாகவும், 87% விகித மாணவர்கள் கல்விகற்ற பாடசாலைகளுக்கு வேறொரு விதமாகவும் அரசாங்கம் செலவு செய்தது. எனவே வர்க்கப் பிரிவினையை உண்டாக்கிய ஆங்கிலக்கல்வியை ஒழித்து தாய்மொழிக்கல்வி கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என்ற கோஷம் எழுப்பப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் முஸ்லிம்களுடைய கல்வி நிலையையும் ஒரளவு பார்ப்பது நியாயமே. 1879ஆம் ஆண்டின் அறிக்கையின்படி 185,000 முஸ்லிம் சனத்தொகையில் 1225 முஸ்லிம் மாணவர்களே பள்ளிக்கூடங்களில் கல்விகற்க வந்தார்கள். ஆங்கில பாடசாலைகளில் **154** பேரும் இருமொழிப் பாடசாலைகளில் 315 பேரும், சுயமொழிப் பாடசாலைகளில் 751பேருமே இருந்தார்கள். இதில் கிழக்கு மாகாணத்தில் சுயமொழிப் பாடசாலைகளில் 542 பேரும் ஆங்கிலப் பாடசலைகளில் 22 பேருமே இருந்தார்கள். 1879 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் இருந்த ஏறத்தாழ 18,000 முஸ்லிம்களில் (அனுமானம், ஆங்கிலக் கல்வி கற்றவர்கள் 22 பேர்களே இருந்தனர்.) கிழக்கு மாகாணம் ஆங்கிலக் கல்வியில் பின்தங்கியிருந்தது என்பதை நிரூபிப்பதற்கு இதற்கு மேல் சான்றுகள் வேண்டுமா? இவ்வாண்டில் முஸ்லிம்களுடைய சனத்தொகையைப் பார்க்கும்போது 0.7% விகிதமானவர்களே கல்வி பயின்றனர். இதே காலத்தில் இலங்கையின் சனத்தொகையில் 1.7% பேரே கல்வி கற்றனர். 1889 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் முஸ்லிம்கள் கல்வியில் அக்கறை காட்டினர். 1900 ஆம் ஆண்டிலும் கூட கிறிஸ்தவர்களுக்கு 1117 அரசாங்க நன்கொடை பாடசாலைகளும், பௌத்தர்களுக்கு 142 பாடசாலைகளும், இந்துக்களுக்கு 45 பாடசாலைகளும் இருந்த அதே வேளையில் முஸ்லிம்களுக்கு நான்கு பாடசாலைகளே இருந்தன. இவைகளில் கல்வி கற்றோர் தொகையும் 362 ஆக இருந்தன. முஸ்லிம் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் இரண்டே இரண்டு முஸ்லிம் ஆசிரியர்களுடைய பெயர்கள்தான் **1874**ஆம் அறிக்கையிலும், **1875**ஆம் அறிக்கையிலும் குறிப்பிடப்படுகின்றன. நாரந்தெனிய சுயமொழிப் பாடசாலையில் சுதார் என்பவரும், புத்தளத்தில் எஸ். எம். இப்ராஹிம் என்பவருமே, இவர்கள். முஸ்லிம்களின் கல்வி நிலையை அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டு வந்தவர் சர். ராசிக் பரீத் அவர்களே. 1944ஆம் ஆண்டில் அரசசபையில் அவர் கேட்ட கேள்வி பின்வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) அரசாங்க பாடசாலைகளில் 4ஆம் வகுப்புகளில் கல்வி கற்கும் முஸ்லிம்களின் எண்ணிக்கை என்ன?

(2) எங்கெல்லாம் முஸ்லிம் பாடசாலைகள் நிறுவப்பட வேண்டும்.

(3) முஸ்லிம் பாடசாலைகள் நிறுவுவதற்கு முஸ்லிம் நன்கொடையாளர்களின் பெயர்களையும் முஸ்லிம் நலன்புரிச் சங்கங்களின் பெயர்களையும் கொண்ட ஒரு பட்டியல் சமர்பிக்கப்படல் வேண்டும்.

4) முஸ்லிம் பிரதேசங்களில் முஸ்லிம் பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்று அவர்கள் சமர்ப்பித்த கோரிக்கைகளின் பட்டியல் வேண்டும்.

கல்வி நிறைவேற்றும் சபையில் அங்கத்தவர்களாக இருந்த சர். ராசிக் பரீத் அவர்களுடையதும், ரி.பி.ஜாயா அவர்களினதும் வேண்டுகோளுக்கிணங்க அன்றைய கல்வி மந்திரியாகவிருந்த கன்னங்கரா முஸ்லிம் கிராமங்களில் பாடசாலைகளை ஸ்தாபித்தார். முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையொன்றையும் நிறுவினார்.

மிஷன் பாடசலைகளில் கல்விக்கட்டணம் செலுத்தி ஆங்கிலக் கல்வி கற்று அரசாங்கத்தில் உயர்பதவிகளை வகித்தவர்கள் ஒரு வர்க்கமாகவும், சுயமொழிப்பாடசாலைகளில் இலவசக்கல்வி பயின்ற ஏழை எளியவர்கள் இன்னொரு வர்க்கமாகவும் தென்படத் தொடங்கினர். கல்வியில் கிறிஸ்தவர்களுக்கிருந்த ஆதிக்கத்தை உடைப்பதற்கும் அரசாங்கத்தில் உயர் வர்க்கத்தினரின் செல்வாக்கைக் குறைப்பதற்கும் இலவசக்கல்வித் திட்டம் ஒரு கருவியாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் இருந்த வர்க்க வேறுபாடு

டொனமூர் அரசசபை காலத்தில் இலங்கையின் அரசியல் வாழ்க்கையையும், சமூக வாழ்க்கையையும், சமூகங்களிடையே இருந்த பரஸ்பர சமூக உறவுகளையும் பெரிதும் பாதிப்பதற்கு முக்கிய காரணம், சிங்கள-பௌத்தத் தலைவர்களின் தீவிர போக்கும் மற்ற சமூகங்களையும் அடக்கியாள வேண்டும் என்ற ஆதிக்க உணர்வுமே. குறிப்பாகக் கல்வித்துறையிலிருந்த பிரச்சினைகளை நாம் ஆராய்வதாயிருந்தால் அவைகளைப் பின்வருமாறு வகுக்கலாம்.

1. ஆங்கில பாடசாலைகளுக்கெதிராக சிங்கள-தமிழ் பாடசாலைகளை வளர்த்தல்.

2. கிறிஸ்தவ மிஷனரிமார்களினால் நடாத்தப்பட்ட தனியார் பாடசாலைகளைப் படிப்படியாக அரசாங்க நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருதல்.

3. கிறிஸ்தவ சமயத்தவர்களுக்கெதிராக சிங்கள—பௌத்த தமிழ்—ஹிந்து உணர்வுகள் பரவலாதல்.

4. சிங்கள-தமிழ்மொழிகளின் மூலம் எல்லாத் தனியார் பாடசாலைகளிலும் முதலாந்தரம் தொடக்கம் ஐந்தாம் தரம்வரைக்குமுள்ள வகுப்புகளில் கல்விகற்பிக்கப்படல் வேண்டும் என்ற அரசியல் தலைவர்களின் கொள்கை.

5. சிங்கள மொழி அரசாங்க மொழியாக வேண்டும் என்றும் அரசாங்க பரீட்சைகளில் சிங்களம் ஒரு பாடமாக இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற ஜே.ஆர்.ஜயவர்தனா போன்ற சிங்கள பௌத்த அரசியல் தலைவர்களின் தீவிர போக்கும்.

6. பாலர் வகுப்பு முதல் சர்வகலாசாலைவரை இலவசக் கல்வித் திட்டம் அமுலாக்கப்படல்வேண்டும்என்ற கன்னங்கரா போன்ற தலைவர்களின் முற்போக்குக் கருத்துக்களும்.

7. சிங்கள மொழி அரசியல் மொழியாக்கப்படுவதற்கு எதிராகத் தமிழர்களின் இயக்கமும், இதன் காரணமாக அவர்கள் கிறிஸ்தவ மிஷனரிமார்களுக்கு ஆதரவு அளிக்க முன் வந்தமையும்.

8. பௌத்த சங்கங்களினதும், பௌத்த பிக்குகளினதும் செல்வாக்கு அரசியலிலும், கல்வித்துறையிலும் பரவுதல்.

இக்காலப் பகுதியில் தோன்றிய இப்பிரச்சினைதான் பின்னால் ஏற்பட்ட இனக்கலவரங்களுக்கு மூல காரணங்களாயமைந்தன. அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்டு மக்கள் மயமாகிக் கொண்டு வந்த அரசாங்கம் சமூகமாற்றங்களில் ஈடுபடுவது இயற்கையே. கல்வித்துறையிலும் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டுமென்று முற்போக்கு எண்ணம் படைத்தவர்கள் எண்ணியது நியாயமானதே. சாதாரணமாக ஏற்படவேண்டிய சமூக சீர்திருத்தம், பௌத்த இயக்கங்களினதும், பௌத்த பிக்குகளினதும் தலையீட்டினால் ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது.

"பௌத்த வணக்கஸ்தலங்களினதும், கோயில்களினதும் பிரச்சினைகளைத் தீர்த்த பிறகு பௌத்தத் தீவிர வாதிகள் தமது கவனத்தைக் கல்வியின் பக்கம் திருப்பினார்கள்" என்று பேராசிரியர் கே.எம்.டி.சில்வா கூறுகிறார். அவர் மேலும் "இலவசக் கல்வித் திட்டம் சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதற்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் ஒரு சமமான வாய்ப்பை அளிப்பதற்கும் ஒரு கருவியாக அமைந்தாலும், இப்பௌத்த தீவிர வாதிகளின் தலையீட்டினால் இது கிறிஸ்தவ-பௌத்த முரண்பாடாகவும், கிறிஸ்தவ கல்வி நிலையங்களுக்கெதிரான இயக்கமாகவும் இது உருவெடுத்தது" என்று கூறுகிறார். ஏனைய சமூக சீர்திருத்தச் செயல்களைவிட கல்விச் சீர்திருத்தம் ஒரு பிரச்சினைக்குரிய விஷயமாக மாறியது. கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல சில சிங்கள அரசியல்வாதிகளும் கன்னங்கராவின் இலவசக் கல்வித்திட்டத்தை எதிர்த்தனர். மிஷனரி பாடசாலைகளில் கல்வி பயின்று மேல்நாட்டு கருத்துக்களினால் பாதிக்கப்பட்டு, ஜனநாயக அரசியல் முறையில் நம்பிக்கை வைத்திருந்த இவ்வரசியல் வாதிகள் மிஷன் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்கவேண்டும் என்ற சிங்கள, பௌத்த தீவிரவாதிகளின் உந்துதலுக்கு மசிய மறுத்தார்கள். 1939ஆம் ஆண்டு கன்னங்கராவினால் கொண்டு வரப்பட்ட கல்விச் சட்டத்தின் சீர்திருத்தங்களை மிஷன் பாடசாலைகளின் முகாமையாளர்கள் வெகுவாக எதிர்த்தார்கள். இவ்வெதிர்ப்புக்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல், கன்னங்கரா, "தனியார் சமய பாடசாலைகள் சம்பந்தமாக அரசாங்கத்தின் கொள்கையில் எவ்வித மாற்றத்தையும் இம்மசோதா கொண்டுவராது" என்ற திருத்தல் பிரேரணையைக் கொண்டு வந்தார். கல்வியை மேற்பார்வை செய்யும் கல்விக் குழுவில், இருந்த அங்கத்தவர்களில் பெரும்பான்மையானோர் கிறிஸ்தவர்களாக இருந்த அதேவேளையில் டொனமூர் அரசசபையின் கல்வி நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட சபையில் பௌத்த அங்கத்தவர்கள் பெரும்பான்மையாக இருந்த காரணத்தினால் தான் இந்த முரண்பாடு தோன்றியது. மேலும் பௌத்த இந்து பாடசாலைகளின் முகாமையாளர்கள் கல்வி நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட சபையில் அங்கம் வகித்த காரணத்தினால் கன்னங்கராவினால் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்கள் உரியமுறையில் அமுலாக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளையில் இலங்கை சமசமாஜக்கட்சியும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும், இத்திட்டத்திற்கு முழு ஆதரவை அளித்தன. யாழ்ப்பாணத்து இளைஞர் மன்றமும், முற்போக்கு வாதிகளும் இச்சீர்திருத்தத்தை வரவேற்றனர். பண்டாரநாயக்காவின் சிங்கள மகாசபாவும் தமது முழு ஆதரவையும் இத்திட்டத்திற்கு அளித்தது. இத்திட்டத்திற்குத் தனியார் பாடசாலைகளின் முகாமையாளர்களின் தலைமைத்துவத்தைக் கொண்ட மத்தியதர வர்க்கத்தின் பிற்போக்கு சக்திகளின் எதிர்ப்பையும், முற்போக்கு எண்ணம்படைத்த சோஷலிச கட்சிகளின் ஆதரவையும் நாம் காண்கிறோம். அதே வேளையில் கிறிஸ்தவ மிஷனரிமார்களுக்கும் சிங்கள பௌத்த தீவிர வாதிகளுக்குமிடையேயிருந்த முரண்பாடு வலுப்பெறுவதையும் நாம் அவதானிக்கிறோம். எனவே வர்க்கப் போராட்டத்துடன் இன-சமய முரண்பாட்டையும் நாம் இங்கே காண்கிறோம். பின்வரும் அட்டவணை இதைத் தெளிவாகக் காட்டுகிறது.

அரசாங்க நன்கொடை பெறும் தனியார் பாடசாலைகள்

| சமயம் | பாடசாலைகளின் விகிதாசாரம் 1910 - 1920 | மாணவர்களின் விகிதாசாரம் 1910 - 1920 |
|---|---|---|
| பௌத்தம் | 18.0 - 25.0 | 22.5 - 26 |
| கிறிஸ்தவம் | 72.6 - 64.0 | 66 - 62 |
| இந்து | 9.0 - 10.5 | 10.5 - 11 |
| முஸ்லிம் | 0.4 - 0.5 | 1 - 1 |

மேலே உள்ள அட்டவணையின்படி இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசாங்க நன்கொடைப்பாடசாலைகளின் எண்ணிக்கையில் கிறிஸ்தவ பாடசாலைகளின் எண்ணிக்கை 60% மேலானதாக இருப்பதைக் காண்கிறோம். 1920ஆம் ஆண்டில் 2120 நன்கொடைப் பாடசலைகளில் இரண்டு லட்சத்துக்கு மேலான மாணவர்கள் கல்வி கற்றனர். அரசாங்க உயர்பதவிகளிலும் பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகக் கம்பெனிகளிலும் வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் பெரும்பாலும் இக்கல்விக் கூடங்களிலிருந்தே சென்றனர். நாட்டின் 10% விகிதத்திலும் குறைவாக இருந்த கிறிஸ்தவ சமயத்தினர் உயர்மட்டத்திலுள்ள தொழில்களைப் பெற்ற அதே வேளையில், ஏனைய சமயத்தினர், குறிப்பாக முஸ்லிம்கள், இவ்வுயர் பதவிகளைப் பெறும் வாய்ப்பைப் பெறவில்லை. ஆங்கிலக் கல்வி பெறுவதில் முஸ்லிம்கள் அடிமட்டத்திலிருப்பதையும் நாம் இவ்வட்டணையின் மூலம் அறிகிறோம்.

இந்நாட்டின் பெரும்பாலான மக்கள் அரசாங்க பாடசாலைகளுக்கே சென்றனர். வெறும் ஓலைகளினால் வேயப்பட்ட கொட்டில்கள்தான் அரசாங்க பாடசாலைகள் என்று பெயர் பெற்றன. அரசாங்க நிர்வாகமும் தனியார் வர்த்தக ஸ்தாபனங்களும் ஆங்கில மொழியிலேயே தம் கருமங்களை ஆற்றிய காரணத்தினால், தாய்மொழிகளில் மட்டும் இவ்வரசாங்க பாடசாலைகளில் கல்விகற்ற ஏழை மக்களின் பிள்ளைகளுக்கு அரசாங்க பதவிகளையோ, தொழில் நிறுவனங்களிலுள்ள பதவிகளையோ பெறும் வாய்ப்பிருக்கவில்லை. தனியார் பாடசாலைகளிலும் 35 பாடசாலைகளில் மாத்திரம் தான் உயர்கல்வி புகட்டப்பட்டது. இப்பாடசாலைகள் கூட கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, காலி, போன்ற பெரும் பட்டினங்களில் மாத்திரம் தான் இருந்தன. கிராமங்களிலுள்ள பணவசதி படைத்தவர்களின் பிள்ளைகள் தான் இந்நகரப்பாடசாலைகளுக்குச் சென்று உயர்கல்வி பெறும் வாய்ப்பைப் பெற்றனர். அன்றிருந்த பாடசாலைகளை நாம் 4 தரமாகப் பிரிக்கலாம்.

முதலாம்தர பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் உயர்கல்வியையும் தொழில்கல்வியையும் பெற்றனர்.

இரண்டாந்தரப் பாடசாலைகளில் கல்வி கற்றோர், மத்தியதர கல்வியைக்கற்று அரசாங்கத்தின் அடிமட்டத்திலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்களுக்குச் சென்றனர். மூன்றாந்தரப் பாடசாலைகளில் ஓரளவு கல்வியை மாணவர்கள் பெற்றனர். நாலாந்தரப் பாடசாலைகள் கல்வி என்ற பெயரளவிலேயே இருந்தன. நகரப்புறங்களில் அல்லாத ஏனைய பிரதேசங்களிலுள்ள ஏழை மாணவர்கள் உயர் கல்வியைப் பெறும் வாய்ப்பில்லாமையால் உயர் பதவிகளைப் பெறும் தருதியையும் பெறவில்லை. உயர் வகுப்பினருக்கு ஒருவகைக்கல்வியையும், ஏனையோருக்கு பிறிதொருகல்வியையும் புகட்டப்பட்டதை நாம் காண்கிறோம். கீழே உள்ள அட்டவணையைப் பார்த்தால் ஆங்கிலக் கல்வி பெற்ற உயர்வர்க்கத்தினரின் ஆதிக்கத்தை அவதானிக்கலாம்.

1939ஆம் ஆண்டு அறிக்கையின்படி

| தரம் | ஆங்கிலப் பாட சாலைகள் | இருமொழிப் பாட சாலைகள் | தாய்மொழிப் பாட சாலைகள் | எல்லா பாட சாலைகள் |
|---|---|---|---|---|
| முதலாந்தரம் | 15.5 | 3.3 | 2.8 | |
| இரண்டாந்தரம் | 31.0 | 40.7 | 30.3 | 30.7 |
| மூன்றாம் தரம் | 24.4 | 38.9 | 53.3. | 47.8 |
| நான்காம் தரம் | 29.0 | 17.1 | 16.4 | 18.7 |
| | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

தாய்மொழிக் கல்வியைப்புகட்டிய பாடசாலைகளில் முதலாந்தரப் பாடசாலைகள் ஒன்று கூட இல்லை என்பதை நாம் மேலேயுள்ள அட்டவணையிலிருந்து அறியலாம். ஆகவே உயர்வர்க்கத்தினருக்கு மாத்திரம் தான் உயர் பதவிகள் பெறும் வாய்ப்பிருந்தது.

கிறிஸ்தவ மிஷனரிமார்களின் கல்வி நிலையங்களைப் புறக்கணித்த முஸ்லீம்களில் பெருபான்மையானோர் அரசாங்க தமிழ்ப் பாடசாலைகளுக்கே சென்றனர். தமிழ்மொழியில் கல்விகற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லீம்களுக்கு அரசாங்க உயர் பதவிகளைப் பெறும் வாய்ப்பிருக்கவில்லை. அவர்களுக்கு இருந்ததெல்லாம் கொழும்பு சாகிராக்கல்லூரி மாத்திரமே. ரி. பி.ஜாயா, அளுத்கமை, கம்பொளை, மாத்தளை, புத்தளம் ஆகிய இடங்களில் சாகிராக்கல்லூரி என்ற பெயரில் ஆரம்பப்பாடசாலைகளை ஸ்தாபித்தார். இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது ஜப்பானியரின் குண்டு வீச்சுக்கு பயந்து கொழும்பைவிட்டு மாகாணங்களுக்குச் சென்ற முஸ்லீம்கள் இடம் பெயர்ந்தது இவருக்கு இப்பாடசாலைகள் நிறுவுவதற்கு அனுகூலமாயிருந்தது. அரசாங்க பாடசாலைகளில் இலவசமாகவே கல்வி கற்று வந்த பெரும்பான்மை முஸ்லீம்களுக்கு இலவசக்கல்வித்திட்டம் எவ்வித நன்மையையும் பயக்கவில்லை. நன்கொடைப்பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்களுக்கே வரப்பிரசாதமாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவசக் கல்வித் திட்டத்தினால் பெரும்பயனடைந்த உயர் வர்க்கத்தினர்

இன உணர்வும் இன வேற்றுமையும் இனங்களிடையே குரோதத்தை வளர்ப்பதுடன், நாட்டைப் பிளவுப்படுத்தி நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும் என்பதை உணர்ந்த சில முற்போக்கு எண்ணம் படைத்தவர்கள் இலங்கையின் இருபெரும் சமூகங்களாகிய சிங்களவருக்கும் தமிழருக்குமிடையே பரஸ்பர சமூக நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வளர்ப்பதற்காக கல்வித் துறையில் ஒரு முக்கிய திட்டத்தை மக்கள் முன் வைத்தார்கள். சிங்களவர்கள் தமிழைக் கற்க வேண்டும் என்றும் தமிழர்கள் சிங்களம் கற்க வேண்டும் என்பதே அத்திட்டம். இத்திட்டத்தை அமுல் நடத்தவும் செய்தார்கள்.

இவ்வர்க்கங்களிடையே உள்ள வேற்றுமையைக் குறைப்பதற்காக உயர் வர்க்க மாணவர்கள் கல்வி கற்கும் ஆங்கிலப் பாடசாலைகளில் தாய்மொழியை ஒரு பாடமாகவும், பாமர மக்கள் கற்கும் பாடசாலைகளில் தாய் மொழியோடு ஆங்கிலத்தை ஒரு பாடமாகவும் கற்பிக்கும் திட்டம் தோல்வியடைந்தது. இத்தோல்விக்குரிய காரணத்தை 1937ஆம் ஆண்டு வெளியான "இந்து ஒர்கன்" என்ற பத்திரிகை,

"ஆங்கிலக் கல்வி கற்றவர்கள் தம்மை ஆங்கிலப் பிரபுக்கள் என்ற நினைப்பில் ஏழைக்கிராம மக்களையும், தொழிலாளர்களையும் மிகவும் ஏளனத்துடனும் அகங்காரத்துடனும் நோக்குவதுமல்லாமல், அவர்கள் மேல் எவ்வித அனுதாபமும் காட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வரவில்லை. இவர்கள் கொச்சை மொழியில் பேசும் சிங்களமும் தமிழும் கேட்பதற்கு விரசமாயிருக்கிறது" என்று கூறுகிறது. ஆங்கிலம் கற்ற இவ்வகுப்பினருக்கும் ஏனைய மக்களுக்குமிடையே இருந்த சமூக ஏற்றத்தாழ்வுடன், பொருளாதார வேற்றுமையையும் சேர்த்தால் இவ்வர்க்க வேறுபாடு தெள்ளத்தெளிவாக விளங்குகிறது. கட்டணம் செலுத்தி மிஷனரி பாடசாலைகளிலும் தனியார் பாடசாலைகளிலும் ஆங்கிலக்கல்வி கற்று, அரசாங்கத்தின் உயர் பதவிகளை ஆக்கிரமித்துக்கொண்ட இவ்வுயர் வர்க்கத்தினருக்கும், தாய்மொழியில் அரசாங்கப் பாடசாலைகளில் இலவசமாகக் கல்வி கற்று, அரசாங்கத்தில் உத்தியோகம் பெறும் வாய்ப்பில்லாமல் தொழிலாளர்களாகவே காலங்கடத்திய ஏழை மக்களுடக்குமிடையே இருந்த இடைவெளி பெரிதாகியது. 1935ம் ஆண்டில் கொழும்பு றோயல் கல்லூரியில் அரசாங்கம் பாலர் வகுப்பில் சிங்கள மொழி மூலம் கல்வி கற்பிக்க முயற்சி எடுத்தபோது, பெரும்பான்மையான பெற்றோர் தம் பிள்ளைகளை விலக்கிக் கொண்டார்கள். ஆங்கிலக் கல்வி பணக்கார வர்க்கத்துக்கும், தாய்மொழிக் கல்வி ஏழைகளுக்கும் என்ற ஒரு நிலை ஏற்பட்டது. இந்நிலையை விளக்கிய பேராசிரியை சுவர்ணா ஜயவீர, "சமூகத்தில் மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ளவர்கள் தான் தாய்மொழிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் நிலை ஏற்படுவதற்குக் காரணம், தாய்மொழியின் மூலம் கல்வி பெறுவதனால் எவ்வித பொருளாதார நன்மையும் ஏற்படப் போவதில்லை என்ற யதார்த்த நிலையும், தாய்மொழி மூலம் கல்வி கற்றவர்கள், தொழில் வாய்ப்புப் பெறும் நிலையில், மிகவும் அடித்தளத்தில் உள்ள தொழில்களையே பெறலாம் என்ற நிலையுமே" என்று கூறுகிறார்.

1920ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியாவில் சுய–பாஷை இயக்கம் பரவியதன் தாக்கத்தை இலங்கையிலும் காண்கிறோம். 1934ஆம் ஆண்டில், ஒஸ்மானிய சர்வகலாசாலை உபவேந்தரின்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஒரு நாடு தன் முழு நிறைவை அடைய வேண்டுமானால் அதன் கல்வித் திட்டம் அந்நாட்டு மக்களின் தாய்மொழியில் தான் அமைய வேண்டும்” என்ற கூற்றுக்கு ‘இந்து ஒர்கன்’ பத்திரிகை முக்கியத்துவம் கொடுத்தது. இவ்வியக்கத்தின் வளர்ச்சியைக் கண்டு பயந்த ஆங்கிலக் கல்வி கற்ற உயர் வர்க்கத்தினரின் கருத்தைப் பிரதிபலிக்குமுகமாக, அன்றைய இலங்கை சர்வகலாசாலைக் கல்லூரியின் தலைவர் பேராசிரியர் மார்ஸ், “தாய்மொழி மூலம் தான் கல்வி கற்பிக்கப் பட வேண்டும் என்பது இன்றைய தேவையென்றால், இலங்கையின் கல்வித்திட்டத்தையே நாம் மாற்றியமைக்க வேண்டும். சிங்களமொழியிலும், தமிழ் மொழியிலும் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமானால், சிங்கள மொழியில் ஒரு சர்வகலாசாலையும் தமிழ் மொழியில் ஒரு சர்வகலாசாலையும் ஏற்படுத்தப்படல் வேண்டும். அப்படியேற்பட்டால் இவ்விரு இனங்களும் ஒன்றையொன்று அறிய முடியாத நிலையேற்படும். இதனால் இலங்கை அரசியலிலும் மொழியடிப்படையில் இரு பிரிவுகளைக் காணலாம். வெளியுலகத் தொடர்புக்கு ஆங்கிலம் ஒரு முக்கிய கருவியாக இருக்கும் பட்சத்தில், இலங்கையின் இன ஒற்றுமைக்கும், படித்தவர்களின் மத்தியில் கருத்துப் பரிமாறல்களுக்கும் ஆங்கில மொழி அவசியமானதால் இலங்கைச் சர்வகலாசாலையின் போதனா மொழி ஆங்கிலமாகவே இருக்கும்” என்று கூறினார். ஆங்கிலமொழி மூலம் தான் இலங்கை அரசாங்கத்தின் உயர் பதவிகளைப் பெறும் வாய்ப்பும், அரசாங்க சகாய நிதி பெற்று இங்கிலாந்தின் சர்வகலாசாலைகளில் பட்டம் பெறும் தகுதியும் இருப்பதனால் ஆங்கிலம் கற்ற இவ்வுயர் வர்க்கத்தினர் “சுயபாஷை” இயக்கத்திற்குத் தம் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

“1939ஆம் ஆண்டில் அரசாங்கம் அரசாங்கப் பதவிகளுக்குரிய பரீட்சைகளில் தாய்மொழி ஒரு கட்டாய பாடமாக இருக்க வேண்டும். என்ற சட்டத்தைக் கொண்டுவந்த பிறகுதான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் பாடசாலைகளில் தாய்மொழி கற்பதில் ஓர் ஆர்வம் ஏற்பட்டது'' என்று கல்விப் பணிப்பாளர் தம்முடைய அறிக்கையில் கூறினார்.

சுயபாஷை இயக்கத்திற்கு முழு ஆதரவையும் கொடுத்தவர்கள் வட மாகாண ஆசிரியர் சங்கத்தினரும் தென் மாகாண கல்விச் சீர்திருத்தவாதிகளுமே. யாழ்ப்பாணத்துத் தமிழரின் கருத்தைப் பிரதிபலித்த "இந்து ஓர்கன்" தாய்மொழியைத் தன்னுடைய உரிய ஸ்தானத்தில் வைக்காதவிடத்து நாம் நிரந்தரமாக எதையும் சாதிக்க முடியாது. ஒரு நூற்றாண்டு காலமாக நாம் ஆங்கிலக் கல்வியைக் கற்பித்ததன் பலனாக ஒரு கர்வம் படைத்த அகங்காரம் கொண்டு மமதை எண்ணமுள்ள ஒரு வர்க்கத்தைத்தான் நாம் உருவாக்கியிருக்கிறோம்'' என்று கூறியது.

இரு இனங்களிடையேயும் ஒற்றுமை வளர்ப்பதன் நோக்கத்துடன் அன்றைய அரச சபையில் மட்டக்களப்பு தமிழ் அங்கத்தவரான எஸ். ஒ. கனகரத்தினம், 1937ஆம் ஆண்டில் "தமிழ் பாடசாலைகளில் சிங்களமும் சிங்களப் பாடசாலைகளில் தமிழும் கட்டாய பாடங்களாகக் கற்பிக்கப்பட வேண்டும்" என்ற பிரேரணையைக் கொண்டுவந்தார். இப்பிரேரணைக்கு வட மாகாண ஆசிரியர் சங்கமும் யாழ்ப்பாணத்து இளைஞர் மன்றமும் தமது முழு ஆதரவையும் அளித்தன. ஆனால் நடைமுறையில் சாத்தியப்படவில்லை. இதனை விளக்கிய வண. பீட்டர்பிள்ளை, "பொருளாதார நன்மையைக் கருதி சில தமிழர்கள் சிங்களத்தைக் கற்க முன்வரலாம். ஆனால், தமிழைக் கற்பதனால் எவ்வித பொருளாதார நன்மையையும் அடைய முடியாத பட்சத்தில் சிங்களவர்களில் எத்தனை பேர் தமிழைக் கற்க முன்வருவார்கள்?'' என்ற யதார்த்த நிலையைச் சுட்டிக் காட்டினார். எனவே இத்திட்டம் வெற்றி பெறவில்லை. நாட்டின் இன ஒற்றுமையைக் கொண்டுவருவதற்கு யாழ்ப்பாணத்து முற்போக்குவாதிகள் முயன்றும், அது பலனளிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவசக் கல்வித் திட்டத்தின் மூலம்தான் ஆங்கிலக் கல்வி கற்ற உயர் வர்க்கத்தினருக்கும், தாய்மொழி மூலம் கல்வி கற்ற பாமர மக்களுக்குமிடையே உள்ள வேற்றுமையை அகற்றலாம் என்று நம்பிய சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா 1944ஆம் ஆண்டில் அரச சபையில் ஒரு மசோதாவைச் சமர்ப்பித்தார். இம்மசோதா பின்வருமாறு அமைந்தது. இதுதான் இலவசக்கல்வித்திட்டம்.

1. எல்லா அரசாங்க உதவி பெறும் பாடசாலைகளிலும் அரசாங்க ஆரம்ப, உயர்கல்விப் பாடசாலைகளிலும் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளிலும் அரசாங்க பொறியியல் விவசாய வர்த்தகப் பாடசாலைகளிலும் சர்வகலாசாலைகளிலும் கல்விக் கட்டணம் அறவிடப்படக்கூடாது.

2. அரசாங்க நன்கொடை பெறும் ஆரம்ப உயர் கல்விப் பாடசாலைகளிலும் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளிலும் கடமையாற்றும் ஆசிரியத் தகுதிபெற்ற ஆசிரியர்களுக்கு அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப அவர்களது சம்பளம் அரசாங்க நிதியிலிருந்து கொடுக்கப்படும்.

3. அரசாங்க நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கு தளவாடங்களுக்கென்றுள்ள தொகையை அரசாங்கம் கொடுக்கும். ஆனால் இப்பாடசாலைகள் விளையாட்டுக்கு ஒரு சிறிய கட்டணத்தை அறவிடலாமேயொழிய வேறு எவ்விதக் கட்டணத்தையும் அறவிட முடியாது.

இம்மசோதவை அரச சபையில் சமர்ப்பித்த கன்னங்கரா "பணம் செலவு செய்து, ஆங்கிலக்கல்வியைப் பெற்று அரசாங்க பதவிகளை ஆக்கிரமித்து, இக்கல்வியின் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் சம்பாதித்த பணக்கார வர்க்கத்தின் பராமரிப்பிலிருந்து இக்கல்வியை பாமரமக்களின் உரிமைச் சொத்தாக நான் மாற்றிவிட்டேன்" என்று கூறினார். இத்திட்டத்தை டி. எஸ். சேனாநாயக்க உட்பட தேசிய காங்கிரஸ் தலைவர்களில் சிலர் எதிர்த்தார்கள். அம் மசோதாவின் விவாதத்தைப் பிற்போட அவர்கள் எத்தனித்தார்கள். டி. எஸ். சேனாநாயக்கா நாட்டில் இல்லாத சமயம் பார்த்து இவ்விவாதத்தை நடத்திய கன்னங்கரா இம்மசோதாவை வெற்றிகரமாக அமுலாக்கினார்.

இத்திட்டத்தினால் பெரும் பலனையடைந்தவர்கள் பணக்கார வர்க்கத்தினரே, என்பதை கன்னங்கரா அப்பொழுது உணரவில்லை. 1945ம் ஆண்டுவரை கல்விக்கட்டணம் செலுத்தி கல்விகற்ற உயர்வர்க்கத்தினர்இப்பொழுது கட்டணம் செலுத்தாமலேயே இக்கல்வியைப் பெற்றனர். கொழும்பிலுள்ள பிரசித்திபெற்ற கல்லூரிகளைப்போல கிராமங்களிலும் மத்திய கல்லூரிகளை நிறுவி பாமரமக்களுக்கும் உயர்கல்வி கொடுக்கவேண்டும் என்ற கன்னங்கராவின் உயரிய நோக்கம் அரசாங்கத்தின் பணமின்மை காரணமாக நிறைவேறவில்லை. கல்விக்காக ஒதுக்கீடு செய்த அரசாங்கத்தின் பணத்தின் பெரும்பகுதி இப்பொழுது பணக்கார வர்க்கத்தின் பிள்ளைகளுக்காக செலவிடப்பட்டது. ஏழை மக்களின் கல்வி வளர்ச்சிக்காக செலவிடப்பட வேண்டிய பணம் பணக்கார வர்க்கத்திற்குச் செலவு செய்யப்பட்டது.

பாமர மக்களும் ஆங்கிலக் கல்வி பெறுவார்களே என்ற பயம் சில பழைமை வாதிகளிடையே தோன்றியது. பௌத்த அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் தம்முடைய கல்வி நிறுவனங்கள் வரும் என்ற பயத்தினால் கிறிஸ்தவ மதச் சங்கங்கள் எதிர்த்தன. கிறிஸ்தவர்களின் வாக்குகளை நம்பியிருந்த ஜி. ஜி. பொன்னம்பலம், மகாதேவா, சிறி பத்மநாதன் போன்றவர்களும் இம்மசோதாவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்தார்கள். முக்கியமாக 'வெள்ளாள' சாதியைச் சேர்ந்த தமிழர்கள், தாழ்த்த சாதியினரும் ஆங்கிலக்கல்வியைப் பெறுவார்களே என்ற பயத்தினால் இத்திட்டத்தை எதிர்த்தார்கள். ஆங்கிலக்கல்வியைப் பெற்றதனால் அரசாங்க உயர் பதவிகளை ஆக்கிரமித்துக் கொண்ட வெள்ளாள சாதியைச் சேர்ந்த உயர்வர்க்கத் தமிழர்கள் ஆங்கிலக் கல்வியின் பரவலாக்கத்தின் மூலம் பாமர சிங்களவரும் அரசாங்க உயர்பதவிகளைப் பெறுவார்கள் என்ற பயத்தினால் இத்திட்டத்தை எதிர்த்தார்கள். யாழ்ப்பாணத்து மிஷனரி பாடசாலைகளில் கல்வி கற்றவர்களில் பெரும்பாலானோர் இந்துக்களானபடியால் இவர்களும் கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து இத்திட்டத்தை எதிர்த்தார்கள். பௌத்த சமய இயக்கங்களும் பௌத்த பிக்கு சங்கங்களும் இத்திட்டத்திற்கு ஆதரவு நல்கியதனால் இது இனவாத திட்டம் என்ற எண்ணத்தில் கிறிஸ்தவர்களும் இந்துக்களும் இத்திட்டத்தை எதிர்த்தார்கள். "ஆங்கிலக்கல்வி கற்ற கிறிஸ்தவர்களுக்கும் தாய்மொழிக் கல்வி கற்ற பௌத்த-இந்துக்களுக்குமிடையே தோன்றிய முரண்பாடு பௌத்த சிங்களவருக்கும் இந்து-தமிழர்களுக்குமிடையே ஏற்பட்ட முரண்பாடாக வளர்ந்து இவ்விரு இனங்களுக்குமிடையே உள்ள அரசியல் பொருளாதார உறவுகள் மோசமாவதற்குக் காரணமாயமைந்ததோடு நாட்டின் எதிர்கால வாழ்வையே பாதித்தது" என்று ஜே. சூர். றசல் கூறுகிறார்.

மற்றைய இனத்தவர்கள் தத்தமது பொருளாதார நிலையையும் சமூக அந்தஸ்தையும் பாதுகாப்பதில் மும்முரமாக இருந்த வேளையில் முஸ்லிம் சமூகத்தில் எவ்வித சலசலப்பும் ஏற்படவில்லை. ஏனைய சமூகத் தலைவர்கள் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த அளவு அன்றைய முஸ்லீம் தலைவர்கள் உணரவில்லை. அவர்கள் முஸ்லீம் சமூகத்திற்காக யாசகம் கேட்டு நின்றதெல்லாம் 'அரசாங்க தமிழ் கலவன் பாடசாலைகள்' ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவசக் கல்வித்திட்ட விவாதத்தின் போது, தனியார் பாடசாலைகளை நடத்துவதற்கு அரசாங்கப் பொதுப் பணம் செலவிடப்பட வேண்டும் என்று முடிவானபோது இந்நாட்டில் வரி செலுத்தும் ஒரு சிறுபான்மையினமாகிய முஸ்லீம்களுக்கு இத்தனியார் பாடசாலைகளில் ஒரு கணிசமான அளவு அனுமதி அளிக்கப்பட வேண்டும் என்று ஏன் அன்றைய முஸ்லீம் தலைவர்கள் கேட்கவில்லை? ஆங்கிலக் கல்வி மூலம்தான் உயர்பதவிகளையும் உயர் அந்தஸ்தையும் ஏனைய சமூகத்தினர் பெற்றார்கள் என்ற உண்மையை நாம் அறிந்தோம். அன்றைய முஸ்லீம் தலைவர்கள் உயர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாயிருந்த காரணத்தினாலா தம்முடைய இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஆங்கிலக்கல்வி தேவை என்று வாதாட முன்வரவில்லை? அல்லது ஆங்கிலக்கல்வியின் தாற்பரியத்தை உணரும் சக்தி அவர்களுக்கில்லையென்ற காரணமாயிருக்கலாமா? அரசாங்க தமிழ் பாடசாலைகளில் கல்வி கற்ற முஸ்லீம் மாணவர்கள் தமிழ் ஆசிரியர்களாக மட்டும்தான் வரமுடிந்தது. சிறந்த அறிஞர்களாக, உயர்ந்த பதவிகளை வகிக்க வேண்டிய அறிவுள்ள முஸ்லீம்கள் வெறும் அரசாங்க ஆசிரியர்களாகத்தான் தம் வாழ்நாளை முடிக்க வேண்டியிருந்தது. எல்லா வசதிகளையும் படைத்த தனியார் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்ற பிறகும் கூட முஸ்லீம்கள் இப்பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவதில்லை. அதைத் தட்டிக் கேட்பதற்கு இன்றும் கூட ஒரு முஸ்லீம் தலைவர் தோன்றவில்லை.

முஸ்லீம் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்ட சர். ராசிக் பரீத் அரச சபையில் சமர்ப்பித்த புள்ளிவிரங்களின் படி, “1930ஆம் ஆண்டில் 195 முஸ்லீம் மாணவர்கள் பெரும்பான்மையாக உள்ள பாடசாலைகளில் 25 முஸ்லீம் ஆசிரியர்களே இருந்தனர். 1948ஆம் ஆண்டில் அரசாங்க தமிழ் பாடசாலைகளில் 253 பாடசாலைகளில் 50% விகிதத்துக்கு மேலாக முஸ்லீம் மாணவர்கள் இருந்தார்கள். இப்பாடசாலைகளில் 50 முஸ்லீம் தலைமை ஆசிரியர்களும் 238

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லீம் ஆசிரியர்களும் இருந்தார்கள். இத்தொகையில் 125 ஆசிரியர்களே பயிற்சி பெற்றவர்களாக இருந்தார்கள்" என்ற புள்ளி விவரங்கள் இலங்கை செனட் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. ஐந்து லட்சம் சனத்தொகையைக் கொண்ட முஸ்லீம் சமூகத்தில் 125 ஆசிரியர்களே இருந்தார்களென்றால் முஸ்லீம் சமூகத்தின் பிற்போக்கு நிலையைக் காட்ட இதைவிட ஆதாரம் தேவையா? ஆங்கிலக் கல்வி பெறாத காரணத்தினால் முஸ்லீம்களில் பெரும்பான்மையானோர் சமுதாயத்தின் அடிமட்டத்திலேயே இருக்க நேர்ந்தது. அரசாங்கத்தில் ஒரு சில முஸ்லீம்களுக்கு உயர் பதவி கிடைக்க வாய்ப்புக்கிடைப்பதற்குக் காரணம் அவர்களுடைய ஆங்கிலக் கல்வியே. இக்கால கட்டத்தில்தான் மர்ஹூம் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களின் பணி முக்கியத்துவம் பெறுகிறது. முஸ்லீம் சகாய நிதியின் மூலம் உதவி பெற்ற முஸ்லீம் மாணவர்கள் ஆங்கிலக் கல்வி கற்று அரசாங்கத்தில் உயர் பதவிகளைப் பெறும் தகுதியைப் பெற்றார்கள்.

ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த காலஞ்சென்ற ஏ.எம்.ஏ. அஸீஸ், கிராமப்புற பாடசாலைகளில் கல்வி கற்று, எஸ்.எஸ்.சி. பரீட்சையில் திறமை சித்தி பெற்ற பொருள் வசதியில்லாத ஏழை முஸ்லிம் மாணவர்களுக்கு புலமை பரிசில் கொடுத்து, தான் அப்போது தலைவராயிருந்த சாகிராக் கல்லூரியில் உயர்கல்வி பெறுவதற்காக அனுமதி வழங்கினார். இவர்கள் இலங்கைச் சர்வகலாசாலைக்குச் சென்று பி.ஏ. பட்டம் பெற்று அரசாங்கத்தில் உயர் பதவிகளைப் பெறுவதற்கு, அஸீஸும் அவருடைய 'கல்விச் சகாய நிதியும்' தான் காரணமென்றால், அதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

முஸ்லிம்களில் 95% விகிதமானோர் இன்று சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருப்பதற்குக் காரணம் இவர்கள் ஆங்கிலக் கல்வி பெறாமையே. அரசாங்க முஸ்லிம் பாடசாலைகளில் வசதியில்லாமை காரணமாக, எதிர்காலத்திலும் முஸ்லிம் சமூகத்தினர் பொருளாதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி பெறுவார்கள் என்று கூறுவதற்கில்லை. எல்லா வசதிகளையும் படைத்த அரசாங்கத்தினால் கையேற்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் ஏன் முஸ்லிம் மாணவர்கள் சேருவதற்கு மறுக்கப்படுகிறார்கள். அரசாங்கத்தினதும், மற்றைய இனத்தவர்களினதும் இந்த ஓரவஞ்சகச் செயல்களினால், முஸ்லிம்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறது. மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள தொழில் வாய்ப்பின் காரணமாக, முஸ்லிம் சமூகத்தின் உண்மை நிலை மறைந்திருக்கிறது. இந்த செயற்கை நிலை அதிககாலம் நீடிக்காது.

முஸ்லிம்களின் எதிர்கால சுபீட்சத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் ஒவ்வொரு முஸ்லிமும் இதுபற்றி சிந்திக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியல் வானில் மார்க்சீயக் கட்சிகளின் தோற்றம்

இன உணர்வையும், இனவெறியையும், தூண்டும் இனவாத இலக்கியமும் அதனடியாகத்தோன்றும், இனவாத அரசியலும், ஒரு நாட்டைப் பிளவுபடுத்துவதோடு அதை அழிவுப் பாதியில் இழுத்துச் செல்லும் என்பது வரலாற்றுண்மை. ஒரு காலத்தில் முற்போக்குக் கருத்துக்களாகவும், முற்போக்கு இலக்கியங்களாகவும், முற்போக்கு இயக்கங்களாகவும் இருப்பவை வேறொரு காலகட்டத்தில், வேறொரு சூழ்நிலையில் பிற்போக்கு சக்திகளாக மாறலாம். உரோம சாம்ராஜ்யத்தின் அடிமை முறை ஆட்சியை ஒழித்த பிரபுத்துவ ஆட்சி முறை, பிறகு மக்களை அடக்கி ஒடுக்கும் ஓர் ஆட்சி முறையாக மாறியது. பிரபுத்துவ ஆட்சி முறைக்கு எதிராகத் தோன்றிய பிரெஞ்சுப் புரட்சி, ஜனநாயக ஆட்சிமுறையையும், அதனடியாக முதலாளித்துவ பொருளாதார முறையையும் உருவாக்கியது. முதலாளித்துவ அமைப்பு முறையிலிருந்து தோன்றியதுதான் தனி மனித வாதம். தனிமனிதவாதம் சர்வாதிகார ஆட்சிக்கு வித்தூன்றியது. ஒரு காலகட்டத்தில் முற்போக்கு இயக்கமாகத் தோன்றிய ஜனநாயகவாதம், முதலாளித்துவ பொருளாதாரத்தின் பிடியில் சிக்குண்டு மக்களை நசுக்கும் ஓர் ஆட்சி முறையாக மாறியது. முதலாளித்துவத்தின் முழுமையான வளர்ச்சிதான் ஏகாதிபத்தியம். ஏகாதிபத்தியம் காலனித்துவ ஆட்சியாக உருவெடுத்தது. இக்காலனித்துவ ஆட்சிக்கு எதிராகப் போராடியவர்கள் மத்தியதரவர்க்கத்தினரே. இவர்களுடைய குறிக்கோள், அந்நிய ஆட்சியை ஒழித்து நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்பதே. இந்தியாவில் இம்மத்தியதரவர்க்கத்தினர் ஆங்கில ஏகாதிபத்தியத்தை வன்செயல் மூலம் எதிர்க்க முடியாதென்பதை உணர்ந்து தம்முடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்திற்குப் பாமர மக்களையும் சேர்த்ததோடு 'சத்தியாக்கிரகம்' என்ற ஒரு கொள்கையையும் கடைப்பிடித்தனர். இலங்கை மத்திய தரவர்க்கத்தினர், தம்முடைய இயக்கத்திற்குப் பாமர மக்களை சேர்க்கவில்லை. பூரண சுதந்திரம் என்று அவர்கள் கேட்கவில்லை. அவர்கள் கேட்டதெல்லாம் பிரித்தானிய ஆட்சியில் 'டொமினியன்' அந்தஸ்து என்பதே. இலங்கையின் சுதந்திர இயக்கம் மக்கள் இயக்கமாக மாறவில்லை. உரையாடல் மூலமே தம்முடைய குறிக்கோளை அடையலாம் என்று நம்பியிருந்தனர். இவர்களுக்கு அனுகூலமாக இரண்டாவது உலக மகாயுத்தம் அமைந்தது. இப்போரில் இறங்கிய ஜப்பான், ஐரோப்பிய நாடுகளின் ஆட்சியிலிருந்த கிழக்கு நாடுகளைக் கைப்பற்றியது. இப்போரில் இலங்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்த இங்கிலாந்து அரசாங்கம் இலங்கை மக்களுக்குச் சில சலுகைகளைச் செய்ய முன் வந்தது. இப்போரை நடத்துவதற்கு இலங்கை மக்களின் ஒத்துழைப்பு தேவை என்று கருதியதாலேயே பிரித்தானிய அரசாங்கம். அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதாக இலங்கை மக்களுக்கு வாக்களித்தது. யுத்தமுடிவில் மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புள்ள அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்க முன்வந்த பிரித்தானிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை இலங்கை மத்தியதர வர்க்கத்தினருக்கே அளித்தது.

பல்லின மக்கள் வாழும் இலங்கையில், பெரும்பான்மையின மக்களின் தலைவர்களது போக்கில் சந்தேகம் கொண்ட சிறுபான்மையின மக்கள் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தால் தம்முடைய உரிமைகள் பறிபோய்விடுமே என்ற பயத்தினால் சுதந்திர இயக்கத்திற்குத் தம்முடைய முழு ஆதரவையும் அளிக்க முன்வரவில்லை. பிரித்தானிய அரசாங்கம், இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படவேண்டுமென்றால் பெரும்பான்மையின மக்கள் சிறுபான்மையின மக்களின் முழு ஆதரவையும் பெற வேண்டுமென்று கூறியது. டொனமூர் ஆட்சிமுறையில் ஸ்தாபிக்கப்பட்ட முதல் அரச சபையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரிசபையில், சிறுபான்மையின மக்களின் பிரதிநிதிகள் இருவர் இருந்த காரணத்தினால் இலங்கையின் அரசியல் சீர்திருத்தற்குரிய பிரேரணைகளை மந்திரிசபை சமர்ப்பித்த போது, இப்பிரேரணைகளுக்கு மந்திரிசபையினால் ஏகோபித்த முடிவை எடுக்க முடியவில்லை.சிங்கள--பௌத்த இலக்கியங்களினால் பாதிக்கப்பட்ட சிங்களஅரசியல் தலைவர்கள், சிறுபான்மையின மக்களை ஒதுக்கித் தம்முடைய உரிமைகளைப் பெற வேண்டுமென்ற எண்ணத்தில் செயல்படத் தொடங்கினர். டொனமூர் அரசியல் திட்டம் சிறுபான்மையின மக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமில்லை என்பதை நிரூபிப்பதற்காக பேராசிரியர் சி. சுந்தரலிங்கம், சிங்களத் தலைவர்களுக்கு ஒரு திட்டத்தை வகுத்துக் கொடுத்தார். இத்திட்டத்தின் பிரகாரம் இரண்டாவது அரச சபையில் சிறுபான்மை அங்கத்தவர் ஒருவர்கூட இல்லாத தனிச்சிங்களவர் மட்டும் கொண்ட மந்திரிசபை நிறுவப்பட்டது. சிறுபான்மையின மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் ஆட்சியை நடத்தலாம் என்ற எண்ணம் சிங்களத் தலைவர்களிடையே வேரூன்றியது.

அரசியல் சீர்திருத்தத்திற்கான பிரேரணைகள் 1932ஆம் ஆண்டிலேயே தொடங்கிவிட்டன. இப்பிரேரணைகளைக் கொண்டு வந்தவர் ஈ.டபிள்யு. பெரேரா. கவர்னரின் மேலதிகமான அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டும், பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டமியற்றும் அதிகாரம் நிறுத்தப்பட வேண்டும், நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட சபைகளுக்குப் பதிலாக கபினட் முறை மந்திரி சபை நிறுவப்படல் வேண்டும் என்பவையே அவை. மந்திரிசபை இப்பிரேரணைகளை பிரித்தானிய அரசாங்கத்திற்கு சமர்ப்பித்த போது, பிரித்தானிய அரசாங்கம் இப்பிரரேரணைகளை நிராகரித்தது. அரசாங்கம் இப்பிரேரணைகளை நிராகரிப்பதற்கு, சிறுபான்மையின மக்களின் ஆதரவு இல்லாமையே காரணம். நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட சபைகளில் நம்பிக்கை வைத்திருந்த சிறுபான்மையின மக்கள் இச்சபைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்றப்பட்டால், தம்முடைய அரசியல் அந்தஸ்து போய்விடுவதோடு தம்முடைய உரிமைகளும் பறிபோய் விடும் என்று பயந்தனர். பிரித்தானிய அரசாங்கத்தின் இணக்கத்துடன் அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வரவேண்டுமென்ற சிங்கள உயர்வர்க்கத்தினர் பாடுபட்ட அதே வேளையில் முற்போக்கு எண்ணங்களைக் கொண்ட இயக்கங்கள் சிங்களவர் மத்தியிலும், தமிழர் மத்தியிலும் தோன்றின.

மாக்சீய, சோஷலிச கருத்துக்களைக் கொண்ட ஒரு இளைஞர் குழு அரசியல் அரங்கிலே குதித்தது. முதலாவது உலக மகாயுத்தத்தின் முடிவை நினைவு கூறுமுகமாக அத்தினத்தில் பொப்பி மலரின் விற்பனையால் சேகரிக்கப்பட்ட பணத்தை பாதிக்கப்பட்ட படை வீரர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் எடுத்த முயற்சியை இவ்விளைஞர்கள் பொப்பி மலருக்குப் பதிலாக சூரிய மலரை விற்பனை செய்து இலங்கை படைவீரர்களுக்குக் கொடுக்க முன்வந்தனர். இதை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடத்தும் இயக்கத்தின் சின்னமாக இவர்கள் கருதினர். அத்தோடு 1934-ஆம் ஆண்டுகளில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு நிவாரணமளிப்பதில் ஈடுபட்டதனால் மக்களின் நன்மதிப்பை இவ்விளைஞர்கள் பெற்றனர். இவ்வியக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவராக விளங்கியவர் டாக்டர் என். எம். பெரேரா.

1920 ஆம் ஆண்டுகளில் நகரத் தொழிலாளர்களை ஒன்றுபடுத்தி அவர்களிடம் வர்க்க உணர்வை ஏற்படுத்தி அவர்களை இயக்க பூர்வமாகச் செயற்படுத்தச் செய்தவர் ஏ. இ. குணசிங்க அவர்களே. 1930 ஆம் ஆண்டுகளில் இலங்கை மக்களின் வர்க்கப் பிரிவினைகள் வலுவடைவதைக் காண்கிறோம். “உயர்மட்டத்தில் ஆங்கிலக் கல்வி பெற்ற உயர்வர்க்கத்தினர் பிரித்தானிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்தங்களைக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபடுவதையும் அவர்களுக்குப் பக்கபலமாக மத்தியதர வர்க்கத்தின் கீழ் நிலையிலுள்ளவர்கள் இருப்பதையும், அடிமட்டத்தில் தொழிலாள வர்க்கத்தினர் வேலை நிறுத்தம் போன்றவைகளின் மூலம் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இயக்கபூர்வமாக செயல்படுவதையும் நாம் காண்கிறோம்'' என்று சச்சிபொன்னம்பலம் தன்னுடைய 'தமிழர் விடுதலைப் போராட்டம்' என்ற நூலில் கூறுகிறார்.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராகச் செயல்பட்ட குணசிங்கவின் தொழிலாளர் கட்சியும், அதற்குப் பக்கபலமாகத் தோன்றிய இளைஞர் இயக்கமும், மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெறுவதை உணர்ந்த பிரித்தானிய ஏகாதிபத்திய அரசாங்கம் மக்கள் கவனத்தை வேறொரு வழியில் திருப்ப முயற்சிகள் எடுத்தது. இம்முயற்சிகளில் ஒன்றுதான் மொழி சீர்திருத்தம். தொழிலாளர்களின் அமைதியின்மையைப் பிரதிபலிக்குமுகமாக மாக்சீய வாதிகளின் தலைமையில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களைக் கண்டு இலங்கையின் ஐரோப்பிய சமூகம் கதிகலங்கியது. ஐரோப்பியர் நிர்வாகத்தில் இருந்த 'டைம்ஸ் ஒப் சிலோன்' பத்திரிகை "இவ்வேலை நிறுத்தங்களை அரசாங்கத்திற்கு எதிராகக் கிளப்பப்பட்ட கிளர்ச்சி'' என்று கூறியது. எனவே தான் இவ்வுயர் வர்க்கத்தினர் மக்களுடைய கவனத்தை மொழி மாற்றத்தில் திருப்பியது. மக்களிடையே பிளவை ஏற்படுத்தி இன உணர்வைத் தூண்டி சமரசமாக வாழ்ந்த மக்கள் ஒருவரையொருவர் எதிர்த்து தம்மைத்தாமே அழிக்கும் நிலையை உருவாக்குவதற்கு இவ்வுயர் வர்க்கத்தின் பிரித்தாளும் கொள்கையே காரணமாக இருந்தது. அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைப் பரிசீலினை செய்த குழு 1946 ஆம் ஆண்டில் அரசசபையில் சமர்ப்பித்த அறிக்கையில் பின்வருமாறு கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எமது நாட்டில் இன்றிருக்கும் வர்க்கங்களிடையே உள்ள இடைவெளியை அகற்றி பாமரமக்களும் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி கலாச்சார மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு எமது முயச்சிகள் வழிகோலும் என நாம் நம்புகிறோம்." எனவே மொழிக்கொள்கையின் முக்கிய நோக்கம் வர்க்கப்பிரிவினையை அகற்றுவதே என நாம் அறிகிறோம். ஆனால் இம்மொழிக் கொள்கையினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை? சிங்களம் அரச மொழியாகவும், தமிழ் பிரதேச மொழியாகவும் பிரகடனப்பட்டதின் விளைவு என்ன? நாடு இரண்டாகப் பிளவுபட்டதுடன், இனவெறியும் இவ்விரு சமூகங்களிடையே வளர்ந்தது தான் மிச்சம்.

மக்களின் கவனத்தைத் திசை திருப்ப, உயர்வர்க்கத்தினர் முயற்சிகள் எடுத்த அதே வேளையில், சோஷலிசக் கருத்துக்களைக் கொண்ட இளைஞர்கள், சமுதாய மாற்றத்தை முன்வைத்து மக்கள் இயக்க பூர்வமாக செயல்பட ஒன்று திரட்டும் ஆக்க வேலைகளில் ஈடுபட்டனர். குணசிங்கவின் மிதவாதக் கொள்கைக்குப் பதிலாக, தொழிலாளர்கள் மத்தியில் வர்க்க உணர்வையும், வர்க்கத் தனித்துவத்தையும் ஏற்படுத்தி தொழிலாளர்களை அரசியலில் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தினார்கள், டாக்டர் என். எம். பெரேராவும், பிலிப் குணவர்த்தனாவும். கொழும்புமாநகரில், தொழிலாளர்களின் எண்ணிக்கையும், செல்வாக்கும் குறைந்திருந்த காரணத்தினால் இவர்களால் அரசியல் தளமொன்றை கொழும்பில் அமைக்க முடியாதிருந்தது. டாக்டர் என். எம். பெரேரா ருவன்வெல்லையிலும், பிலிப் குணவர்த்தனா, அவிஸ்ஸாவெலையிலும் தங்கள் அரசியல் தளங்களை அமைத்துக் கொண்டார்கள்.

சர்வகலாசாலைக் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த டாக்டர் என். எம். பெரேரா. இங்கிலாந்திலிருந்து தமது உயர் கல்வியை முடித்துக் கொண்டு வந்திருந்த தனது சகாக்களான பிலிப் குணவர்த்தனா, டாக்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்வின் ஆர். டி. சில்வா மற்றும் முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட பலருடன் சேர்ந்து டிசெம்பர் 17ஆம் திகதி 1935ஆம் ஆண்டில் 'லங்கா சமசமாஜக்கட்சி' என்ற சோஷலிசக் கொள்கையைக் கொண்ட ஓர் அரசியலில் கட்சியை ஸ்தாபித்தார்.

1936 ஆம் ஆண்டு இரண்டாவது அரசசபைக்கான பொதுத்தேர்தலில் டாக்டர் என். எம். பெரேராவும், பிலிப் குணவர்த்தனாவும், ருவன்வெல்ல, அவிஸாவெல தொகுதிகளில் வெற்றி பெற்றார்கள். இவர்களுடைய வெற்றி தொழிலாளர்களின் வெற்றி என பிரகடனப்படுத்தப்பட்டது. உயர்வர்க்கத்தைச் சேர்ந்த பழமைவாதிகளின் தலைமைத்துவத்துக்கு எதிராக இன்னொரு மக்கள் இயக்கம் தோன்றியது. அதுதான் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தலைமையில் தோன்றிய 'சிங்கள மகாசபா' என்ற இயக்கம். இவ்விரு இயக்கங்களும் இன ஒற்றுமைக்காகப் பாடுபட்டன. சிங்கள மகாசபாவின் முதலாவது அங்குரார்ப்பண கூட்டத்தில் பண்டாரநாயக்கா சபாவின் கொள்கைகளை விளக்குமுகமாக பின்வருமாறு உரையாற்றினார். "சிங்கள மகாசபாவின் அங்கத்தவர்களாகிய நாம் எம்மிடையே உள்ள சாதி வேற்றுமை, மலைநாட்டு கரையோர சிங்களவர் என்ற பிரிவினை சமய வேற்றுமை, மற்றும் எல்லா வேற்றுமைகளையும் ஒழித்து, நாட்டின் ஒற்றுமைக்காகப் பாடுபடுவதே எமது முக்கிய குறிக்கோளாகும். உண்மையில் சமுதாயத்தின் அடி மட்டத்திலிருந்து நாம் ஆரம்பிக்க வேண்டும். முதலாவதாக சிங்களவர் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும். அடுத்து எமது உயரிய கொள்கையான எல்லா சமூகங்களிடையேயும் ஒற்றுமையை வளர்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சுதந்திரத்திற்கு முஸ்லிம் தலைவர்கள் ஆற்றிய பணி

"சிறிலங்கா மசோதா" சபையில் விவாதத்திற்கு எடுக்கப்பட்ட இச்சமயம், ஒரேயொரு காரணத்திற்காகத்தான், இம்மசோதாவை ஆதரிப்பதென சபையிலுள்ள முஸ்லிம் அங்கத்தினர்கள் முடிவெடுத்தார்கள். "இந்நாட்டின் அரசியல் சுதந்திரம் பொறுத்த வரையில், எமது இச்செய்கையினால், எம்முடைய சமூகத்திற்குக் கிடைக்க இருந்த நன்மைகளையும், நலன்களையும் நாம் தியாகம் செய்யத்தயார் என்பதே அக்காரணம்". இவ்வாறு, அரச சபையில் இலங்கையின் அரசியல் சுதந்திரம் மசோதா விவாதத்திற்கு எடுக்கப்பட்ட சமயம், முஸ்லிம்களின் பிரதிநிதியான றி.பி. ஜாயா கூறினார். இந்தியாவில் சுதந்திரத்திற்காக, மகாத்மா காந்தியின் தலைமையில் மக்கள் ஒரு மாபெரும் போராட்டத்தையே நடத்தினார்கள். இலங்கையில் அப்படியொரு போராட்டம் எதுவும் நடக்கவில்லை. மக்கள் மயமான போராட்டம் நடைபெறாவிட்டாலும், இலங்கைத் தேசீய காங்கிரஸ் தலைமையில் ஒரு தேசிய இயக்கம் இருக்கத்தான் செய்தது.

1943ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை அரச சபையின் அமைச்சரவை பிரித்தானிய அரசாங்கத்திடமிருந்து இலங்கையின் அரசியலில் மாற்றங்களைக் கொண்டு வருவதென்ற வாக்குறுதியைப் பெற்றது. அமைச்சரவையினால் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் மாற்றங்களைப் பரிசீலனை செய்வதற்கும், இலங்கையின் எல்லாச் சமூகங்களினதும் பிரதிநிதிகளைச் சந்தித்து, அவர்களது அபிப்பிராயங்களையும் அறியும் பொருட்டும் ஓர் ஆணைக்குழுவை நியமிப்பதென பிரித்தானிய அரசாங்கம் முடிவெடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் சுதந்திரப் பாதையில் அடுத்த கட்டமாகிய டொமினியன் அந்தஸ்தைப் பெறுவதில் எல்லா சமூகங்களும், கட்சிகளும், இயக்கங்களும் ஆர்வம் காட்டின. ஆனால் இங்கிலாந்தின் காலனித்துவ அரசாங்கம் ஒரு முக்கிய விதியை விதித்தது. அதாவது, அமைச்சரவையின் அரசியல் மாற்றத்திற்கான பிரேரணையை, அரச சபையிலுள்ள அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டு பேர் ஆதரிக்க வேண்டுமென்பதே அது. அரச சபையிலுள்ள அரச நியமன அங்கத்தவர்களான சபாநாயகரையும், மூன்று அரசாங்க உத்தியோகத்தர்களையும் கழித்தால், குறைந்தது 42 அங்கத்தவர்களாவது இப்பிரேரணையை ஆதரிக்க வேண்டும். சிறுபான்மையின மக்களின் பிரதிநிதிகளின் ஆதரவில்லாமல், சபையில் இப்பிரேரணையை அதிகப்படி வாக்குகளால் வெற்றிபெற முடியாதென்ற உண்மையைச் சிங்களத்தலைவர்கள் உணர்ந்தார்கள்.

சிறுபான்மையின மக்களின் ஆதரவைப் பெற வேண்டுமென்ற இங்கிலாந்து அரசாங்கத்தின் நிபந்தனை, புதிய அரசியலமைப்பில் சிறுபான்மையின மக்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டுமென்பதே. 1944 ஆம் ஆண்டு, சோல்பரி பிரபுவின் தலைமையில், அமைச்சரவையின் பிரேரணையைப் பரிசீலனை செய்வதற்கும், இலங்கையின் எல்லா இன மக்களின் அபிப்பிராயங்களைப் பெறுவதற்கும், அதற்கேற்ப, இலங்கையின் அரசியல் அமைப்பில் பாரியமாற்றங்களைக் கொண்டுவருவதற்கும் ஓர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

'சிங்கள மொழி அரச மொழியாகப் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்' என்ற ஜே. ஆர் ஜயவர்த்தனாவின் மசோதாவை எதிர்த்து, தமிழ் மொழிக்கும் உரிய அந்தஸ்து வழங்கப்படல் வேண்டும் என்ற சிறுபான்மை இன மக்களின் பிரதிநிதிகளின் திருத்தங்களோடு, இம்மசோதா அரச சபையில் அதிகப்படி வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது. இருந்தாலும், சிறுபான்மையின மக்களுக்கு ஒரு பயம் இருந்து கொண்டேயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையின மக்களின் அதிகப்படியான வாக்குகளால் நிர்மாணிக்கப்படும் ஓர் அரசாங்கத்தில் சிறுபான்மையின மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இப்புதிய அரசியலமைப்பில் இருக்க வேண்டும் என்பதை சிறுபான்மையின மக்கள் உணர்ந்தார்கள். ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் தனிச் சிங்கள மசோதா போன்ற மசோதாக்கள், எதிர்கால சுதந்திர இலங்கையில் வரக்கூடியதற்கு ஓர் அறிகுறியாகவே சிறுபான்மையின மக்களுக்குத் தென்பட்டது. ஆகவே, பெரும்பான்மையின மக்களின் ஆட்சியில், சிறுபான்மையின மக்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அரசியல் யாப்பில் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், சிறுபான்மையின மக்களின் பிரதிநிதிகள் தங்கள் பிரேரணைகளை ஆணைக்குழுவின் முன் சமர்ப்பித்தார்கள். இந்தக் கண்ணோட்டத்தில் தான் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் இயங்கிய தமிழ்க்காங்கிரஸ் "50-50" என்ற கோஷத்தை ஆணைக்குழுவின் முன் வைத்தது. இக்கோஷத்திற்குத் தம்முடைய கொள்கைகளினாலும், செய்கைகளினாலும் தமிழ்த் தலைவர்கள் இலங்கையின் முக்கிய சிறுபான்மையினங்களில் ஒன்றான முஸ்லிம்களின் ஆதரவைப் பெறத் தவறினர்.

தங்களுடைய கோரிக்கைகளுக்கு முஸ்லிம்களின் உதவியை நாடிய தமிழ்த் தலைவர்கள் முஸ்லிம்களின் உரிமைகளை உதாசீனம் செய்தனர். தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் தன்னுடைய திட்டத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு 17 ஆசனங்களும், இந்தியத் தமிழர்களுக்கு 13 ஆசனங்களும், பறங்கியர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் 8 ஆசனங்களும் (நியமனம்), எஞ்சியிருந்த 12 ஆசனங்களை ஏனைய எல்லா சிறுபான்மை இன மக்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்படும் என்றார். இப்பிரேரணை சம்பந்தமான கூட்டத்தில், இவ்வேற்பாட்டையறிந்த டாக்டர் கலீல், முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கு வழங்கப்படும் ஆசனங்களோடு சமமான ஆசனங்கள் கொடுக்கப்படல் வேண்டும் என்ற தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கையை எடுத்துரைத்ததோடு, "எங்களை நீங்கள் என்னவென்று எண்ணினீர்கள்? ஏனையோருக்கு வழங்கும் எஞ்சியுள்ள ஆசனங்களைத் தானா நீங்கள் எங்களுக்குக் கொடுக்கவேண்டும்?" என்று கூறிக்கொண்டு கூட்டத்திலிருந்தும் வெளியேறினார்.

தமிழர்களின் இந்தப்போக்கினால்,விரக்தியடைந்த முஸ்லிம்கள், சிங்களத் தலைவர்களை ஆதரிக்க முன் வந்தார்கள். இதே கருத்தைத்தான் சர்.ராசிக் பரீத், அரச சபையில் ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

"காங்கேசன்துறை அங்கத்தவரும், மன்னார் அங்கத்தவரும் ஆற்றிய இரங்கத்தக்க சொற்பொழிவுகளுக்குப் பிறகு, சோனகர்களாகிய நாம், சிங்களவரைத் தவிர்ந்த ஏனைய சமூகங்களினால், எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதைக் கூற கடமைப்பட்டுள்ளேன். தமிழ் சமுகத்திற்குத் தேறுதல் கூறும்வகையில் தான் நான் இச்சொற்பொழிவை ஆற்றுகிறேன். எங்களுடைய பிரதிநிதித்துவம், இல்லாமலேயே எங்களைப் பற்றிய குறிப்புகள் கூறப்பட்டிருக்கின்றன. சோனகர்கள் தமிழ் பேசும் மக்களாகையால், தமிழர்கள் எம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தலாம் என்று ஒரு காலக்கட்டத்தில் கூறப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு நிலைக்கும், நாம் தலை வணங்க வேண்டியிருந்தது" என்று சர். ராசிக் பரீத் கூறினார். மேலும் அவர் பின்வருமாறு கூறினார்.

"நாங்கள் பல துயரங்களை அனுபவித்திருக்கிறோம். சோனகர்களாகிய நாம் பட்ட கஷ்டங்களில் பத்தில் ஒரு பங்காவது நீங்கள் அனுபவிக்கவில்லை. 1936ஆம் ஆண்டை ஞாபகமூட்ட விரும்புகிறேன். இந்த அரசசபைக்கு அன்று நடந்த பொதுத்தேர்தலில் சோனகர்களால் ஒரு பிரதிநிதியையாவது அனுப்ப முடியவில்லை. தமிழ் சமூகம் எங்களுக்கு உதவி செய்ததா? மாறாக, குறைந்தது 40,000 சோனகர் வாக்காளர்கள் இருக்கும் தொகுதிகளான மன்னார், மட்டக்களப்புத் தெற்கு, திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய இடங்களிலிருந்து தமிழ்ப் பிரதிநிதிகளைத்தான் அனுப்பினார்கள். இருந்தும், நாம் தமிழ் அங்கத்தவர்களை ஒன்றாகவே கருதி வந்தோம்."

"இந்த நாட்டில் வாழும் ஐந்து லட்சம் சோனகர்களை ஐம்பது கிளைகளைக் கொண்ட அகில இலங்கை சோனகர் கௌரவ தலைவருடைய இந்தத் தீர்மானத்திற்கு எமது ஆதரவையும் அளிக்க வேண்டும் என்று என்னை பணித்திருக்கிறது. எனக்கு இதைவிட இன்பம் தரக்கூடியது வேறொன்றுமில்லை. எனது மனப்பூர்வமான ஆதரவை கௌரவ சபைத்தலைவரின் பிரேரணைக்கு அளிக்க விரும்புகிறேன். என்னுடைய சமூகமும் நானும் அவருக்கு உறுதுணையாகவே இருந்து வந்திருக்கிறோம். வெற்றிபெறும் இத்தருணத்தில் அவரோடு கைகோர்த்துக்கொண்டு, டொமினியன் அந்தஸ்தை நோக்கி நாம் முன்னேறத் தயார் என்பதைக் கூறவிரும்புகிறேன்."

மேலும் சர். ராசிக் பரீத் முஸ்லீம்களின் வரலாற்றைக் கூறிவிட்டு பின்வருமாறு கூறுகிறார். "சிங்கள சகோதர சகோதரிகளைப் போல், இலங்கைச்சோனகர்கள், இலங்கைத் தாய் நாட்டின் தவப்புதல்வர்கள் ஆவர். இத்தவத்திருநாட்டில், கடந்த பல நூற்றாண்டுகளாக, சிங்கள மக்களும், சோனகர்களும், ஒற்றுமையுடனும் பரஸ்பர அன்புடனும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். கடந்த காலத்தில் பல தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். நான் அதைப்பற்றி இப்பொழுது பேச விரும்பவில்லை. இன்றைய அறிவு யுகத்தில் எந்தப் பிரச்சினையும் மனித சக்திக்கு அப்பாற்பட்டதல்ல. எப்பிரச்சினையையும் நல்லெண்ணத்துடனும், ஒற்றுமையுடனும் நாம் அணுகினால், அதைத் தீர்க்கமுடியும். எனவே எம்முடைய சிநேகக் கரங்களை எமது சிங்கள சகோதரர்களுக்கு நீட்டுகிறோம். தமிழ்த்தலைவர்கள் 50-50 என்ற தூண்டில் மூலம் முஸ்லிம்களைப் பிடிக்க முயன்றார்கள். சிங்கள மக்களில் வைத்த நம்பிக்கையை சோனகர் இழக்கவில்லை. வெற்றி வாகை சூடும் இத்தருணத்தில் சிங்கள மக்களுக்கு நான் இதை ஞாபகமூட்ட விரும்புகிறேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டொமினியன் அந்தஸ்தை வேண்டி நிற்கும் மக்களின் நியாய பூர்வமான கோரிக்கைக்கு நாம் பக்கபலமாக இருக்கிறோம். எனவே, சிங்கள, தமிழ், சோனகர் ஆகிய நாம் எல்லோரும், `டொமினியன் அந்தஸ்தை நோக்கி முன்னேறி, 'பிரித்தானிய காமன்வெல்த் நாடுகளின் சங்கத்தில் ஓர் அங்கத்தவராக, எமது தாய்த்திருநாடாம் இலங்கை பெருமையுடன் வீற்றிருக்கச் செய்வோமாக," என்று சர். ராசிக் பரீத் பேசி முடித்தார். சோல்பரி குழுவினரின் அறிக்கையின் விவாதத்தில் `அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் பிரதிநிதியாக ரி. பி. ஜாயா அவர்களும், அகில இலங்கை சோனகர் சங்கத்தின் பிரநிநிதியாக சர். ராசிக் பரீதும், டி.எஸ். சேனநாயக்காவின் தலைமைத்துவத்தை ஏற்று இலங்கையின் சுதந்திரத்திற்காகத் தமது முழு ஆதரவையும் வழங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்து இளைஞர் காங்கிரஸின் தவறான போக்கினால் தமிழர்களுக்கு ஏற்பட்ட விளைவுகள்

இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து - மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புள்ள அரசாங்கம் தேவை என்று கேட்டவர்கள், ஆங்கிலம் கற்ற மேல் நாட்டு கலாசாரத்தைப் பின்பற்றும் இந்நாட்டு மக்களின் பண்பாட்டுக்குப் புறம்பான நடையுடைபாவனைகளைக் கொண்ட உயர்வர்க்கத்தினரே. இவ்வர்க்கத்தினரின் நோக்கமெல்லாம், இலங்கையை அரசாளும் உரிமை, பிரித்தானிய அதிகாரிகளிடமிருந்து தமக்கு மாற்றப்படவேண்டும் என்பதே. இதில் சிங்களவர், தமிழர், கிறிஸ்தவர், முஸ்லிம் என்ற பாகுபாடு இருக்கவில்லை. இவர்கள் வெவ்வேறு இனங்களையும், வெவ்வேறு சமயங்களையும் வெவ்வேறு மொழிகளையும் பேசுபவர்களாக இருந்தாலும், ஒரே சிந்தனையையும் ஒரே கொள்கையையும், ஒரே வர்க்க உணர்வையும் கொண்டவர்களாகவே இருந்தார்கள். இச்சமயத்தில் தான் இந்நாட்டின் பெரும்பான்மையின மக்கள் சிங்கள-பௌத்தர்களாதலால் அரசியல் அதிகாரம் பாமர மக்களுக்கும் பரவலாக்கப்படுதல் வேண்டும். ஆளும் உரிமையில் ஏழை சிங்கள மக்களுக்கும் பங்கு உண்டு என்ற கருத்து பரவியது. இதன் அடிப்படையில் தோன்றிய இயக்கம் தான் சிங்கள மகாசபா என்ற இயக்கம். இதன் தலைவராக எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்க 1942 ஆம் ஆண்டில் வெயங்கொடையில் ஆற்றிய சொற்பொழிவில், இச்சங்கத்தின் நோக்கத்தை விளக்கிக் காட்டினார். "சிங்கள மக்களிடையே முதலில் ஒற்றுமையேற்பட வேண்டும், அதே சமயத்தில் மற்றைய இன மக்களுடன் நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துழைக்க வேண்டும். பெரும்பான்மை மக்களின் பிரச்சினையாகிய வறுமை ஒழிக்கப்பட வேண்டும்" என்று கூறினார்.

உயர்வர்க்கத்தின் ஆதிக்கத்துக்கெதிராகத் தோன்றிய இயக்கங்களில் ஒன்றுதான் சிங்கள மகாசபா. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தையும், இலங்கையின் அதிகார உயர் வர்க்கத்தினரையும் எதிர்த்த மாக்சீய அரசியல் கட்சிகளான லங்கா சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும், இந்நாட்டின் பண்பாட்டிற்கு ஒவ்வாத ஒரு தத்துவத்தையும், பெரும்பான்மையின மக்களான சிங்கள-பௌத்த இனமக்களின் மரபைப் பேணாத காரணத்தினால் இலங்கை அரசியலில் பௌத்த-சிங்கள தத்துவம் புகுத்தப்படுகிறது. இலங்கை தேசியம் "பௌத்த–சிங்கள", தேசியமாக உருவெடுக்கிறது. இக்காலக்கட்டத்தில் அரசியலில் இனவாதமும் சமயவாதமும் புகுவதை நாம் காண்கிறோம். இதன் பாதிப்பினால்தான் தனிச்சிங்கள அமைச்சரவை தோன்றுவதை நாம் அவதானிக்கிறோம்.

பெரும்பான்மையின மக்களிடையே மாற்றங்கள் ஏற்பட்டு வரும் இக்காலகட்டத்தில், சிறுபான்மையினமாகிய தமிழர்களிடையேயும் பெரும் மாற்றங்கள் ஏற்படுவதை நாம் காணலாம். டொனமூர் அரசியல் திட்டத்தில் 31ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலை, மக்களின் செல்வாக்கைப் பெற்றிருந்த யாழ்ப்பாண இளைஞர் மன்றம் பகிஷ்கரித்தபடியால் முதலாவது சட்ட சபையில் ஒரு யாழ்ப்பாணத் தமிழராவது இருக்கவில்லை. "இப்பகிஷ்கரிப்பினால் தமிழர்கள் பாலைவன சூன்யத்தின் சேற்றில் விடப்பட்டார்கள்" என்று பண்டாரநாயக்க கூறினார். இப்பொதுத்தேர்தலில் கொழும்பு வடக்குத் தொகுதியில் டாக்டர் சரவணமுத்துவும், திருகோணமலை-மட்டக்களப்புத் தொகுதியில் எஸ். எம். ஆனந்தனும் வெற்றி பெற்றார்கள். ஹட்டனிலும், தலாவாக்கெல்லையிலும், பெரிசுந்தரமும், எஸ்.பி. வைத்திலிங்கமும், இந்தியத் தமிழரின் பிரதிநிதிகளாகத் தெரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டார்கள். முஸ்லிம் சமூகத்திலிருந்து மாக்கான் மாக்கார் மட்டக்களப்பு தெற்குத் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டார்.

பகிஷ்கரிப்பு வெற்றி பெற்றது என்று இளைஞர் காங்கிரஸ் தலைவர்கள் குதூகலித்தனர். அரசசபையில் ஒரு யாழ்ப்பாணத்துத் தமிழராவது இல்லையென்ற யதார்த்த நிலையை உணர்ந்த மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இவர்களுடைய சிறுபிள்ளைத் தனத்தைக் கண்டித்தனர். இவ்விளைஞர் காங்கிரஸின் போக்கைக் கண்டித்த ஜி.ஜி.பொன்னம்பலம், தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் தலைவராக 1933 ஆம் ஆண்டில் தோன்றுகிறார். இந்தியாவில் முஸ்லிம்களின் தலைவராக முகம்மதலி ஜின்னாஹ்வைப் போன்று இலங்கையில் தமிழர்களின் பிரச்சினைகளைத் தான் தீர்த்து வைக்கப்போவதாக பொன்னம்பலம் கூறினார். இளைஞர் மன்றத்தினர் செய்த பெரும் தவறு, தேர்தலைப் பகிஷ்கரித்ததுதான். இலங்கைக்கு விஜயம் செய்த நேரு கூட இதனைக் கண்டித்தார். இவர்களுடைய போக்கினால் அரசாங்கம் தேர்தலை வைக்க மறுத்துவிட்டது. ஏனைய தமிழ்த் தலைவர்கள் எத்தனையோ முறையீடுகளைச் செய்தும், கவர்னர் செவிசாய்க்க மறுத்துவிட்டார். இதனால் இளைஞர் காங்கிரசின் செல்வாக்கு குறைந்தது. இளைஞர் காங்கிரஸின் வீழ்ச்சியினால் யாழ்ப்பாணத்து மக்கள் தம் சமுதாயத்தில் மாற்றம் கொண்டு வரும் வாய்ப்பை இழந்தனர். உயர் வர்க்கத்தினதும், ஜி.ஜி. பொன்னம்பலத்தினதும் அரசியல் கொள்கைக்கு எதிரான ஓர் இயக்கம் தோன்றும் வாய்ப்பும் போய்விட்டது. 1947ஆம் ஆண்டில் இளைஞர் காங்கிரஸ் தலைவர்களான பாலசிங்கமும், பேரின்பநாயகமும் 1947ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதென முடிவெடுத்ததும் தங்கள் கட்டுப்பணத்தையும் இழக்க நேரிட்டது. பொன்னம்பலத்தினது உணர்ச்சிவசமான பேச்சுக்களின் மாயையில் மயங்கிய தமிழ் மக்கள் யதார்த்த நிலையில் நின்று, தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் முற்போக்கு எண்ணம் படைத்த ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவத்தை இழந்தனர். இலங்கையினின்றும் பிரிந்து தனி நாடு வேண்டும் என்ற உணர்வு தமிழ் மக்களிடையே பரவுவதை உணர்ந்த காங்கிரஸ் இயக்கத்தினர் சமஷ்டி அரசாங்கம் தான் சிறந்தது என்ற கோரிக்கையை முன் வைத்தனர். ஆனால் அவர்கள் தமிழ் மக்களிடையே தம் செல்வாக்கை இழந்த் காரணத்தினால் அவர்கள் கோரிக்கையை யாரும் மதிக்கவில்லை. இளைஞர் காங்கிரசுக்கு எதிராகத் தோன்றிய இயக்கம் 'அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்' என்ற ஒரு புதிய அரசியல் கட்சி தோன்றுவதற்குக் காலாக இருந்தது.

சிங்களத்தலைவர்களின் டொனமூர்த்திட்டத்தை மாற்றியமைக்கும் பிரேரணைகளை எதிர்த்த சிறுபான்மையின மக்களின் தலைவர்கள், மகாதேவாவின் தலைமையில் 1933 ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் திகதி கொழும்பு சாகிராக் கல்லூரியில் சிறுபான்மையின மக்களின் மகாநாடொன்றை நடத்தினர். தம்முடைய உரிமைகளுக்காக மட்டும் போராடாமல் சிறுபான்மையினமான முஸ்லிம்களின் உரிமைகளுக்காகவும் போராட முன் வந்தனர் தமிழ்த் தலைவர்கள்.

1931ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெறாதிருந்த பொதுத்தேர்தலை 1934 ஆம் ஆண்டு நடத்துவதென அரசாங்கம் முடிவெடுத்தது. இத்தேர்தலில் செல்வதுரை, பொன்னம்பலம், மகாதேவா, நடேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள். இத்தேர்தலில் போட்டியிட்டவர்கள் பணம் செலவு செய்யும் தகைமை உடையவர்களும் உயர் சாதியைச் சேர்ந்தவர்களும், பெரும் குடும்பப் பரம்பரையைச்சேர்ந்தவர்களுமே. வெற்றி பெற்ற நால்வரில் மூவர் பொன்னம்பலம் ராமநாதனின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். யாழ்ப்பாணத்துத் தமிழர் சமுதாயத்தின் பிற்போக்குத் தன்மையையே இது காட்டுகிறது. சாதி, குடும்ப ஆதிக்கத்தைப் பாமர மக்களால் மீற முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1934ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்துத் தமிழ் பிரதிநிதிகள் அரசசபையில் சேர்ந்த பிறகு, சிங்களவருக்கும் தமிழருக்குமிடையே இருந்த நேச உறவு குறைந்து வேற்றுமை தலை தூக்க ஆரம்பித்தது. மூன்று முக்கிய பிரச்சினைகள் இவ்வேற்றுமை வளர்வதற்குக் காரணமாயமைந்தது. அவையாவன, அரசியல் சீர்திருத்தம், அரசாங்க பணம் செலவிடுதல், அரச உயர் பதவிகளுக்கான நியமனங்கள். முதலாவது பிரச்சினையான அரசியல் சீர்திருத்தம், அடுத்த இரண்டு பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டிருந்ததால் இப்பிரச்சினையை உணர்ச்சிவசப்படாமல் மிகவும் நிதானத்துடன் அணுக வேண்டும் என்று தமிழ் அங்கத்தவர்கள் கருதினார்கள். அரசியல் சீர்திருத்தத்தில் ஏனைய சிறுபான்மை அங்கத்தவர்கள் தமிழ் அங்கத்தவர்களுடைய கருத்துக்களோடு ஒத்துப் போனார்கள். இது பற்றி “வட மாகாணத்து அங்கத்தவர்கள் அரச சபைக்கு வந்ததால் அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமான கோரிக்கைகள் பின்தள்ளப்பட்டன. சிறுபான்மையின மக்களின் பிரதிநிதிகள், ‘இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படுமானால், சிறுபான்மையின மக்களின் உரிமைகளைப் பெரும்பான்மையின மக்கள் புறக்கணிப்பு செய்யலாம் என்ற பயமே இதற்குக் காரணமாயிருக்கலாம்” என்று லண்டன் ஸ்பெக்டேட்டர் என்ற பத்திரிக்கை கூறியது. அடுத்த பிரச்சினையான ‘அரசாங்க பணம் செலவிடுதலைப்’ பற்றிய விவாதத்தில் பௌத்த கோயில்களுக்கும், பௌத்த ஆலயங்களுக்கும் அதிகமாகப் பணம் செலவிடப்படுகிறது” என்ற தமிழர்களின் கருத்தை சோல்பரி குழுவினரும் ஏற்றுக்கொண்டதாக அவர்களின் அறிக்கை கூறுகிறது. சோல்பரி குழுவினருக்குத் தமிழர்கள் சமர்ப்பித்த அறிக்கையில் “சட்டம் இயற்றுதலில் வேறுபாடுகள் இல்லையென்றாலும், சட்டத்தை அமுல் நடத்துவதில்தான் தமிழ் சமூகத்திற்கு ஓரவஞ்சகம் செய்யப்படுகிறது என்ற கருத்தைப் பற்றிக்கூறும்போது சோல்பரிக்குழுவினர் பின்வருமாறு கூறுகின்றனர்.”அரச சபையில் சிங்கள அங்கத்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையாக இருப்பதன் காரணமாகவும், நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட சபைகளுக்கு அரச உத்தியோகத்தர்கள் நியமனங்களில் உள்ள அதிகாரம் காரணமாகவும், உள்நாட்டு விவகாரம், விவசாயம், பொதுத்திட்ட வேலைகள், கல்வி, வைத்தியத்துறை, தொழில்வாய்ப்பு, பிரதேச நிர்வாகம் ஆகிய துறைகளில் சிங்களவருக்கு அதிகமான பாரபட்சத்தையும் தமிழர்களுக்கு அநீதியான ஓரவஞ்சகத்தையும் காண்கிறோம். மேலும் 1938ஆம் ஆண்டில் கூட அரசாங்க நியமனங்களில் இந்த வேறுபாட்டை நாம் காண்கிறோம். இந்த ஆண்டில் 6002 அரசாங்க உயர் பதவி நியமனங்களில் சிங்களவருக்கு 3236 நியமனங்கள் கிடைத்த வேளையில் தமிழர்களுக்கு 1164 நியமனங்களே கிடைத்தன. அரசாங்க இலிகிதர் சேவைக்கு நியமனங்கள் செய்யப்பட்டதில் இந்த வேறுபாட்டை நாம் காண்கிறோம் எனவே இவ்விரு சமூகங்களுக்கிடையேயும் இன வேற்றுமை தோன்றுவதற்கு இந்தஅரச நியமனங்களே காரணம் என நாம் கருதுகிறோம்'' என்று சோல்பரி குழுவினர் தமது அறிக்கையில் கூறுகின்றனர். தமிழர்களுடைய சந்தேகத்தைப் பிரதிபலிக்குமுகமாக அரசசபையில், மகாதேவா, "சிங்கள பெரும்பான்மையின மக்கள் தமிழர்கள் இந்நாட்டிலிருந்தே விரட்டப்படவேண்டும் என்ற சந்தேகத்தைத் தமிழர்கள் கொண்டிருக்கின்றனர். எனவே சிறுபான்மையின மக்களின் பயத்தை ஊர்ஜிதம் செய்யும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டாது என நம்புகிறோம்'' என்று கூறினார்.

அரசாங்க உத்தியோக நியமனங்களில் தமிழர்களுக்குச் செய்யப்படும் இவ்வோர வஞ்சத்தினை எதிர்த்து சில சிங்கள அங்கத்தவர்களும் குரல் எழுப்பினார்கள். முக்கியமாக குணசிங்காவும், விக்கிரமநாயக்காவும் அரசாங்கத்தின் இக்கொள்கையை எதிர்த்தார்கள். ஒரு சமூகத்திற்கு மாத்திரமே அரசாங்க உத்தியோக நியமனங்கள் செய்யப்படுவதால் இன வேற்றுமை வளர்வதற்கு அரசாங்கமே காரணம் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றச்சாட்டை நான் அரசாங்கத்தில் சுமத்துகிறேன்" என்று ஏ.ஈ. குணசிங்க அரசசபையில் கூறினார். "பெரும்பான்மையின சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் உயர் பதவியில் இருக்கும்போது தனது நிர்வாகத்தின் கீழ் ஏற்படும் வெற்றிடங்களைத் தனது சமூகத்திலுள்ளவர்களைக் கொண்டே நிரப்பும் பழக்கத்தையும் நாம் காண்கிறோம்" என்று விக்கிரமநாயகா கூறினார். அரச நியமனங்களில் மாத்திரமல்ல ஏனைய துறைகளிலும் இவ்வோர வஞ்சகம் காட்டப்பட்டது. முக்கியமாக, விவசாயத்துறையிலும், பொதுநலப்பணிகளிலும் இவ்வேறுபாட்டைக் காண்கிறோம். "டி. எஸ். சேனாநாயக்காவின் விவசாயக் கொள்கை, சிங்கள விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. மத்திய மாகாணத்திலும், வடமேற்கு மாகாணத்திலும், அவர் கடைப்பிடித்த குடியேற்றத்திட்டங்களும், விவசாயிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டமும், சிங்கள விவசாயிகளுக்கு சமூகத்தில் உயர்ந்த ஸ்தானத்தையும், நிலச்சொந்தக்காரர்கள் என்ற அந்தஸ்தையும் கொடுத்தது" என்று ஜேன்றசல், 'இனவாத அரசியல்' என்ற தனது நூலில் கூறிகிறார். 1900க்கும் 1931க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அரசாங்கம் நீர் பாசன வேலைகளுக்கு செலவு செய்த தொகையில் 50% வட மாகாணத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் செலவு செய்தது. ஆனால் 1931ஆம் ஆண்டிற்குப் பிறகு, 19% விகிதமே இம்மாகாணங்களுக்கு செலவிடப்பட்டது. தமிழ் அங்கத்தவர்கள் மாத்திரமல்ல சில சிங்கள அங்கத்தவர்களும் சேனாநாயக்காவின் இக்கொள்கையைக் கண்டித்தார்கள்.

அரசாங்கத்தின் அரச பதவிகளுக்குரிய நியமன்ங்களின் பாரபட்சப்போக்கினாலும், டி.எஸ். சேனாநாயக்காவின் விவசாய காணி அபிவிருத்தி குடியேற்றத்திட்டங்களினாலும், பாதிக்கப்பட்ட சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகளைத் தமிழ் உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய அதே வேளையில் அரசாங்கத்தின் இக் கொள்கைகளினால் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினமாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களின் பிரச்சினைகளை, முக்கியமாக, கிழக்கு மாகாண முஸ்லிம் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட அநீதியை, எதிர்த்து அன்றைய முஸ்லிம் பிரதிநிதிகள் அரசசபையில் வாதாடினார்கள், என்பதற்கு அரசசபை விவாதங்களில் எவ்வித ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை. அன்று முஸ்லிம் அரசியல் தலைவர்களால் அனாதைகளாக, ஆதரவற்றவர்களாக விடப்பட்ட முஸ்லிம்கள் இன்று கல்வியிலும், பொருளாதாரத்திலும் அரசாங்க உயர்பதவி வகுப்பதிலும், பின் தங்கியவர்களாக இருப்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், முஸ்லிம் சமூகங்களில் தோன்றிய இன உணர்ச்சி

மேல்நாட்டு அரசியல் சித்தாந்தமான ஜனநாயகம் என்ற தத்துவத்தை, சாதி, சமய, மொழி அடிப்படையில் பிளவு பட்டிருக்கும் கீழத்தேய நாடுகளில் திணிக்கும் போது கொள்கை அடிப்படையில் மக்கள் பிரியாமல், இன அடிப்படையில் பிரிவதை நாம் காண்கிறோம். மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஓர் ஆட்சி நிறுவப்படும்போது, பெரும்பான்மையினம் என்றைக்கும் நிரந்தரமான ஆட்சியை நடத்துபவர்களாகவும், சிறுபான்மை மக்கள் எப்போதும் எதிர்க்கட்சியினராகவும் பிரிவதை நாம் பார்க்கிறோம். "பொதுசன வாக்குரிமை மூலம் அரியாசன அந்தஸ்தைப் பெற்ற சிங்களத்தலைவர்களை அவர்களுடைய நிலையிலிருந்து எக்காரணத்தைக்கொண்டும் அகற்ற முடியாது" என்று ஜேன்றசல் கூறுகிறார். முதலாவது உலக மகாயுத்தத்தின் முடிவில் அமெரிக்க ஜனாதிபதி "மக்கள் தம்முடைய அரசாங்கத்தைத் தாமே முடிவு செய்ய வேண்டும், என்ற ஓர் உன்னதமான கருத்தை வெளியிட்டபோது, இக்கருத்தை நாம் மேலோட்டமாகப் பார்க்கும்போது அது ஒரு சிறந்த கருத்தாகத் தென்பட்டாலும், மக்கள் என்பவர் யார், என்று யாராவது முடிவு செய்யும் வரையில் மக்களால் இப்படியொரு முடிவை எடுக்கமுடியாது" என்று சர். ஐவர் ஜெனிங்ஸ் கூறுகிறார். இலங்கையிலும் அரசியல் அதிகாரத்தைப் பெற்ற பெரும்பான்மையினத் தலைவர்கள், 'மக்கள் யார்' என்ற முடிவை எடுத்தார்கள். சிறுபான்மையின மக்களாகிய இந்தியத் தமிழர்கள் இம் 'மக்கள்' என்ற கூட்டத்திலிருந்து அகற்றப்பட்டார்கள். சித்தன்கேணியில் ஓர் அரசியல் கூட்டத்தில் பேசும் பொழுது இளைஞர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான பாலசுந்தரம், யாழ்ப்பாணத்து ஜனநாயகத்தைப் பற்றிக்கூறும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒரு சிலரின் நன்மைக்காக' தந்திரசாலிகளால் நடாத்தப்படும் அறிவிலிகளின்,'' அரசாங்கம் என்று கூறினார். இன உணர்வுக்கு ஆளாகிய தமிழ் மக்கள் இன ஒற்றுமைக்காகப் பாடுபட்ட யாழ்ப்பாணத்து இளைஞர் காங்கிரஸ் தலைவர்களையும், மக்களின் நலனுக்காக சிறைவாசம் சென்ற சமசமாஜக்கட்சித் தலைவர்களைச் சிங்கள மக்களும் ஒதுக்கிவிட்டு, சாதி, சமயம், மொழி என்ற பெயரால் ஒருவரையொருவர் கொன்று அழிவுப் பாதையில் செல்வதைக் காண்கிறோம்.

இனவாத அரசியல் ஒரு நாட்டுக்குக்கேடு விளைவிக்குமே ஒழிய நன்மைபயக்காது. பல்லினம் வாழும் ஒரு நாட்டில், ஓரினம் இனவுணர்வின் அடிப்படையில் செயலாற்றும் பொழுது ஏனைய இனங்களிலும் அதன் எதிரொலி கேட்கும். பெரும்பான்மையினம், டொனமூர் அரசியல் அமைப்பு காலத்தில் இனவாத அரசியலைக் கடைப்பிடித்ததனால், தமிழ் மக்களிடையே தமிழ் காங்கிரஸ் தோன்றக் காரணமாயிருந்தது. தமிழர்களும் இனவாத அரசியலைக் கடைப்பிடித்ததனால், தமிழ் மக்கள் எத்தனையோ பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இன்று முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பெரும் பிரச்சினை, பெருப்பான்மையினம் கடைப்பிடிக்கும் இனவாத அரசியலே. முஸ்லிம்கள் இலங்கைத் தமிழர்களைப் போலவோ இந்தியத் தமிழர்களைப் போலவோ ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் மட்டும் வாழவில்லை. இலங்கையின் பல பாகங்களிலும் பரந்து வாழ்கிறார்கள். கிறிஸ்தவர்கள் தம்முடைய சமயத்தைப் பின்பற்றும் அதே வேளையில் ஏனைய சமூகங்களுடன் ஒன்றிணைந்து வாழ்கிறார்கள். அரசியலிலும் அவர்களால் தனித்தியங்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. சிங்கள மொழி பேசும் கிறிஸ்தவர்கள் சிங்கள சமூகத்துடனும், தமிழ்மொழி பேசும் கிறிஸ்தவர்கள் தமிழர்களுடனும் இணைந்து விட்டதைக் காண்கிறோம். முஸ்லிம்களால் அப்படிச் செய்யமுடியாது. முஸ்லிம்களுக்கும், பிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தவர்களுக்குமிடையே ஓர் அடிப்படை வித்தியாசம் இருக்கிறது. முஸ்லிம்களுடைய வாழ்க்கையில் மத வாழ்க்கையும், அரசியல் வாழ்க்கையும், சமூக வாழ்க்கையும் – பொதுவாக ஒரு முஸ்லிமுடைய அன்றாட வாழ்க்கையே – இஸ்லாமிய கோட்பாட்டிலிருந்து தோன்றியதுதான். பிற சமயத்தவரிடம், சமய வாழ்க்கை வேறு, அரசியல் சமூக வாழ்க்கை வேறு இவைகளுக்கிடையே ஒன்றோடொன்று சம்பந்தமில்லை. சாந்த அக்வைனாளின் சீசருக்கு ஆற்ற வேண்டிய பணியை சீசருக்கும், ஆண்டவனுக்கு ஆற்ற வேண்டிய பணியை ஆண்டவனுக்கும் செய்ய வேண்டுமென்ற" தத்துவத்தை முஸ்லிம்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. இங்கே அக்வைனாஸ் மக்களின் வாழ்க்கையை இரு வேறு பிரிவாகப் பிரிக்கிறார். முஸ்லிம்களுடைய வாழ்க்கை முழுமையானது. சமய வாழ்க்கையிலிருந்து பிற வாழ்க்கையை பிரிக்க முடியாது. இஸ்லாமிய வாழ்க்கை தான் எல்லாமே. இஸ்லாம்தான் அடிப்படை. எனவே முஸ்லிம்கள் ஏனைய சமூகங்களோடு ஒன்றிணைய முடியாது. பிற சமயத்தவர்களுடைய பகைமையையோ, வெறுப்பையோ, பொறாமையையோ வளர்க்காமல் சமரச முறையில் வாழப் பழகியதனாற்றான் முஸ்லிம்கள் இன்று இலங்கையிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் சமாதானத்துடனும் சௌஜன்யத்துடனும் வாழ்ந்து வருகிறார்கள். இதனால் தமது உரிமைகளை விட்டுக் கொடுத்து அடிமைகளாக வாழ வேண்டுமென்பதல்ல. தம்முடைய சமுதாய ஒற்றுமையின் சக்தியில் நின்று உரிமைகளுக்காகப் போராட வேண்டும்.

முஸ்லிம்கள் மொழியால் வேறுபட்டாலும் ஒரே கலாசாரத்தைப் பின்பற்றுபவர்கள். தம்முடைய இஸ்லாமிய தனித்துவத்தைத் காப்பாற்ற முடியவில்லை என்றால் இஸ்லாமிய வாழ்க்கையையே மறந்து விட வேண்டும். ஆகவே முஸ்லிம்கள் எப்பிரதேசத்தில் வாழ்ந்தாலும் அவர்களுடைய பிரச்சினைகளில் ஓர் ஒற்றுமையை காண்கிறோம். இலங்கை முஸ்லிம்களின் நிலைமையை நாம் யதார்த்தமாக பார்ப்போமானால் இலங்கையின் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகங்களிலும், ஏனைய சமூகத்தவர் மத்தியிலும் அவர்கள் வாழ்வதைப் பார்க்கிறோம். அதுவும் எல்லாப் பகுதிகளிலும் சிறுபான்மை இனமாகத்தான் வாழ்கிறார்கள். 1993ஆம் ஆண்டு வெளியான மத்திய வங்கியின் புள்ளி விவரங்களின்படி கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் மட்டும்தான் முஸ்லிம்கள் 41.5% தசமாக இருக்கிறார்கள். மட்டக்களப்பு மாவட்டத்திலும், திருகோணமலை மாவட்டத்திலும் கூட முறையே 23.9% மாகவும், 29% மாகவும் வாழ்வதைப் பார்க்கிறோம். மன்னாரில் 26.6% மாக வாழ்ந்த முஸ்லிம்களில் இன்று அப்பிரதேசத்தில் எத்தனை பேர் வாழ்கிறார்கள் என்று யாராலும் கூறமுடியாது. மத்தியவங்கியின் இப்புள்ளி விபரங்கள் 1981ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. இக்கணக்கெடுப்பின்படி 22 மாவட்டங்களில் 4 மாவட்டங்களில் மாத்திரமே 20% தசத்துக்குக் கூடுதலாக முஸ்லிம்கள் இருக்கிறார்கள். இந்த நிலையில் முஸ்லிம்கள் எப்படி ஒரு தனிச்சக்தியாக மாறமுடியும்? அவர்களுடைய பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து ஒற்றுமையைக் காண்பதில்தான் ஒரு தனிச் சக்தியாக மாறமுடியும். முஸ்லிம் அரசியல் தலைவர்கள் முஸ்லிம்களுடைய பிரச்சினைகளை அலட்சியம் செய்ததனாற்றான் இன்று முஸ்லிம்களிடையே ஒரு கசப்புணர்ச்சி வளர்ந்திருக்கிறது. இதற்குப் பரிகாரம் பெரும்பான்மையினத்தின் மேல் வெறுப்புணர்ச்சியை வளர்ப்பதல்ல.

முஸ்லிம்களும் இன உணர்ச்சிக்கு அடிமையாகி இனவாத அரசியலைக் கடைப்பிடிப்பார்களேயானால், அம்பாறை மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய 21 மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்களின் கதி என்னவாகும்? முஸ்லிம்களுக்கு அநீதி நடத்தப்பட்ட சமயங்களிலெல்லாம், எத்தனை தலைவர்கள், அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்து வாதாடியிருக்கிறார்கள்? பள்ளிவாசல்களுக்குள்ளேயே தொழுது கொண்டிருந்த முஸ்லிம்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் அன்றாட வேலைகளை முடித்துக்கொண்டு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த கிராமத்து முஸ்லிம்கள், துண்டு துண்டாக வெட்டிக் கொல்லப்பட்டார்கள். அவர்களுடைய மையத்துகளைப் பார்வையிடுவதில்தான் எத்தனைபேர் புகழ் பெற ஆசைப்பட்டார்கள். முஸ்லிம்களுக்குப் பள்ளி வாசல்கள் கட்ட முடியாது. முஸ்லிம் பாடசாலைகள் திறக்க முடியாது.இஸ்லாமிய நிலையங்கள் ஆரம்பிக்ககூடாது. பள்ளி வாசல்களில் 'அதான்' ஒலிக்கக்கூடாது அவர்கள் பெருநாளில் கூட 'குர்பான்' செய்யக்கூடாது.முஸ்லிம்கள் இஸ்லாமியப் பெயர்களை வைக்கக்கூடாது. முஸ்லிம்கள் தம்முடைய மூதாதையர் இந்த நாட்டில் பிறந்தவர்கள் என்று நிரூபிக்க முடியாவிட்டால் தம் காணிகளைக்கூட பதிவு செய்ய முடியாது, (இது இப்போது திருத்தப்பட்டுள்ளது) என்ற எத்தனையோ கட்டுப்பாடுகள் இன்று முஸ்லிம்களை எதிர்நோக்கியுள்ளன. தேர்தல் காலங்களைத் தவிர முஸ்லிம்களுடைய பிரச்சினைகளில் எத்தனைத் தலைவர்கள் அக்கறை காட்டுகிறார்கள்? ஜும்மா தொழுகை தொழுது விட்டுக்கூட நிம்மதியாகத் தங்கள் வீடுகளுக்குச் செல்ல முடியாது. காக்கிச் சட்டைக்காரனின் துப்பாக்கி எதிரில் நிற்கிறது. முஸ்லிம்கள் பள்ளிவாசல்களுக்குச் செல்வது 'அல்லாஹ்வைத் தொழுவதற்காகவேயின்றி கிளர்ச்சி செய்வதற்கல்ல' என்ற உண்மையைக்கூட ஆட்சியாளர்களுக்கு எடுத்துரைக்கும் சக்தி கூட இல்லாத வாய் மூடி மௌனிகள் தாம் எம்மிடையே இருக்கின்றனர். ஓர் அடிமை சமுதாயத்தை எப்படியும் அடக்கியாளலாம் என்று இறுமாப்புக் கொண்ட அதிகார வர்க்கத்துக்கு ஒரு சிலர் ஒத்தூதுவதினாற்றான் இன்று அநாதரவாக விடப்பட்ட முஸ்லிம்களிடையே இந்த கசப்புணர்ச்சி வளரக் காரணமாயிருக்கிறது. வரலாறு ஒரு மாபெரும் ஆசிரியன். வரலாற்றிலிருந்துதான் நாம் சில உண்மைகளை அறிய முடியும். ஏனைய சிறுபான்மை சமூகங்களின் நிறைவுகளிலும் குறைவுகளிலிருந்தும் நாம் சில பாடங்களைக் கற்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொனமூர் அரசியல் திட்டத்தில் இலங்கை மக்களுக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதால் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் சிங்களவர் ஆட்சி செய்யும் உரிமையைப் பெற்றார்கள். தம்முடைய சமூகத்தின் உயர்வைத்தான் அவர்கள் நினைத்தார்கள். இது தான் யாதார்த்தநிலை. இன அடிப்படையில் பார்க்கும்போது பெரும்பான்மை இனத்தக்குத்தான் ஆட்சி செய்யும் உரிமை இருக்கிறது. என்றாலும் வர்க்க அடிப்படையில் நோக்கும்போது இன வேற்றுமையைத் தாண்டிய ஒரு நிலையில் நின்று மக்கள் செயல்படும்போது அங்கே பெரும்பான்மை, சிறுபான்மை என்ற வேறுபாடு மறைந்து கொள்கைதான் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த யதார்த்த நிலையை சிறுபான்மை மக்கள் உணர்ந்தால் தான் ஜனநாயக அமைப்பில் தமக்கும் பங்குண்டு என்ற உண்மையை விளங்குவார்கள். இந்த நிலையை உணராமல், இனவாத அரசியலைத் தூக்கிப் பிடித்ததால் தான் இன்று தமிழர் சமுதாயம் பல பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது.

யாழ்ப்பாணத்துத் தமிழ் அங்கத்தவர்கள், யாழ்ப்பாணத்து விவகாரங்களில், யாழ்ப்பாணத்துத் தமிழர்களைத் தவிர ஏனைய இலங்கை மக்களுக்குப் பேசும் உரிமை இல்லை என்ற நிலையிலிருந்தே செயல்பட்டனர். அரசாங்கத்திற்கும் இதில் தலையிட முடியாது என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர்.அன்றைய அரசாங்கத்தின் பொது மராமத்து அமைச்சர் மாக்கான் மார்க்கார், புங்குடிதீவுக்கு ஒரு மேடைப்பாதை அமைக்க முடிவு செய்த போது இம் முடிவை ஏற்க மறுத்த யாழ்ப்பாணத்துத் தமிழ் அங்கத்தவர்கள் இம்முடிவைத் தாம் தான் எடுக்க வேண்டும் என்று கூறினர். ஆனால் அவர்களிடம் ஒற்றுமையிருக்கவில்லை.

மகாதேவாவும், ஆனந்தனும், நடேசனும், பொன்னம்பலமும், மேடுபாதை பூனகரிக்குத்தான் அமைக்கப்படல் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வாதாடியபோது, செல்வதுரை புங்குடிதீவுக்குத்தான் அமைக்கப்பட வேண்டும் என்று வாதாடினார். மேடுபாதைப்போர் என்ற இவ்விவாதத்தில் ஒற்றுமையேற்படாததால் இது தள்ளிப்போடப்பட்டது. இதேபோலத்தான் யாழ்ப்பாணத்துத் துறைமுகங்கள் திருத்தப்பட்டுத்திரும்பவும் இயங்க வேண்டும் என்ற விவாதத்தில் யாழ்ப்பாணத்து நகரமா அல்லது பருத்தித்துறையா அல்லது காங்கேசன்துறையா என்பதில் தமிழ் அங்கத்தவர்களிடையே ஒற்றுமையேற்படாத காரணத்தினால் இதுவும் பிற்போடப்பட்டது. யாழ்ப்பாணத்து விவகாரங்களில் வேறுயாரும் தலையிடக்கூடாது என்ற கருத்து இவ்விவாதத்தில் தெரிவிக்கப்பட்டதால், ஜி.கே. டபுள்யு. பெரேரா, "யாழ்ப்பாணம் இந்நாட்டினின்றும் வேறுபட்ட ஓர் அங்கமாகவும், இதில் எமக்கு சம்பந்தமில்லை என்ற கருத்துப்படி செயல்பட நாம் பழகிக் கொண்டோம். இப்பழக்கத்தை நாம் இனிமேலும் கடைப்பிடிப்பது நல்லதல்ல" என்று கூறினார். "யாழ்ப்பாணத்து அங்கத்தவர்களிடையே ஒற்றுமையில்லாத பட்சத்தில் வடக்கும் தெற்கும் எப்படி ஒற்றுமையாயிருக்க முடியும்" என்ற கேள்வியை சபையில் மார்க்கான் மார்க்கார் எழுப்பினார். யாழ்ப்பாணத்து விவகாரங்களில் அரசாங்கத்திற்கு ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க முடியாமற்போனதை ஜி. ஜி. பொன்னம்பலம் "யாழ்ப்பாணத்து மக்களுக்கு எதிராக இவ்வரசாங்கம் செயல்படுகிறது" என்று குற்றஞ்சாட்டினார். யாழ்ப்பாணத்து இளைஞர் காங்கிரஸ் தலைவர்களின் ஒத்துழையாமை இயங்கத்தினாலும் யாழ்ப்பாணத்து அங்கத்தவர்களின் ஒற்றுமையின்மையாலும், யாழ்ப்பாணத்து மக்களுக்கு சாதாரணமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகள் கூட கிடைக்காமற் போய்விட்டது.

தமிழ் தலைவர்கள் சிங்களத் தலைவர்களை எதிர்ப்பதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. பிரித்தானிய ஆட்சியில், சிங்களவரோடு சம அந்தஸ்தில் வாழ்ந்த தமிழ் மக்கள், டொனமூர் அரசியல் அமைப்புக்குப்பின் சம அந்தஸ்திலிருந்து தள்ளப்பட்டு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபான்மையினமாகக் கணிக்கப்பட்ட அவமானத்தை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இந்நிலையேற்படுவதற்குரிய காரணங்கள் யாவை என்பதை இனி ஆராய்வோம்.

முதலாவதாக, "பிரித்தானிய ஆட்சியில் தம்முடைய எண்ணிக்கைக்கும் அதிகமானதொரு செல்வாக்கைத் தமிழர்கள் பெற்றிருந்தனர்" என்று டொனமூர் குழுவினர் கூறினர். கல்விகற்றவர்களுக்கு மாத்திரம் தான் வாக்குரிமை என்றிருந்த காலத்தில் கல்வி கற்ற தொகுதியில் 1918 ஆம் ஆண்டில் 40% விகிதமாகத் தமிழர்கள் இருந்தனர். இதனால் அவர்களது செல்வாக்கும் அதிகமாகவே இருந்தது. இதனாற்றான் பொன். இராமநாதன் இத்தொகுதியின் பிரதிநிதியாக வர முடிந்தது. ஆங்கிலம் கற்றோரின் தொகையை வைத்துக்கணித்தால் தமிழர்கள் பெரும்பான்மையினமாகவே கணிக்கப்பட்டிருப்பர். டொனமூர் அரசியல் திட்டத்தில் சர்வஜன வாக்குரிமை இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்டதால், எண்ணிக்கையில் கூடுதலாக இருந்த சிங்களவருக்கே அரசியல் செல்வாக்கும், அரசியல் அதிகாரமும் சென்றது. இந்த யதார்த்தநிலையை தமிழ்த் தலைவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. வாக்காளர் தொகையிலிருந்து கணிக்கும்போது "தமிழர்கள் மிகவும் சிறிய ஒரு சிறுபான்மையினமாக மாற்றப்பட்டனர்" என்ற செல்வதுரையின் கூற்று இப்புதிய யதார்த்த நிலையைத் தமிழ்த் தலைவர்களால் உணரமுடியவில்லை என்பதைக் காட்டுகிறது. மாறும் சூழ்நிலைக்கேற்ப ஒரு சமூகம் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும். அப்படி மாற்றிக்கொள்ளாத பட்சத்தில் அச்சமூகம் பலவித கஷ்டங்களை எதிர் நோக்க வேண்டிவரும்.

இரண்டாவதாக சைவ சித்தாந்தத்தின் தத்துவத்தில் தோன்றிய சாதி அடிப்படையைக் கொண்ட ஒரு சமுதாய அமைப்பு முறை ஜனநாயக தத்துவத்திற்கு முரணாக இருந்தது. சர்வஜன வாக்குரிமை காரணமாக சமுதாயத்தைத் தம் கட்டுப்பாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்த உயர்ந்த சாதியினரான வெள்ளாள சாதியினர் தாம் இது காலவரை அனுபவித்து வந்த சலுகைகளை இனி தாழ்த்தப்பட்ட சாதியினரும் அனுபவிக்கப்போகிறார்களே என்ற பீதியினால் இப்புதிய யதார்த்த நிலையைத் தமிழ்த் தலைவர்களால் ஏற்கமுடியவில்லை. "தம்முடைய சமுதாயத்திலேயே ஒரு குறிப்பிட்ட பகுதியினரைத் தம்மோடு சம அந்தஸ்துள்ளவர்கள் என்று ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையில்லாத உயர் சாதியைச் சேர்ந்த இத்தலைவர்கள் பெரும்பான்மை சமூகத்தின் அரசியல் செல்வாக்கை எப்படி ஏற்றுக்கொள்வார்கள்?" என்று கேட்கிறார் ஜேன் றசல்.

கடைசியாக சமய-மொழி அடிப்படையில் வேறுபட்ட இரு சமூகங்களிடையே ஜனநாயக முறை புகுத்தப்பட்டவிடத்து, எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் சமூகம் நிரந்தர அரசாங்கமாகவும், எண்ணிக்கையில் குறைந்த சமூகம், நிரந்தர எதிர்கட்சியாகவும் மாறுவதைக் காணலாம். எனவே இவ்விரு சமூகங்களிடையேயும் முரண்பாடு வளர்வதைத் தடுக்க முடியாது. இந்த யதார்த்த நிலையைத் தமிழ்த் தலைவர்கள் உணர்ந்திருந்தால் இன அடிப்படையில் அரசியலை அணுகாமல் கொள்கையடிப்படையில் அணுகியிருந்தால் இன்றைய இனப்போராட்டத்தைத் தவிர்த்திருக்கலாம். இலங்கை வாழ் முஸ்லிம்களும் தம்முடைய யதார்த்த நிலையை உணர்ந்து செயலாற்றாவிட்டால் பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டிவரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவருக்கும், தமிழர்களுக்குமிடையே முரண்பாடு வளர்தல்

இனவாத அரசியல் இலங்கையில் வளர்வதற்கு ஒரு முக்கிய காரணம் டொனமூர் அரசியல் அமைப்பே. டொனமூர் அரசியலமைப்பு அரசியற் கட்சிகள் தோன்றுவதற்கு தடையாக இருந்தன என்பது பொதுவான அப்பிப்பிராயம். குழு அமைப்பு முறையில் உட்கிடையாக இருந்த பெரும் குறை அரசியல் கட்சிகள் இல்லாமையே. "குழு அமைப்பு முறையைவிட டொனமூர் அரசியல் யாப்பில் தான் இக்குறை இருந்தது" என்று ஜி.ஜி. பொன்னம்பலம் கூறினார். அரசியல் அதிகாரத்தைக்கைப்பற்றும் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்ட ஓர் அரசியல் கட்சி தன்னுடைய அங்கத்தவர்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும். இதற்கு உதாரணமாக லண்டன் மாவட்ட கௌன்சிலை உதாரணத்திற்குக் காட்டினார். அவர் மேலும் "ஓர் அரசியல் கட்சியின் அமைப்பு முறையின் அத்திவாரம் ஓர் அரசாங்கத்தின் அமைப்பில் தங்கியிருப்பதல்ல. மக்களிடையே இருக்கும் பொருளாதார வேறுபாடுகளும் அச்சமுதாயத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளுமே காரணம்" என்றார்.

ஆனால் அமைச்சர்கள் குழு இதற்கு எதிரான கருத்தைக்கொண்டிருந்தது. குழு அமைப்பு முறை அரசியல் கட்சிகள் வளர்வதை ஊக்குவிக்கவில்லையென்றாலும், அரசியல் கட்சிகள் தோன்றுவதற்கு இவ்வமைப்பு முறையில் உள்ளார்ந்த தன்மைகள் இருக்கின்றன என்ற கருத்தைக் கொண்டிருந்தது. கபினட் அரசியலைமைப்பு முறை இதனின்றும் தோன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையுடையது என்று கூறி, பாராளுமன்ற அரசியல் அமைப்பு முறையிலான ஓர் அரசியல் அமைப்பு முறை இலங்கைக்கு வழங்க வேண்டுமென்று 'தம்முடைய பிரேரணையில் கூறி நின்றனர். இக்குழு அமைப்பு முறையின் மூலம் அங்கத்தவர்கள் பாராளுமன்ற அரசியலமைப்பை நடத்துவதற்கு வேண்டிய பயிற்சியைப் பெறுகிறார்கள் என்றும் வாதிட்டனர். கவனர் கெல்டிகொட்டும் 1938ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்கு அனுப்பிய 'அரசியல் சீர்திருத்த மனு' என்ற தனது அறிக்கையில் அமைச்சர்களின் அரசியல் சீர்திருத்த, 'கோரிக்கைக்கு' விளக்கம் தெரிவிக்கையில் பின்வருமாறு எழுதினார். "கபினட் முறையை இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் அமைச்சுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும் ஏற்படுவதால் இந்நாட்டு மக்கள் இரு அரசியல் கட்சிகளாகப் பிரிவார்கள் என்று நம்புவதற்கு நான் குருடனல்ல. அப்படிக்கட்சிகள் தோன்றுமிடத்தே அவை இனவாத அடிப்படையில் தான் தோன்றும். கபினட் முறையில் அரசாங்கங்கள் அமைக்கப்படுமிடத்து அவை இக்கட்சிகளின் கூட்டிணைப்பு அரசாங்கங்களாகவே இருக்கும். அப்படி கூட்டிணைப்பு அரசாங்கங்கள் அமைக்கப்படுமிடத்து அவைகளிடையே அரசியல் கொள்கையில் ஓர் ஒற்றுமையிருக்க வேண்டும். "இக்கூற்றின் உண்மையை சுதந்திரத்திற்கு பிறகு ஒரே அரசியல் கொள்கையைக் கொண்ட இவ்வினவாதக்கட்சிகளின் கூட்டமைப்பிலுண்டான 'ஐக்கிய தேசியக்கட்சி' என்ற ஓர் அரசியல் கட்சியைத் தோற்றுவித்து ஓர் அரசாங்கத்தை டி.எஸ். சேனாநாயக்கா அமைத்தார். இனவாத அடிப்படையில் தோன்றிய, கரையோர சிங்களவரின் ஆதிக்கத்திலிருந்த 'இலங்கைத் தேசிய காங்கிரஸ்' பௌத்த-சிங்கள மக்களைக்கொண்ட 'சிங்கள மகாசபா', 'கண்டிச் சிங்களப்பேரவை', 'இலங்கைத் தமிழ் காங்கிரஸ்', 'முஸ்லிம் லீக்', 'இலங்கைச் சோனகர் சங்கம்' ஆகிய கட்சிகளின் கூட்டுச்சேர்க்கையினால் ஏற்பட்ட கட்சியே இவ்வைக்கிய தேசியக்கட்சி. இக்கட்சி, அரசாங்கத்தை அமைக்கும்போது பெரும்பான்மையின மக்களின் நன்மைக்காகச் செயல்படும் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்க்க முடியாத உண்மை. பொருளாதார வேற்றுமையின் அடிப்படையில் தோன்றிய லங்கா சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும், சுதந்திரம் கிடைத்த ஆரம்பகாலத்தில் மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தாலும் நாளடைவில் மக்களிடையே இன உணர்ச்சி செல்வாக்கு பெற்றதன் காரணத்தினால் சோஷலிசக் கொள்கையைக் கொண்ட இக்கட்சிகளின் செல்வாக்கு குறைந்தது.

அரசசபையில் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப் பட்டவர்களும், நியமிக்கப்பட்டவர்களும், உயர்வர்க்கத்திலிருந்தோ மத்திய தர வர்க்கத்திலிருந்தோ வந்த காரணத்தினால் அவர்கள் எவ்வினத்தைச் சேர்ந்தவரென்றாலும் அவர்களிடையே சில சந்தர்ப்பங்களில் ஒற்றுமையைக் காண்கிறோம். முதலாவது அரச சபையில் பொருளாதார அடிப்படையில் தோன்றிய மூன்று முக்கிய பிரச்சினைகளைக் காட்டலாம். வருமானவரி, ஏகாதிபத்தியத்திற்குச் சாதகமான சுங்கவரி, மரணவரி ஒழித்தல், ஆகிய இம்மூன்றும் சட்டமாக்கப்படுவதற்கு பிரித்தானிய அரசாங்கம் எடுத்த முயற்சிகளை இன வேறுபாடில்லாமல், அங்கத்தவர்கள் எதிர்த்தனர். இம்மசோதாக்கள் அரசசபையில் சமர்ப்பிக்கப்பட்டபோது பழைய அங்கத்தவர்களான டி.பி. ஜயத்திலக, டி.எஸ். சேனா நாயக்க போன்றோருக்கும் புதிய அங்கத்தவர்களான பண்டார நாயக்கா, பொன்னம்பலம், டாக்டர் விக்கிரமசிங்க போன்றோருக்கு மிடையில் அடிப்படைக்கருத்து வேறுபாட்டை நாம் அவதானிக்க முடிகிறது. பழமைவாதிகளுக்கும், இளையதலை முறையினருக்குமிடையே சபை பிரிவதை நாம் காண்கிறோம். ஜி.ஜி.பொன்னம்பலம் தமிழ் மக்களுக்கு நேரடியான சம்பந்தமில்லாத, டாக்டர் விக்கிரசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட சமூக நலன், மசோதாக்களான முதியோருக்கான இளைப்பாறிய சம்பளம், வைத்தியகாப்புறுதித்திட்டம், வீட்டு வாடகைக் கட்டுப்பாடு, ஆகியவைகளுக்குத் தன்னுடைய ஆதரவைத் தெரிவித்தார். இலங்கைத் தேசிய காங்கிரஸிலும், ஜே. ஆர். ஜயவர்தனா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டட்லிசேனாநாயக்க போன்ற இளைய தலைமுறையினர் பழமைவாதிகளின் கொள்கைகளை எதிர்க்கத் தலைப்பட்டனர். அரசசபையில் பெரும்பாலும் அங்கத்தவர்கள் தங்கள் விருப்பம்போல் மசோதாக்களுக்கு வாக்களித்தனர். அரசியல் கட்சிகள் இல்லாத காரணத்தினால் அவர்களிடையே அரசியல் கொள்கை ஒன்றிருக்கவில்லை. ஒரேயொரு விஷயத்தில் மாத்திரம் சிறுபான்மையின அங்கத்தவர்களிடையே ஒற்றுமையிருந்தது. அரசியல் அதிகாரத்தில் சிறுபான்மையின மக்களுக்கும் தமக்குரிய பங்கு வழங்கப்பட வேண்டுமென்பதில் எல்லா சிறுபான்மையின அங்கத்தவர்களும் ஒற்றுமையாயிருந்தனர். யாழ்ப்பாணத்துத் தமிழ் அங்கத்தவர்கள் அரசாங்க பதவிகளில் தமக்குரிய பங்கு கிடைக்க வேண்டுமென்பதில் ஒற்றுமையாயிருந்தனர். இதைத் தவிர அவர்களும், மசோதாக்களுக்கு வாக்களிக்கையில் தம் விருப்பப்படியே வாக்களித்தார்கள். கிழக்கு மாகாணத்தைப் பிரதிபலித்த தமிழ் அங்கத்தவர்கள் யாழ்பாணத்துத் தொகுதிகளில் வேறுபட்ட தொகுதிகளை பிரதிபலித்ததனால் அவர்கள் கொள்கையடிப்படையில் வேறுபட்டவர்களாகவே இருந்தனர். அவர்கள் அரசாங்க பதவிகளில் அக்கறை காட்டவில்லை. அவர்களுடைய தொகுதி மக்கள் விவசாயிகளாக இருந்தபடியாலும், அத்தொகுதிகளில் கணிசமான அளவு முஸ்லிம்கள் இருந்தபடியாலும், சிங்கள அங்கத்தவர்களோடு ஒத்துப்போவதையே விரும்பினர். எனவே "ஓரிரு தமிழ் அங்கத்தவர்களின் பேச்சுக்களைக் கொண்டு எல்லா தமிழ் அங்கத்தவர்களும் சிங்களவருக்கு எதிராக இருக்கின்றனர் என்ற சில சிங்கள அங்கத்தவரின் கருத்து நியாய மற்றது" என்று ஜேன்றசல் கூறுகிறார்.

இரண்டாவது அரச சபை காலத்திலும் சோல்பரி குழுவினர் முன்னிலையிலும், 'சிறுபான்மையினருக்கு 50 வீத ஆசனங்கள் கொடுக்கப்பட வேண்டும்' என்ற ஜி.ஜி. பொன்னம்பலத்தின் கோரிக்கைக்கு முன்னோடியாக, 1935 ஆம் ஆண்டு முதலாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச சபை காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த கவர்னர் ஸ்டப்ஸ்க்கு, பொன்னம்பலம் சமர்ப்பித்த அறிக்கையில், காலனித்துவ அரசாங்கமும் சிங்களத் தலைவர்களும் அறிவதற்காக தமிழர்களின் குறைகளை எடுத்துக்காட்டினார். அப்பொழுது அவர் தமிழ் பிரதி நிதியாகவோ தமிழ் சமூகத்தின் தலைவராகவோ அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. அவருடைய அறிக்கையில் மூன்று விஷயங்கள் அடங்கியிருந்தன. முதலாவதாக எந்தவொரு அரசியலமைப்பிலும், பிரித்தானிய அரசாங்கத்தின் பிரஜைகளின் பாதுகாப்பிற்காக, கவர்னருக்குத் தனிப்பட்ட அதிகாரங்கள் இருக்க வேண்டும். இரண்டாவதாக, அரசியல் அதிகாரத்தில் எல்லா சமுகங்களுக்கும் சமபங்கு இருக்கவேண்டும். மூன்றாவதாக தமிழர் சமுதாயத்தின் வரலாற்றுப்பின்னணியையும், தற்போதைய அரசியல் முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டு, அரச சபையில் தமிழர் சமுதாயத்திற்குத் தகுந்த பிரதிநிதித்துவம் அளிக்கப்படல் வேண்டும், என்பதே அவை. அன்றைய தமிழர்களின் அபிலாஷைகளை இவ்வறிக்கை காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிச் சிங்கள மந்திரிசபையும், குடும்ப ஆதிக்கமும்

இலங்கைத் தமிழர்களின் தலைமைப் பதவியில் கண் வைத்த ஜி.ஜி. பொன்னம்பலம், சோல்பரி குழுவினர் முன்னிலையில், சிறுபான்மையினத்தவர்களின் பிரதிநிதியாக 50–50 விகிதாசாரப் பிரதிநிதித்துவம் சிறுபான்மையினத்தவர்களுக்கு வேண்டுமென்ற கோரிக்கைக்கு முன்னோடியாக, கவர்னர் ஸ்டப்துக்கு சமர்ப்பித்த மனுவில் மூன்று வேண்டுகோள்களைக் குறிப்பிட்டார் என்று முன்னர் கூறினோம்.

தமிழர்களின் சார்பில் பொன்னம்பலம் சமர்ப்பித்த இம்மூன்று கோரிக்கைகளை நாம் ஆழமாக ஆராயுமிடத்து, அவர்களின் அடிப்படைப் பயம் தெளிவாகிறது. கவர்னருக்குத் தனிப்பட்ட அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை, பிரித்தானிய ஐரோப்பிய சமூகத்தைப் பாதுகாப்பதற்காகவே என்பது மேலோட்டமாகத் தென்பட்டாலும், சிறுபான்மையினங்களையும் அது பாதுகாக்க உதவும் என்ற நம்பிக்கையும் இதில் தொனிக்கிறது. 1931ம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டப்படி "எந்தவொரு மசோதாவும், ஓர் இனத்திற்கோ, ஒரு சமயத்தவருக்கோ, ஒரு சிறுபான்மை சமூகத்தினருக்கோ பாதகமாக அமையுமிடத்து, இதைத் தள்ளுபடி செய்வதற்கு கவர்னருக்கு அதிகாரம் உண்டு" என்ற சட்டம் சட்டப்புத்தகத்தில் இருந்தும் கூட பிரித்தானிய அரசாங்கத்தின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக, பொன்னம்பலம் இப்படியொரு கோரிக்கையை விடுத்திருக்கலாம். ஆனால் அரசாங்கப் பதவிகள் ஐரோப்பியர்களின் ஆதிக்கத்திலிருந்துவிடுவிக்கப்பட்டு, இலங்கையர் மயமாக்கப்படல் வேண்டும் என்ற தமிழர்களின் பொதுவான கொள்கைக்கு இது முரணாகத் தென்படுகிறதல்லவா? இது தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பலத்தின் அரசியல் நடைமுறைத் திறமை.

'தமிழர்களுக்கு, சமபங்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படல் வேண்டும்' என்ற கோரிக்கை, சில வருடங்களுக்கு முன் இலங்கையின் பெரும்பாலான சமூகங்களின் ஒன்றாகக் கருதப்பட்ட தமிழ் சமூகம் திரும்பவும் அதே ஸ்தானத்தைப் பெறவேண்டும்' என்பதையொட்டியே இது சமர்ப்பிக்கப்பட்டது. "1924ம் ஆண்டு அரச அமைப்பில் 32 சதவிகிதமாக அரசியல் அதிகாரம் பெற்றிருந்த சிங்கள சமூகம், டொனமூர் அரசியல் அமைப்பில் 69 சதவிகிதமாக அதிகாரம் பெற்றனர். இதில் 45 சதவிகித அதிகாரத்தைப் பெற்ற கரையோர சிங்களவரின் அதிகாரம், மற்றெல்லா சமூகங்களான கண்டிச் சிங்களவர், இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், மலாயர்கள், இந்தியத் தமிழர்கள், ஐரோப்பியர்கள், ஆகியவர்களின் அதிகாரத்திற்குச் சமமாக இருந்தது." என்று அன்றைய 'மொர்னிங் டைம்ஸ்' என்ற பத்திரிகை கூறுகிறது.

"தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே இருந்த முரண்பாட்டுக்கு முக்கிய காரணம், சிங்களவருக்கு இரண்டு விகிதமும் தமிழர்களுக்கு ஒரு விகிதமும் ஆசனங்கள் இருக்க வேண்டும் என்ற சிங்களவரின் கொள்கையே" என்று நெவின் செல்வதுரை 1922ம் ஆண்டில் நடந்த ஸ்ராவஸ்தி மகாநாட்டில் கூறினார்.

பொன்னம்பலத்தின் பிரதிநிதித்துவத்தில் சமநிலை என்ற கோரிக்கை, சிறுபான்மையினங்களுக்குத் தேர்தல் மூலம் கிடைக்கும் ஆசனங்களின் குறையை ஈடுசெய்யுமுகமாக சிங்களவரின் அரசியல் அதிகாரத்திற்குத் தாக்குப் பிடிக்கும் வகையில் ஓர் அரசியல் அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்பதே. அரச சபையில் நியமனங்கள் மூலமும், சிறுபான்மையின மக்கள் வாழும் பிரதேசங்களில் அதிக தேர்தல் தொகுதிகளை அமைப்பதன் மூலமும், இக்குறையை நிவர்த்தி செய்யலாம் என்பது அவரது வாதமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1936ம் ஆண்டு இரண்டாவது அரச சபைக்கான தேர்தலில் சில முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன. சமய அடிப்படையில் பார்க்கும் போது முதலாம் அரச சபையில் 27 அங்கத்தவர்களாக இருந்த பௌத்தர்கள் 33 ஆகக் கூடினார்கள். 15 ஆக இருந்த கிறிஸ்தவர்கள் 10 ஆகக் குறைந்தார்கள். ஹிந்து அங்கத்தவர்களில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஏழு அங்கத்தவர்கள் இரு நிலைகளிலும் இருந்தனர். இன அடிப்படையில் அவதானிக்கும் போது கண்டிச் சிங்களவர் 10லிருந்து 8 ஆகக் குறைந்தார்கள். கரையோரச் சிங்களவரின் எண்ணிக்கை 28லிருந்து 31 ஆகக் கூடியது. இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 7லிருந்து 8 ஆகக் கூடியது. இரண்டாவது அரச சபையில் ஒரு முஸ்லிம் அங்கத்தவரும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டு முஸ்லிம் அங்கத்தவர்களான ஜாயாவும், 'சர்' ராசிக் பரீதும் (அப்பொழுது அவர் ஏ.ஆர்.ஏ. ராசிக் என்றே அழைக்கப்பட்டார்) அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களே. இதன் பிறகு தனிச் சிங்கள அமைச்சரவை ஸ்தாபிக்கப்பட்டபோது, தமிழர் சமூகத்தால் மிகவும் மதிக்கப்பட்ட துரைஸ்வாமி கூட ஜயத்திலக அமைச்சரவையில் இடம் பெறவில்லை. இத்தனிச் சிங்கள அமைச்சரவையைப் பற்றிக் கூறும்போது, யாழ்ப்பாணத்து சங்கத்தின் தலைவரான டாக்டர் ஐ. தம்பையா, சிங்கள மக்களின் எண்ணிக்கையின் காரணமாக, சிங்களத் தலைவர்களுக்கு அதிகமாக அதிகாரம் கிடைத்தது. கிடைத்த இவ்வதிகாரத்தை அவர்கள் இன்னும் கூட்டுவதற்கே விரும்புகிறார்கள். தனிச் சிங்கள அமைச்சரவை, அவர்களுடைய சதித் திட்டத்தினால் தீட்டப்பட்ட, இனவாத அரசியலின் உச்சிமுகட்டின் பிரதிபிம்பமாக தெரிகிறது" என்று 1937ம் ஆண்டில் கூறினார். (ஹிந்து ஓர்கன் மார்ச் 15) "இனவாதம் அல்லாத அரசியலில், ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை விழுங்கித் தனியாக நிற்கும் ஒரு நிலையைக் காண்கிறோம்" என்று 1937ம் ஆண்டு ஜி.ஜி. பொன்னம்பலம், தன்னுடைய இனவாத அரசியலுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வக்காலத்து வாங்கினார். இலங்கை சர்வ கலாசாலை உபவேந்தராக இருந்த ஐவர் ஜெனிங்ஸ், கூட இத்தனிச் சிங்கள அமைச்சரவையைப் பற்றிக் கூறும் போது "1936ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட தனிச் சிங்கள அமைச்சரவை, நாம் எண்ணிப் பார்க்க முடியாத அளவு இனவாதம் வளர்ந்திருக்கிறதைக் காட்டுகிறது" என்று கூறினார். இத் தனிச் சிங்கள அமைச்சரவையை அமைத்ததன் மூலம் சிங்களத் தலைவர்கள் இக்குழு ஆட்சி முறையின் மூலம் சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகள் பாதுகாக்க முடியாது என்ற உண்மையை நடைமுறையில் நிரூபித்துக் காட்டினார்கள்."

"யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் சிங்களத் தலைவர்களில் அவ நம்பிக்கைக் கொள்வதில் நியாயம் இருக்கிறது என்று சில சமயங்களில் நான் எண்ணியதுண்டு" என்று பிலிப் குணவர்தனா அரச சபையில் கூறினார். சிங்களத் தலைவர்களின் இச் செயலைக் கண்டித்த டாக்டர் என். எம். பெரேராவும் "சிறுபான்மையின மக்கள் ஆத்திரமடைவதற்கு நியாயம் இருக்கிறது" என்று கூறினார். சிங்களத் தலைவர்களின் இவ்வினவாத மமதையைக் கண்டித்த ஜி.ஜி. பொன்னம்பலம், "டொனமூர் அரசியலமைப்பிலுள்ள, இக்குழு ஆட்சிமுறை, இலங்கைத் தமிழர் உட்பட ஏனைய சிறுபான்மையினத்தவர் நாதியற்ற ஓர் அடிமை ஸ்தானத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டனர்" என்று கூறினார்.

தனித்து நிற்பதனால் தமக்கு ஏற்படும் அரசியல் நஷ்டத்தை உணர்ந்த கண்டிச் சிங்களத்தலைவர்கள், கரையோரச் சிங்களவருடன் சேர்வதனால், தமக்கு அரசியல் லாபம் கிடைக்கும் என்ற நோக்கத்தில் கரையோரச் சிங்களவரை ஆதரிக்க முற்பட்டனர். எனவே இதுகாலவரையும், ஒரு சிறுபான்மையினமாகக் கருதப்பட்ட கண்டிச் சிங்களவர், கரையோரச் சிங்களவருக்கு எதிராகச் செயல்படாமல், ஒத்துப்போக முடிவெடுத்தனர். சிங்களச் சமூகத்தினரின் எதிர்காலம், கரையோரச் சிங்களவரும் கண்டிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவரும் ஒற்றுமையாவதில் தான் இருக்கிறது என்று கண்டிச் சிங்களவர் உணர்ந்தனர். இவர்களுடைய ஒற்றுமை திருமண ஒப்பந்தங்களாக மிளிர்ந்தன. பத்திரிகைத் தொழிலின் சாம்ராட்டாகத் திகழ்ந்த டி.ஆர். விஜயவர்தனா, கண்டிப் பிரபுத்துவக் குடும்பமான, மீ தெனிய குடும்பத்தில் திருமணம் செய்தார். டி.எஸ். சேனாநாயக்க, கண்டிக் குடும்பங்களின் உயர்குலக் குடும்பத்தைச் சேர்ந்த அலிஸ் துணுவிலவை மணஞ்செய்தார். பண்டார நாயக்க, பழம்பெருமை வாய்ந்த ரத்வத்தை குடும்பத்தின் தலைவரான ரத்வத்தை திசாவின் மகளான சிறிமாவோ ரத்வத்தையைத் திருமணஞ் செய்தார். பழம் பெருமை வாய்ந்த இப்பிரபுத்துவ குடும்பங்களில் திருமண உறவு வைத்ததனால் இக்கரையோரச் சிங்களக் குடும்பங்களுக்கு உயர் குடும்ப அந்தஸ்து கிடைத்தது. கண்டிச் சிங்களத்தவரும் தமது சமஷ்டி ஆட்சிக் கோரிக்கையைக் கைவிட்டனர். அரச சபையில் கண்டிச் சிங்களவருக்காக பண்டாரநாயக்க வாதாடினார். 1945ம் ஆண்டு 'சுதந்திர இலங்கை மசோதாவில்' பேசிய பண்டாரநாயக்க, "மற்றைய காலனித்துவ நாடுகளைப் போல் இந்நாடு கைப்பற்றப்படவில்லை. பிரித்தானிய அரசாங்கத்திற்கும், இலங்கை மக்களில் ஒரு பெரும்பகுதியினருக்குமிடையே, 1815ம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயேதான் இன்று இந்நாடு பரிபாலிக்கப்படுகிறது" என்று வாதாடினார். ரத்வத்தைக் குடும்பமும் பண்டாரநாயக்காவின் சிங்கள மகா சபாவைக் கண்டி பிரதேசங்களில் கூட்டங்களை வைத்து ஆதரித்தனர். இரு சமூகங்களுக்குமிடையே ஒரு நெருங்கிய உறவு ஏற்படுவதைக் காண்கிறோம். சிங்கள ஆதிக்கமும் வளர்ச்சி பெறுகிறது.

கண்டிச் சிங்களவருக்கும், கரையோரச் சிங்களவருக்குமிடையே நெருங்கிய உறவு ஏற்படுவதைப் பீதியுடன் கண்ணுற்ற யாழ்ப்பாணத் தமிழர்கள், கண்டி மக்களுக்கும், இலங்கைத் தமிழருக்குமிடையே இருக்கும் வரலாற்று உறவை எடுத்துக்காட்ட முன்வந்தனர். முக்கியமாக, ஆர்.சிரி. பத்மநாதன், 'கண்டிச் சிங்களவரைத் தமது சகோதரர்கள் என்று அழைத்ததோடு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு சமூகங்களுக்குமிடையே இருந்து வந்த வரலாற்று பாரம்பரிய உறவுகளை எடுத்துக்காட்டினார். முதலாம் அரசசபையில் அமைச்சராக இருந்த றி.பி. பாலனபொக்கையின் தகப்பனாரான றி.பி. பாலனபொக்கை, கண்டிச் சிங்களவரின் பிரிதிநிதியாக இருந்த வேளையில் 1892ம் ஆண்டில், சட்ட சபையில் "சமய சம்பந்தமான விஷயங்களில் நாம் ஒற்றுமையாயிருப்பதைப் போல, எம்முடைய நடத்தைகளிலும், பழக்க வழக்கங்களிலும் தமிழர்களிடையேயும், கண்டி மக்களிடையேயும், நாம் ஒரு பொதுத் தன்மையைக் காண்கிறோம்" என்று கூறினார். 'கண்டி அரசர்கள் தமிழினத்தைச் சேர்ந்தவர்கள்' என்றும், கண்டி அரசனின் சபையில் உபயோகிக்கப்பட்ட மொழி தமிழ்மொழி யென்றும். பௌத்த விகாரைகளில் கடைபிடிக்கப்பட்டு வரும் சில சம்பிரதாயங்கள் உண்மையில் ஹிந்து மதத்திலிருந்து வந்தவை என்றும், தமிழ்த் தலைவர்கள் கூறத் தவறவில்லை. சட்டத்துறை அறிஞரான, எச்.டபிள்யு. தம்பையா, 1915ம் ஆண்டில் வெளியிட்ட தன்னுடைய 'சிங்கள மக்களுடைய சட்டங்களும் பழக்க வழக்கங்களும்' என்ற நூலில் "கண்டிச் சிங்களவரிடையே இருக்கும் சாதிவேற்றுமை யாழ்பாணத்து தமிழரிடையே இருக்கும் சாதி வேற்றுமையை ஒத்திருக்கிறது" என்று கூறுகிறார். ஆர்.சிறி. பத்மநாதன் போன்றவர்கள் கண்டிச் சிங்களவருக்கும், யாழ்ப்பாணத்துத் தமிழர்களுக்குமிடையே ஓர் ஒற்றுமையைக் கொண்டு வர எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. தமிழர்களும் ஏனைய சிறுபான்மையினத்தவருடனும், எல்லாக் காரியங்களிலும் ஒற்றுமையாயிருந்ததனால் தமக்கு ஏதும் நன்மை கிடைக்கவில்லை என்பதை உணர்ந்த கண்டிச் சிங்களவர், ஏனைய சிங்கள மக்களுடன் ஒத்துழைத் தாற்றான் தமக்கும் நன்மை பயக்கும் என்று 'தனிச் சிங்கள ஒற்றுமைக் கொள்கையைக் கடைப்பிடித்தனர். இதன் பிரதிபலிப்பு தான் "தனிச்சிங்கள அமைச் சரவை". இதனால் ஏற்பட்ட தாக்கம் ஏனைய சிறுபான்மையினத்தவர்களுடைய எண்ணத்திலும், செய்கைகளிலும் எவ்வளவு தூரம் பாதிப்பையேற்படுத்தியது என்பதைப் பின்னர் ஆராய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களிடையே தோன்றிய அரசியல் இயக்கங்கள்

இன்றைய சம்பவங்களும், பிரச்சினைகளும் வரலாற்றிலிருந்து தோன்றியவையே. இப்பிரச்சினைகளை காரணாகாரியமுறைப்படி ஆராய வேண்டுமானால் நாம் வரலாற்றைத்தான் திருப்பிப் பார்க்க வேண்டும். இன்றைய பிரச்சினைகளுக்கும்,நிகழ்ச்சிகளுக்கும் சம்பந்தமில்லையென்றால் அவ்வரலாறு எமக்கு தேவையுமில்லை : அதைப் படிப்பதில் எவ்வித பயனுமில்லை. மனித சமுதாயத்தின் வளர்ச்சிதான் வரலாறு. வரலாற்று நிகழ்ச்சிகளுக்கும் சம்பவங்களுக்கும் ஒன்றோடொன்று தொடர்பு இருக்கிறது. மனித வரலாற்றில் ஏற்பட்ட போர்களும், போராட்டங்களும், இராச்சியங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் மனித சமுதாயத்தின் வளர்ச்சியில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளே. சமுதாயம் முன்னோக்கிச் செல்வதல்லாமல் பின்னோக்கிச் செல்வதில்லை. இவ்வளர்ச்சியில் தனி மனிதனுடைய உணர்ச்சிகளையும், அபிலாஷைகளையும் பிரதிபலிப்பதற்கும், அவர்களை வழி நடத்திச் செல்வதற்கும் அவர்கள் மத்தியில் தலைவர்கள் தோன்றுகிறார்கள். இத்தலைவர்கள் தமது ஆளுமையை வரலாற்றில் பதிக்கிறார்கள். மனித வரலாற்றில் கோடானுகோடி மக்கள் வாழ்ந்து மடிந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு சிலருடைய பெயர்கள் தான் எம் நினைவில் நின்று நிலைத்திருக்கின்றன. பிரான்சையோ, ஐரோப்பாவையோ நினைக்கும்போது நெப்போலியனின் பெயர் தான் ஞாபகத்திற்கு வருகிறது. சீனாவை நினைக்கும் போது சன்யட்சன், மாவோ ஆகிய தலைவர்கள் தான் எமது எண்ணத்தில் தோன்றுகிறது. தென்னாப்பிரிக்க மக்களின் வளர்ச்சியைப் பற்றிக் கூறும்போது மண்டெலாவை மறக்க முடியாது. இவர்களெல்லோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் தலைவர்களாகவிருந்து சாதனை புரிந்தவர்கள். அரசர்களையும், மக்கள் தலைவர்களையும் மக்கள் போராட்டங்களையும் பற்றிக் கூறும்போது நாம் மக்களின் அரசியல் வரலாற்றைத் தான் கூறுகிறோம். அரசியல் மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. வரலாறு, அரசியல் வரலாறு, சமூக வரலாறு, பொருளாதார வரலாறு, இலக்கிய வரலாறு என்று பல வகையாகப் பிரிக்கலாம். இதில் அரசியல் வரலாறு தான் முக்கியமானது. ஏனையவையெல்லாம் அதன் உட்பிரிவுகளே. வரலாற்றிலிருந்து அரசியலைநீக்கி விடுவது முட்டையிலுள்ளவற்றையெல்லாம் நீக்கி விட்டு அதன் கோதுவை வைத்திருப்பது போலாகும். முக்கியமாக சமீபத்திய வரலாற்றில் அரசியலை நீக்கி விட முடியாது. கரும்பின் சாறை நீக்கிவிட்டு அதன் சக்கையை யாரும் எடுப்பார்களா? அரசியலை நீக்கிவிட்டு வரலாறு எழுத முடியாது. வரலாறு என்பதே அரசியல் வரலாறு தான். மக்களின் வாழ்க்கையில் அரசியல்தான் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அரசியலைப் பற்றிக் கூறாத வரலாறு, வரலாறு அல்ல. எல்லா வரலாற்று நூல்களும் அரசியலைப் பற்றித்தான் கூறுகின்றன. அரசியலை நீக்கிவிட்டு வரலாற்றை எழுதுவதென்பது வீண் பிதற்றலாகும். இந்தக் கட்டுப்பாட்டுக்குள் எந்த வரலாற்றாசிரியனும் வரலாறு எழுத முடியாது.

இன்றைய பிரச்சினைகளுக்குரிய வேர்களை அறிய வேண்டுமானால் நாம் டொனமூர் ஆட்சிக் காலத்திற்குத்தான் செல்ல வேண்டும். இனவாத அரசியலுக்குரிய வித்து, இக்காலக்கட்டத்தில் தான் போடப்பட்டது. கண்டிச் சிங்களவர், தாம் இனி மேலும் தனித்தியங்க முடியாதென்பதை உணர்ந்து கரையோரச் சிங்களவருடன் சேர்ந்தனர். இதை உணர்ந்த சில தமிழ்த் தலைவர்கள், தமிழர்களுக்கும் கண்டிச் சிங்களவருக்குமிடையே இருந்த சில பாரம்பரிய ஒற்றுமைகளைக்காட்டி இரு சமூகங்களையும் ஒன்று சேர்க்க எடுத்த முயற்சிகள் பலனிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலக்கட்டத்தில் இன அடிப்படையில் அரசியல் கட்சிகள் தோன்றுவதை நாம் காணலாம். இதில் முக்கியமானதுதான் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் தோன்றிய 'தமிழ் காங்கிரஸ்'. யாழ்ப்பாண மக்கள் பெரும்பாலும், மரபை விரும்புபவர்கள். திடீர் மாற்றங்களை விரும்பமாட்டார்கள். தங்களுடைய வடக்குப் பகுதியை மாத்திரமே நினைப்பவர்கள். இலங்கையின் தெற்குப்பிரதேசத்தைப் பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை. யாழ்ப்பாண மக்களின் தலைமைத்துவத்தை அடைய விரும்பிய ஜி. ஜி. பொன்னம்பலம் அம்மக்களின் இப்பிரதேச உணர்வுக்கு ஏற்றாற்போல் தன் சொற்பொழிவுகளை ஆற்றினர். "அரசியல் மாற்றத்தை விரும்பாத யாழ்ப்பாணத்துத் தமிழர்களின் அறியாமையையும், பிற்போக்குக்கருத்துக்களையும் தமக்கு சாதகமாகப் பாவித்து எப்படி முன்னைய தலைவர்கள் தமது தலைமைத்துவத்தைக் காப்பாற்றி வந்தார்களோ அதே வழியைத்தான் பொன்னம்பலமும் கடைப்பிடிக்கிறார்" என்று தமிழர் இளைஞர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான பேரின்பநாயகம் கூறினார். 1934 ஆம் ஆண்டில் முற்போக்குச் சமூகங்களின் கூட்டிணைப்புச் சங்கம் என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்த சீ.எஸ். ராஜரட்ணம் இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிதான் சாலச்சிறந்தது என்ற ஒரு மனுவை கவர்னர் ஸ்டப்சுக்குச் சமர்ப்பித்தார். இவர் சமர்ப்பித்த சமஷ்டி ஆட்சித்திட்டம், இலங்கை மூன்று பிரதேசங்களாகப் பிரிக்கப்படல் வேண்டும் என்றும், வடக்கும் கிழக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும், கண்டிப்பிரதேசமான மத்திய, ஊவா, சபரகமுவ மாகாணங்கள் கண்டியர்களுக்கும், ஏனைய பிரதேசங்கள் கரையோரச் சிங்களவருக்கும் இருக்கவேண்டுமென்றும் இவ்வொவ்வொரு பிரதேசமும் தனியாட்சி கொண்ட பிரதேசங்களாக இருக்கவேண்டும் என்பதே. ஆரம்பத்தில் இக்கருத்துக்குக் கண்டிச் சிங்களவர் தமது ஆதரவைத் தெரிவித்தார்களென்றாலும் பின்னர் அவர்கள் தமது கொள்கையை மாற்றிக் கொண்டார்கள் என்பதை ஏலவே அறிந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜரட்ணத்தின் திட்டத்தில் முஸ்லிம்களுக்கு இடமில்லை. ஜி.ஜி. பொன்னம்பலம் ஸ்தாபித்த அகில இலங்கைத் தமிழர் மாநாடு என்ற அமைப்பு 1922 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட தமிழ் மகாஜனசபையின் வழித்தோன்றல் என்று கூறலாம். பொன்னம்பலத்தின் இவ்வமைப்பு பண்டாரநாயக்காவின் சிங்கள மகாசபாவை ஒத்திருந்தது. சிங்கள மகாசபா கீழ்மட்டத்திலுள்ள பாமர சிங்கள மக்களைக் கொண்டதாயிருந்தது. ஆனால் இலங்கைத் தமிழர் மாநாடு ஆங்கிலக் கல்வி பெற்ற தமிழர் உயர் குழாத்தைக் கொண்டதாயிருந்தது. சிங்கள மகாசபா தெளிவுள்ள, ஓர் உறுதியுள்ள கொள்கையைக் கொண்டிருந்த வேளையில் இத்தமிழர் மாநாடு, வகுப்புவாதக் கொள்கைகளைக் கொண்ட ஒரு சிறுபான்மையினத்தின் தற்காப்புக்காகவும், எதிர்மறையானதுமான ஓர் அமைப்பாக விளங்கியது. சுருங்கச்சொன்னால் ஜி.ஜி. பொன்னம்பலத்தை யார் தமிழ்மக்களின் தலைவராக ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்கள் தான் இச்சங்கத்தின் அங்கத்தவர்களாகலாம்.

1945ஆம் ஆண்டில் இலங்கையின் அரசியலில் சீர்திருத்தத்தைக் கொண்டு வரும் நோக்குடன் இலங்கை வந்த சோல்பரி குழுவினர் இலங்கை முஸ்லிம்களிடையே பல அரசியல் கட்சிகள் இருப்பதை அவதானித்தனர். 'இலங்கை முஸ்லிம் லீக்' 'இலங்கை சோனகர் சங்கம்', 'அகில இலங்கை முஸ்லிம் அரசியல் மாநாடு' இவை ஒவ்வொன்றும் முஸ்லிம்களைப் பிரதிபலிக்கும் இயக்கங்களாகத் தம்மைக் கூறிக்கொண்டன. இலங்கை மலாயர்களைப் பிரதிபலிக்கும் இலங்கை மலாயர் சங்கங்களும் இருந்தன. டாக்டர் எம். சி. திரஹ்மான் அவர்களின் தலைமையில் அகில இலங்கை மலாயர் காங்கிரஸ், இலங்கை மலாயர் அரசியல் சங்கம், அகில இலங்கை மலாயர் லீக் ஆகியவையே.

டொனமூர் குழுவினர் முன் எப்படி ஒவ்வொரு முஸ்லிம் சங்கமும் தாம் தான் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் என்று கூறினார்களோ அதே போல சோல்பரி குழுவினர் முன்னும் ஒவ்வொரு முஸ்லிம் சங்கமும் தமக்குத்தான் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமை இருக்கிறதென்றும் தம்முடைய சிபாரிசின் பேரில் முஸ்லிம்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் வேண்டும் என்றும் கேட்டு நின்றனர். 1945 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் திகதி 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் வெளியான செய்தியின்படி "மலாயர்களுக்கும் இலங்கை சோனகர்களுக்கும் அடிப்படை வித்தியாசங்கள் இருக்கின்றன" என்று அகில இலங்கை மலாயர் காங்கிரஸ் கூறியது. இம்மலாயர் சங்கங்கள் கூறியதை சுருங்கக்கூறினால் தம் சமூகத்தவருக்குத் தனிப்பட்ட முறையில் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதே அது. இலங்கை சனத்தொகையில் மலாயர்கள் 0.3% என்பது குறிப்பிடப்பட வேண்டும். தமக்குத் தனிப்பிரதிநிதித்துவம் வேண்டும் என்று அவர்கள் சோல்பரி குழுவினர் முன்சமர்ப்பித்த காரணங்களாவன: சோனகர்களுக்கும் மலாயர்களுக்குமிடையில் இன அடிப்படையில் வேற்றுமைகள் இருக்கின்றன, என்றும், பொருளாதாரத்துறையில் இரு சமுகங்களுக்குமிடையே போட்டி இருக்கிறதென்றும், படைப்பிரிவுகளில் மலாயர்களுக்குக்கிடைக்க வேண்டிய இடங்களை சோனகர்கள் பெறுகிறார்கள் என்றும், அரசாங்க இலிகிதர் சேவையிலுள்ள வெற்றிடங்களை சோனகர்களே அபகரிக்கிறார்கள், என்பவையே அவை. தமக்குத் தனிப் பிரதிநிதித்துவம் கிடைக்காவிட்டால் சோனகர்கள் தம்மேல் ஆதிக்கம் செலுத்துவார்கள் என்றும் அவர்கள் கூறினார்கள்.

முஸ்லிம் லீக் இலங்கையில் வாழும் எல்லா முஸ்லிம்களாகிய சோனகர்கள், மலாயர்கள், மேமன்கள், போராக்கள், இந்திய முஸ்லிம்கள் ஆகியவர்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வரும் நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்ட ஓர் இயக்கம். முஸ்லிம் லீக்கின் ஆரம்பகாலத்திலிருந்தே மலாயா இனத்தைச் சேர்ந்த றி. பி. ஜாயா தலைவராயிருந்தும், கடந்த 48 வருடங்களாக அமித் காரியதரிசியாக இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. 1918 ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் வாலிப முஸ்லிம் லீக் என்று ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் 1923 ஆம் ஆண்டில் 'இலங்கை முஸ்லிம்லீக்காக' மாற்றம் பெற்றது. 1924 ஆம் ஆண்டில் இலங்கை சட்டசபைத்தேர்தலில் முஸ்லிம் லீக்கின் வேட்பாளர்களாகப் போட்டியிட்ட ஜாயாவும், என்.டி.எச்.அப்துல்காதரும் வெற்றிபெற்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. டொனமூர் குழுவினரின் இலங்கை முஸ்லிம்களுக்குத் தனிப்பட்ட முறையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படத்தேவையில்லை என்ற சிபாரிசை எதிர்த்து 30,000 கையொப்பங்களைக்கொண்ட ஓர் ஆட்சேப மனுவை தயாரித்து இங்கிலாந்தின் காலனிகளுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைச் சந்திப்பதற்கு ஜாயா, மஹ்ரூப், எம்.ரி. அப்துல் காதர், குலாம்ஹுசெயின் ஆகியவர்களைக்கொண்ட ஒரு தூதுக்குழுவை முஸ்லிம் லீக் இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்ததும் குறிப்பிடத்தக்கது. 1942 ஆம் ஆண்டில் நடந்த கொழும்பு மத்தியத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் டாக்டர் எம்.சி.எம்.கலீல் வெற்றி பெற்றதற்கு முஸ்லிம் லீக் எடுத்த முயற்சிகள் காரணம் என்றால் அது மிகையாகாது. இதுதான் முதன் முறையாக ஒரு முஸ்லிம், கொழும்புத் தொகுதி ஒன்றில் வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விடைத் தேர்தலைப் பற்றி 1942 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் திகதி வெளியான 'டெய்லி நியூஸ்' பத்திரிகை பின்வருமாறு கூறியது. "இத்தேர்தலில் முக்கிய அம்சம் என்னவென்றால், முஸ்லிம் பெண்கள் அதிகமாக வாக்களித்ததே."

இன அடிப்படையில் தோன்றிய முக்கிய அரசியல் கட்சி தான் இலங்கை சோனகர் சங்கம். 1883 ஆம் ஆண்டுக்கும், 1889 ஆம் ஆண்டுக்குமிடையில் முஸ்லிம் நேசன் பத்திரிகையில் முஸ்லிம்களுக்கு சட்ட சபையில் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று குரல் எழுப்பிய சித்தி லெப்பையின் முயற்சியினால் 1889 ஆம் ஆண்டில் ஒரு முஸ்லிம் இனத்தவர் முஸ்லிம்களின் பிரதிநிதியாக சட்டசபைக்கு நியமிக்கப்பட்டார். இதனால் திருப்தியடையாத முஸ்லிம் சமூகத்தினர், இப்பிரதிநிதித்துவம் அதிகரிக்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று முஸ்லிம்கள் அரசாங்கத்திடம் முறையீடு செய்தும் 1920 ஆம் ஆண்டிலும் 1921ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட அரசியல் சீர்திருத்தங்களில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. 1921 ஆம் ஆண்டின் அரசியல் சீர்திருத்தத்தில் சட்டசபையில் கரையோரச் சிங்களவருக்கு 11 ஆசனங்களும், கண்டிச் சிங்களவருக்கு 2 ஆசனங்களும், இலங்கைத் தமிழர்களுக்கு 3 ஆசனங்களும், முஸ்லிம்களுக்கு ஒன்றும், இந்தியத் தமிழர்களுக்கு ஒரு ஆசனமும் இருந்தன. அன்றைய இலங்கைச் சனத்தொகையில் 0.6% விகிதமாக இருந்த பறங்கியருக்கு 2 ஆசனங்களும் அதைவிடக்குறைவாக இருந்த ஐரோப்பியர்களுக்கு 3 ஆசனங்களும் இருந்த அதே வேளையில் 6.7% இருந்த முஸ்லிம்களுக்கு ஒரு ஆசனமே இருந்தது. சட்டசபையில் முஸ்லிம்களுக்குத் தகுந்த பிரிதிநிதித்துவம் இல்லாத காரணத்தினால் 1915 ஆம் ஆண்டில் நடந்த சிங்கள-முஸ்லிம் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் அன்றைய சட்டசபையில் சர். பொன் இராமநாதனால் இக்கலவரத்திற்குக் காரணமே முஸ்லிம்கள் தான் என்று குற்றஞ்சாட்டப்பட்டனர். முஸ்லிம்களுடைய தனித்துவத்தைக் காப்பாற்றுவதற்கும், அவர்களது அரசியல் பொருளாதார கலாசார வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் முஸ்லிம்களிடையே 1900 ஆம் ஆண்டில் சோனகர் சங்கமும் 1903 ஆம் ஆண்டில் இலங்கை முஸ்லிம் சங்கமும் தோன்றின. சித்திலெப்பை எம்.சி. மொகமட், ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் ஆகியவர்களே சோனகர் சங்கத்தின் ஆரம்பகர்த்தாக்கள். இச்சங்கம் இராமநாதனின் முஸ்லிம்களைப் பற்றிய தவறான கருத்தை எதிர்த்தது. 1922 ஆம் ஆண்டில் இச்சங்கத்தில் டபிள்யு.எம்.சஹீட், எஸ்.எல். எம்.அஷீர்,ஏ.ஆர். ஏ. ராசிக் (பின்னர் சர்ராசிக் பரீத் என்றழைக்கப்பட்டார்), ஏ.எம்.புவாட், எம். எவ்.எம்.றியாழ், மாக்கான் மார்க்கார் ஆகியவர்களே முக்கிய அங்கத்தவர்களாக இருந்தார்கள். இச்சங்கங்களின் முறையீட்டின் காரணமாக, 1924 ஆம் ஆண்டு சட்டசபையில் முஸ்லிம்களுக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுக்கப்பட்ட 3 ஆசனங்களில் என்.எச் எம்.மாக்கான் மார்க்கார், என்.எச்.எம்.அப்துல் காதர், றி.பி. ஜாயா ஆகிய மூவரும் முஸ்லிம் தேர்தல் தொகுதிகளிலிருந்து முதலாம் இரண்டாம் மூன்றாம் அங்கத்தவர்களாக முறையே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

1935 ஆம் ஆண்டில் சர்.ராசிக் பரீத் அரசசபைக்கு நியமன அங்கத்தவராக நியமிக்கப்பட்டதன் பின்னர் தான் இலங்கை சோனகர் சங்கத்தின் தாக்கம் இலங்கை முஸ்லிம்களிடையே ஏற்படுவதைக் காண்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தொழிலாளர்களிடையே ஏற்பட்ட அரசியல் வளர்ச்சி

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் 1945 ஆம் ஆண்டு ஒரு மைல்கல்லாக அமைகிறது. ஒரு சமூகத்தின் சக்தி அது எவ்வளவு தூரம் அரசியல் செல்வாக்கு பெற்றிருக்கிறது என்பதில் த்ங்கியிருக்கிறது. 'சிறு சலுகைகள் பெறுவது, கிழிசல் துணிக்கு ஒட்டுப்போடுவதைப் போன்றது'. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தொழிலாள வர்க்கம், தம்முடைய உரிமைகளைப்பெற வேண்டுமானால் முதலில் அரசியல் அதிகாரத்தைப் பெற வேண்டுமென்பதை உணர்ந்தது. அதனற்றான் தொழிலாளர்கள் அரசியற் கட்சிஒன்றை நிறுவி இருபதாம் நூற்றாண்டில் தொழிலாளர் அரசாங்கத்தை ஸ்தாபித்தது. இலங்கை முஸ்லிம்கள் அரசியல் செல்வாக்கின் முக்கியத்துவத்தை இக்காலகட்டத்தில் தான் உணர்ந்தார்கள். கண்டிச் சிங்களவர் கரையோரச் சிங்களவருடன் சேர்ந்ததும், யாழ்ப்பாணத்துத்தமிழர், தமிழ் காங்கிரஸ் என்ற ஓர் அரசியற் கட்சியை ஜி.ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் உருவாக்கியதும் இதே நோக்கத்திற்றான். இந்தியத்தமிழர்களும் 'இலங்கை-இந்திய காங்கிரஸ்' என்ற ஒரே குடையின் கீழ் இயங்கிய போது சிறுபான்மை இனங்களிலும் மிகச்சிறிய சிறுபான்மை இனமாகிய இலங்கை முஸ்லிம்கள் பல கட்சிகளாகப் பிரிந்திருந்தனர். முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைமைத்துவத்துக்காகப்போட்டியிட்ட முஸ்லிம் கட்சிகளின் வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிட்ட டொனமூர் குழுவினர் "இனவாத அரசியல் ஒரு சமூகத்தை எப்படிச் சிதறச் செய்யும் என்று முஸ்லிம் சமூகத்தைச்சுட்டிக்காட்டினார்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை சோனகர் சங்கத்தின் பிரதிநிதியாக அரசசபையில் நியமனம் பெற்ற சர். ராசிக் பரீத் அங்கே நடந்த விவாதங்களில் முக்கிய பங்கெடுத்ததுமல்லாமல், தன்னுடைய ஆளுமையையும் அச்சபையில் பதிய வைத்தார். முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தைப் பற்றி பிரஸ்தாபித்த அவர் தமிழ் சமூகத்தைச் சாடவும் செய்தார். 'முஸ்லிம்களுடைய துன்பங்களுக்கெல்லாம் தமிழர்கள் தான் காரணம்' என்று கூறினார். முஸ்லிம்களுடைய தனித்துவத்தைத் திரும்பத் திரும்ப எடுத்துக்கூறினார். பண்டைய வரலாற்றை எடுத்துக்காட்டினார். சர். பொன்னம்பலம் ராமநாதன் சட்டசபையில் முஸ்லிம்களைப் பற்றிக் கூறியதை மறுத்துக்கூறினார். முஸ்லிம்கள் இலங்கைக்கு வந்த வரலாற்றையும், அவர்களுடைய மொழியையும் பற்றிக்கூறினர். அரசாங்க நியமனங்களில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பற்றியும் அவர் கூறத்தவறவில்லை. முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே சங்கம் 'இலங்கை சோனகர் சங்கம்' என்பதை வலியுறுத்தினார். இலங்கை முஸ்லிம்லீக்கும், இலங்கை சோனகர் சங்கமும் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரு கட்சிகள் என்ற அங்கீகாரம் பெற்றன.

இந்தக் காலகட்டத்தில் தான் இந்தியத் தமிழர்களும் ஓர் அரசியல் சக்தியாக உருவெடுக்கின்றனர். இரண்டு சம்பவங்கள் இவர்களுடைய வளர்ச்சிக்குச் சாதகமாக அமைந்ததோடு இலங்கையில் இடதுசாரி கட்சிகள் வளர்வதற்கும் உறுதுணையாயமைந்தது. ஒன்று, 'பிரேஸ்கர்டில் விவகாரம்'; மற்றையது 'மூலோய' சம்பவம். இந்திய வம்சாவளியினர் பிரஜா உரிமை பெறுவதில் பல கட்டுப்பாடுகள் இருந்த போதிலும் 1939 ஆம் ஆண்டில் 2, 25,000 பேர் வாக்குரிமை பெற்றனர். ஆனால் இந்தியர்களின் சனத்தொகை ஏழு லட்சமாக அப்போதிருந்தது. இந்தியர்கள் வாக்குரிமை பெறுவதில் மேலும் சில சட்ட விதிகள் கொண்டு வரப்பட்டதால், 1943 ஆம் ஆண்டில் 1,63,000 பேர்களே வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர். இரண்டாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாயுத்தத்தின் காரணமாக இலங்கைப் பொதுத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருந்த காரணத்தினால் அநேகமான இந்தியர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்ய முன் வரவில்லை. இதற்கு சோ. சந்திரசேகரன் கூறும் காரணம், "படிப்பறிவு குறைந்த தொழிலாளர்கள் தாம் நாடு கடத்தப்படக்கூடும் என்று கருதி விசாரணைக்கு சமூகமளிக்க விரும்பவில்லை" என்பதே. அரசாங்க நியமனம் பெற்றவர் உட்பட மூன்று இந்தியத்தமிழர்கள் அரச சபையில் இருந்தனர். 1939 ஆம் ஆண்டில் தமது நலன்களைத் தாமே பாதுகாக்க வேண்டியதை உணர்ந்த இலங்கை இந்தியத் தலைவர்கள் இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற ஒரு கட்சியைத் தோற்றுவித்தனர். இக்கட்சியின் ஓர் அங்கமாக 1940 ஆம் ஆண்டு மே மாதத்தில் அப்புத்தளையிலுள்ள கதிரேசன் கோவிலில் இலங்கை இந்திய தொழிலாளர் காங்கிரஸ் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது . இலங்கை இந்திய தொழிலாளர் காங்கிரஸ் உடனடியாகத் தொழிலாளர் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. 1940 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி ரம்பொடை எஸ்டேட்டில் 700 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

இதே சமயத்தில் இடது சாரி கட்சிகளும் தம்முடைய தொழிலாளர் இயக்கங்களுக்குத் தோட்டத்தொழிலாளர்களைச் சேர்க்கும் பணியில் ஈடுபட்டனர். சிங்களத் தலைவர்களின் தலைமைத்துவத்தில் நகரப்புறங்களிலுள்ள தொழிலாளர்களைக் கொண்ட தொழிலாளர்கள் சங்கங்களில் தோட்டத்தொழிலாளர்கள் சேர்வதில் ஆர்வம் காட்டவில்லை. தம்முடைய உணர்வுகளை, தேவைகளை, அபிலாசைகளை, இந்நகர்ப்புற தொழிற்சங்கங்கள் மூலம் நிறைவேற்ற முடியாதென்பது ஒன்று, மொழி வேறுபாடு மற்றொன்று. அதே காரணத்தினாற்றான் ஏ.ஈ. குணசிங்காவின் தொழிற் சங்கமும் தோட்டத்துத் தமிழரிடையே எடுபடவில்லை. தோட்டத்துத் தொழிலாளர்களின் தலைவராயிருந்த குணசிங்காவின் தொழிற் சங்கத்தின் உபதலைவராயிருந்த நடேசஐயர் இருந்தும் கூட நகரத்தொழிலாளர்களுக்கும், தோட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களுக்கும் கலாசாரத்திலும் மொழியிலும், தொழில் சூழ்நிலையிலும் பெரும் இடைவெளி இருந்ததனால் இவ்விரு கூட்டத்தினருக்கும் ஒரே தொழிற் சங்கத்தில் இணைந்து செயலாற்ற முடியவில்லை. மேலும் இத்தொழிற்சங்கங்களின் தலைவர்கள் சிங்களவராயிருந்த காரணத்தினால் இந்தியத்தமிழர்களின் இலங்கை வருகையினால் தம்முடைய நிலமும் , உரிமையும் பறி போய்விட்டது என்ற கருத்து கண்டிச் சிங்களவரிடையே இருந்த காரணத்தினால் கண்டிச் சிங்களவரின் வெறுப்பைப் பெற வேண்டியேற்படும் என்று சிங்களத் தொழிலாளர் தலைவர்களின் எண்ணமும், சிங்களத்தொழிலாளர் சங்கங்கள் தோட்டத் தமிழரிடையே பரவாமலிருப்பதற்கு ஒரு காரணமாயிருக்கலாம். இதை சோ. சந்திரசேகரன் தன்னுடைய "இலங்கை - இந்திய வரலாறு" என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார்.

"இலங்கையின் தொழிற் சங்க இயக்கம் முற்றிலும் வேறுபட்ட சூழ்நிலைகளிலேயே தோன்றி வளர்ச்சியுற்றது".

"அவ்வியக்கத்தைக் கீழ்மட்டத்திலிருந்த தொழிலாளர்கள் உருவாக்கவில்லை. மேல்பட்டத்திலிருந்த மத்திய தர வகுப்பினரே தொழிற் சங்க இயக்கத்தினைத் தோற்றுவித்ததுடன் அதற்கு இன்று வரை தலைமை தாங்கி வழி நடத்தி வருகின்றனர். தொழிற் சங்க இயக்கத்தில் விரும்பத்தகாத வேறுபாடுகள் ஏற்படுவதற்குக் காரணம் இலங்கைத் தொழிலாளர்களுக்கும் இந்தியத்தொழிலாளர்களுக்குமிடையில் காணப்பட்ட முரண்பாடுகளாகும். ஆரம்பத்திலேயே இருபிரிவினருடைய நலன்களும் வேறுபட்டு விளங்கியமையால் தவிர்க்க முடியாத வகையில் இந்தியத் தொழிலாளர்கள் இலங்கை - இந்தியக் காங்கிரசின் கீழ் ஒன்று பட நேர்ந்தது. "இத்தொழிற்சங்கத்தில் 5 லட்சம் அங்கத்தவர்கள் 1940 ஆம் ஆண்டளவில் இருந்தார்கள். தென்கிழக்காசியாவிலேயே இந்தொனேசியாவுக்கு அடுத்தபடியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த மிகப்பெரிய தொழிற்சங்கம் தான், 'இலங்கை-இந்திய தோட்டத்தொழிலாளர் சங்கம்'. இப்பாரிய தொழிற்சங்கத்தின் பின்னணியில் தோன்றிய அவர்களது அரசியல் இயக்கமாகிய இலங்கை - இந்திய காங்கிரசின் அரசியல் செல்வாக்கு நாளுக்கு நாள் பரவத் தொடங்கியது.

இந்தியத்தமிழர்களின் வளர்ச்சியை மிகவும் நுணுக்கமாக அவதானித்த ஜி.ஜி. பொன்னம்பலம் தன்னுடைய சிறுபான்மை இனங்களின் நேச உடன்படிக்கையிலிருந்தும் கண்டிச் சிங்களவரை ஒதுக்கிவிட்டு இந்தியத் தமிழரை அணைக்க முற்பட்டார். இந்தியத் தமிழரின் எண்ணிக்கையின் வளர்ச்சியில் கண்டிச் சிங்களவரின் எதிர்கால அரசியல் அமிழ்ந்து போகும் என்று கண்டிச் சிங்களத்தலைவர்கள் பீதியடைந்தனர். அதன் பிரதிபலிப்பாக பர்னாட் அலுவிகார தன்னுடைய குறிப்புப் புத்தகத்தில் (1939 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்) "பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றியதன் காரணமாக தம்முடைய சொந்த பூமியிலிருந்தே விரட்டப்பட்ட கண்டிச் சிங்களவர், தம்முடைய நாடிழந்து, தாம் பிறந்த மண்ணிலேயே தம் உரிமைகளையிழந்து, வேறெந்த சமூகத்தவரையும் விட மிகவும் தாழ்ந்த நிலையிலிருப்பதைக் காண்கிறோம். 13 லட்சம் சனத்தொகையைக்கொண்ட கண்டிச் சிங்களவர் அதே எண்ணிக்கையைக்கொண்ட அந்நியர்களான இந்தியத்தமிழர்களால் தம்முடைய கிராமங்களிலேயே சுற்றி வளைக்கப்பட்டு ஒதுங்கி வாழும் ஒரு பரிதாப நிலையைக் காண்கிறோம்" என்று எழுதினார். கண்டி அங்கத்தவர்களுடைய கருத்துக்களைப் பிரதிபலிக்கும் முகமாக மேலும் அவர் தன்னுடைய குறிப்புப் புத்தகத்தில் பின்வருமாறு எழுதினார். "இந்தியத் தமிழர்களுக்கு வாக்குரிமை வழங்குவதில் ஒரு தீர்மானம் எடுக்கத்தான் வேண்டும். ஆனால் எக்காரணத்தைக் கொண்டும் கண்டிச் சிங்களவருடைய நிலம் பிரிக்கப்படக்கூடாது. அவர்களுடைய நில உரிமை எவ்விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழ்த்தலைவர்களும், இந்தியத்தமிழர்களைத் தம் பக்கம் ஈர்க்க முனைந்தனர். "இந்தியத் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டபோதிலும், ஆசனங்களைக் கணிப்பதில் தென்னிலங்கை மக்கள், முக்கியமாக கண்டிச் சிங்களவர், தம்முடைய சனத்தொகைக்கும் அதிகமான ஆசனங்களைப் பெற்றனர்" என்று 1930 ஆம் ஆண்டில் சந்திரசாகர, 'ஆசனங்கள் நிர்ணயிக்கும் சபைக்கு'ப்புகார் செய்தார்.

கவனர் கல்டிகொட் 1933 ஆம் ஆண்டின் தேர்தல் தொகுதிகளைத் திருப்பி அமைக்க முனைந்தபோது அரசசபையில், ஜி.ஜி. பொன்னம்பலம் கண்டிச் சிங்களவருக்கு நன்மை பயக்கும் இத்திட்டத்தினால் இந்தியத்தமிழர்கள் தமக்கிருக்கும் இரு ஆசனங்களையும் இழந்து விடலாம் என்று கூறினார்.

இந்தியத் தமிழர்களின் பிரச்சினை ஒரு முக்கிய அரசியல் பிரச்சினையாவதற்கு பிரேஸ்கர்டில் விவகாரமும், மூலோய சம்பவமும் முக்கிய காரணங்களாக அமைந்தது. இடது சாரிக்கட்சிகள் வளர்வதற்கும் இச்சம்பவங்கள் உறுதுணையாக அமைந்தன. பிரேஸ்கர்டில் என்ற அவுஸ்திரேலியாவில் குடியேறிய ஓர் ஆங்கிலேயன் மடுல்கெலயிலுள்ள ரேனுகாஸ் என்ற தேயிலைத் தோட்டத்தில் சின்னதுரையாக நியமனம் பெற்றான். சிட்னி சர்வ கலாசாலையில் மாணவனாயிருந்த சமயத்தில் இளைஞர் 'கம்யூனிஸ்ட்லீக்கில்' அங்கத்தவனாயிருந்த பிரேஸ்கர்டில் இலங்கை வந்ததும் இடதுசாரிக்கட்சிகளுடன் தொடர்பு கொண்டான். அவன் தொழிலாளர்களின் உரிமைக்காகப் பேசிய அதே நேரத்தில் ஆங்கில ஏகாதிபத்தியத்தையும், ஆங்கில முதலாளித்துவத்தையும் எதிர்த்தான். ஆங்கில தோட்டத்துரைமார்களின் போக்கைப் பகிரங்கமாகக் கூறினான். அவன் நாவலப்பிட்டியிலுள்ள ஒரு கூட்டத்தில் பகிரங்கமாக ஆங்கில அரசாங்கத்தைச் சாடியதனால் அவனை நாடு கடத்தும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இக்கட்டளைக்கு அடிபணிய மறுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேஸ்கர்டிலை இடதுசாரிக் கட்சிகள் ஒரு மறைவான இடத்திற்குக் கொண்டு சென்றனர். இக்கட்டளைக்கெதிராக நாடு பூராவும் கண்டனக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக்கட்டளைக்கெதிராக அரசபையில் ஒரு பிரேரணை அலுவிஹாரவினால் சமர்ப்பிக்கப்பட்டது. இப்பிரேரணைக்கெதிராக ஐந்து நியமன அங்கத்தவர்களும் ஜி.ஜி. பொன்னம்பலமும் வாக்களித்தார்கள். காலி முகமைதானத்தில் ஒரு மாபெரும் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திடீரென்று பிரேஸ்கர்டில் தோன்றினான். பிரேஸ்கர்டில் சிறை செய்யப்பட்டான். ஆனால் சமசமாஜக் கட்சியினர் உயர்நீதிமன்றத்திற்குத் தாக்கல் செய்தார்கள். 1937 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றம், "கவர்னரின் கட்டளை" சட்டத்திற்கு முரணானது, என்று தீர்ப்பு வழங்கியது. பிறகு பிரேஸ்கர்டில் தனது விருப்பப்படியே நாட்டை விட்டுச் சென்றான். இதனால் சமசமாஜக் கட்சியின் செல்வாக்கு மக்களிடையே இன்னும் வளர்ந்தது.

அடுத்தது, 'மூலோயா சம்பவம்'1940 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை இந்தியத் தொழிலாளர் சங்கம், சமசமாஜக் கட்சியின் உதவியுடன் ஹேவாஹெட்டவிலுள்ள மூலோய தோட்டத்தில் வேலை நிறுத்தம் செய்தது. தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை உடைக்க பொலிஸ் படையொன்று கண்டியிலிருந்து சென்றது. தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தை நிறுத்த மறுக்கவே, சுரவீர என்ற பொலிஸ்காரன் கோவிந்தன் என்ற தொழிலாளியை சுட்டுக்கொன்றான். பொலிசின் அட்டகாசத்தின் எதிரொலி இலங்கை பூராவும் கேட்டது. இதனை விசாரிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டது. பொலிசினால் தொழிலாளர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. உள்துறை அமைச்சர் ஜயத்திலக்க இவ்வழக்கை ஒத்திவைக்கும்படி பொலிசிடம் கேட்டும் கூட ஏழு தொழிலாளர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பு வழங்கப்பட்டு சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டனர். தம்முடைய அதிகாரத்தின் கீழ் வேலை செய்யும் ஐ.ஜி. பி.யின் இத்தகாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலை எதிர்த்து மந்திரி சபை உடனடியாக ராஜினாமா செய்தது. ஒரு வெள்ளைக்கார அரசாங்க உத்தியோகத்தன் அமைச்சரவையையே எதிர்ப்பதென்றால் ஜனநாயகம் என்ற போர்வையில் நடாத்தப்படும் டொனமூர் அரசியல் அமைப்பு வெறும் பம்மாத்து என்று கூறினர். விசாரணைக்குழுவும் போலிசின் அடாவடித்தனத்தைக் கண்டித்தன. கவர்னரின் தலையீட்டினால் இவ்வரசியல் நெருக்கடி தீர்க்கப்பட்டது. அமைச்சர்களும் தமது இராஜிநாமாவை வாபஸ் செய்தனர். இதனால் தோட்டத் தொழிலாளர்களின் செல்வாக்கு வளர்ந்தது. இந்தியத் தொழிலாளர்களின் சக்திக்கு முன்னால் பிரித்தானிய ஏகாதிபத்தியம் மண்டியிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொமினியன் அந்தஸ்துக்கான அமைச்சரவையின் கோரிக்கையும், பிரித்தானிய அரசாங்கத்தின் திட்டமும்

டொனமூர் அரசியல் அமைப்பின் இரண்டாவது அரச சபையில் அரசியல் மாற்றங்களுக்கான இலங்கை மக்களின் குரல் வலுப்பெற்றது. இலங்கை அரசியலில் சீர்திருத்தங்களைக்கொண்டு வருவதற்கான ஒரு சூழ்நிலை ஏற்படுவதற்கு லிபரல் கருத்துக்களைக் கொண்ட இருவர் ஆங்கில அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை ஏற்றனர். இங்கிலாந்தின் காலனித்துவ அமைச்சராக மல்கம் மக் டொனால்டும், இலங்கை கவர்னராக சர் அன்றூ கல்டிகட்டும், 1937-8 ஆம் ஆண்டுகளில் பதவியேற்றனர். இலங்கையின் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இலங்கை அரசியல் மாற்றத்திற்கான ஒரு திட்டத்தை சமர்ப்பிக்கும் படி கவர்னர் கல்டிகட்டுக்கு இங்கிலாந்து அரசாங்கம் ஒரு பணிப்புரையை 1937ஆம் ஆண்டில் அனுப்பியது. அடுத்த ஆறுமாதங்களாக கவனர், அமைச்சரவையின் திட்டத்தையும், அரசசபையிலிருக்கும் சிறுபான்மை இன மக்களின் பிரதிநிதிகளின் கோரிக்கைகளையும், மற்றும், அரசியல் சங்கங்களினதும், சிறுபான்மை சமூகங்களின் சங்கங்களினதும், வேண்டுகோள்களைப்பரிசீலனை செய்தார். பல தூதுக்குழுக்களையும் சந்தித்தார். இத்தூதுக் குழுக்கள் பலவிதமான பிரேரணைகளைக் கவர்னருக்குச் சமர்ப்பித்தன. வாக்குரிமையில் கட்டுப்பாடு கொண்டு வருதல், இரண்டாவது சபையொன்றை அமைத்தல், முக்கியமாக பெரும்பான்மையின மக்களுக்கு வழங்கப்படும் ஆசனங்களுக்கு சமமான ஆசனங்களை சிறுபான்மையினருக்கும் வழங்கப்படவேண்டும் என்பவையே அவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் கவர்னர் இனவாத பிரதிநிதித்துவ கோரிக்கையை நிராகரித்தார். கவர்னர் கல்டிகட் இங்கிலாந்துக்கு அனுப்பிய தனது திட்டத்தில், நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட குழு முறையை ஒழிக்க வேண்டும், என்றும் அதற்குப்பதிலாக கபினட் அரசியல் முறையை ஏற்படுத்தவேண்டும் என்றும் அரச சபையில் பெரும்பான்மை வாக்குகளை பெறக்கூடிய ஒருவர் முதல் மத்திரியாக நியமிக்கப்படல் வேண்டும் என்றும், அரசாங்க அங்கத்தவர்கள் இவ்வமைச்சரவையில் பதவி வகிக்கக் கூடாதென்றும் சிபாரிசு செய்தார். கெபினட் அரசியல் முறை கொண்டு வந்தால் தான் அரசியல் கட்சிகள் வளர்வதற்குரிய சூழ்நிலை ஏற்படும் என்றும் அவர் கூறினர். ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் இலங்கையில் ஏற்படவேண்டுமானால் கவர்னருக்குப் பிரத்தியேக அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்றும் அவர் தன் அறிக்கையில் கூறினார். கவர்னரின் திட்டத்தை அங்கீகரித்த இங்கிலாந்து அரசாங்கம் இத்திட்டத்தை அரச சபையில் சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெறும்படி கூறியது. 1939 ஆம் ஆண்டில்அரசசபை, கவர்னரின் பிரேரணைகளை அங்கீகரித்தது. ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் இலங்கையில் ஏற்படுவதற்குரிய முதலடி எடுக்கப்பட்டது. ஆனால் 1939 ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் இரண்டாவது மகாயுத்தம் வெடித்ததால் இத்திட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

அரச சபையில் அங்கத்தவர்களாக இருந்த இரு சமசமாஜக் கட்சியினர் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தைப் பகிரங்கமாக எதிர்த்தனர். இந்திய காங்கிரசைப்போல இலங்கைக்குப் பூரண சுதந்திரம் வேண்டுமென்று கேட்டனர். இலங்கையின் மிதவாதிகள் பிரித்தானிய அரசாங்கத்தின் சலுகைகளுக்காகவும், பட்டங்களுக்காகவும் கைகட்டி நின்றதை எள்ளி நகையாடினர்.

குழு அமைப்பு முறை ஒழிக்கப்படக்கூடாது என்றும் சமசமாஜக்கட்சியினரும், பண்டாநாயக்காவும் வாதாடினர். பிரேஸ்கர்டில் விவகாரத்தினாலும் மூலோய சம்பவத்தினாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மக்களின் பெருமதிப்பைப் பெற்ற சமசமாஜக்கட்சியினர் 1941 ஆம் ஆண்டில் நடக்க வேண்டிய பொதுத்தேர்தல் நடைபெற்றிருந்தால் அமோகமான வெற்றியை ஈட்டிருப்பர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக உலக மகாயுத்ததின்போது இங்கிலாந்தை எதிர்த்த இவர்களை பிரிதானிய அரசாங்கம் சிறை செய்தது. கிழக்கு நாடுகளிலிருந்த ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியை ஒழித்து அவைகளை கைப்பற்றிய யப்பானுடன் இந்தியாவில் சுபாஷ் சந்திரபோஸ் போன்றவர்களைப் போல் இவர்களும் சேர்ந்து இலங்கையின் பிரித்தானிய ஆட்சிக்கு முடிவு கட்டுவார்கள் என்ற பீதியே இதற்குக் காரணமாயிருந்தது. மேலும், இவ்யுத்தத்திற்கு நேச நாடுகளுடன் ஒத்துழைத்த ஸ்டாலினுக்கு ஆதரவளித்தவர்களைக் கட்சியிலிருந்தும் வெளியேற்றி, டிரொஸ்கியின் நான்காவது சர்வதேச இயக்கத்துடன் இணைந்த காரணமும் இருக்கலாம். சமசமாஜக் கட்சியினரை சிறை செய்த பிரித்தானிய அரசாங்கம் இக்கட்சி சட்ட விரோதமானதென்று பிரகடனம் செய்தது. பிரித்தானிய அரசாங்கத்திற்கு எதிராக இயங்கிய சமசமாஜக்கட்சியினரின் போக்கைத் தமக்குச் சாதமாகப் பாவித்த டி.எஸ். சேனாநாயக்கா, அவருடைய அமைச்சர் சகாக்களும் அரசாங்கத்தினிடமிருந்து மேலும் சில சலுகைகளைப் பெற்றனர்.

சமசமாஜக் கட்சியினர் சிறைப்படுத்தப்பட்டதையிட்டு இலங்கை மக்களிடம் எவ்வித சலனமுமேற்படவில்லை. இந்தியாவில் மகாத்மா காந்தியும், ஜவஹர்லால் நேருவும் ஏனைய இந்தியத்தலைவர்களும் சிறைப்பிடிக்கப்பட்டதை எதிர்த்து இந்தியா முழுவதும் ஆர்ப்பாட்டங்களும், குழப்பங்களும் ஏற்பட்டதால் ஆயிரக்கணக்கான மக்கள் சிறை சென்றனர். அப்படி ஏதுவும் இலங்கையில் நடக்கவில்லை. காரணம் இலங்கை சமசமாஜக் கட்சியினர் நகரப்புற தொழிலாளர்களுடன் மாத்திரம் தான் தொடர்பு வைத்திருந்தனர். தோட்டத் தொழிலாளர்களைத் தம் இயக்கத்தில் சேர்க்கும் அவர்களுடைய முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. இந்நாட்டின் பாமரமக்களாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயிகளைக் கவர்வதற்குரிய திட்டங்களும் அவர்களிடம் இருக்கவில்லை. காலம்காலமாக மத அனுஷ்டானங்களில் மூழ்கியிருக்கும் பாமர மக்களின் மன நிலையை அறியாமலும் அவர்களுடைய சமய, மொழி உணர்வுகளைத் தூண்டிவிடும் எவ்வித கருத்துக்களையும் அவர்கள் முன் வைக்காததால் இடது சாரிக்கட்சிகளுக்கும், ஏழைப் பாமரமக்களுக்குமிடையே இடைவெளியிருந்தது. இதனால் அவர்களுடைய இயக்கமும் மக்களினின்றும் வேறுபட்டே இருந்தது. இதற்கு நேர்மாறாக பண்டார நாயக்காவின் சிங்கள மகா சபா மக்களின் சமய-மொழி உணர்வுகளைத் தனக்குச் சாதகமாகப் பாவித்து வளர்ச்சியடைந்தது.

1943 ஆம்ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி பிரித்தானிய அரசாங்கம், இலங்கையின் அரசியல் அமைப்பை மாற்றியமைப் பதற்கான ஒரு பிரகடனத்தை வெளியிட்டது.

1. யுத்த இறுதியில் உள்நாட்டு விவகாரத்தில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரித்தானிய ஆட்சிக்குட்பட்ட முழுப்பொறுப்புள்ள ஓர் அரசாங்கத்தை நியமிக்கும் ஓர் அரசியலமைப்பை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஒத்துக்கொள்கிறது.

2. வெளிநாட்டு அலுவல்களையும், உள்நாட்டுப் பாதுகாப்பையும் தவிர்த்த ஏனைய நிர்வாகம் இலங்கை அரசாங்கத்திற்குக் கையளிக்கப்படும்; இவ்விரண்டும் பிரித்தானிய அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்திலேயே இருக்கும்.

3. பிரித்தானிய அரசாங்கத்தின் கொள்கைகளை அமுல் நடத்துவதற்குக் கவர்னருக்கு அதிகாரம் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இன ரீதியிலோ, சமய ரீதியிலோ ஒரு சிறுபான்மை சமூகத்தைப் பாதிக்கும் வகையில் எந்த ஒரு சட்டமும் அரசசபையில் சமர்ப்பிக்கப்பட்டால் அதை தள்ளுபடி செய்வதற்கு கவர்னருக்கு விசேஷ அதிகாரங்கள் இருக்கும்.

5. இலங்கையின் நாணய கட்டுப்பாடு கவர்னரிடம் மாத்திரம் இருக்கும்.

மேற்கூறப்பட்ட விதிகளுக்கமைய ஓர் அரசியல் யாப்பை ஏற்படுத்தும்படி அமைச்சரவைக்குக் கட்டளையிடப்பட்டது. இதற்கமைய 1944 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அமைச்சரவை ஒரு யாப்பை தயார் செய்தது. ஓர் அரசியல் கமிஷன் நியமிப்பதில் பிரித்தானிய அரசாங்கத்திற்கும், அமைச்சரவைக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக அமைச்சரவை தமது திட்டத்தை வாபஸ் செய்தது.

அமைச்சரவையின் யாப்புத்திட்டத்தில் சிறுபான்மை இனங்களைப் பற்றிய ஓர் முக்கியமான பிரிவு இருந்தது. ஒரு குறிப்பிட்ட சமயத்தவரையோ, இனத்தவரையோ பாதிக்கும் வகையில் சட்டம் இயற்றப்படக்கூடாது, என்பதே அது. இப்பகுதி சோல்பரி யாப்பிலும் சேர்க்கப்பட்டது. இவ்வுட்பிரிவு சிறுபான்மை இனங்களை எவ்வளவு தூரம் பாதுகாத்தது என்பதைப்பின்னால் நடந்த சம்பவங்கள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

அமைச்சரவையின் திட்டத்தின்முக்கிய அம்சம் என்னவென்றால் சிறுபான்மையினமக்களின் சந்தேகத்தை நிவர்த்தி செய்யுமுகமாக தேர்தல் தொகுதிகளை நிர்ணயிக்கும் போது அவர்களுக்கு அதிகபட்சமான ஆசனங்களைக் கொடுக்க வேண்டுமென்பதே. பின்தங்கிய பகுதிகளுக்கு அதிகமான ஆசனங்களைக் கொடுக்க வேண்டும் என்பது மற்றொன்று. 75,000 வாக்காளர்களுக்கு ஒரு தேர்தல் தொகுதியும், 1000 சதுர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைல்களைக் கொண்ட ஒரு நிலப்பரப்புக்கு ஒரு தேர்தல் தொகுதியும், வழங்கப்படுவதன் மூலம் சிறுபான்மையின மக்களின் அச்சத்தைத் தவிர்க்கலாம் என்று எண்ணினர். இந்த 'நிலப்பரப்பு உத்தி' உண்மையில் மக்கள் குறைந்த அளவு வாழும் இடங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கும், வடமேல் மாகாணம் வடமத்திய மாகாணம், ஊவா மாகாணங்களில் வாழும் கண்டிச் சிங்களவருக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. இதன் அடிப்படையில் வடக்கிற்கு ஐந்து ஆசனங்களும், கிழக்கிற்கு மூன்று ஆசனங்களும் கிடைக்க வேண்டிய இடத்தில் 9 ஆசனங்களும் 7 ஆசனங்களும் முறையே கிடைத்தன. கண்டிச் சிங்களவருக்கு 12 ஆசனங்கள் கிடைக்க வேண்டிய இடத்தில் 22 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன. அமைச்சர்களின் திட்டத்தில் இன ரீதியாக ஆசனங்கள் ஒதுக்கப்பட்டதை நாம் ஆராய்ந்தால் 94 மொத்த ஆசனங்களில் சிங்களவருக்கு 57 ஆசனங்களும், இலங்கை தமிழர்களுக்கு 15 ஆசனங்களும், இந்தியத்தமிழருக்கு 14 ஆசனங்களும், முஸ்லிம்களுக்கு 8 ஆசனங்களும் என்ற விடை கிடைக்கும். பெரும்பான்மையின சிங்கள மக்களுக்கு 57 ஆசனங்களும், எல்லா சிறுபான்மையின மக்களுக்குக் கூட்டு மொத்தமாக 37 ஆசனங்களே இத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டதை உணர்வோம். விகிதாசாரப்படிபார்த்தால், சிங்களவருக்கு 60.6% மாகவும் சிறுபான்மையின மக்களுக்கு 39.4% இருப்பதை நாம் காணலாம். எந்த ஒரு சமூகத்திற்கோ இனத்திற்கோ அவர்களுக்குத் தகுந்த ஆசனங்கள் கிடைக்காதவிடத்து 6 அங்கத்தவர்களை நியமிப்பதற்கு இத்திட்டத்தில் இடமிருந்தது. இது சிறுபான்மையின மக்களுக்குச் சாதகமாகவே அமைந்தது. இதன்படி பார்த்தால் பெரும்பான்மையின சிங்கள மக்களுக்கு 57%விகிதமாகவும், சிறுபான்மையின மக்களுக்கு 43% மாகவும் இருப்பதைக் காணலாம். சிறுபான்மையின மக்களுக்கும் இலங்கை அரசியல் அமைப்பில் ஒரு தகுந்த இடம் இருக்கவேண்டும் என்ற டி.எஸ். சேனாநாயக்காவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்கை இத்திட்டத்தில் நாம் அவதானிக்கலாம். இலங்கையின் வெளிவிவகார நிர்வாகம் பிரித்தானிய அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாயிருந்தபோதும், இந்திய வம்சாவளியினரின், பிரஜா உரிமை சம்பந்தமான பேச்சு வார்த்தைகளை இந்திய அரசாங்கத்துடன் நடத்துவதற்கு இலங்கை அமைச்சரவைக்குப் பூரண அதிகாரம் அளிக்கப்பட்டது.

1942ஆம் ஆண்டில் இலங்கை அரசியலிலிருந்து ஓய்வுபெற்று இலங்கையின் ஸ்தானிகராக இந்தியாவில் கடமையேற்பதற்காகச் சென்ற பாரொன் ஜயத்திலக்காவின் அமைச்சரவையிலுள்ள இடத்தைநிரப்பிய அருணாசலம் மகாதேவா அமைச்சர்களின் இத்திட்டத்திற்கு எதிராகத் தன் கருத்துக்களைத் தெரிவித்தார். அமைச்சரவையின் திட்டத்தில் சிறுபான்மையின மக்களுக்கு வழங்கப்பட்ட பிரதிநிதித்துவத்தில் தனது கருத்து வேறுபாட்டைத் தெரிவித்த மகாதேவா, இலங்கையின் அரசியல் பிரச்சினையை முழுமையாக மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றும் அதற்கான ஓர் அரசியல் குழுவைப் பிரித்தானிய அரசாங்கம் இங்கிலாந்திலிருந்து அனுப்ப வேண்டும் என்றும் தனது கருத்தைத் தெரிவித்தார். ஏனைய அமைச்சர்களும், தம்முடைய திட்டத்தை நான்கில் மூன்று பங்கு வாக்குகள் அரச சபையில் கிடைக்காதவிடத்து ஒரு விசேஷ குழுவை அமைப்பது தான் சிறந்தது என்று தம் அறிக்கையில் குறிப்பிட்டார்கள்.

அரசியல் விவகாரத்தில் சிங்களத்தலைவர்களோடு ஒத்துழைத்ததற்காக மகாதேவா அடுத்த பொதுத்தேர்தலில் தன்னுடைய ஆசனத்தை இழந்தார். ஜி. ஜி.பொன்னம்பலத்தின் 50-50 கோரிக்கைக்கு ஆதரவு அளிக்காததால் 'துரோகி' என்று பட்டம் சூட்டப்பட்டு அரசியலிலிருந்து ஒதுக்கப்பட்டார். தனிச் சிங்கள மந்திரிசபை தொடர்ந்தும் நடந்திருக்க வேண்டும். அம்மந்திரிசபையில் அவர் சேர்ந்ததால் அதனுடைய குணவியல்பையே மாற்றிவிட்டார் என்று தமிழர்கள் அவரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றஞ் சாட்டினர். அமைச்சரவையில், சிறுபான்மையின மக்களுக்குத் தகுந்த பிரதிநிதித்துவம் வேண்டும் என்று அவர் வாதாடியதை அரசியல் ஏமாற்றுவித்தை என்றும் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. 1947ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதியில் அவருக்கெதிராகப் போட்டியிட்ட ஜி. ஜி. பொன்னம்பலம் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.ஜி.பொன்னம்பலத்தின் 50க்கு 50 கோரிக்கையும் முஸ்லிம்களின் நிலையும்

"ஒரு ஜனநாயக யாப்பில் பொறுப்புள்ள அரசாங்கம் ஒன்று அமைய வேண்டும் என்று கோரும் அதே நேரத்தில், சிறுபான்மை இன மக்கள் தமக்கு சம அந்தஸ்து வேண்டும் என்று வாதாடுவது நியாயமற்றது. பாராளுமன்ற அரசியல் அமைப்பு முறை வேண்டுமென்று கேட்கும் அதே வேளையில், சிறுபான்மை இன மக்கள் தமக்குப் பாதகமாக அமையும் எவ்வித செயலிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள மன்னனுக்கோ அல்லது அவனுடைய பிரதிநிதிக்கோ விசேஷ அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்று கேட்பது நியாயமானது" என்று பிரைஸ் என்ற பிரபல அரசியல் தத்துவஞானி தன்னுடைய காமன் வெல்த் என்ற நூலில் கூறுகிறார். ஆனால் இலங்கைத் தமிழர்களின் தலைவராக உருவெடுத்த ஜி. ஜி. பொன்னம்பலம், பெரும்பான்மை யினத்தவரோடு சம அந்தஸ்து சிறுபான்மை இனத்தவர்களுக்கும் இருக்க வேண்டும் என்று வாதாடினார்.

சிறுபான்மையின மக்களின் ஒரு முக்கிய அங்கமாக விளங்கிய முஸ்லிம்களின் தலைவர்களாக மாக்கான் மார்க்கார், ரி. பி. ஜாயா, ராசிக் பரீத் ஆகியோர் அரசசபையில் அங்கத்துவம் வகித்தனர். முதல் அரசசபையில் மாக்கான் மார்க்கார் தேர்தல் மூலமும், இரண்டாவது அரசசபையில் முஸ்லிம்கள் ஒருவரும் தேர்தலில் வெற்றி பெறாத காரணத்தினால் ஜாயாவும், ராசிக் பரீதும், நியமன அங்கத்தவர்களாகவும் இருந்தார்கள். இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற டாக்டர் கலீலும் இரண்டாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசசபையில் அங்கத்துவம் வகித்தார். சட்டசபையிலும் பின்னர் அரசசபையிலும் அங்கத்துவம் வகித்த மாக்கான் மார்க்கார் முஸ்லிம் மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தார். ஆரம்பத்தில் சிங்கத் தலைவர்களின் சிங்களக் கொள்கைக்கு ஆதரவளித்த மாக்கான் மார்க்கார் பின்னர் தனது கருத்தை மாற்றிக் கொண்டார். 1928ஆம் ஆண்டு சட்டசபையில் டொனமூர் அரசியல் அமைப்பைப் பற்றிய விவாதத்தில் "சிங்களவரின் ஆதிக்கத்தைப் பற்றி எனக்கு எவ்வித பயமுமில்லை. பெரும்பான்மையினம் இந்நாட்டை ஆள்வதைப் பற்றி எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை. அவர்கள் இந்நாட்டை ஆளட்டும். நாம் அவர்களுக்கு ஆதரவு அளிப்போம்" என்று கூறிய அவர் 1933 ஆம் ஆண்டில் கொழும்பில் நடந்த அகில இலங்கை முஸ்லிம் லீக் கூட்டத்தில் முஸ்லிம்கள் சிங்களவருக்கு ஒத்தாசையாக இருக்கத்தான் வேண்டும் என்று முஸ்லிம்களைக் கேட்டுக் கொண்டதோடு சிங்களவரின் தலைவரான டி. பி. ஜயத்திலக்கவிடம் "அரசியலைப் பற்றி எம்மிடையே இருக்கும் வேறுபாடுகளை நீக்குவதற்கு ஒரு வட்டமேசை மகாநாடொன்று கூட்ட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். ஆனால் தனிச்சிங்கள அமைச்சரவையைக் கொண்ட சிங்களத் தலைவர்கள் மகாதேவாவைத் தவிர்த்த ஏனைய சிறுபான்மையின மக்கள் தலைவர்களில் எவருடனும் கலந்தாலோசிக்காமல் இலங்கைக்கு ஒரு அரசியல் யாப்பைத் தயார் செய்தனர். இதே வேளையில் யாழ்ப்பாணத்து இளைஞர் காங்கிரசும், 'ஹிந்து ஓர்கன்' பத்திரிகையும் முஸ்லிம்களை நம்ப வேண்டாம் என்று ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு அறிவுரை வழங்கியது.

1938 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி வெளியான 'ஹிந்து ஓர்கன்' பத்திரிகையில் ஓர் இளைஞர் காங்கிரஸ் தலைவர் "முஸ்லிம்கள் ஒரு நயவஞ்சகமான சமூகம் என்பதை அவர்களுடைய முன்னைய வரலாற்றிலிருந்து அறிகிறோம். எதிர்காலத்திலும் அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள்" என்று எழுதினார். 1938 ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு பெப்ரவரி 6ஆம் திகதி வெளியான 'ஹிந்து ஓர்கன்' பத்திரிகையும் "சிறுபான்மையின மக்களுக்கு 50-50 பிரதிநிதித்துவம் வேண்டுமென்று தமிழர்கள் கோருவது தவறு. ஐரோப்பியரும், பறங்கியரும், முஸ்லிம்களில் ஒரு பெரும் பகுதியினரும், சிங்களவரைத் திருப்திப்படுத்தும் வகையில் செயலாற்றுவார்களேயொழிய தமிழர்கள் பக்கம் எப்போதும் இருக்கமாட்டார்கள்" என்று எழுதியது. முஸ்லிம்கள் இருதலைக்கொள்ளி எறும்பின் நிலையில் அன்றும் இருந்தார்கள், இன்றும் இருக்கிறார்கள்.

பொன்னம்பலம் தனது 50-50 கோரிக்கைக்கு முஸ்லிம்களின் முழு ஆதரவையும் பெற முடியாமலிருந்ததற்கு மொழி அடிப்படையில் முஸ்லிம்கள் இரு பிரிவுகளாகப் பிரிந்திருந்தமையும் ஒரு காரணமாயிருக்கலாம். அதே நேரத்தில் ஒரு கணிசமான அளவு முஸ்லிம் வாக்காளர்களைக் கொண்ட கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய தம்பிமுத்து போன்றோரின் ஆதரவும் பொன்னம்பலத்திற்குக் கிடைக்கவில்லை. சிங்களவரின் இனக்கொள்கையை எதிர்த்த தம்பிமுத்து, பொன்னம்பலத்தின் 50-50 கோரிக்கையை ஆதரிக்கவில்லை. முஸ்லிம்களைப் பற்றி பொன்னம்பலம் பேச எழுந்த சமயங்களிலெல்லாம் தம்பிமுத்து எதிர்த்தார். 1939 ஆம் ஆண்டு அரசசபையில் "முஸ்லிம்களுக்கு ஆசனம் வேண்டுமென்று கேட்பதற்குத் தமிழர்களுக்கு எவ்வித உரிமையுமில்லை" என்று கூறினார். மேலும் "நாடு பூராவிலுமுள்ள முஸ்லிம்களைக் கொண்ட ஒரு தனித்தேர்தல் தொகுதியை எனது மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் விரும்பவில்லை. ஏனைய பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களின் ஆதரவை தம்மால் பெறமுடியாது என்று அவர்கள் கூறுகிறார்கள். கொழும்பிலுள்ள பணம் படைத்த செல்வாக்குள்ள முஸ்லிம்களால்தான் அவ்வாசனங்களை வெல்லமுடியும் என்பது அவர்களது கருத்து" என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1937 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சிறுபான்மை இனமக்களின் பிரதிநிதிகளின் இரகசியக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இதில் எல்லா சிறுபான்மை இனத்தலைவர்களும் கலந்து கொண்டார்கள். இதில் பெரும்பான்மை இனத்தவர்களுக்கும், சிறுபான்மை இன மக்களுக்குமிடையே 1:1 விகிதாசாரம் அல்லது 50-50 என்ற பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அமைச்சர் குழு அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்த அரசியல் சீர்திருத்தத்திட்டத்தின் எதிரொலியாக எழுந்ததே இந்த இரகசியக் கூட்டம். சிறுபான்மையின மக்களின் தூதுக்குழுவொன்று கவர்னர் கல்டிகொட்டைச் சந்தித்துத் தமது கோரிக்கையை அவர் முன் சமர்ப்பித்தது. இக்கோரிக்கைக்கு எதிராக சிங்களவர் மத்தியில் மாத்திரமல்ல பெரும் செல்வாக்கு வாய்ந்த தமிழர்கள் மத்தியிலும், முஸ்லிம்கள் மத்தியிலும் கூக்குரல் எழுந்தது. உடனே சிறுபான்மையின தூதுக்குழு தம்முடைய கோரிக்கையை 40:60 ஆக மாற்றிக் கொண்டது. ஜூன் 28 ஆந் திகதி வெளியான 'ஹிந்து ஓர்கன்' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு கூறியது: "இத்தூதுக்குழுவில் பங்கு பற்றிய தமிழர்களை எம்மால் கண்டிக்காமலிருக்க முடியாது. இந்நாட்டின் பிற்போக்கு சக்திகளுடன் அவர்கள் சேர்வார்கள் என்று நாம் கனவிலும் நினைக்கவில்லை."

இலங்கைத் தேசிய காங்கிரசின் அன்றைய தலைவராயிருந்த எச். டபிள்யூ. அமரசூரிய 1938 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இப்புதிய கோரிக்கையை ஆதரித்தார். இனவாத பிரதிநிதித்துவத்தைத் திரும்பவும் அமுல் நடத்துவது சாத்தியமில்லை என்று கூறி கவர்னர் கல்டிகொட் இக்கோரிக்கையை நிராகரித்தார். புதிய தேர்தல் தொகுதிகளை அமைக்குமிடத்து பத்து புதிய ஆசனங்களில் கண்டிச் சிங்கள மக்களுக்கு நான்கு ஆசனங்கள் வழங்கப்படல் வேண்டும் என்றும் கூறினார். 1938 ஆம் ஆண்டு மே மாதம் கவர்னர் கல்டிகொட் இங்கிலாந்துக்கு அனுப்பிய மனுவில் சிறுபான்மை மக்களின் 50க்கு 50 கோரிக்கையையோ அல்லது 40க்கு 60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கையையோ ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறினார். ஆனால் இந்த 50-50 கோரிக்கையில் தான், தமிழர்களின் விமோசனம் இருக்கிறதென்று பெரும்பாலான யாழ்ப்பாண மக்கள் கருதினர். 1937 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடந்த அகில இலங்கை தமிழர் மகாநாட்டில் டாக்டர் தம்பையாவின் 'சமநிலைப் பிரதிநிதித்துவம்' என்ற பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு கவர்னருக்கு அனுப்பப்பட்டது.

சிறுபான்மை இன மக்களின் கோரிக்கையை கவர்னர் நிராகரித்ததன் விளைவாக சிறுபான்மையின மக்களான முஸ்லிம்களினதும், பறங்கியரினதும், ஐரோப்பியர்களினதும் தலைவர்களின் எண்ணத்தில் ஊசலாட்டம் தோன்றியது. மாக்கான் மார்க்கார் 50-50 என்ற கோரிக்கையை எதிர்த்தார். இதேபோன்று ஐரோப்பிய அங்கத்தவர்களும், பறங்கிய அங்கத்தவர்களும் இதனை எதிர்த்தனர்.

ஜி.ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் சிறுபான்மை இன மக்களின் 50-50 கோரிக்கைக்கு முதலில் ஆதரவளித்த முஸ்லிம்கள் ஏன் பின்னர் எதிர்த்தனர் என்பதற்குரிய காரணத்தை டாக்டர் கலீல் தன்னுடைய 'ஓர் அரசியல்வாதியின் நினைவுகள்' என்ற நூலில் விளக்கம் தருகிறார். ஜி. ஜி. பொன்னம்பலத்தின் 50-50 கோரிக்கையில் இலங்கை தமிழர்களுக்கு 17 ஆசனங்களும் இந்திய தமிழர்களுக்கு 13 ஆசனங்களும் பறங்கியருக்கும் ஐரோப்பியருக்கும் 8 ஆசனங்களும் (நியமன மூலம்) எஞ்சியுள்ள 12 ஆசனங்கள் ஏனைய மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என்று இருந்ததால் முஸ்லிம்கள் வேண்டுமென்றே உதாசீனம் செய்யப்படுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டிவிட்டு, "எங்களை நீங்கள் அலட்சியப்படுத்திவிட்டீர்கள். எஞ்சியுள்ள ஆசனங்களிலிருந்துதானா முஸ்லிம்களுக்கு இடம் கொடுக்கப்படவேண்டும்" என்று கூறிவிட்டு தமிழர்கள் போல் முஸ்லிம்களுக்கும் சமபங்கு கொடுக்கப்படவேண்டும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய ஆட்சேபனையைத் தெரிவித்து கூட்டத்தினின்றும் வெளிநடப்புச் செய்தார். தமிழ்த்தலைவர்களுடைய கொள்கைகளை ஆதரித்தபோது கூட முஸ்லீம்கள் இப்படி அவமானப்படுத்தப்பட்டார்கள். 1945 ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்த மசோதா விவாதத்தில் பேசிய சர். ராசிக் பரீத் பின்வருமாறு கூறினார்:

"நாங்கள் துன்பப்பட்டிருக்கிறோம். எங்களைப் போல் நீங்கள் பாதிக்கப்படவில்லை. 1936 ஆம் ஆண்டை நினைவு கூறுங்கள். அவ்வாண்டில் நடந்த தேர்தலில் சோனகர்களால் ஒரு பிரதிநிதியைக்கூட அரச சபைக்கு அனுப்ப முடியவில்லை. தமிழர் சமூகம் எங்களுக்கு உதவியதா? இல்லை, 40,000 முஸ்லிம் வாக்காளர்களைக் கொண்ட மன்னார், மட்டக்களப்புத் தெற்கு, திருகோணமலை ஆகிய ஒவ்வொரு தொகுதியிலிருந்தும், தமிழர்கள், தமிழ்ப்பிரதிநிதிகளைத் தான் அனுப்பினார்கள். இருந்தும் நாம் தமிழ் பிரதிநிதிகளை எங்களில் ஒருவராகத்தான் கணித்தோம்... ஆனால், அரசாங்கம் டி. ஆர். ஓ. உத்தியோகஸ் தர்களை நியமித்த வேளையில் ஒரு முஸ்லிமையாவது டி. ஆர். ஓ. வாக நியமிக்கும்படி நானும் எனது நண்பர் ஜாயாவும் உள்நாட்டு அமைச்சரை (மகாதேவா)க் கேட்டும் கூட ஒரு முஸ்லிம்கூட இப்பதவிகளுக்கு நியமிக்கப்படவில்லை. சிவில் அதிகாரியாக நியமனம் பெற்ற மொகிதீன் என்ற சோனகர் யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டபோது எங்கள் தமிழ்ப் பெண்கள் ஒரு சோனகன் முன்னிலையில் நிற்கமாட்டார்கள் என்று கூக்குரலிட்டு அவருடைய மாற்றத்தை தடைசெய்துவிட்டனர். இது தமிழர்களின் மனப்பான்மையைக் காட்டுகிறது என்று சர் ராசிக் பரீத் எடுத்துக்காட்டினார்.

ஒரு முஸ்லிமைப் பார்த்து 'நீ ஒரு மௌலா முஸ்லிம்' என்று கூறுவதைவிட ஏளனமான பதம் வேறொன்றுமில்லை. 1956 ஆம் ஆண்டு அரசமொழி மசோதாவின் விவாதத்தின்போது சர். ராசிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீதை பார்த்து வவுனியா தொகுதி அங்கத்தவரான சுந்தரலிங்கம் "உம்மை ஒரு மௌலா என்றழைக்கிறோம்" என்று மிகவும் ஏளனமாகக் கூறினார். "என்னை நீங்கள் நூறு பட்டப்பெயர்களைக் கொண்டு அழைக்கலாம்" என்று ராசிக் பரீத் கூறியபோது, "ஒன்று போதும் சிங்கள மௌலா" என்று குறுக்கிட்டார் சுந்தரலிங்கம்.. மேலும் சர். ராசிக் பரீத் "எம்மிடையே பலகருத்து வேறுபாடுகள் இருந்தாலும் எந்த ஒரு முஸ்லிமும் தன்னை தென்னிந்தியாவிலிருந்து வந்த மதம் மாற்றப்பட்ட தமிழர் என்றழைப்பதை விரும்பமாட்டார். இதே கைங்கரியத்தைத்தான் 1885 ஆம் ஆண்டில் சர். பொன். இராமநாதன் அன்றைய சட்டசபையில் கூறி தோற்றுப்போனார்" என்று கூறியபோது, சுந்தரலிங்கம் இடைமறித்து "தோற்றுப்போனாரா?" என்று கூறி, "உம்முடைய பாட்டனாருக்குக்கூட இது விளங்கட்டும்" என்று மனதைப் புண்படுத்தும் வகையில் பேசினார்.

சர். ராசிக் பரீத் தன்னுடைய உரையில் "சர். பொன். இராமநாதன், 'இலங்கை சோனகர் தமிழ் மொழி பேசுபவர்களாதலால் அவர்களைத் தமிழர்கள் என்று நாம் கணிக்கலாம்' என்று கூறியதைத்தான் திரும்பவும் இவர்கள் கூறுகிறார்கள்" என்று கூறியதற்கு சுந்தரலிங்கம் உம்முடைய பாட்டனாரும் ஒரு தமிழரா? என்று ஏளனமாகப் பேசினார்.

தமிழர்களின் 50-50 கோரிக்கைக்கு முதலில் ஆதரவளித்த முஸ்லிம்களைத் தமிழர்கள் தாழ்த்தி நடத்தியமையாலேயே முஸ்லிம்கள் அவர்களைவிட்டு சிங்கள மக்களை ஆதரித்தனர். மாக்கான் மார்க்காரும், சர். ராசிக் பரீதும், டாக்டர் கலிலும் அரசசபையிலும், பாராளுமன்றத்திலும் ஆற்றிய உரைகளிலிருந்து நாம் இவ்வுண்மையை அறியலாம். பின்னர் 1956 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்திய சர். ராசிக் பரீத், "தமிழர்களின் கீழ் எவ்வளவோ துன்பம் அனுபவித்திருக்கிறோம். எமக்கு யாரும் தலைவராக இருக்கத் தேவையில்லை. அப்படி ஒரு தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையென்றால் நாம் சிங்களவரையே தலைவராகத் தேர்ந்தெடுப்போம். எமக்கு ஒரு தலைவர் போதும் இரண்டு தலைவர்கள் தேவையில்லை. நாம் தமிழர்களின் கீழ் ஊழியம் செய்து பட்ட அவஸ்தை போதும்" என்று முஸ்லிம்களின் மன நிலையைப் பிரதிபலிப்பதுபோல் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னம்பலத்தின் ‘தமிழ் இனவாதபோக்குக்கு எதிராகத் தோன்றிய பண்டார நாயக்காவின் ‘ சிங்கள மகா சபாவும்’, அதன் சிங்கள இனவாதப்போக்கும்

டொனமூர் அரசியலமைப்பின் மூன்றாவது அரச சபைக்கான பொதுத்தேர்தல் 1941 ஆம் ஆண்டில் நடக்க இருந்தது. இத்தேர்தல் நடக்கும் திகதி நெருங்கிக் கொண்டுவரும் காலகட்டத்தில் இனவாத அரசியல் போட்டியும் கூர்மையடைவதைக் காண்கிறோம். யாழ்ப்பாணத்தில் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் தமிழர்களின் இனவாத கோரிக்கை வலுவடைய வலுவடைய அதன் எதிரொலியாக எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தலைமையில் சிங்கள மகாசபா, சிங்கள மக்களின் மத்தியில் இன உணர்வைத் தூண்டிவிட்டது. சிங்கள மக்களிடையே இவ்வின உணர்வை வளர்ப்பதற்கு அவர் இந்தியத் தமிழர்களைத்தான் பயன்படுத்தினார். 1930 ஆம் ஆண்டில் நடந்த அகில இலங்கை கிராம சங்கங்களின் மகாநாட்டில் அவர் “இந்திய வர்த்தகருக்கும் தொழிலாளிக்கும் அரசியல் அதிகாரம் கொடுக்கப்பட்டால் இன்னும் இருபது அல்லது முப்பது ஆண்டுகளில் அவர்களுடைய ஆதிக்கத்தில் நாம் வாழவேண்டிய நிலை ஏற்படுவது மட்டுமல்ல எங்களுடைய எதிர்கால சீவியமே ஒரு பிரச்சினையாகிவிடும் என்று நாம் எண்ணுவதில் எவ்விதத் தவறுமில்லை” என்று கூறினார். இதற்கு ஒரு வாரத்திற்குப் பின் தொடந்து நடந்த மகாசபா கூட்டத்தில் உரையாற்றும்போது “இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையர்களாகிய நாம் எம்முடைய நாட்டிலேயே அந்நியார்களாகிவிடுவோம் " என்று அவர் கூறினார். 08.01.1941 ஆம் ஆண்டு 'ஹிந்து ஓர்கன்' பத்திரிகையில் வெளியான செய்தியின்படி சமரநாயக்கா என்பவர் வடஇந்தியாவில் பிரயாணஞ் செய்த சமயத்தில் "இலங்கை வரலாற்றை நாம் பார்க்கும்போது சிங்களவர் தமிழரை வெறுத்தே வந்திருக்கிறார்கள் என்ற உண்மையை அறிகிறோம்" என்று கூறினார்.

1937ஆம் ஆண்டு அன்றைய ஊள்ளூராட்சி அமைச்சராக இருந்த பண்டாரநாயக்க அரசசபையில் சமர்ப்பித்த 'கிராம சபைகளின் திருத்த' மசோதாவில் 'தோட்டங்களில் வேலை செய்யும் இந்தியத் தொழிலாளர்களுக்கு கிராமசபைத் தேர்தல்களில் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்தும் உரிமைகிடையாது' என்ற பகுதியையும் சேர்த்தார். இதனால் பாதிக்கப்பட்ட இந்தியத் தமிழர்கள் சிங்களவரின் இச் செய்கையைக் கண்டித்ததுமல்லாமல், சிங்களவருக்கு எதிராக ஜி.ஜி. பொன்னம்பலத்துடன் சேர்ந்து செயலாற்ற முற்பட்டார்கள். இதனை ஜி.ஜி. பொன்னம்பலம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தினார்.

சிங்களக் கிராமங்களோடு எவ்விதத் தொடர்பும் இல்லாத தோட்டத்து இந்தியத் தமிழர்கள் கிராமசபைத் தேர்தலிகளில் ஈடுபடுவது நியாயமில்லை. பண்டாரநாயக்கா தோட்டங்களில் கூலி வேலை செய்யும் சிங்களத் தொழிலாளர்களுக்கும் இவ்வாக்குரிமை வழங்க மறுத்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. "இக்காலத்தில் இந்தியத் தமிழரிடையே வளர்ந்த இன உணர்வுத் தீவிரத்திற்கு ஒப்பாக மற்ற எல்லா இனத்தவர்களிடையேயும், எல்லா மட்டத்திலுள்ளவர்களிடையேயும் இவ்வின உணர்வு தீவிரமடைந்தது" என்று ஜேன்றசல் கூறுகிறார். "1941ஆம் ஆண்டில் நடக்கவிருந்த பொதுத்தேர்தல் அண்மித்து வந்ததே இதற்குக் காரணம்" என்று அவர் மேலும் கூறுகிறார். தேர்தல் கூட்டங்களில் அரசியல் தலைவர்கள் இனவாதத்தைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கிப்பிடித்த அதேவேளையில் மற்றும் சிலர் இனவாதத்திற்கு எதிராகவும் பிரச்சாரம் செய்தார்கள். இவ்வினவாத பிரச்சாரத்தினால் மக்களிடையே ஏற்பட்ட ஒரு பதட்ட நிலையை அவதானித்த 'ஹிந்து ஓர்கன்' பத்திரிகை ஜனவரி 12ஆம் திகதி 1939ஆம் ஆண்டு வெளிவந்த இதழில் பின்வருமாறு கூறியது:

"இந்த இன வெறி மக்களிடையே பரவுவதை நாம் இப்போது தடுக்காவிட்டால் இன்னும் சில ஆண்டுகளில் மக்கள் ஒருவரையொருவர் மிகவும் பயங்கரமான முறையில் தாக்குவார்கள். இன்றைய இலங்கை அரசியல் கண்ணியமும் கட்டுப்பாடுமில்லாத ஒரு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. நற்பண்பும் நற்செய்கையும் இன்றைய அரசியல் உலகிலிருந்து ஒழிக்கப்பட்டிருக்கிறது". இந்த எச்சரிக்கையை யாரும் அன்று பொருட்படுத்தவில்லை.

பண்டாரநாயக்காவின் 'கிராமசபைகள் திருத்த மசோதா' தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை வழங்கப்படாத அதே வேளையில் தோட்டதுரைமார்களான பறங்கியருக்கும், ஐரோப்பியருக்கும் கிராமச் சபைத்தேர்தல்களில் தமது வாக்குகளை வழங்குவதற்கு உரிமை வழங்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட இம்மசோதாவை அரசசபையிலிருந்த இந்தியத் தமிழ்த் தலைவர்கள் மாத்திரமல்ல, சில சிங்கள முற்போக்கு அரசியல்வாதிகளும் எதிர்த்தார்கள். இம்மசோதாவை எதிர்த்த டாக்டர் என்.எம்.பெரேரா "இந்நாட்டின் ஏழை விவசாயிகளினதும், இந்தியத் தொழிலாளர்களினதும் பிரச்சினைகள் ஒன்றே. எமது போராட்டம் முதலாளி வர்க்கத்திற்கு எதிரானது-அவர்கள் இந்தியர்களாயிருந்தாலென்ன, இலங்கையராயிருந்தாலென்ன" என்று கூறினர் என்றாலும் பல எதிர்ப்புக்களுக்கு மத்தியில் 1938ஆம் ஆண்டில் இம்மசோதா சட்டமாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1939ஆம் ஆண்டில் 2,25,000 மாக இருந்த இந்திய வாக்காளர்களின் தொகை 1943ஆம் ஆண்டில் 1,68,000 மாகக் குறைந்தது. ஆனால் இதே காலப்பகுதியில் 1931ஆம் ஆண்டில் இருந்த இலங்கையரின் வாக்காளர் தொகை 10,50,000லிருந்து 1940ஆம் ஆண்டில் 26,35,000 மாகக் கூடியது என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

வடக்கில் யாழ்ப்பணத்துத் தமிழரிடையேயும், கண்டிப் பிரதேச இந்தியத் தமிழரிடையேயும், பொன்னம்பலம் தனது 50-50 கோரிக்கையை முன்வைத்து இன உணர்வைத் தூண்டி வந்த அதே வேளையில் தென்னிலங்கையில் சிங்களவர் மத்தியில் 'சிங்கள மக்கள் எல்லோரும் ஒன்றுபட வேண்டும்' என்ற கோஷத்தை முன் வைத்த பண்டாரநாயக்க, இலங்கையின் பல பாகங்களிலும் சிங்கள மக்களிடையே தேசிய உணர்வின் மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தார். ஜி.ஜி.பொன்னம்பலத்தின் அரசியல் கொள்கைக்கு யாழ்ப்பாணத் தமிழர்கள் மாத்திரமல்ல, 1939ஆம் ஆண்டில் கத்தோலிக்கத் தமிழர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய லீக் அங்கத்தவர்களும் தமது ஆதரவை அளித்தார்கள். ஆனால் முற்போக்கு எண்ணம் படைத்த யாழ்ப்பாணத்து 'இளைஞர் காங்கிரஸ்' தலைவர்கள் பொன்னம்பலத்தின் இவ்வினவாதத்தீவிரப் போக்கைக் கண்டித்ததுமல்லாமல் தமிழர்களிடையே இவ்வினவாதத்தை வளர்த்த பொன்னம்பலத்தின் பேச்சுக்களும் செயல்களும் தென்னிலங்கை சிங்களவர் மத்தியில் தமிழருக்குகெதிராக தீவிரப்போக்குடைய ஒரு பண்டாரநாயக்காவை உருவாக்கி வருகிறது என்று கூறினார்கள்.

"வெறும் வாய் மெல்பவனுக்கு அவல் கிடைத்தாற்போல" 1939ஆம் ஆண்டில் நாவலப்பிட்டியாவில் 'முஸ்லிம் வாலிபர் சங்கத்தினால்' ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் பேசிய பொன்னம்பலம் "சிங்கள இனம் ஒரு கலப்பு இனம்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார். இப்படியொரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த பண்டாரநாயக்கா நாவலப்பிட்டியவில் சிங்கள மகாசபாவின் கிளையொன்றை ஸ்தாபித்து அதில் பின்வருமாறு உரையாற்றினார்: "நாவலப்பிட்டி சிங்கள மகாசபா பொன்னம்பலத்திற்கு ஒரு சிலை எடுக்க வேண்டும். நாவலப்பிட்டியில் சிங்கள மகாசபாவின் கிளையொன்றை ஸ்தாபிப்பதற்கு நாம் பொன்னம்பலத்திற்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்". 1939ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடைபெற்ற சிங்கள மகாசபாவின் வருடாந்த மகாநாட்டில் "பொன்னம்பலத்தின் ஆதரவாளர்களான எம்முடைய எதிரிகள் எமக்குத் தீமையைவிட நன்மையையே செய்கிறார்கள்" என்று கூறினார்.

நாவலப்பிட்டியில் நடந்த இச்சம்பவம், 1939ஆம் ஆண்டில் கொழும்பில் தொழிற்சங்கத் தலைவரான ஏ.ஈ. குணசிங்காவின் தலைமையில் இலங்கைத் தமிழ் வர்த்தகர்களுக்கும், இந்தியத்தமிழ் வர்த்தகர்களுக்குமெதிராக ஒரு பகிஷ்கரிப்பு இயக்கம் தொடங்குவதற்குக் காரணமாயமைந்தது. அப்பகிஷ்கரிப்பு இயக்கத்தைக் கண்டித்த 'ஹிந்து ஓர்கன்' பத்திரிகை "அரசியல் சந்தர்ப்ப வாதிகள் தம்முடைய சுயநலத்திற்கு எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்துவார்கள்" என்று கூறியது. யாழ்ப்பாண சங்கத்தின் தலைவர்களில் ஒருவரான வி.எம்.சரவணமுத்து 'இப்பாழாய்ப்போன டொனமூர் அரசியல் அமைப்பு வருவதற்கு முன்னர் அரைகுறை அறிவு படைத்த சிங்களவர் எமது கோரிக்கைகளுக்கு செவிசாய்த்தார்கள்", என்று கூறினார். ஜி.ஜி.பொன்னம்பலத்தின் இந்த இனவாதப் போக்கு சிங்கள மக்கள் மத்தியிலும், இனவாதம் வளர்வதற்குக் காரணமாயமைந்தது என்றால் அது மிகையாகாது.

ஆனால் இவ்வுணர்வுக்கு எதிராக சில தமிழ்த் தலைவர்களும், சிங்களத் தலைவர்களும் செயல்பட்டார்கள். யாழ்ப்பாணத்து இளைஞர் காங்கிரஸ் தலைவர்கள் சோஷலிச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களின் தாக்கத்தினால் சோஷலிச வாதிகளாக மாறிவந்தார்கள். 1938ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் சிங்கள சோஷலிசவாதிகளான பிலிப் குணவர்த்தனாவும், டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வாவும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்கள். ஆனால் யாழ்ப்பாண விவசாயிக்கு சோஷலிசம் போன்ற மேல்நாட்டு தத்துவங்கள் புரியாத புதிராகவே இருந்தது. மேலும் சாதி வேற்றுமையில் ஊறிப் போயிருந்த யாழ்ப்பாண மக்கள், இளைஞர் காங்கிரஸ் தலைவர்களின் சாதி ஒழிப்பு இயக்கத்தை எதிர்த்ததனால் இத்தலைவர்களுக்கு இவ்வியக்கம் நன்மை உண்டாக்கியதை விட தீமையையே விளைவித்தது. இன உணர்வு பிரச்சாரத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண விவசாயிகளும், அறிவு படைத்தவர்களும் கூட காந்திய தத்துவங்களினாலோ, சோஷலிசக் கருத்துக்களினாலோ பாதிக்கப்படக்கூடிய மன நிலையிலிருக்கவில்லை. அவர்கள் பொன்னம்பலத்தின் இனவாத உணர்வில் மயங்கியிருந்தார்கள். யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் தலைவர்களின் நேர்மையான போக்கே அவர்களுடைய வீழ்ச்சிக்குக் காரணமாயமைந்தது.

ஆனால் ஜி.ஜி. பொன்னம்பலம், யாழ்ப்பாண மக்களின் இன உணர்ச்சிகளுக்குத் தூபம் இட்டுக் கொண்டிருந்தார். இங்கிலாந்திலிருந்து திரும்பிய பொன்னம்பலம், பெப்ரவரி 12ஆம் திகதி 1939 ஆம் ஆண்டில் நடந்த 'யாழ்ப்பாணத்துச் சங்கத்தின்' கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில், "இந்நாட்டின் அரசியல் அதிகாரத்தில் சமபங்கு வேண்டுமென்ற எமது போராட்டம் இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறது. தமிழ் மக்கள் தம் கோரிக்கைகளைப் பெற்றால் இந்நாட்டில் ஒரு தேசியக் கண்ணோட்டத்திற்கு அது வழிவகுக்கும்" என்று கூறினார். இக்கூட்டத்தில் அரச சபையிலுள்ள 60 ஆசனங்களில் 16 ஆசனங்கள் இலங்கைத் தமிழருக்குக் கொடுக்கப்படல் வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. நன்றியுரை கூறிய கார்த்திகேசு "தமிழர்கள் தான் இந்நாட்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வீகக் குடிகள். ஆகவே இந்நாட்டின் அரசியல் வளர்ச்சிக்கு அவர்களே பொறுப்பு" என்று கூறினார்.

சிங்கள மக்களுக்கு எதிராகத் தமிழ் மக்களின் உணர்வுகளைத் தூண்டிவிட்டு அதனால் தலைமைப் பதவியை அடைந்த பொன்னம்பலத்தின் உயர்வர்க்கக் கண்ணோட்டம் ஒரு சம்பவத்தினால் வெளியாகியது. இந்தியப் பொருட்களின் தீர்வை வரியை இலங்கை அரசாங்கம் உயர்த்தியது. இதற்கு எதிராக இந்திய அரசாங்கம் இலங்கையின் புகையிலைக்குரிய தீர்வை வரியை உயர்த்தியது. இது யாழ்ப்பாணத்து புகையிலை விவசாயிகளைப் பெரிதும் பாதித்தது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய, பொன்னம்பலம் அமைச்சரவையைக் குற்றஞ்சாட்டியதோடு, "ஐயாயிரம் சிங்கள மக்களின் நன்மைக்காக மூன்று இலட்சம் தமிழ் மக்களைப் பலிகொடுப்பதா?" என்ற கேள்வியை எழுப்பி "இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் சிங்களவரின் கொடுங்கோலாட்சியைத் தமிழ் மக்கள் பொறுத்திருப்பது" என்று அங்கலாய்த்தார். ஆனால் விவசாய அமைச்சராயிருந்த டி.எஸ்.சேனாநாயக்க யாழ்ப்பாணப் புகையிலை உற்பத்தியாளர்களுக்கு ஒரு லட்சம் ரூபாவை நஷ்டஈடாகக் கொடுக்க முன்வந்த போது பொன்னம்பலம் இப்பணம் மொத்த வியாபாரிகளுக்கும், பங்குதாரர்களுக்கும் மட்டும்தான் கொடுக்கப்பட வேண்டும் என்று வாதாடினார். பொன்னம்பலத்தின் வாதத்தை எதிர்த்த எஸ்.நடேசன் "இப்பணம் யாழ்ப்பாண ஏழை விவசாயிகளுக்கே உரியது" என்று கூறினார்.

1937ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த டி.எஸ்.சேனாநாயக்க "சிங்கள மக்களின் ஆதிக்கம் என்ற கேள்வி எழுவதற்கு நியாயமில்லை" என்று யாழ்ப்பாணத்து வர்த்தகர்களுக்கு உறுதியளித்ததோடு யாழ்ப்பாண மக்களின் நன்மதிப்பைப் பெற முல்லைத்தீவு குடியேற்றத்திட்டத்தை தாம் அமுல் நடத்தப் போவதாகவும் கூறினார். அவருடைய மின்னேரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றத்திட்டத்தைப் பத்மநாதன் எதிர்த்தபோது, அவர் "அமைச்சர்கள் கட்சித் தலைவர்களோ இனத்தலைவர்களோ அல்ல. அவர்கள் ஒரு நாட்டின் தலைவர்கள். எல்லா இன மக்களையும் ஒரு சமநிலையில் பார்ப்பவர்கள். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை பாகுபாடின்றி முழுமையாகப் பார்ப்பவர்கள். இப்பரந்த நோக்குடன் அவர்கள் செயலாற்றுவார்களேயானால் அவர்கள் தமிழராயிருந்தாலென்ன, முஸ்லிமாயிருந்தாலென்ன, பறங்கியராயிருந்தாலென்ன" என்று கூறினார். டி.எஸ்.சேனாநாயக்கா சிங்கள இனவாதிகளைக் கடுமையாக எதிர்த்தார்.

1939ஆம் ஆண்டு செப்டம்பர் 13ஆம் திகதி வெளியான 'ஹிந்து ஓர்கன்' பத்திரிகை தன்னுடைய ஆசிரியர் தலையங்கத்தில் "பொன்னம்பலத்தின் இனவாதக் கொள்கையைக் கண்டித்து பொன்னம்பலம் யாருடைய நலத்தைப் பிரதிபலிக்கிறார் என்று இப்பொழுதாவது யாழ்ப்பாண மக்கள் உணரட்டும். யாழ்ப்பாணத்து விவசாயிகளை திரு.பொன்னம்பலம் பிரதிநிதித்து வப்படுத்தவில்லை என்பது மட்டும் உண்மை" என்று பொன்னம்பலத்தின் புகையிலை சம்பந்தமான கொள்கையை எதிர்த்து எழுதியது.

ஜி.ஜி.பொன்னம்பலத்தின் கொள்கையினால் விரக்தியடைந்த யாழ்ப்பாணத்துத் தலைவர்களான சபாபதி, நல்லையா, இராஜரட்ணம், சி.பொன்னம்பலம் ஆகியவர்கள் பொன்னம்பலத்தின் யாழ்ப்பாணத்துத் தமிழர் காங்கிரசிலிருந்தும் விலகி சிங்களவரிடமும், தமிழரிடமும் ஒரு நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கத்துடன் 'யாழ்ப்பாண சங்கம்' என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார்கள். யாழ்ப்பாணத்தில் தேசிய காங்கிரசின் கிளைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டதோடு டி.எஸ்.சேனாநாயக்கா ஐக்கிய தேசியக்கட்சியை 1946ஆம் ஆண்டு தோற்றுவித்தபோது அதில் சேர்ந்து கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பலத்தின் நாவலப்பிட்டி உரையும், ஏழை புகையிலை விவசாயிகளின் பக்கம் நிற்காமல் மொத்த வியாபாரிகள் பக்கமும், பங்குதாரர்கள் பக்கமும் நின்ற வெளி வேஷத்தைப் பார்த்து முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட பலர் அவரை விட்டும் விலகினர். மக்களிடையே தீவிரவாதமும், நடுத்தரப்போக்கும் இருந்ததைப் போல தலைவர்களிடையேயும் இந்த நிலை இருந்தது. நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடித்த மகாதேவா தன்னை துரோகி என்று அழைத்ததை அவரே அரசசபையில் எடுத்துக் கூறினார்.

ஆனால் சிறுபான்மை இனத்தவர்கள் எல்லோரும் ஒரு விஷயத்தில் மாத்திரம் ஒற்றுமையாயிருந்தனர். இலங்கையின் அரசியல் அமைப்பை முழுமையாக மாற்றியமைப்பதற்கு ஓர் அரசியல் சீர்த்திருத்தக்குழு நியமிக்கப்படல் வேண்டும் என்பதே அது.

இலங்கை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்ற அமைப்பு முறையில் ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் அமைதல் வேண்டும் என்பதில் பெரும்பாலும் ஜயத்திலக்கா–சேனாநாயக்கா தலைமையில் இருந்த இலங்கைத் தேசிய காங்கிரஸ் கண்டிச் சிங்களவரையும், தமிழர்களையும் அணைத்துச் செயல்பட வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தது. பண்டாரநாயக்கா பாமர சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஓர் அரசாங்கத்தை விரும்பினார். சிறுபான்மையின மக்கள் இவ்வமைப்பு முறை தங்களுக்குப் பாதகமாக அமையக்கூடாதென்றும், அரசியல் அதிகாரத்தில் தமக்குரிய பங்குகிடைக்க வேண்டுமென்பதிலும் உறுதியாயிருந்தார்கள்.

ஆனால் பாராளுமன்ற முறை அமைக்கப்பட்ட பின் நடந்ததென்ன? இனவெறியும், சாதிவெறியும் தலை தூக்கின. பாராளுமன்ற தேர்தல் முடிவுகளை நாம் ஆராய்ந்தால் இந்த உண்மை எமக்குப் பளிச்சிட்டு விளங்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BIBLIOGRAPHY

1. Dr.Ameer Ali- Muslim Participation in the Export Sector of SriLanka 1800-/ 1915 - in Muslims of Sri Lanka - Avenues to Antiquity. ed, by Dr. Shukri.

2. Dr.S.W.R.de A. Samarasinghe and Mr. Fazal Dawood - The Muslim minority of Sri Lanka in Avenues to Antiquity.

3. Dr. B.A. Hussainmiya - Princes and Soldiers - The Antecedents of the Sri L ankan Malays in Avenues to Antiquity.

4. Asker S. Moosajee - Recent Arrival of Muslim Trading Communities in Sri Lanka - in Avenues to Antiquity.

5. Dr. A. Muhammad Mauroof - A Sociology of Muslims in Southern India and Sri Lanka-in Avenues to Antiquity.

6. Dr. M.A.M, Shukri - Muslims of Sri Lanka - A Cultural Perspective - in Avenues to Antiquity.

7. Dr. Vijaya Samaraweera - Aspects of Muslim Revivalist Movement in the Late Nineteenth Century - in Avenues to Antiquity.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. H.M.Z. Fariouque - Islamic Law in Sri Lanka - An Historical Survey with Particular Reference to Matrimonial Laws - in Avenues to Antiquity.

9. K.D.G. Wimalaratne - Muslims under British Rule in Ceylon - in Avenues to Antiquity.

10. Dr. K.M.de Silva - The Muslim Minority in a Democratic Polity - The Case of Sri Lanka - in Avenues to Antiquity.

11. Dr. K.M. de Sliva - Muslim Leaders and the Nationalist Movement -in Avenues to Antiquity.

12. T. Nadarajah - The Legal System of Ceylon in its Historical Setting. (Leidon 1972)

13. The Muslim Marriage Divorce Reports - (Colombo 1972)

14. The Ceylon Journal of Historical and Social Studies.

15. Ceylon Historical Journal.

16. M.W. Roberts - Elite Formation and Elites 1832 - 1931-in University of Ceylon-History of Ceylon-Vol.3

17. A. Bertolacci - A View of Agicultural Commercial and Financial Interest of Ceylon - London 1817.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. Ceylon Blue Books.

19. John Davy - An Account of the Interior of Ceylon and its Inhabitants with Travels in the Island. (1821)

20. The Ceylon Literary Register.

21. Ceylon Almanac.

22. Fergusons Ceylon Directory - 1885/1886, 1866-68, 1875.

23. Ceylon Sessional Papers - 33 of 1905.
37 - of 1890.
34 - of 1903.
13 - of 1904.

24. Ceylon Administration Reports.

25. T. Wimalananda - The British Intrigue in the Kingdom of Ceylon - Colombo 1973.

26. W. Balendra - 'The Heritage of Islam and its Contributions to Lanka's Civilization' - Moorish Culture - Colombo.

27. M.I.C.H. Silver Jubilee Souvenir - 1944 - 1969. Colombo 1970

28. Sri Lanka Muslim Youth - a YMMA Publication - Colombo 1976.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. S, Pathmanathan - The Kingdom of Jaffna.

30. Central Bank of Ceylon - Reports.

31. Murad Jayah - Ceylon Malay Research Association - Annual Souvenir Colombo.

32. Nilakanta Sastri K.A., "A History of Sri Vijaya" - Madras.

33. S. Paranavitana - 'Ceylon and Malaysia' - Colombo - 1966.

34. Pieris - 'Ceylon and the Hollanders - 1658 - 1796' Colombo 1967.

35. Vlekke - 1945 - Nusantara- A History of the East Indian Archipelago.

36. Mendis, Vernon, L.B. - Currents of Asian History, Calcutta - 1981-

37. A.J. Arberry - Sufism - London 1950.

38. Ceylon Moor - March 1935.

39. A.M.A. Azeez - The West Reappraised - Colombo - 1964.

40. A.M.A. Azeez - I.L.M. Abdul Azeez, Birth Centenary Address - Moors Islamic Cultural Home -Silver Jubilee Souvenir - 1969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. Mohamed Sameer - Ceylon Moors, Malays and other Muslims of the Past- Moors Islamic Cultural Home - The First Twenty One Years' Souvenir

42. Siddhi Lebbe - 'Asrarul Alam' - 1892.

43. Muslim Nesan.

44. Ceylon Muhammadan.

45. Akbar M.T. 1935 - Progress of Muslim Law within the last 25 years Serendib, V-1, May 1935.

46. K.M. de Silva (cd) Ceylon from the Beginning of the Nineteenth Century to 1948.

47. Journal of Muslim Majlis IX - 1959/60

48. Houtart-F, - Religion and Ideology in Sri Lanka, Colombo

49. Samaraweera, Vijaya 1976. ArabiPasha in Ceylon - 1883 - 1901 - Islamic Culture - L4 - 1976

50. K.M. de Silva - (cd) Sri Lanka: A Survey - London - 1977.

51. Michael Roberts - (cd) Collective Identities, Nationalism and Protests in Modern Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. Wright - Arnold (cd) 1907, Twentieth Century Impressions of Ceylon.

53. New Law Reports - for cases re. Muslim Divorces

54. Ceylon Government Gazette - of 24-4-1875 - for the draft code on Registration of Marriages and Divorces

55. Akbar Reports - 1928 - NLR. 330 (1925)

56. Sessimal Paper XX - of 1928 - Interim Report on the Muslim Law of Marriage and Divorce S.P. XLIX - of 1928 - Final Report.

57. Colebrooke Cameron Papers - Vol - I & II - 1956 - ed, Dr.G.C. Mendis.

58. Reports of the Temple Land Cammission.

59. Service Tenure Commission 1872.

60. Vijaya Samaraweera - 'The Muslim Revivalist Movement - 1880 - 1911 - in Collection Identities Nationalism and Protest in Modern Sri Lanka (cd) Dr. Michael Roberts - 1979.

61. Weerasooriya N.E. - Ceylon and Her People - IV -1979

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. Report of the Special Commission on the Constitution (Donoughmore Report) 1928.

63. All Ceylon Muslim Political Conference, evidence before the Soulbury Commission.

64. Report of Commission on Constitutional Reforms - (Soulbury Report) 1945

65. 'The 1915 Riots in Ceylon - A Symposium - Journal of Asian Studies XXIX - 1970

66. Fernando P.T.M. - The Post - Riots Campaign for Justice. Journal of Asian Studies - XXIX - 1970.

67. K.M. de Silva - 'The Formation of Character in the Ceylon National Congress 1917 - 1919 - The Ceylon Journal of Historical and Social Studies X - 1967

68. K.M. de Silva - The Ceylon National Congress in Disarray - CJHSS-

69. T.B. Jayah's Memorandum of 27, July 1930 - Colonial Office Despatches series - 54/900

70. Russell J.E.M. - Language, Education and Nationalism - CJHSS VIII - 'The Language Debate of 1944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. Hansard - (State Council) - 1944, 1945 - Vol.II

72. Ahmed M.C - Some - Socio-economic and political aspects of the Sri Lanka Muslims - in University of Peradeniya, Muslim Majlis - Vol XIX

73. Akbar - M.T. - Mohammedan Law of Intestate Succession in Ceylon - 'The Ceylon Recorder - Colombo - July, August, October and November 1919.

74. Akbar - M.Z. - The Re-interpretation of Islamic Law - Ceylon Law College Review, Colombo 1961 - 62

75. Ameen A.M. - Ceylon Muslims and the Law of Wakfs. University Majlis - V ol VI - 1955

76. Ameen - A.M., Contribution of the Muslim minority to the National well- being and progress in the country - University of Peradeniya, Muslim Majlis Vol XIX - 1979 - 80

77. Arasaratnam. S. Muslims in Ceylon- Prentice Hall Inc N.J. 1964

78. Arasaratnam. S. - A note on Periathamby Marikar - Tamil Culture, Madras - Vol II Jan - March 1964.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

79. Arthur C.D - Orabi Pasha and the Egyptian Exiles - Ahmed Orabi Pasha Commemoration Committee - Zahira College 1980.

80. Azeez A.M.A - The Muslim Tradition - Education in Ceylon - a Centenary Volume Vol VII

81. Azeez - A.M.A. - Problems of Muslim Minorities with reference to Ceylon - University Muslim Majlis Peradeniya Vol IX - 1959 - 60

82. Azeez A.M.A - Ceylon - The Encyclopaedia of Islam - Vol II London/ Leidon Brill 1965.

83. Bawa Ahamada - The Marriage Customs of the Moors of Ceylon - Journal of the Royal Asiatic Society (Ceylon Branch) X - 1888

84. Bhurhan - Marzook - Contribution from early times of the Moors of Lanka to the national life of our country - Moors Islamic Cultural Home Silver Jubilee Souvenir - 1944 - 69 - Colombo 1970.

85. Cader M.B.A. - Muslim Education in Ceylon - National Monthly of Ceylon V ol VI - 1919.

86. Cader M.B.A. - The law relating to Mohamedan, religious trust in Ceylon - in Ceylon Law Recorder, Colombo IV November 1922

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87. Farouque - H.M.Z. - Muslim Law in Ceylon -: An Historical Outline - Muslim Marriage and Divorce Law Report - Vol IV - 1972

88. Ferguson J - Mohammedan s in Ceylon - Ceylon Muslim Review - Vol XLIX 1898-

89. Fernando .P.T.M. - British Raj and the 1915 Commumal Riots in Ceylon - Modern Asian Studies -Vol III - July 1969.

90. Haniffa M.I.M - Marriage Under Muslim Law - Ceylon Law Journal, Colombo, II - 1937 - 38 - III 1938-39.

91. Haniffa M.I.M. - Competency to Contract Marriage under Muslim Law - Ceylon Law Students Magazine - XXII - 1950 -

92. Hassen M.C.A. - Sri Razick Fareed- Swabhasha Printers - Colombo 1968

93. Hussain , M.A.M. - Muslims in Sri Lanka Polity - The Muslim World League Journal - September, December - 1982

94. Kaleel - M.C.M. - The Progress of the Muslim Community in Ceylon -1910 - 1935.

95. Lye - B.W. - Muslim Progress in Ceylon - our crying needs - Ceylon Muslim Review (2) October 1914.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96. Kearney R.N. - 1915 Riots in Ceylon - introduction - Journal of Asian Studies XXIX - (2) Feb. 1970.

97. Macan Markar, A.H. - The plight of Ceylon Moors, Malays, and other Muslims in the economic life of the community - Moors Islamic Cultural Home Silver Jubliee Souvenir - 1944 - 49 Colombo 1970

98. Mendis, G.C - The Causes of Communal Conflict of Ceylon - University of Ceylon Review 1-V - 1943

99. Mauroof, Mohamed - Aspects of economy, society and religion among the Muslims of Ceylon Madan - Muslim Communities of S. Asia - Delhi - Vikas - 1972

100. Mauroof, Mohamed - Muslims in Sri Lanka: A Historical, demographic and political aspects - Journal of the Institute of Muslim Minority Affairs - 1981

101. Ramanathan.P. - The ethnology of the Moors of Ceylon - Journal of the Royal Asiatic Society - Ceylon Branch X - 1888

102. Razick A.R.A. - Ceylon Moors Contribution to Lanka - United National Party Independence Day Souvenir - Colombo - Feb. 1949

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

103. Razick A.R.A. - Malays in Ceylon - Ceylon Literary Register II - (38) April 1988

104. Razick A.R.A. - The Ceylon Moors Islamic Zeylanica I - 1947 -

105. J.R. Weinman - Our Legislature - Ceylon Daily News 1918

106. Dr. A.D.V. de S. Indraratna - The Ceylon Economy - M.D. Gunasena & Company Limited (1930-1952)

107. Patrick Peebles - Social Change in the 19th Century - Navrang , New Delhi - 1995

108. M.M.M. Mahroof et al - An Ethnological Survey of the The Muslims of Sri Lanka - Razick Fareed Foundation - 1986

109. Tennekoon Wimalananda - The State and Religion in Ceylon since 1815 - pub.M.D. Gunasena 1970

110. Ethnicity and Social Change in Sri Lanka - Papers presented at a Seminar organised by The Social Scientists Association - December 1979

111. Dr. Karthigesu Sivathamby - Sri Lankan Tamil Society and Politics - NCBH - Madras - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

112. Dr. K.M. de Silva - Managing Ethnic Tension in Multiple - Ethnic Societies - Sri Lanka - 1880 - 1985 - University Press of America - Inc - 1986.

113. Jane Russell - Communal Politics Under the Donoughmore Constitution - 1931 - 1947 - Tisara Prakasakayo Limited, 1982.

114. Michael Roberts - Caste Conflict and Elite Formation - Navrang , 1975

115. M.N.M. Kamil Asad - The Muslims of Sri Lanka Under the British Rule - Navrang - 1993

116. R. Vasundhara Mohan - Identity Crisis of Sri Lankan Muslims - Mittal Publication - Delhi 1987.

117. The Ethnic Problem in Sri Lanka - A Collection of Articles and Essays - Centre for Ethnic Amity

118. Ceylon's Path To Freedom - Ceylon Daily, News

119. S. Sandirasekeram - Ilangai Inthiyar Varalaru- Vairavan Publication (Tamil) Madurai - 1989

120. K.M. De Silva - A History of Sri Lanka - 1981 - Oxford University.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

121. C.R. de Silva - Portuguese Policy towards Muslims, Ceylon Journal of Historical and Social Studies - [C.J.H.S.S.] Vol.9 - 1966

123. Murad Jayah - 'The Plight of the Ceylon Malays Today - in the Moors Islamic Cultural Home - Silver Jubilee Souvenir - 1944 - 1969

124. A.M. Sameem - The Marriage Customs of the Muslims of Sri Lanka - 1996 New Century Book House - Madras.

125. A.C. Lawrie - Gazeteer of the Central Province of Ceylon - Colombo - 1896

126. E.B. Denham - Ceylon at the Census of 1911 - Colombo - 1912.

127. A.M. Sameem - 'Madrasa Education in Ceylon - in National Education Society Journal - Vol. XVII - 1969

128. A.M. Sameem - 'The Changing Image of the Muslims of Sri Lanka' - [memo]

129. Satchi Ponnambalam - The National Conflict and Tamil Liberation Struggle.

130. Dr. M.C.M. Kaleel - 'The Role of the Sri Lanka Muslims in the Constitutional Changes

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

during the Colonial era and in the struggle for Independence - in 'Muslim Development Fund' - Sri Lanka - 1977

131. K.N.O. Dharmadasa - 'Language and Sinhalese Nationalism' - 'The Career of Munidasa Cumaratunga' - in Modern Ceylon Studies .. Vol.3:2. July 1972

132. K.H.M. Sumathipala - History of Education in Ceylon - 1796 -1965

133. L.A. Wickremaratne - 1865 - and the ,Changes in Education Policies - M.C .S. I (1) 1970

134. State Council Hansard - from 1930 - 1947.

135. Ferguson's Ceylon Directory - 1966.

136. Donald Snodgrass - Ceylon - an Export Economy in Transition.

137. A.J. Wilson - Politics in Sri Lanka.

138. Robert Knox - An Historical Relations of Ceylon.

139. Dr. Colvin R. de Silva - Ceylon Under the British Occupation - Vol I & I I

140. Blaze - a History of Ceylon Schools.

141. Dr.G.C. Mendis - A History of Ceylon.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

142. Mills & Lennon - British Rule

143. Brito - Mukkuwa Law.

144. Brito - Yalpana Vaipava Malai.

145. I.L.M. Abdul Azeez - A Criticism of Ramanathan's Ethnology of the Moors of Ceylon.

146. Toussaint - Batticaloa in Early British Times.

147. 'Muslim Nesan' - Journal - Published between 1883 - 89.

148. Sir Emerson Tennent - Christianity in Ceylon.

149. Ceylon Literary Register - Vol VI & VII

150. De Vas - F.H. - 'The Law of Intestate Sucession and Marriage Relating to the Moors or Mohamedans of Ceylon.

151. Namasivayam - The Legislature of Ceylon - 1928 - 48.

152. Jansz - Career for the Educated.

153. Ceylon Muslim League - A Memorandum to the Soulbury Commissioners

154. Ceylon Muslim League - Proceedings of the Annual Sessions - Aug.1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

155. Ceylon Muslim League - 'Serendib -' (a monthly organ) Vol. 4, 5 &6.

156. The Jubilee Book of the Colombo Malay Cricket Club

157. Skinner - Fifty Years in Ceylon.

158. 'Ceylon' - By an Officer Late of the Ceylon Rifles - 1875

159. Arunachalam - Sketches of Ceylon History.

160. Codrington - A History of Ceylon

161. Nilakanda Sastri - Foreign Notes of South India.

162. Arman De Souza - Riots of 1915.

163. Ramanathan , Ponnambalam - Riots of 1915.

164. Steuart - Notes on Ceylon - during the 33 years after 1855.

165. Memorandum by the Tamil Maha Jana Sabai - 1921

166. Papers Relating to the Constitutional History of Ceylon ,1909 - 1924 - Memorandum submitted by Sir James Pieris on the Reform of the Legislative Council of Ceylon - 1909

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

167. Memorandum sent by Governor Macallum as a reply to James Pieris's Memo. to the Secretary of State.

168. Memorial of the Jaffna Association for an Additonal Tamil Member 1910.

169. Parliamentary White Papers of 1922/24 -

170. T.D.S.A. Dassanayake - Dudley Senanayake of Sri Lanks - Swastika - 1975

171. D.S. Senanayake Memorial No. - A Special Issue of The Ceylon Historial Journal Vol V.

172. Population problems of Sri Lanka -Proceedings of a Seminar - University of Sri Lanka - Colombo - 1976

173. Sir Ivor Jennings - The Economy of Ceylon - Oxford University Press. - 1 948

174. H.P, Chattopadyaya - Indians in Sri Lanka - O.P.S. Publishers - Calcutta - 1979

175. Kumari Jayawardana - The Rise of the Labour Movement in Ceylon - Sanjiva Prakasana - 1972

176. W.A Wiswa Warnapala - Civil Service Administration in Ceylon -Department of Cultural Affairs - 1974

177. Ranjani Obeyesekera - Sinhala Writing and the New Critics - Educational Publication Department - 1972.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org